1101

T. N. L. A. Debates
V. 31 No. 3 1990

V. 31 No.
No. 3
143974

வெளியீடு 24-11-1990

Issued 24-11-1990

19 ஜூன் 91 ... சென்னை-600009.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 3, 1990 - தொகுதி 31 - எண் 3

Thursday, the 3rd May, 1990-Volume 31-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00]

[Price Rs. 3-00

143978
600 008

D
V211,31'N90
N90·31·3

## உள்ளடக்கம்.

3—5—1990.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 579—617 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) டெல்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவைக்கு விளக்கம் அளிக்க வேண்டியது குறித்து. | 618—623 |
| (ஆ) காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று பாரதப் பிரதமரிடம் 25—4—1990 ஆம் நாளன்று அளித்த மனுவிலுள்ள வாசகங்கள் பற்றிய விளக்கம் குறித்து. | 623—627 |
| 3. அறிக்கை அளித்தல்— | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு .. | 627—628 |
| (ஆ) மனுக்கள் குழு .. .. | 628 |
| 4. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990. | 628—629 |
| (ஆ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990. | 629 |
| (இ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. | 629—630 |

| | |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1990-91— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | பக்கங்கள். |
| (அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. (ஆ) கோரிக்கை எண். 15—காவல் துறை. (இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள். | 630—707 |
| மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி | 630—639 |
| டாக்டர் து. திருமூர்த்தி .. .. | 639—645 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் .. .. | 645—656 |
| திரு. தா. உதயசூரியன் .. .. | 656—661 |
| *திருமதி பாப்பா உமாநாத் .. .. | 662—670 |
| டாக்டர் பெ. துரைபாண்டியன் .. .. | 670—677 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. .. | 678—687 |
| திரு. ஜி. பழனிச்சாமி .. .. | 687—692 |
| திரு. எஸ். ஆர். சிவலிங்கம் .. .. | 692—697 |
| *திரு. எஸ். எஸ். ராமசுப்பு .. .. | 697—702 |
| *திரு. ஜெ. அசேன் .. .. | 702—706 |
| 6. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் .. .. | 707 |
| 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 707—708 |




1990, மே 3, வியாழக்கிழமை.

சித்திரை 20, பிரமோதூத— திருவள்ளுவர் ஆண்டு— 2021.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்.''

நீதிமுறை செய்து, குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

## 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

*3795 திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளத்தில் துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் துணை நீதிமன்றம் அங்குள்ள உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்தில் ஒரு சிறிய அறையிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மதுரை மாவட்டத்திலுள்ள சீனியர் வழக்கறிஞர்கள் பெரியகுளம் துணை நீதிமன்றத்திற்கு வருகிறார்கள். உட்காரக் கூட இடம் இல்லாமல் வழக்கறிஞர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கடந்த கால ஆட்சியில் அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமாக புதிய கட்டிடம் கட்ட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. எல். மூக்கையா :** கடந்த கால ஆட்சியில் அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமாக புதிய கட்டிடம் கட்ட முயற்சித்தும் நடைபெறவில்லை. எனவே, நமது அரசு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 15.20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு துணை நீதிமன்றம் கட்ட வேண்டும் என்ற குறிப்பு உயர்நீதிமன்றத்திலிருந்து அரசிற்கு வந்திருக்கிறது. அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதிநிலை காரணமாக இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள இயலவில்லை.

## கைதிகளுக்கான உணவுப்படியை உயர்த்துதல்

*7041. **பேராசிரியர் க. பொன்னுசாமி :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை இடைப்பட்ட காலத்திற்கு கைதிகளுக்கான உணவுப் படியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை இடைப்பட்ட காலத்தில் கைதிகளுக்கான உணவுப் படியை உயர்த்தும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கைதிகளின் அவலமான நிலையைக் கருதி, அரசு அந்தத் தொகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** தலைவர் அவர்களே, 23—5—1981-ஆம் தேதிய உத்தரவுப்படி, ஒரு நாளைக்கு 5 ரூபாய் 50 பைசா வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, காலை உணவுக்கு 1 ரூபாய், மதிய உணவுக்கு 2 ரூபாய், தேநீர் 50 பைசா, இரவு உணவு 2 ரூபாய்-ஆக மொத்தம் 5 ரூபாய் 50 பைசா ஆகும். இந்தத் தொகையை 7½ ரூபாயாக உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறது.

**பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இருக்கின்ற விலைவாசியைக் கருத்தில்கொண்டு, அவர்களது பசியைப் போக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இதை உயர்த்தித் தருவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஆலோசிக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திலே ஒப்படைக்கிற வரை அவர்களுக்கு அளிக்கக்கூடிய அந்த உணவு சம்பந்தப்பட்டமட்டிலே, அந்தக் காவல்துறை அதிகாரிகளுக்கு உடனடியாக, அவர்கள் ஏதாவது ஒரு ஓட்டலிலிருந்தோ, அல்லது வேறு இடத்திலிருந்தோ ஏற்பாடு செய்தாலும் கூட, அந்தப் பணம் உடனடியாக அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு இல்லை என்று சொல்கிறார்களே, அதற்கு அவர்கள் ஏதாவது தெரிந்த ஒரு கடையிலே அல்லது ஓட்டலிலே சொல்லி அப்படி எல்லாம் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே, ஆகவே, இது சம்பந்தப்பட்ட அந்தச்

செலவுக்கு உடனடியாக அந்தக் காவல்துறை அதிகாரி
களுக்குப் பணம் கிடைக்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா
அல்லது ஏற்பாடு செய்ய அமைச்சர் முயற்சிப்பார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: கைது செய்
யப்பட்டு அவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் வரை,
செலவுக்குத் தொகை கொடுக்கப்படுகிறது. காவல்துறை
மேல் அதிகாரிகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுத்து, உடனடி
யாகப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. கால
தாமதம் இருந்தால் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்
எடுக்கப்படும்.

9-05 மணி.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரசியல் கட்சிகள் அல்லது வெகுஜன அமைப்பு
கள் ஏதாவது இயக்கங்களை நடத்தி, பெருந்திரளாக கைது
செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போவதற்கு
முன்னதாக, காவல் நிலையங்களில் வைக்கப்படுகிறார்கள்.
அப்படி வைக்கப்படும்போது, உணவு அளிப்பதற்கு வேண்டிய
அதிகாரம் இல்லை ; பணம் இல்லை ; கன்டின்ஜென்சி
பில்லில் தான் நாங்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று
காவல் துறையினால் கூறப்படுகிறதே, அது உண்மையா?
அப்படியானால், இப்படிப்பட்ட காலகட்டங்களில், அவர்களாகவே
பணத்தை சேங்ஷன் செய்து, செலவழிப்பதற்கு வேண்டிய
ஏற்பாட்டினை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கைதிகள் அல்லது
அவ்வாறு இயக்கங்களில் ஈடுபட்டு கைதாகிறவர்களுக்கு
உணவுப் பொருட்கள் வழங்குவது பற்றிய திட்ட விவரம்
ஏதும் இல்லை ; ஆனால், அதுபோன்ற காலதாமதம் ஏற்
படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இடைப்பட்ட காலத்தில் இரண்டு
ரூபாய் என்று டிபனுக்காக ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்
கூடிய விலைவாசியில், குறைந்தபட்சம் 5 ரூபாயாவது,
எதிர்காலத்தில் நிர்ணயிக்க அரசு முன்வருமா என அறிய
விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர்
அவர்களே, இப்போது அரசு, நாள் ஒன்றுக்கு ரூ. 5-50
கொடுக்கிறது. அதை ரூ. 7-50 ஆக உயர்த்துவதற்கு பரி
சீலிக்கப்பட்டு வருகிறது. விலைவாசி ஏற்றம் உண்மைதான்;
ஆனால், நிதியையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த உணவுப்படி நிர்ணயம் எவ்வளவு காலத்திற்கு
ஒரு முறை அரசு செய்து வருகிறது என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஏற்கெனவே,
உணவுப்படி நிர்ணயம் 1981-ல் செய்யப்பட்டது ; இப்போது,
1989-ல் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலவரை
யறை இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வப்போது வருகிற
நிலைமையை அனுசரித்தும், விலைவாசியை அனுசரித்தும்
இந்த உணவுப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது.

### சென்னை நகரைத் துப்புரவுப்படுத்த புதிய இயந்திரங்கள்

*1130 திரு. பெ. சு. திருவேங்கடம் ;

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-ல் சென்னை நகரைத் துப்புரவுப்படுத்த புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இரண்டு புல்டோசர்கள் மற்றும் இரண்டு கார் மூவர்கள் வாங்கப்பட்டன.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது சென்னை நகரில் குப்பைகள் அகற்றப்
படுவதற்காக மாட்டு வண்டிகள் உபயோகப்பட்டு வருகின்
றனவே, அவற்றை முழுமையாக நீக்கி, சிறிய லாரிகளை
வாங்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளை படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். ஆனால் சில தெருக்களுக்கு பெரிய லாரிகள், அரை லாரிகள் எல்லாம் போக முடியாத இடங்களுக்கு, மாட்டு வண்டிகளை உபயோகப்படுத்தலாம் என்றிருக்கிறது. இருந்தாலும் லாரிகள் அதிகமாக வாங்கப்பட்டதற்குப் பிறகு, படிப்படியாக மாட்டு வண்டிகள் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செங்கைசிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதிலுரையில், இயந்திரங்கள் வாங்கப்பட்டதாகக் கூறினார்கள். அவைகள் தற்போது இந்த அரசால் வாங்கப்பட்டு, துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், மேலும் குப்பைகள் அதிகமாக, சென்னையிலே சேர்கிறது. அவற்றைக் கொண்டுபோய், வட சென்னையில் கொடுங்கையூர் டம்ப்பிங் கிரவுண்டிலும், தென் சென்னையில், பெருங்குடி டம்ப்பிங் கிரவுண்டிலும் கொட்டப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், சென்னையிலே அதிகமாக ' அக்யூமலேட் ' ஆகி சேர்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. டெல்லி மாநகரில், பி.எச்.ஈ.எல். நிறுவனத்தின் மூலம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களை நான் உரையாற்றச் சொல்லி அழைக்கவில்லை. வினாக்கேட்கவும். உங்களிடமிருந்து நாங்கள் ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதைத் தனியாகத் தெரிந்து கொள்கிறோம்.

**திரு. செங்கைசிவம்:** ஆகவே, டெல்லியிலே உலர்ந்த குப்பைகளைக் கொண்டு, ' எனர்ஜி ' தயாரிக்கப்படுகிறது, பி.எச்.ஈ.எல். இயந்திரத்தின் மூலமாக, அதைப் போல, சென்னையிலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா ? இது ஒரு நல்ல திட்டம் என்பதால் அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 63 குப்பை லாரிகள் ரொம்பவும் மோசமான நிலையில், கழிவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஏலம் போடுவதற்காக அரசு, உரியவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. அதற்கு மேலே, ரூ. 150 லட்சம் செலவில் 40 புதிய லாரிகளை வாங்கவும் திட்டமிட்டுள்ளது. அதோடு, 3 டன் எடையுள்ள 15 டிப்பர்கள் வாங்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.



இதற்கிடையில், 2 மாதத்திற்குள்ளாக, குப்பையை நகர்ப்புறத்திற்கு வெளியில் கொண்டு சேர்க்கிற பணியை சற்று துரிதப்படுத்தியதன் மூலமாக, குப்பைகள் வெகுவாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-10 மணி.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு அழகு செய்கின்ற மெரினா கடற்கரையில் மிகவும் அசுத்தமாக இப்போது குப்பைகள் எல்லாம் கிடக்கின்றன. அதைத் துப்புரவுப்படுத்துவதற்கு ஏதாவது நவீன இயந்திரங்கள் வாங்கப்பட இருக்கின்றனவா ? அதைத் துப்புரவுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடற்கரைக்கு உள்ளே மாநகராட்சியின் எல்லை இல்லை. அது பொதுப்பணித்துறையினுடைய நிர்வாகத்திலே இருக்கிறது. இருந்தாலும் அவைகளை நகராட்சிமன்றத் துப்புரவாளர்கள் அடிக்கடி துப்புரவு செய்து கொண்டிருக்கிறார்கள். முடிந்த வரை அழகுபடுத்தும் முயற்சியில் இரு இலாக்காக்களும் சேர்ந்து பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தூ. க. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களிலும், முனிசிபாலிட்டிகளிலும், சிறு சந்துகளில் சென்று குப்பைகளை அள்ளி வர, பவர் டில்லர் போன்ற வாகனங்கள், அங்கே இருக்கின்ற, மிகவும் தேங்கியிருக்கின்ற தண்ணீரை எடுக்கவும் பல வகையிலே உபயோகப்படுகின்றன. அதுமாதிரி வாகனங்கள் வாங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் தேவையை அனுசரித்து அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வார்களேயானால், அந்தந்த நிறுவனங்களின் நிதிநிலையை ஒட்டி, அரசு ஆணை வழங்கும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைத் துப்புரவுப்படுத்துவதற்கு புதிய இயந்திரங்கள் வாங்குவது ஒருபுறமிருந்தாலும்,

நகரை சுத்தமாக வைத்து இருக்கவேண்டும் என்று மக்களிடத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா? மேலும் அப்படி அதையும் மீறி நகரை அசுத்தப்படுத்துபவர்கள் மீது தண்டனை தருகின்ற அளவில் மாநகராட்சிச் சட்டத்தையும், டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டையும் திருத்துகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையில் பொதுநலனைப் பேணிக் காக்கின்ற சங்கங்கள் அந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டு, அவைகளும் ஓரளவிற்கு அந்தப் பணியைச் செய்து வருகின்றன. மாநகராட்சி மன்றமும் துண்டுப்பிரசுரம் மூலமாகவும் விளம்பரம் மூலமாகவும் நகரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை மக்களிடத்திலே பரப்பி வருகிறது.

## பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம்

***4318.** **திரு. என். பழனிவேல்,**
**திரு. வி. இராமசாமி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சொந்தக் கட்டிடம் இல்லாத பேரூராட்சிகளுக்கு அரசே அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) இது சம்பந்தமாக பேரூராட்சிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சொந்தக் கட்டிடம் இல்லாத 38 பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு பேரூராட்சிகள் ஏராளமான அளவில் இருக்கின்றன. அவற்றில் 88-க்கு மட்டும் இந்த ஆண்டு புதிதாகக் கட்டிடம் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் மொத்தம் தமிழகத்திலே பேரூராட்சிகளுக்கு சொந்தக் கட்டிடம் இல்லாத ஊர்கள் எத்தனை உள்ளன ? அவைகளை முழுவதுமாகக் கட்டி முடிப்பதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா





**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பேரூராட்சிகள் இல்லை, தமிழ்நாட்டில் 648 பேரூராட்சிகள் உள்ளன. அவைகளில் 560 பேரூராட்சிகளுக்கு சொந்த அலுவலகக் கட்டிடம் இருக்கின்றது. மிச்சம், எஞ்சியுள்ள 88 பேரூராட்சிகளுக்கு புதிய கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டப்படும் என்று 24 ஆம் தேதி பதிலுரை அளிக்கிறபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் அலுவலகக் கட்டிடம் இருக்கும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த 88 கட்டிடங்களுக்கும் ஆகக்கூடிய மொத்த மதிப்பீடு எவ்வளவு ? அது எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடித்துக் கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இன்னும் பட்ஜெட்டிலே விளக்கங்கள் கேட்டு, இப்போதுதான் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 24ஆம் தேதி தான் மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். விரைவாக அந்தப் பணி நடக்கும். இந்த ஆண்டுக்குள்ளாக முடிக்கப்படும்.

## எடங்கணசாலை பேரூராட்சியை இரண்டாகப் பிரித்தல்

**5322.** **திரு. சு. பழனிசுவாமி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எடங்கணசாலை பேரூராட்சியில் இருபதாயிரம் மக்கள் தொகை உள்ளதால் இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது 1991ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக எவ்வித நிர்வாக மாற்றங்களையும் செய்யக்கூடாதென அரசால் தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது.

[1990 மே 3

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடங்கணசாலை பேரூராட்சியில் சுமார் 25,000 மக்கள் தொகைக்கு மேல் இருக்கிறார்கள். அதோடு முப்பதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருப்பதால் போதிய வருமானம் இல்லாத பேரூராட்சியாக இருக்கிறது. ஆகவே, அடிப்படை வசதிகள் கூட செய்து தரமுடியாத நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சியைப் பிரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையாணை நீக்கப்பட்டதற்குப் பிறகு பரிதாபத்தோடு இது கவனிக்கப்படும்.

## ஐ. ஆர். டி. பி. கடன்கள்

*5420. திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ. ஆர். டி. பி.-யில் கொடுக்கும் கடன்கள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் தொழில், பணி மற்றும் வணிகப் பிரிவின் கீழ் ஊரக பேரூராட்சிகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

9-15 மணி.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம், ஜனத்தொகை அடிப்படையிலே அத்தகைய கடன்கள் வழங்கப்படுவதில் அதிகமான பேரூராட்சிகள் உள்ள ஒன்றியங்களுக்கு சிறப்பாக ஏதாவது அரசு அளிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: கிராமப் பஞ்சாயத்துக்கு எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறதோ, அந்த அடிப்படையில் பேரூராட்சிகளுக்கும் வழங்கப்படும்.



1990 மே 3]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் வங்கிகளில் கடன் கொடுக்கிறோம். ஆனால், வீடு கட்டுவதற்கு இதுவரை கொடுக்கவில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் வீடு கட்டுவதற்கும், பேரூராட்சிகளில் உள்ள மக்களுக்கு உதவி கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்குத் தனியாக ஒரு திட்டம் உள்ளது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிற கடன்கள், ஊராட்சியானாலும், பேரூராட்சியானாலும் சிபாரிசு செய்யப்பட்டால் கூட, வங்கிகள் அந்தக் கடன்களைக் கொடுக்க மறுக்கின்றனவே, சிபாரிசு செய்யப்பட்ட அனைவருக்கும் வங்கிகள் தவறாமல் கடன் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரூராட்சிகளுக்கு மட்டும் அவர்கள் மறுக்கவில்லை. கிராம ஊராட்சிகளுக்கும் அவர்கள் மறுக்கிறார்கள். அது அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலையை ஒட்டி, வங்கி ஆய்வாளர்களை அழைத்துப் பேசி, முடிவு எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. கடனை, நகராட்சி எல்லைக்குள் உள்ள ஏழைகளுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தனியாகக் கேள்வி போடவும்.

## கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுக்காக வழங்கப்படும் தொகை.

*4270. திரு. உ. ரா. வரதராசன் :
திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுக்காக வழங்கப்படும் தொகையின் உச்சவரம்பு ரூ. 150 என்று மாநிலப் பதிவாளர் நிர்ணயித்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இத்தொகையை உயர்த்தி அறிவிக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) வேளாண்மை சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவ்வகையைச் சார்ந்த சங்கங்கள் ஊழியர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 180 வீதமும், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நகர வங்கிகள் ஆகிய வகைச் சங்கங்களைச் சார்ந்த ஊழியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 வீதமும் மருத்துவப்படி வழங்கலாம் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து, மருத்துவப்படி வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சவரம்பினை உயர்த்த வேண்டி கோரிக்கைகள் பெறப்படின் அவை தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களினுடைய பணியாளர்களுக்கு, பதிவாளரால் அனுப்பியிருக்கிற அறிவுரையிலே, அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகைகள், ஆண்டுக்கு என்று வருகிறபோது, மிகக் குறைவாக உள்ளது என்பதை அமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். பல்வேறு கூட்டுறவுப் பணியாளர்களுடைய அமைப்புகள், இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கைகள் எழுப்பியிருக்கின்றன. ஆகவே, இந்தக் கோரிக்கையை உரிய முறையில் பரிசீலித்து, அந்தத் தொகையை உயர்த்தவும், அதை குறைந்தபட்சம் எவ்வளவு என்று நிர்ணயிக்கும்போது, ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பும் அதன் நிதிநிலைமைக்கேற்ப அதிகமாக எவ்வளவு வழங்க முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், பதிவாளருடைய உத்தரவை மாற்றியமைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனித்த சங்கங்களுடைய நிதி நிலைமையைப் பொருத்துத்தான், அந்தத் தொகையை உயர்த்தித் தருவதற்கான வாய்ப்பினைப் பரிசீலிக்க முடியும். தனிப்பட்ட சங்கங்களிலே



இருந்து, அத்தகைய கோரிக்கைகள் வருமேயானால், அந்த சங்கங்களினுடைய நிதிநிலைமைக்கேற்ப, உயர்த்தித் தருவது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கூட்டுறவுப் பதிவாளரின் உத்தரவு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளும்படியான முறையில், அமல் நடத்தப்பட்டு வருகிறது. பாதகமான உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்து விடுகிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு, சீரான முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துக்கும் பொதுவான கொள்கையை அமல் நடத்த வேண்டுமென்று அரசு குறிப்பாணை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே பாகுபாடு எதுவும் இல்லை. சில சங்கங்களை வகைப்படுத்தி, அந்த சங்கங்களுக்கு இவ்வளவு அதிக பட்சம் தரலாம் என்கிற ஆலோசனை, அறிவுரையாக வழங்கப்படுகிறது. அவ்வளவுதான். நிதிநிலைமைக்கேற்ப, சங்கங்களுடைய நிதியாதாரத்தை மையமாகக் கொண்டுதான், அதிலே எவ்வளவு உயர்த்துவது, அவர்களுக்கு எவ்வளவு வழங்கலாம் என்கிற முடிவு எடுப்பது ஆகியவை அமைந்திருக்கின்ற காரணத்தாலே, இதில் எந்தவிதமான பாகுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**9-20 மணி.**

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு ஆண்டுக்கு 150 ரூபாய் என்பது மிகவும் குறைவாக உள்ளது. அரசுத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு எப்படி இலவச சிகிச்சைக்கான ஏற்பாடு இருக்கிறதோ, அதைப்போல, இவர்களுக்கும் அந்த ஏ, பி, சி என்று அந்தச் சம்பள அடிப்படை வீதத்திலே அரசு இவர்களுக்கும் உதவி வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்த அந்தச் சங்கங்களினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து உயர்த்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிதி ஆதாரம் சரியாக இருந்தும், அரசு ஆணை வழங்கப்பட்டும் கூட, அவர்களுடைய ஊதியத்தை வரையறை செய்யாமல் இருப்பதை அரசு அறியுமா ? ஆம் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, ஊதியமா, மருத்துவப்படியா என அறிய விரும்புகிறேன்.

நிலவள வங்கி ஊழியர்களின் ஊதியம்

*4406. திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலவள வங்கி ஊழியர்களின் ஊதிய விகிதம் எப்போது நிர்ணயம் செய்யப்பட்டது ?

(ஆ) அதைத் திருத்தி அமைக்கக் கோரி முறையீடு எதுவும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏப்ரல் மாதம் 1982-ல் நிர்ணயம் செய்யப்பட்டது.

(ஆ) ஆம்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழகம் முழுவதும் உள்ள நிலவள வங்கி ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப் பட்டு இருக்கிறது என்று சொன்னால், அது எத்தனை ஆண்டுகளுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. அது முடிவு பெற்றதற்குப் பிறகு, அது மறுபரிசீலனை செய்யப்பட்டதா ? அப்படி மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை அவர்களிடமிருந்து வந்து அதை அரசு பரிசீலித்ததா ? அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 (3) ஒப்பந்தம் செய்யப்பட்டது. அது 30-6-1985 ஆம் ஆண்டு முடிவு அடைந்திருக்கிறது. நிலவள வங்கிகள் தமிழ் நாட்டில் 181 வங்கிகள் இருக்கின்றன. இந்த 181 வங்கிகள் 1974ஆம் ஆண்டிலேயிருந்து நட்டத்திலேதான் நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் 13 வங்கிகள் தான் அதிலே லாபத்திலே இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. நிதி ஆதாரம் என்பது நட்டத்திலே இருக்கிற காரணத்தாலேதான் இவர்களுக்கு 1985 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்தாலும், மீண்டும் ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பதற்கான வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் இந்த அரசு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள். 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 (3) ஒப்பந்தம் போடப்பட்டது என்று. போடப்பட்ட ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும். போடப்பட்ட அந்த ஒப்பந்தம் காலம் முடிந்து-ஒப்பந்தக்காலமே 3 ஆண்டுகள் —ஒப்பந்தம் முடிந்ததற்குப் பிறகு சென்று இருக்கக்கூடிய காலம் 6 ஆண்டுகள், அப்படி இரண்டு முறை அவர்களுடைய ஊதியத்தை மறு ஆய்வு செய்திருக்கவேண்டும். அதற்குச் சொல்லக் கூடிய காரணம் நிதிநிலை இல்லாததால் மறு ஆய்வு செய்யவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். நிதிநிலைப் பற்றாக்குறையை மட்டும் வைத்து, அந்த ஊழியர்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிப்பது நியாயமாக இருக்குமா ? அதே நேரத்தில் அந்தக் கூட்டுறவு வங்கிகளிலே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் இருக்கக்கூடிய ஏ.சி. அறைகளுக்கு செலவு செய்யக் கூடிய அந்த செலவுகளை எல்லாம் குறைத்து இந்த ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பபதற்கு அரசு முயற்சி எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் நியாயத்தை என்னால் உணர முடிகிறது. ஆனால் நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில், நட்டத்திலேதான் அவைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இப்போது அவர்களுக்கு ஊதியத்தைத்தான் மாற்றியமைக்கவில்லையேயல்லாமல், பஞ்சப்படி எல்லாம் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. நிதி ஆதாரத்தை நிலவள வங்கிகளிலே பெருக்குவதற்கு பேங்கிங் ஆக்டிவிடிஸ் என்கிற வகையில் வங்கிகளுடைய நடவடிக்கைகளை சாதாரண வங்கிகளைப் போல மாற்றியமைப்பதற்கு நபார்ட், இந்தியத் தலைமை வங்கி ஆகிய வங்கிகளுக்கு அனுமதி கோரி எழுதப்பட்டு உள்ளது. அனுமதி கிடைத்துவிடும் என்று நம்புகிறோம். அப்படி அனுமதி கிடைத்துவிடுமானால், நிதி ஆதாரத்தைப் பெருக்கிக் கொண்டு, ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்வதோடு, மற்ற ஏ.இ. அறைகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அவைகள் எல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கைப்படி விவசாயிகளுக்கு பழைய கடன் பாக்கிகள் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிற காரணத்தால், நிலவள வங்கிகளில் இதுபோன்ற நிதிப் பற்றாக் குறை ஏற்படுகிறது. அந்த தள்ளுபடி செய்யப்பட்ட கடன்

தொகையை அரசு சம்பந்தப்பட்ட நிலவள வங்கிகளுக்கு வழங்கி இருக்கிறதா ? கடந்த ஆண்டு, 1989—90 ஆம் ஆண்டுக்கு எவ்வளவு அரசிடமிருந்து நிலவள வங்கிகளுக்கு வழங்கப்பட்டது என நான் அறிய விரும்புகிறேன்.

(9-25 மணி)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு அறிவித்த கடனைப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது மாநில அரசு கடன் தள்ளுபடியைப் பற்றிச் சொல்கிறார்களா என்பதை விளக்கமாகக் கேட்டால் தான் பதில் சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுகூட மாநில அரசு ஒரு கடன் தள்ளுபடிச் சட்டத்தைக் கடந்த காலத்தில் கொண்டு வந்தது. அதிலே சில குளறுபடியான உத்தரவு இருந்தது. அது என்னவென்று சொன்னால், குறிப்பிட்ட அளவு கடனை செலுத்தி இருந்தால் முழுமையாகத் தள்ளுபடி, ஓரளவு செலுத்தி யிருந்தால், ஓரளவு பாக்கியிருந்தால் தள்ளுபடி இல்லை என்று சொல்லிய குளறுபடி காரணமாக பல்வேறு விவசாயிகள் ஓரளவு கட்டி, இரண்டாவது கட்டமுடியாமல் தள்ளுபடி இல்லாமல் போய்விட்டது. அதை முறையாகச் செய்தால் அந்தக் கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு அந்தப் பணம் போய்ச் சேர்ந்து வாபகரமாக நடக்கும். இரண்டாவது, நட்டத்திலே ஓடுகின்றது என்பதற்காக அதிலே உள்ள ஊழியர்களுக்கு ஊதியத்தைக் குறைவாகக் கொடுப்பது நியாயமல்ல. ஏனென்றால் அதுவும் ஒரு அரசாங்கத்தினுடைய அங்கமாக இருக்கிறது. இன்றைக்கு எல்லாமே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை இல்லை. ஆகவே தமிழ்நாடு கூட்டுறவு யூனியனில், கூட்டுறவு வளர்ச்சி நிதி, கூட்டுறவுக் கல்வி நிதி என்று சொல்லக் கூடிய முறையில் அதிகமான நிதி எல்லாம் சேர்ந்திருக்கிறது. எனவே அந்த நிதியை இப்படி நட்டத்திலே ஓடிய சங்கங்களுக்குக் கொடுத்து, அந்த நியாயமான ஊதியத்தை வழங்குவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் தள்ளுபடி பற்றி ஏற்கெனவே போட்ட உத்தரவு குளறுபடியாக இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நான் புரிந்துகொண்டு அதற்குரிய விளக்கம் அளிப்பதற்கு தனிக் கேள்வி போட்டால் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## திருச்சி மற்றும் கோவை சிந்தாமணி சிறப்பங்காடியில் மோசடி.

*6160. திரு. கே. ரமணி:
திரு. எஸ். டி. உகம்சந்த்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி சிந்தாமணி சிறப்பங்காடியில் சமையல் காஸ் சிலிண்டர்களை அதிக விலைக்கு விற்று 2½ லட்ச ரூபாய்க்கு மேல் மோசடி செய்த அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

(இ) கோவை சிந்தாமணி சிறப்பங்காடியில் சில ஊழல்கள் நடப்பது பற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையின் எரிவாயுப் பிரிவில் இந்திய எண்ணெய்க் கழக (I. O. C.) அலுவலர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடங்கில் இருப்பு சரிபார்த்தபோது எரிவாயு சிலிண்டர் மற்றும் ரெகுலேட்டர்கள் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இம்முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டவுடன் 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழ் திருச்சி சரக துணைப் பதிவாளரால் விரிவாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முறைகேடு நடைபெற்ற சமையல் எரிவாயு விநியோகப் பிரிவில் பணியாற்றிய 4 பணியாளர்கள் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளனர். குறைவுத் தொகையை வசூலிக்க அப்பணியாளர்கள் மீது பண்டகசாலை திருச்சி சரக துணைப் பதிவாளரிடம் தாவா தொடர்ந்துள்ளது.

(இ) வந்துள்ளது.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாமணி என்ற பெயரும் ஊழல் என்ற பிரச்சினையும் பார்த்தவுடனே இந்த இரண்டு கேள்விகளையும் ஒன்றாக இணைத்து இப்படிப் போடுவது ஒரு சரியான நடவடிக்கை அல்ல என்பது என்னுடைய சப்மிஷன் என்பதை முதலில் சொல்ல விரும்புகிறேன். கோவை சிந்தாமணியில் ரூ. 72 இலட்சத்திற்கு திருட்டு நடந்தது சம்பந்தமாக பலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த வழக்குகள் எல்லாம் இன்னமும் கோர்ட்டிற்கு வந்து

விசாரணை நடத்தப்படாமல் காலம் கடந்து கொண்டே போய்க் கொண்டிருப்பதால் மேலும் அந்த சிந்தாமணி அமைப்பிற்குள்ளே சில இடங்களில் ஊழல்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளதும் அதனால் மக்கள் மத்தியில் மேற்கொண்டும், மிகவும் வேதனையும் இந்த நல்ல ஸ்தாபனம் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறதே என்ற அங்கலாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதன் மீது என்ன விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? அந்த ஊழலை அடியோடு அந்த சிந்தாமணி ஸ்தாபனத்திலிருந்து துடைத்தெறிவதற்கு ஏதாவது நல்ல புதிய திட்டங்களை, நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் கையாளப்போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(9-30 மணி.)

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் நடைபெற்ற ரூ. 72.29 இலட்சம் முறைகேடு தொடர்பாக 20 நபர்கள் குற்றத்திற்குத் தொடர்புடையவர்கள் என்று புலன் ஆய்வுக் குழு தெரிவித்திருக்கிறது. மேற்கண்ட 20 நபர்கள் மீதும் காவல் துறை வணிகவியல் குற்றப் பிரிவு புலனாய்வுப் பிரிவினர் குற்ற வியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்துள்ளனர். அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது. தற்போது பணியிலிருந்து சிலர் ஓய்வு பெற்று உள்ளதால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பரிசீலனையிலுள்ளது. மேலும் அப்பண்டகசாலையில் தலைமைப் பொறுப்பிலிருந்த இணைப் பதிவாளர் மற்றும் துணைப் பதிவாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட 20 நபர்களிடமிருந்து அவர்களால் பண்டகசாலைக்கு ஏற்பட்ட நட்டத் தொகையை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கை கோவை சரக துணைப் பதிவாளரால் தொடரப்பட்டுள்ளது. நட்டத்தை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கையுடன் கீழ்க்கண்ட நபர்கள் மீது கோவை சரக துணைப் பதிவாளரிடம் தாவா தொடரப்பட்டதுடன், அவர்களுடைய அசையாச் சொத்துக்கள் தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யப்பட்டுள்ளன. ஏ.எஸ்.ஏ. முஸ்தபா, சேக்தாது, பிச்சைமணி, ரங்கராஜன், ஆகியோருடைய சொத்துக்கள் இன்றைக்கு தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யப்பட்டுள்ளன. மற்றவர்கள் மீது 'கிரிமினல்' நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவை சிந்தாமணியை சீர்திருத்துகின்ற வகையில் முனைப்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எப்பொழுதெல்லாம் குறைபாடுகள் பொதுமக்கள் தருகிறார்களோ, உடனுக்குடன் அவ்வப்போது தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு கோவை சிந்தாமணி மீண்டும் சிறப்பாக . செயல்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருப்பது திருச்சி சிந்தாமணி சிறப்பங்காடியில் சமையல் காஸ் சிலிண்டர்கள் அதிக விலைக்கு விற்றதால் $2\frac{1}{2}$ இலட்சம் மோசடி என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் அங்கே சிலிண்டர்கள் குறைவாக இருந்தன, ரெகுலேட்டர்கள் குறைவாக இருந்தன என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். இதேபோல சிறப்பங்காடிகளில் காஸ் சிலிண்டர்கள் எப்பொழுதெல்லாம் 'டிமாண்டுகள்' வருகின்றதோ, அந்தநேரத்தில் அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல கோவையில் நடைபெற்று இருக்கின்ற அந்த ஊழல்கள் பற்றி இன்றைக்கு வழக்குமன்றத்திலே அந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. ஊழல்களைத் தடுப்பதற்கு இது போன்ற நிலைமைகள் மற்ற சிறப்பங்காடிகளிலே நடைபெறக் கூடாது என்பதற்காக அரசாங்கம் ஏதாவது புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தவிருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலிண்டர்களை அதிக விலைக்கு விற்கிறார்களா, குறைந்த விலைக்கு விற்கிறார்களா என்பது வேறு. அப்படி விற்ற காரணத்தினாலேதான் சிலிண்டர்கள் குறைவாக இருக்கின்றன என்கின்ற அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, அந்த வகையில் ரூ. 2,52,250 அவர்கள் மூலமாக நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்து, குழு ஆய்வு செய்து அந்த அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெல்லாம் கடந்த கால ஆட்சியில் தவறுகள் நடந்து இருக்கின்றதோ அங்கெல்லாம் நடவடிக்கைககள் உடன் மேற்கொள்ளப்பட்டு எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, திருச்சி சிந்தாமணியிலே பலதடவை இதுமாதிரி ஏற்பட்டிருக்கின்றது. எப்படி குறைவு ஏற்படுகிறதென்றால், அங்கே காஸ் சிலிண்டர்கள் இருக்கின்றன. அதற்குள்ளே இருக்கிற காஸ் காணோம். அதுதான் நடந்தது. இதுமாதிரியாக பலதடவை நடந்து, ரிப்போர்ட் போய் கடைசியாக 'செக்' பண்ணுகிறபோது அங்கே காஸ் சிலிண்டர்கள் கரெக்டாக இருந்திருக்கின்றன, சிலிண்டர் உள்ளேயிருந்த காஸ்தான் பெரும்பான்மையாக விற்கப்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஸ் மட்டும் தனியாக விற்பது எப்படி என்று திரு. தீட்சிதர் அவர்கள்தான் விளக்கம்

சொல்ல முடியும். காஸை கோணிப் பையில் கட்டி விற்பதா, எப்படி என்பதற்கு திரு. தீட்சிதர் விளக்கம் சொல்ல வேண்டும். காலி சிலிண்டர்கள் இருக்கிறதா? காலி சிலிண்டர்களை வெளியிலே விற்று இருக்கிறார்கள். அப்படித்தான் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அந்த வகையிலேதான் 2,52,250 ரூபாய் நட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் மூலமாகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நானும் அதைத் தான் சொல்கிறேன். 'ஓட்டல்களுக்கு', பெரிய ஸ்தாபனங்களுக்கு வேண்டிய காஸை என்ன பண்ணுகிறார்கள் என்றால் அந்த காஸ் சிலிண்டரைக் கொண்டு வைத்துவிட்டு, அவர்களிடம் இருக்கிற காலி சிலிண்டரை கொண்டு வந்து மாத்திவைக்கிறார்கள் அதுதான் இப்பொழுது தெரிந்த விஷயம். அதைத்தான் விற்றுகொண்டு இருக்கிறார்கள் என்பதை சர்க்கார் அறியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தீட்சிதர் எடுத்துச் சொல்லிய கருத்து பரிசீலிக்கப்படும்.

(9-35 மணி.)

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிந்தாமணி சிறப்பு அங்காடியில் 2,52,000 ரூபாய்க் கான ஒரு முறைகேடு நடைபெற்ற காலம் எந்தக் காலம்? அங்கே எத்தனை தொழிற்சங்கங்கள் இருக்கின்றன? அதில் எந்தெந்தத் தொழிற்சங்கங்கள் இந்த முறைகேட்டைக் கண்டித்து அன்றைக்கு நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தைச் சொல்வதற்கான விவரம் என்னுடைய கையிலே இருக்கிறது. எத்தனை தொழிற்சங்கங்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். காலம் என்பது 1—11—1987-ந்தேதி நடந்த ஆய்வின் பொழுது ரூ. 84,000 மதிப்பிற்கான சிலிண்டர்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதுபோன்று 25—3—89-ந் தேதி அன்று ரெகுலேட்டர்கள் 10,250, 1,24,500, 33,500 என்ற வகையில் மொத்தம் 2,52,250 ரூபாய்க்கான சிலிண்டர்கள், ரெகுலேட்டர்கள் இல்லாத நிலைமை கண்டுபிடிக்கப்பட்டது.



ஆழ்துளைக் கருவியில் பணிபுரிகின்ற ஊழியர்கள்.

*6476. திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்துளைக் கருவியில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு துளையிடும் சமயம் அதிலிருந்து வெளிப்படும் தூசுகள், கம்ப்ரசர் வெப்பம் மற்றும் டீசல், ஆயில், இரும்பு சாமான்களின் தாக்கம் ஆகியவற்றால் மூச்சுக்குழாய் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இவர்களை காக்க அரசின் திட்டம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூச்சுக்குழாய் பாதிக்கப்பட்டதாக இதுவரையில் தகவல் ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும் இவர்கள் தக்க பாதுகாப்புகளுடன்தான் பணியில் ஈடுபடுகிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மூச்சுக்குழாய் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு பல நோய்கள் வந்திருப்பதாகத்தான் சொல்கிறார்கள். எப்படியும் அது போன்ற ஒரு பணியிலே ஈடுபடக்கூடிய அந்த ஊழியர்கள் இப்படி பல்வேறு சுற்றுப்புறச் சூழல் சரியாக இல்லாத காரணத்தால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அறிவாரா ? அவர்களுக்கு அன்றாடம் எவ்வளவு படி கொடுக்கப்படுகிறது. அவர்கள் நிரந்தரமானவர்களா அல்லது அன்றாடம் வைக்கப்படுபவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் அவ்வாறு ஆழ்துளை

கிணறுகள் அமைக்கும்போது நீர் மட்டம் கிடைக்கும் வரை ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து வெளிப்படும் கற்கள், ஆழ்துளை கிணற்றுக்குள் தண்ணீர் மற்றும் நுரை போன்றவற்றைச் செலுத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. கம்ப்ரசர் இயந்திரத்திலிருந்து வெளிப்படும் எண்ணை போன்றவற்றினால் ஊழியர்கள் வழுக்கி விழுந்துவிடாமல் இருக்க ஊழியர்களுக்கு காலணியும், பற்ற வைத்தல் மற்றும் சாணை பிடித்தல் போன்ற வேலைகளில் ஊழியர்கள் ஈடுபடும்போது ஊழியர்களின் கண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு பாதுகாப்புக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மற்றப்படி ஏற்படும் விபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தலைக்கவசம், கையுறை மற்றும் சீருடை எல்லா ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூச்சுக் குழாய் பாதிக்கப்பட்டதாக இதுவரையில். எந்தத் குற்ற தகவலும் இல்லை. இதுபோன்று பாதிக்கப்படுவதாக குறிப்பை அவர் கொடுப்பார் என்று சொன்னால் அது குறித்து அரசு நடடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஊழியர்கள் இந்த நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தனியாக மருத்துவப்படி ஏதும் அளிப்பதற்கு அரசு முன்வருமா? அந்த ஊழியர்களை நிரந்தரம் ஆக்கி பணியிலே அமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்களை நிரந்தரப்படுத்துவது போன்றவைகளை எல்லாம் செய்து வருகிறார்கள்.

### கன்னியாகுமரியில் அரசு பொது மருத்துவமனை.

*6500. திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கும் மருத்துவ மனையை மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில். சமுதாய நல நிலையமாக இயங்கும் மருத்துவமனையை மாற்றி அமைக்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : தலைவர் அவர்களே, உலகச் சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை முந்தைய நம் கழக ஆட்சியில் அரசு மருத்துவமனையாக இருந்தது போல் மீண்டும் படுக்கை வசதி, அறுவைச் சிகிச்சை வசதி, பிரேதப் பரிசோதனை செய்யும் வசதி, கொண்ட அரசு பொது மருத்துவமனையாக ஆக்கும் திட்டம், பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே 1—6—1987லேயே அது சமுதாய நல நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே 15 படுக்கைகளுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசினுடைய நிதிநிலைமைக் கேற்ப உறுப்பினர்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை.

*7795. திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி மருத்துவமனையில் இதுவரை எத்தனை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது ?

(ஆ) இது எதனால் இடையிலேயே நிறுத்தப்பட்டது ?

[1990 மே 3

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆறு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

(ஆ) இடையே நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே தமிழ் மக்களுடைய சிறுநீரகங்கள், ஏழை எளிய மக்களுடைய சிறுநீரகங்கள் விலைபேசி விற்கப்படுவதும் அவைகள் வெளிநாட்டில் இருக்கின்றவர்களுக்குப் பொருத்தப்படுவதும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதனால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா ?

9-40 மணி

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மதுரை ராசாசி மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சை பிரிவு இருக்கிறதா என்று கேட்டு இருக்கிறார்கள். இதிலே சிறுநீரகம் வழங்குவதிலே, வெளிநாட்டுக்கு அனுப்புவது எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவ்வாறு அரசுக்கு எந்தப் புகாரும் வரவில்லை. தனிப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அந்த புகார் எதுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு நாளேடுகளில் வந்து இருக்கின்றன. இருக்கட்டும். நமது அரசு மருத்துவமனைகளிலே ஒருவருக்கு சிறுநீரகம் பொருத்தவேண்டும் என்றால் அவருடைய உறவினருடைய சிறுநீரகத்தைத் தான் பொருத்துவோம் என்று அரசு டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவரே தனியார் மருத்துவமனைகளை நடத்தி வருபவர்களாக இருந்தால் நண்பரை அங்கே வரச் சொல்லுங்கள் அவருடைய சிறுநீரகத்தை நாங்கள் பொருத்தி விடுகிறோம் என்று சொல்லி விடுகிறார்கள். ஆக அரசு மருத்துவமனையில் இலவசமாக பொருத்த வேண்டும் என்றால் உறவினர் அல்லாதவர்களுடைய சிறுநீரகம் பொருந்தாது, மற்ற இடத்திலே பொருந்தும் என்று இருக்கிற ஒரு நிலை அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.



1990 மே 3]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று எந்த மருத்துவமனையில் எந்த மருத்துவர் எந்த நோயாளியிடத்தில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், அவருடைய வைத்திய முறைக்கு எதிராக சொல்லியிருப்பார்கள் என்று சொன்னால், அது பற்றி தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கு ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய ஒரு தொடர்பு அனுபவம் எனக்கு இருக்கிறது. அதனால் நான் சொல்கிறேன். உறவினராக இருந்தால் கூட 4 பேர் அண்ணன் தம்பிகள் இருந்தால் அதிலே யாருடைய டிஸ்யூ பொருந்துகிறதோ அவருடைய சிறுநீரகத்தைத் தான் பொருத்த முடியும். இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான் அவர்களுக்குக் கூட அவருடைய உறவினர்கள் 4 பேர் தருவதாகச் சொன்னார்கள். யாருடைய டிஸ்யூ பொருந்துகிறது என்று பரிசீலனையில் இருப்பதாக 15 நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். வேறு யாராவது இருந்தாலும் கூட அன்னியராக இருந்தாலும் கூட டிஸ்யூ பொருந்துமானால் சிறுநீரகம் பொருத்தலாம். அதை அந்தந்த மருத்துவர்கள் ஆய்ந்து பரிசீலனைக்குப் பின்னால் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**திரு. பி. என். வல்லரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை இதுவரை 6 மாற்று அறுவை சிகிச்சை தான் நடத்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது ஏன் என்று புரியவில்லை. தென் மாவட்டங்களில் சென்னைக்கு அடுத்து மதுரை தான் முக்கிய நகரமாக இருப்பதால் இந்த சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு கூடுதல் நிதி வசதி அளித்து அங்கே பாதிக்கப்பட்டு இருக்கிற மக்களுக்கு.... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்று சொல்கிறீர்களா ?

**திரு. பி. என். வல்லரசு :** உதவி செய்தால் தனியார் இடத்திற்குச் சென்று மக்கள் அவதிப்படும் நிலை ஏற்படாது. எனவே, இதை விரிவு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை ராசாசி மருத்துவமனையில் 6 சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ததாகச் சொன்னார்கள். இந்த 6-ல் வெற்றி கண்டது எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? தொடர்ந்து இன்னும் அதிகமாக செய்வதற்கு வேண்டிய கருவிகள், நிபுணர்கள் ராசாசி மருத்துவமனையில் நியமிக்கின்ற திட்டம் அரசிடத்தில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 31—1—1990 அன்று தமிழக அரசின் காவல் துறையைச் சேர்ந்த திரு. இராசைய்யா என்பவருக்கு மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் வெற்றி பெற்று இருக்கின்றன. அங்கே இந்தத் துறையில் ஒரு பேராசிரியர், ஒரு கூடுதல் பேராசிரியர், ஒரு ஆசிரியர், ஒரு செவிலியர் இந்த துறைக்கு ஒதுக்கி பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நான் முந்தைய கேள்விக்கு பதில் சொன்னது போல் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப இதை விரிவுபடுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

## நொய்யல் ஆற்றைச் சுத்தப்படுத்துதல்.

*8871. திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர மையத்துல உள்ள நொய்யல் ஆற்றை சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ): இல்லை. ஆனால் திருப்பூர் நகரில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறை ஆலைகள் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்யாமல் நொய்யல் ஆற்றில் விடுவதைத் தடுக்க ஒரு பொதுவான கழிவுநீர்ச். சுத்திகரிப்பு நிலையம் (Common Effluent Treatment Plant) அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் மத்தியில் இருக்கிற நொய்யல் ஆற்றின் இரு புறங்களில் இருக்கக்கூடிய சாக்கடை நீர் முழுவதும் அந்த நொய்யல் ஆற்றில் தேங்கி நின்று அங்கே மிகக் கடுமையாக துர்நாற்றம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் ஆண்டுக்கு 2, 3 முறை நொய்யல் ஆற்றில் தண்ணீர் வந்த காரணத்தால் அவைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டு இருந்தது. தற்போது அந்த வாய்ப்பு பல ஆண்டுகளாக இல்லாத நிலையில் மிக மோசமான நிலையில் இருக்கிறது. எனவே அதை சுத்தம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

(9-45 மணி)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளிலேயிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வடிகால்கள் மூலமாக நொய்யலாற்றில் கலக்கிறது. எனவே, இத்தொழிற்சாலைகளுக்கென ஒரு பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் முயற்சிக்கு சாயத் தொழில் உரிமையாளர்கள் ஆதரவு அளிக்க சம்மதித்து உள்ளனர். பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து ஆராய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒரு குழுவை அமைத்து உள்ளது. அந்தக் குழுவில், வாரிய அதிகாரிகள், நகர் மற்றும் கிராம அமைப்புத் துறை, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் வருவாய்த் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழு திருப்பூர் பகுதியில் உள்ள சலவை மற்றும் சாயப் பட்டறைத் தொழிற்சாலைகளின் தற்போதைய நிலையையும் அவற்றில் எந்தெந்த தொழிற்சாலைகளை பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்பதையும், எந்தெந்த தொழிற்சாலைகள் தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்

என்பதையும் கண்டறிந்து, இப்போது அறிக்கை தயாரிக்கின்ற பணியைச் செய்து வருகிறது. அந்தப் பணி விரைவுபடுத்தப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு நன்றி. நான் கேட்டது, சாக்கடை தண்ணீர் தொடர்ந்து அங்கே வந்து தேங்கி நிற்கிறது. அதன் விளைவாக, பன்றிகளின் இருப்பிடமாக அது மாறிக் கொண்டிருக்கிற காரணத்தினால் பல தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த மாதம் குடிநீர் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக கோவைக்கு வருவதாக ஏற்கெனவே தெரிவித்து இருப்பதாலும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அந்த நொய்யலாற்றிலே தேங்கி நிற்கக்கூடிய, அந்தச் சாக்கடைத் தண்ணீர் தேங்கி நிற்கிற இடங்களையெல்லாம் பார்வையிட்ட பிறகாவது, அந்த நகர மக்களின் சுகாதாரம் கருதி, அவர்கள் துறையின் மூலமாக மேல் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எங்கள் துறையினுடைய பணி அல்ல. அந்த நகராட்சியே செய்யவேண்டிய பணி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நகராட்சியோடு பேசி; அந்தப் பணியைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நூற்பு ஆலை திறத்தல்.

*984. திரு. ஆலஙயல் சுப்பையா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, நமனசமுத்திரம் நூற்பு ஆலையை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அந்த ஆலை எப்பொழுது திறக்கப்படும் ?



மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டையில் நமனசமுத்திரம் என்ற ஊரில் உள்ள லட்சுமி ஷண்முகா ஸ்பின்னிங் மில்ஸ் என்னும் நூற்பாலை கடந்த ஜூன் 1986-லிருந்து நிதி நெருக்கடி, தொழிலாளர் பிரச்சினை போன்ற காரணங்களால் மூடப்பட்டது. கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் நியமிக்கப்பட்ட நிரந்தரக் குழு ( Standing Committee ) இந்நூற்பாலையின் நிலைப்புத் தன்மை குறித்து இருமுறை ஆராய்ந்து இந்நூற்பாலை நிலைப்புத் தன்மையினை அடைய இயலாது எனக் கருத்து தெரிவித்தது. அதன் பின்னர் அரசு உயர் அலுவலர்கள் அடங்கிய குழு இந்நூற்பாலையின் நிர்வாகத்துடன் 14—3—1989 அன்று நூற்பாலையினை மீண்டும் திறந்து நடத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தது. அந்நூற்பாலையின் நிர்வாகம் அக்கூட்டத்தில், தமது தொடர்ந்த நிதி நெருக்கடியினால் தங்களால் தொடர்ந்து நடத்த இயலாது என்று தீர்மானமாக தெரிவித்துள்ளனர். மேலும் நூற்பாலையினை தாங்கள் விற்க முடிவு செய்துள்ளதாகவும் அது தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே நூற்பாலையின் தற்போதைய நிர்வாகம் நூற்பாலையினை ஏற்க முன்வருபவரோடு கைத்தறி மற்றும் துணிநூல் துறையை அணுகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகம் இந்நூற்பாலையினை மேற்கொண்ட பின்னர், புதிய நிர்வாகத்தின் தேவையறிந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும்,

(ஆ) மேற்கூறிய நடைமுறைகளுக்குப் பின்னர்தான் நூற்பாலை திறக்கப்படுவது சாத்தியமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருமயம் தொகுதி தொழில் வளம் இல்லாத தொகுதியாகும். ஏற்கெனவே அந்தப் பகுதியில் இயங்கிவந்த ஒரே ஒரு நூற்பாலையான நமனசமுத்திரம் லட்சுமி ஷண்முகா நூற்பாலை கடந்த 5 ஆண்டுகளாக மூடப்பட்டு 600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றனர். தமிழக முதல்வர்

[1990 மே 3

தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது, அதைப் பரிசீலனை செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். அருள்கூர்ந்து, எங்களுடைய தொகுதியில் இயங்கி வந்த இந்த ஒரே ஒரு நூற்பாலையை அரசு ஏற்று நடத்த முன்வருமா? அதிலும் இந்த ஆண்டே நடத்துவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிர்வாகம், தொடர்ந்து நிதிநிலை நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் திறக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், அந்த ஆலையை வெளியாருக்கு விற்பதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். யாராவது வாங்குவதற்குத் தயாராக இருந்தால், அரசின் சார்பாக அந்த ஆலையைத் திறப்பதற்கு வேண்டிய அத்தனை சலுகைகளும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள்.

*2586. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் லாபத்தில் இயங்குபவை எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இரண்டு.

அவைகள் (1) நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(2) மன்னார்குடி பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(ஆ) ஒன்று.

நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.



1990 மே 3]

(9-50 மணி)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளில் இலாபத் தில் இயங்குபவை எத்தனை என்று கேட்கிறபோது ஒன்று என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பால் வழங்கும் சங்கங்கள் இன்றைய தினம் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அப்படி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாக எத்தனை சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக தஞ்சை மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மாற்றுவதற்கு அரசு முடிவெடுக்கவில்லை. மாற்றுவதாக முடிவெடுத்தபோது அங்கே இருக்கிற மக்களுடைய தேவையை அறிந்து மீண்டும் பால் வழங்கும் சங்கங்களாகவே இருக்கட்டும் என்று அரசு முடிவெடுத்து இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 192 பால் உற்பத்தி யாளர் சங்கங்கள் உள்ளன. அவைகளில் 42 உற்பத்தியாளர் சங்கங்கள் இலாபகரமாகச் செயல்படுகின்றன. அடுத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஏற்கெனவே ஆரம் பிக்கப்பட்டு 70 சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் பால் நுகர்வோர் சங்கங்கள் இரண்டு மாவட்ட ஒன்றிய மாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறாமல் உள்ளன என்று தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை நல்ல முறையில் இயங்க வைக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதா? 150 சங்கங்கள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். அவை களையும் இலாபத்தில் இயங்க வைக்க வழிவகைகள் வகுக்கப் பட்டிருக்கின்றனவா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 192 பால் உற்பத்தியாளர் சங்கங்களில் 42 சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றன. மீதி இருக்கின்ற சங்கங்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும்

என்றால் ஆங்காங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், உள்ளூரில் இருக்கின்ற ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஆகியோர் எல்லாம் நடவடிக்கை எடுத்தால் அந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்க இந்த அரசும் வகை செயயும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்.**

*3751. **திரு. வ. முல்லைவேந்தன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதியதாக அமைய உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தினை மொரப்பூரில் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசின் மாநில பால்வளத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் அமைக்க கருத்துரு உள்ளது.

**திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதல் முறையாக தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தந்து அந்த பால் குளிரூட்டும் நிலையம் அமைவதற்கான இடத்தை எல்லாம் பார்வையிட்டு இருக்கிறார்கள். லாரிகளில் சென்னைக்கு பால் கொண்டு வருவதைத் தவிர்த்து அங்கே இரயில் நிலையம் இருக்கின்ற காரணத்தால் குறைந்த செலவிலேயே அந்தப் பாலைக் கொண்டு வருவதற்குரிய வகையில் அந்த பால் குளிரூட்டும் நிலையத்தை உருவாக்கித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்துருவில் உள்ளது என்பதைத் தெரிவித்த பிறகும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். தேசிய பால் வள நிறுவனத்தின் மூலம் 3-வது பால் பெருக்குத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து நடவடிக்கை எடுக்கும்போது அதில் மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையமும் அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. முல்லைவேந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தைப் புதிதாக துவங்க அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு லிட்டர் குளிரூட்டும் நிலையம் அமையும் என்பதைப் பொறுத்து செலவும் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வைக்கம் நகரில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.**

*5788. **திரு. மு. இராமநாதன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியாருக்கு கேரளத்தில் வைக்கம் நகரில் நினைவுச் சின்னம் எழுப்பும் தமிழக அரசின் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேரள மாநில பொதுப்பணித்துறையின் மூலம் வைக்கத்தில் பெரியார் நினைவகம் கட்டப்படவுள்ளது. தற்போது விரிவான திட்ட மதிப்பீடு கேரள மாநில பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அவை நமது பொதுப்பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நினைவகத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருணாசிரம தர்மம் என்ற பெயரால் தெருவில் நடக்கக்கூட மறுக்கப்பட்ட அந்த ஜாதிக் கொடுமையை எதிர்த்து வைக்கத்தில் போராட்டம் நடத்தி சிறைப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தவர் தந்தை பெரியார் அவர்கள். ஆகவே அந்த

[1990 மே 3

நினைவு மண்டபத்தில் அவருடைய திருவுருவச் சிலையை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அங்கே அமைக்கப்படக் கூடிய மண்டபம் எவ்வளவு நிலப்பரப்பில் அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கத்தில் பெரியார் நினைவகம் அமைப்பதற்கு கேரள அரசு நமக்கு 71.575 சென்ட் நிலம் அங்கே தந்திருக்கிறது. அதன் மொத்த மதிப்பீடு நம்முடைய பொதுப் பணித்துறையால் ஆய்வு செய்யப்பட்டு 14 இலட்சம் ரூபாய் அந்த பொதுப் பணித்துறையிடம் நாம் பணமாகக் கட்டிய பிறகு அவர்கள் வேலையை முடித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த கேரள மாநில பொதுப் பணித்துறை ஆய்வு செய்து 15 இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(9-55 மணி)

நமது பொதுப் பணித்துறை அதைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. திருவுருவச் சிலையைப் பொருத்தவரையில், அங்கு இருக்கின்ற நினைவகம் அமைப்பது மட்டும்தான் கேரள பொதுப்பணித் துறையின் வேலை தவிர, நமது மாநில அரசின் சார்பாக இங்கு இருக்கின்ற சிற்பிகளை வைத்து பெரியார் அவர்களுடைய சிலையை அங்கு நிறுவுவதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறப்புக்கும் எல்லா உயிருக்கும் என்றும், தலைசாயா தன்மான சிங்கமாக 96 வயது வரை வாழ்ந்து பகுத்தறிவு பரப்பியவர் தந்தை பெரியார் அவர்கள். ஆகவே, அந்த வைக்கத்திலே அமைக்கக் கூடிய நினைவகத்தில் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும், சாதிமத தர்மம், ஜாதிக் கொடுமையை எதிர்த்து அவர் செய்து வந்த பிரச்சாரத்தையும், கல்வெட்டுகளாக, அவர்களுடைய பொன் மொழிகளை சித்தரிக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு ஆலோசனைச் செய்யும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வைக்கம் வீரர் தந்தைப் பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படுகிறபோது, பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய வாழ்க்கையிலே முதன் முதலாக அவர்களுடைய



1990 மே 3]

தலைமையிலேதான் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் அந்த வைக்கம் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். தந்தைப் பெரியார் தளபதியாக செல்லுகிறபோது அவர்களுக்கு தக்க துணைவராக காமராஜ் அவர்கள் இளம் வயதிலேயே சென்றார். அப்பொழுது திருவனந்தபுரத்திலே உறவினருடைய கடையிலே பணிபுரிந்து கொண்டிருந்த காரணத்தினாலே சென்றார். செல்லுகிறபோது பாரதியாருடைய பாடல், அச்சமில்லை, அச்சமில்லை என்று பாடுகிறபோது மேல் ஜாதிக்காரர்கள் அங்கே நின்று, எந்தா, இய்யால், அச்சமில்லை, அச்சமில்லை என்று பரையிது, என்று கிண்டல் கூட செய்தார்களாம். எனவே, தந்தைப் பெரியார் அவர்களுக்கு அந்த நினைவுச் சின்னம் எழுப்புகிறபோது அங்கே வரலாற்றுச் செய்திகளை வைத்து, பெரும் தலைவரை பச்சை தமிழன் என்று எந்த காமராஜரை குறித்திருக்கிறாரோ, அந்த பச்சை தமிழனே அவர்களுக்கு துணையிருந்தார் என்பது சரித்திரத்திலே முக்கியமான இடத்தை பெறும், அது செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்க வரலாற்றில், திராவிட இயக்க வரலாறு இடம் பெறுமோ, பெறாதோ தெரியாது. ஆனால் திராவிட இயக்க வரலாற்றில் காங்கிரஸ் இயக்க வரலாறு நிச்சயமாக இடம் பெறும். காமராஜருடைய வரலாற்றில் பெரியாருடைய வாழ்க்கைக் குறிப்பு இடம் பெறுகிறதோ பெறவில்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் 'பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றில் காமராஜருடைய வாழ்க்கை வரலாறு நிச்சயமாக இடம் பெறும் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன்: மிக்க மகிழ்ச்சி. ஆனால் வைக்கம் போராட்டம் நடக்கிறபோது தந்தை பெரியார் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் காலம் கடந்துதான் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறீர்கள். (சிரிப்பு)

### கால்நடை மருத்துவமனை.

*3118. திரு. வி. பி. இராசன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி சொக்கநாதன் புத்தூரில் கால்நடை மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரில் கிட்டத்தட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. பக்கத்து ஊர்களிலும் மேல்துரைசாமிபுரம், கோவிலூர் போன்ற கிராமங்களிலும் உள்ளன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சொக்கநாதன்புத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு இனிமேலாவது முயற்சிகள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூருக்கு அருகிலே சேத்தூர் மற்றும் சிவகிரி ஆகிய இடங்களிலே இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதோடு இந்த ஊராட்சி எல்லைக்கு அருகாமையிலே ஒரு 8 கிளை நிலையங்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்போது அங்கு கால்நடை மருந்தகம் தேவையில்லை என்று துறை கருத்து தெரிவித்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் வருகை தந்தபோது, மனு நீதி நாளில், அந்த பொது மக்கள் மனு கொடுத்து, இதை நிச்சயமாக நாங்கள் செய்கிறோம் என்று வாக்குறுதியை அதிகாரிகள் ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் சிவகிரி சென்றால் இது வேறு மாவட்டம் என்று அங்கே இவர்களுக்கு அந்த கால்நடைகளுக்கு மருத்துவம் செய்ய மறுக்கிறார்கள். சேத்தூருக்கு கிட்டத்தட்ட 7, 8 கி.மீ. இருக்கின்ற காரணத்தினாலே அவசரமாக கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் கவனிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் ஏற்கெனவே கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை கேள்விகள் கேட்டு இருக்கின்றேன். இந்த ஒரு முறையாவது கருணைகூர்ந்து இந்த சொக்கநாதன் புத்தூரில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கநாதன்புத்தூரிலிருந்து சிவகிரி 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அதேபோல



சேத்தூர் 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு மாவட்டங்கள் என்று சொல்லி, மருந்தகத்திற்கு வருகின்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று யாரும் மறுக்கமாட்டார்கள். அப்படி யாரும் மறுத்தார்கள் என்று குறிப்பிட்ட நிகழ்வுகளை என்னிடம் தெரிவித்தால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் உறுப்பினர் அவர்கள் அதுபற்றி வற்புறுத்துவார்களானால், அதற்கான கோரிக்கையை உரிய முறையில் அரசுக்கு அனுப்பினால் அதனை தக்க நேரத்தில் கவனித்து அரசாங்கத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

## கால்நடை மருத்துவமனை.

*3368. திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மங்களபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மங்களபுரம் என்னுமிடத்தில், கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான இடவசதியும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் பங்குத் தொகையும் தர தயாராக இருப்பதால், அங்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்ட ஊராட்சி ஒன்றியம் நிதி ஒதுக்கிட தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். ஆனால்

அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக அரசு பெறவில்லை. அப்படிப் பெறப்பட்டால் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் போட்டு, அதற்கான மனுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மங்களபுரத்திலே அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மலைவாழ் மக்களும் மிகவும் பின்தங்கிய மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே 20,000க்கு மேல் கால்நடைகளும் இருப்பதால், அந்த மங்களபுரத்தைச் சுற்றி 20 கிலோ மீட்டருக்கு மருந்தகங்கள் இல்லாததாலும், அரசாங்கம் தனி கவனம் செலுத்தி, அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக உரிய தீர்மானம் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படிப் பெறுகின்றபோது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கால்நடை மருந்தகம்.

*4206. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கணை ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கணை, தென்பெண்ணையாற்று படுகைப் பகுதியாகவும் பரந்த காட்டுப்பகுதியாகவும் இருக்கின்றது. ஆகவே அங்கே கால்நடைகள் ஏராளமாக வளர்க்கக்கூடிய பகுதியாகவும் இருக்கிறது. இதைக் கருதி, அங்கே ஒரு கிளை மருந்தகம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை வட்டத்தில், ஊத்தங்கரை, அந்தியூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், மற்றும் காரப்பட்டி, காட்டேரி, காவல்பட்டி, சிங்காரப்பட்டி ஆகிய இடங்களிலும் கிளை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கால்நடை மருந்தகங்களோ, கிளை நிலையங்களோ இல்லாமல் இருக்குமேயானால், உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு ஆய்வு செய்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதூர்புங்கணை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமான தூரத்தில் தான் இருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. இங்கு ஒரு கிளை மருந்தகம் அமைக்க வேண்டும். மற்றும் மன்னாடிப்பட்டி என்ற பகுதியும் பரந்த கால்நடை மிகுதியாக உள்ள பகுதி. ஏற்கெனவே அதுபற்றி நான் சொன்னதற்கு, இது போன்ற செய்தி இருந்தால், அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவிக்கும்படி சொல்லியிருந்தார்கள். அங்கே அது ஒரு பரந்த பிரதேசமாக இருப்பதால், மன்னாடிப்பட்டியிலும், கிளை மருந்தகம் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிற ஊராட்சிகளுக்கு சுற்றளவில் 8 கிலோ மீட்டருக்கு அருகாமையில் கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் இல்லாமல் இருக்குமேயானால், அது குறித்து ஆய்வு செய்து, அரசாங்கத்தின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

(அ) டெல்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சர் அவைக்கு விளக்கம் அளிக்க வேண்டியது குறித்து.

10-05 மணி

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சென்ற மாதம் 20, 21 மற்றும் 22 ஆகிய
தேதிகளில் டெல்லியில் இந்தியத் தொழிலாளர் மாநாடு நடை
பெற்றது. அது தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் முதலாளி
களுடைய பிரதிநிதிகள் மற்றும் அரசு பிரதிநிதிகள் எல்லாம் கலந்து
கொண்ட ஒரு மாநாடு. 5 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான்
அது டில்லியில் நடைபெற்றது. அதில் நம்முடைய மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பங்குகொண்டு விட்டு
வந்திருக்கிறார்கள். அந்த மாநாட்டுக்கு முன்னதாக ட்ரிப்பார்ட்
டைட் ஸ்டாண்டிங் கமிட்டியும் நடைபெற்றிருக்கிறது.
அதிலும் அவர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். மாநில தொழி
லாளர் நல அமைச்சர்களுடைய மாநாட்டிலும் அவர்கள் பங்கு
பெற்றிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வந்து 10 நாட்களுக்கு
மேல் ஆகிவிட்டது. நான் அவ்வப்போது அதைப்பற்றி இங்கே
எழுப்பியபோதிலும்கூட, இதைவிட முக்கியமான பிரச்சினைகள்
இந்த மன்றத்தில் வந்த காரணத்தாலே இது எடுத்துக்கொள்ளப்
படவில்லை. அவர் போய் வந்து பல நாட்கள் ஆகியுள்ள
நிலையில் பல செய்திகள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்
கின்றன. குறிப்பாக, தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழி
லாளர்களுடைய பங்கு, போனஸ் பிரச்சினையில் மத்திய அரசின்
புதிய நிலை, தொழிலாளர் சங்கங்களை அங்கீகரித்தலில் மத்திய
அரசின் புதிய நிலை, இவைகளைப் பற்றி எல்லாம் பத்திரிகை
களில் செய்திகள் வெளி வந்திருக்கின்றன. அதுமாத்திர
மல்லாமல், பல ஆண்டுகளுக்கு முன்பு தயார் செய்யப்பட்டு,
மசோதாவாக ஆக்கப்பட்டு, பார்லிமென்டிலே பல தடவை
கொண்டுவரப்பட்டு, தொழிலாளர்களுடைய எதிர்ப்பு காரணமாக
கைவிடப்பட்டிருந்த அந்த தொழில் உறவு மசோதா கூட பின்
வாங்கப்பட்டதாகவும், புதிய மசோதா தயாரிக்கப்படுவதாகவும்
கூட செய்தி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட விவாதங்களில்
எல்லாம் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்
அவர்கள் பங்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைவிட
முக்கியமாக தமிழகத்தில் மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளைத்
திறப்பதற்கான ஒரு முயற்சியையும் மாண்புமிகு தொழிலாளர்
நல அமைச்சர் அவர்கள் அங்கு பேசி, ஏதோ தகவல் கொண்டு
வந்திருப்பார் என்று கருத வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.
இவைகளை எல்லாம் விளக்கமாக இந்த மன்றத்திற்கு
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தருவார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.





*மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 19-4-1990 அன்று காலை முதல் நாள் ஆல்
இந்தியா இன்பர்மேசன் மினிஸ்டர்ஸ் கான்பரன்ஸ் முடிந்த
பிறகு 19 ஆம் தேதி காலை மாண்புமிகு தமிழக கைத்தறித்
துறை அமைச்சர் அண்ணன் திரு. தங்கவேலு அவர்களுடன்
நமது மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. மாறன் அவர்களைச்
சந்தித்து, மூடிய ஆலைகளைத் திறப்பதற்காக அரசு ஒரு
முடிவு செய்து, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் மத்திய
கைத்தறித் துறை அமைச்சருக்கு நேரடியாக கடிதம் எழுதி
யிருக்கின்றார்கள், நாங்கள் இப்போது மத்திய கைத்தறித்
துறை அமைச்சரைச் சந்திக்கச் சென்றோம், அவர்களிடம்
மூடிய மில்களைத் திறப்பதற்கு அனுமதி தரச் சொல்லுங்கள்
என்று சொல்லி, காலை 9 மணி அளவிலே நமது மத்திய
அமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். அங்கு மத்திய
அமைச்சரும், இந்தத் துறையினுடைய செயலாளரையும், தலை
வரையும், லேபர் கமிஷனர் அவர்களையும் தீர விசாரித்து, இந்த
அரசின் சார்பாக இதுவரை என்னென்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது, நீங்கள் ஏன் மத்திய அரசிலிருந்து இதற்கு
அனுமதி தர மறுக்கிறீர்கள் என்பதை எல்லாம் விளக்கமாக
கேட்டுக்கொண்டு பிறகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர்
மாண்புமிகு திரு. யாதவ் அவர்களுடன் நேரடியாகத் தொலை
பேசியில் பேசி, எங்களுடைய அரசு, எங்களுடைய மாண்புமிகு
முதல்வர் அவர்கள் அரசியல் முடிவு எடுத்திருக்கிறார்கள்,
இப்போது மூடிய மில்களை எல்லாம் திறக்க வேண்டு
மென்றும், அதற்காக மத்திய அரசிலிருந்து எந்தப் பணமும்
நீங்கள் தர வேண்டியதில்லை. மத்திய அரசின் நிர்வாக
அனுமதி மட்டும் தர வேண்டுமென்று மத்திய அமைச்சரி
டத்தில் சொல்லி, மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்
களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். இது நடைபெற்றது
காலை 9 மணி அளவிலே. மீண்டும் நாங்கள் அவரைச் சந்திக்க
12 மணிக்கு நேரம் ஒதுக்கி தந்தார்கள். பகல் 12 மணியளவில்
மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கவேலு அவர்களும், நானும்,
இந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களும், இயக்குநர்
அவர்களும், தொழிலாளர் நல ஆணையாளர் அத்தனை
பேரோடு சென்று மத்திய கைத்தறித் துறை அமைச்சர்
அவர்களைச் சந்தித்தோம். நாங்கள் மத்திய அமைச்சரை
சந்தித்து பேசிய அதே நாளில், அதே நேரத்தில் காலையிலே
மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டில் நாம் திறப்பது
போல அவர்களும் மூடிய மில்களை திறப்போம் என்று ஒரு
அறிக்கையை அந்த மாநில அரசின் சார்பில் வெளியிட்டி
ருந்தார்கள். மகாராஷ்டிராவில் மட்டுமல்லாமல், குஜ
ராத்திலும் மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று அந்த
அரசு சார்பிலும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி எல்லாம்
அன்று காலையில் செய்தி வந்ததிலிருந்து இவைகளைப்
பற்றி எல்லாம் இந்தத் துறையினுடைய செயலாளர் மத்திய

அமைச்சரிடம் எடுத்துச் சொன்னார். தமிழ்நாட்டிற்கு நாம் கேட்பதுபோல அனுமதி வழங்கினால் மற்ற மாநிலங்களும் அதுபோல கேட்கும்போது அனுமதி கொடுக்க வேண்டியிருக்கும். 1985 ஆம் ஆண்டில் இதுகுறித்து மத்திய .அரசின் சார்பாக ஒரு முடிவு செய்யப்பட்டது. மாநில அரசோ, மத்திய அரசோ ஒரு முடிய மில்லைத் திறக்க வேண்டு மென்று, ஒரு அர சாங்கத்தின் சார்பாக முடிவு செய்தால்கூட பி.ஐ.எஃப்.ஆர். அவர்களிடமிருந்து கிளீயரன்ஸ்—அது வையபிளா அல்லது நான்-வையபிளா என்று சர்டிபிகேட் வாங்கித்தான், அவர்களுக்கு அனுமதி தர வேண்டுமென்று சட்டம் இருக்கிறதென்று அந்தச் செயலாளர் அந்த அமைச்சரிடம் தெரிவித்தார்கள். நாங்களும் நமது மாண்புமிகு முதலமைச் சரவர்கள் எழுதிய கடிதத்தையும், அதைப்போல மத்திய அமைச்சரவர்கள் காலையிலே சொன்ன விஷயங்ளை எல்லாம் மத்திய கைத்தறித்துறை அமைச்சரிடம் தெரிவித்தோம். அவர்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து மத்திய அரசின் சார்பாக உங்களுக்கு அனுமதி வழங்கலாமென்று சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு வராதிருந்த ஒரு செயலாளர் மறுநாள் வந்து, தமிழ்நாட்டுக்கு மட்டும் நாம் தர முடியுமானால், நிச்சயமாக மற்ற மாநிலங்களுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டிவீரும். இன்றைக்கு இதுபோல மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார்கள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களும் நானும் வந்து நேரடியாகச் சந்தித்த தையும், அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்பதையும் மாத்திரம் உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன், ஒரு மினிட் போல தயாரித்து, தெரிவிப்பதாகத் தெரிவித்தார்கள். (மணி அடிக்கப்பெற்றது.)

10-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லி முடிக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : கேட்ட கேள்விக்குத்தான் பதில் கேட்ட கேள்விக்குப் பதில், மில்கள் திறக்கப்படும். உட்கார்ந்து கொள்ளட்டுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தை அடுத்து எழுப்பப்படுகிற கேள்வி ஏதாவது ஒரு பிரச்சினையில் அரசாங்கம் ஏதாவது ஒன்று செய்திருந்தால், அது பற்றிக் கேட்கலாமே தவிர, நடைமுறையில் அன்றாடம் பிரச்சினையாக இருந்தால், அதைப் பற்றி எழுப்புவது அவ்வளவு முறையல்ல. கொள்கைப் பிரச்சினையாக இருந் தாலும், அது முடிவுக்கு வருகிற வரையில் எழுப்புவது



முறையல்ல. இருந்தாலும் ஆர்வத்தால் ஒரு உறுப்பினர் அவர்கள் எழுப்பினாலும்கூட, இந்த நேரத்தில் அமைச்சர்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லி, ஒரு அறிக்கை தர வேண்டிய அவசியமில்லை. எனவே இந்த அவை யினுடைய நேரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக, நியாயமான நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்ள கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, ஒரு முறையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. நாடு முழுவதற்கும் தெரிந்த ஒரு முக்கிய மான நிகழ்ச்சி. டெல்லியிலே நடந்திருக்கக்கூடிய கான் பெரன்ஸ், இந்தியன் லேபர் கான்பரன்ஸ் 5 வருடங்களுக்குப் பிறகு நடந்திருக்கிறது. அதைவிட பெரிய சமாச்சாரம் என்ன இந்தச் சபையிலே சொல்வதற்கு இருக்கிறது? ஆகவே நீங்கள் சொல்கிற கருத்து எங்களுக்கும் புரிகிறது. அதனால் தான் சொல்கிறேன். நீங்கள் சொல்வதால் அவர் மேற்கொண்டு சொல்வதை சொல்ல முடியாத நிலைமை வரக் கூடாது. அவர் சொல்லும்போது, அது நீண்டு போகாமல், அதைச் சுருக்கி முறையாகத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதை ஒத்துக்கொள்ளத் தயார். அதில் பிரச்சினையில்லை. ஆனால் அவர் கேட்கிற சில குறிப்பான கேள்விகள் அங்கே விவாதிக் கப்பட்டன. It is a Public Property அது பிரைவேட் அல்ல. பத்திரிகையில் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக சுருக்கமாகச் சொல்லும்படி நீங்களே டைரக்ஷன் கொடுத்து, செய்ய வைத்தால் நல்லது. ஆனால் கேட்பதை பறிமுதல் செய்யக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : அதைக்கூட சட்ட மன்றத்தில் முறையாக எழுப்புவதை நான் ஏற்றுக்கொள் கிறேன். ஜீரோ ஹவர் அதற்காகப் பயன்படுத்துவதை நாம் ஏற்றுக்கொள்வது அவ்வளவு நியாயமல்ல. ஏனென்றால் கொள்கை விளக்கங்கள், விவாதங்கள், மத்திய அமைச்சரோடு பேசிய பேச்சு வார்த்தைகள்— இந்த விளக்கங்கள் எல்லாம் ஜீரோ ஹவரில் எழுப்பப்பட்டு பதில் சொல்வதென்றால் அது அவ்வளவு இயல்வது அல்ல. சென்றேன், வந்தேன், கண்டேன் என்றுதான் சொல்ல முடியும். எனவே அப்படிப்பட்ட சூழ் நிலையில் அறிக்கைகள் தேவையானால், மாண்புமிகு உறுப் பினர்கள் அறிக்கைகள் பெறுவதற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாம் அல்லது அமைச்சர் விரும் பினால் ஓர் அறிக்கை வைக்கலாம். அதற்குரிய முறையைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Zero-hour should be, at least, minimum-hour.

**திரு. கே. ரமணி :** தலைவரவர்களே, அரசினுடைய கொள்கைப் பிரகடனமாக அறிக்கை வேண்டுமென்று நான் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கே இது குறித்து....

**திரு. கே. ரமணி :** அதை நான் கேட்கவில்லை. நடந்திருக்கிறது பகிரங்கமாகச் சொல்லக்கூடிய செய்தியாகத்தான் இருக்கிறது. அந்த செய்தி தருவது, It is harmless and it is useful அப்படி ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அதை அவர்கள் செய்ய அனுமதித்தால் நல்லது.

*10-15 மணி*

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பகிரங்கமாக நடந்தது பற்றி மறுபடியும் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. பகிரங்கமாக நடந்தது அத்தனை பேருக்கும் தெரியும்; பத்திரிகைகளில் வந்து இருக்கிறது. அதிலே ஏதாவது மாறுபாடு இருந்தால், ஏதாவது தனித் தன்மையுள்ள செய்தி சொல்ல வேண்டிய அவசியம் நேரிட்டால் அமைச்சர் அறிக்கை வைப்பார்.

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் தொடர்ந்து விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே, கிளப்ப முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் ஒன்றும் கிளப்ப வேண்டாம். கிளப்புகிறபோது கிளப்பலாம். (குறுக்கீடு) நீங்கள் சொல்வது விளங்குகிறது. பேரவை முன்னவர் பதில் சொல்லிவிட்டார். அதற்குமேல் பேச்சை நீட்ட வேண்டாம். வாதத்துக்கு இடம் இல்லை. (குறுக்கீடு) அதனால் தான் ''Zero-h ur'' என்று அனுமதிக்காமல் போவதற்குக் காரணம், வேறு ஒன்றுமல்ல.

**திரு. கே. ரமணி :** கடைசியாகச் சொல்வதற்கு, இந்த மாதிரி ஒரு விஷயத்தைக் கேட்பதற்கே வழி இல்லாமல் தடுக்குமா என்ற நிலைமை எனக்கு ஏற்படுகிறது.



**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதை அடியோடு தடுப்பது என்னுடைய நோக்கம் அல்ல. இப்படித் திடீரென்று ஒரு கேள்வியை எழுப்பி, ஒரு பிரச்சினையில் மொத்தமான விவகாரங்களைச் சொல்ல வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டால், சொல்ல வேண்டிய அளவோடுகூடச் சொல்ல முடியாமல், பல்வேறு செய்திகளைச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு இந்த விவாதம் நீண்ட நேரம் நடக்கும். அதற்குரிய ஒரு சிறிய பிரச்சினையல்ல; ஒரே ஒரு கருத்தாக மட்டும் சொல்லக்கூடியதல்ல. மாண்புமிகு திரு. கோவிந்தராஜன் அவர்கள் எழுப்பிய போதே அது 'ஜீரோ ஹவருக்கு' அப்பாற்பட்டுச் செல்வதை நான் உணர்ந்தேன். எனவே அந்த முறையிலேதான் கருத்து உரிமை இருக்கிறது என்று சொன்னாலும் கூட கால உரிமை இல்லை என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

**(ஆ) காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று பாரதப் பிரதமரிடம் 25—4—1990 ஆம் நாளன்று அளித்த மனுவிலுள்ள வாசகங்கள் பற்றிய விளக்கம் குறித்து.**

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தை நிச்சயமாக வீணாகப் பயன்படுத்தமாட்டேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்து, நேற்றைக்கே நான் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்காக உங்களிடத்தில் அனுமதி கேட்ட நேரத்தில், நாளையதினம் எடுத்துக்கொள்ளலாம் என்று நீங்கள் சொன்னதால், இன்றைக்கு இந்தப் பிரச்சினையை நான் தெளிவாக்க வேண்டியது என்னுடைய கடமை என்ற முறையில் நான் இங்கே எடுத்துக் கூறுகிறேன். காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக இந்த மன்றத்தில் கடந்த 26 ஆம் நாளன்று ஏற்பட்ட விவாதத்தில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன. அந்த விவாதத்திலே முக்கியமாகப் பங்கு பெற்ற ஒரு பொருள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்த மனுவின் மீது குறிப்பிட்ட சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டு, அந்த சந்தேகங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதே போல் நாங்கள் எங்கள் தரப்பிலே கொடுத்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த அந்த மனுவில் இருக்கின்ற நிலைகளை எடுத்து அன்றைக்குச் சொல்லி இருக்கிறோம். என்றாலும் அந்த அறிக்கை எதிர்க் கட்சித் தலைவருக்குக் கிடைத்ததா? மற்றவர்களுக்கு கிடைத்ததா? என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்பட்டன. ஆனால் நான் இந்த சட்ட மன்றத்தினுடைய அன்றைய விவாதத்துக்குப் பின்னால் நாடாளுமன்ற உறுப்பினரோடு தொடர்பு கொண்டு எந்த நிலை அன்றைக்கு எடுக்கப்பட்டது என்பதை

விளக்கம் கோரி அவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள்— அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொடுத்த அந்த விண்ணப்பத்தில் ஒரே ஒரு வார்த்தை மட்டும் விடப்பட்டு விட்டது என்ற கருத்தை நான் இங்கே சொல்கிறேன். அது காவிரி நீர்ப் பிரச்சினையில் விவாதம் கூடாது என்ற அடிப்படையில் நாம் ஒத்த கருத்தோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நான் இதை விரிவாக விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் முன்னாலே இருக்கிற இரண்டு, மூன்று வாக்கியங்களை வைத்துக்கொண்டு, அடுத்து வந்த ஒரு முக்கியமான வாக்கியம்— அடிப்படையான வாக்கியம் எந்தக் காரணத்தாலோ விடுபட்டுவிட்டது. அந்த அறிக்கையில் "It is the opinion of Tamil Nadu that the agreement did not lapse by 1974" அந்தக் கருத்தை அவர்கள் அன்றைக்கு வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அதுபோல இந்தக் கருத்தில்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே என்ன இருக்கிறது என்றால், "It is the opinion of Tamil Nadu that the agreement did not lapse by 1974 and has to be renewed again." அங்கே தான் ஆபத்து. 'ரெனியூ' பண்ண வேண்டியது என்று சொல்வது தான் ஆபத்து.

திரு. எஸ். ஆர். இராதா : அது சம்பந்தமாக நான் மீண்டும் விவாதிக்க வேண்டும் அல்லது விளக்கங்களைச் சொல்ல வேண்டும் என்று........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்லும் போதே, ஆரம்பமே, எடுத்த உடனே அபத்தம் மாதிரிச் சொல்ல வேண்டுமா? முதல் வாக்கியமே, "The period of agreement on sharing of Cauvery waters between Tamil Nadu and Karnataka (State of Mysore) came to an end on 1974." என்று இருக்கிறது.

*10-20 மணி*

இதுதான் அந்த மகஜரினுடைய முதல் வாக்கியம். முதல் வாக்கியமே இப்படி இருக்க வேண்டுமா என்பது தான் என்னுடைய கேள்வி. அதுமாத்திரமல்ல. 1986-ல் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுபோல் ஒரு மெமோரண்டம் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே ரொம்பத் தெளிவாகச் சொல்லி



யிருக்கிறார்கள். "Certain clauses of the 1924 Agreement are open to reconsideration at the end of 50 years in the light of the experience gained and on an examination of the possibilities of the further extension of irrigation within the territories of the respective Governments and to make such modifications and additions as may be mutually agreed upon as the result of such reconsideration" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது கொடுத்ததிலே, "reconsideration" என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். காரணம் அது அரசாங்கச் சார்பிலே கொடுத்த முறையீடு. அரசாங்கம் கொடுத்த மகஜர். அரசாங்கம் தயாரிக்கும்பொழுது என்ஜினியர்களெல்லாம் இருந்து தயாரிக்க முடிகிறது. அதிலே முக்கியமாக இருக்கிற பொறியாளர்கள், வல்லுநர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து தயாரிக்க முடிகிற ஒரு மகஜராக அது இருக்கிறது. அதனால், எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கூட, எப்படி தி.மு.க. ஆட்சியிலே முதலிலே கொடுக்கப்பட்டதோ அதேபோன்று ஒரு மகஜர் தான் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே தயாரிக்கப்பட்டு, அப்பொழுது இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், 1986 ஆம் ஆண்டு பிரதமரிடத்திலே மனு கொடுத்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுது போய்க் கொடுத்தவர்கள், அவசரக் கோலம், அள்ளித்தெளி என்பதைப்போல ஒரு ஆபத்தை உருவாக்கி விட்டார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நான் விளக்கத்தை மறுக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், அந்த மகஜரை அவர்கள் கொடுத்த நேரத்திலே இருந்த சூழ்நிலைகளில், இப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் ஏன் வந்தன என்றெல்லாம் நான் அவர்களிடத்திலே விளக்கம் கேட்டிருக்கிறேன். அவரும் சில டிக்ஷனரியினுடைய நகலையெல்லாம் எடுத்து, இந்த நிலையிலே நான் அந்த வார்த்தைகளைப் போட்டேன் என்று அவர் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். ஆனால், இந்தக் கருத்தை அவர் வலியுறுத்துகிற நேரத்தில் அவருடைய அடிப்படைக் கருத்து என்ற அடிப்படையில்....

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்தார் செய்ய வேண்டிய பணிகளை நாம் இந்தச் சட்டமன்றத்தில் தயவு செய்து செய்ய வேண்டாம். அந்த விளக்கங்களையும், அதற்கான Interpretationகளையும் நாமே மீண்டும் மீண்டும் Supply செய்து நம்முடைய Case-ஐ Weak ஆக்க வேண்டாம். நேற்று முதல்வர் கேட்டுக் கொண்டதைப்போல, இந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து, இந்த விவாதத்தையே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவைக்குறிப்பிலே— விவாதத்திலே இருக்கிற சில உள் பிரச்சினைகளைச் சொல்கிறார். அதை நீக்குவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதிலே இருக்கிற இந்த வார்த்தையினுடைய, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படை நோக்கத்திலே மாறவில்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கருத்தில் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்பதினாலே சொன்னேன். அதேபோல இந்த அறிக்கையைத் தயார் செய்து . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அங்கு சென்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் நல்லெண்ணத்துடன் தான் சென்றார்கள். அதிலே எந்த மறுப்பும் இல்லை. ஆனால், எழுதிக் கொடுத்தவர்தான் புரியாமல் எழுதிக் கொடுத்து அவர்களைச் சிக்க வைத்து விட்டார். நான் நல்லெண்ணத்தை இப்பொழுதும் சந்தேகிக்கவே இல்லை. அவர்கள் தவறு செய்தார்கள் என்று சொல்லவில்லை. எழுதிக் கொடுக்கப்பட்ட வாசகம் அவர்கள் தவறு செய்ததாக ஒரு நிலையை உருவாக்கி விட்டது. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, அதிலே ஒரே வார்த்தை. முதல் Sentence - ஐப் பார்த்தாலே, யார் எந்தப் பக்கமும் தவறான எண்ணத்தோடு செய்யவில்லை. ஒன்று Typing Mistake ஆக இருக்க வேண்டும். அல்லது (குறுக்கீடு) உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். Let me tell you. அதாவது அல்லது எந்த Ended on 1974 என்று இருக்கிறது. அப்படி ஒரு ஆங்கில வாசகமே வர முடியாது. Ended on என்று வராது. Ended in என்று வர வேண்டும். Ended on 1974 என்பது It should be a typing mistake, or something else it has been left out.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மனுவைத் தயாரிக்கும்பொழுது கொஞ்சம் எஸ்.ஆர்.பி. உதவி செய்து...

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இவ்வளவு நேரம் நாங்கள் காவிரிப் பிரச்சினைதான் புரியவில்லை என்று இருந்தோம். ஆனால் இப்பொழுது . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற வார்த்தை Ended on அல்ல. Photostat Copy-யை நான் பார்க்கிற பொழுது end on தான் பார்க்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே இருப்பது The period of agreement on sharing of Cauvery water between Tamil Nadu and Karnataka, பிராக்கெட்டிலே State of Mysore என்பது இதுவே ஆபத்தாகும்'' Come to an end on 1974. என்று இருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியம் தலை குனிந்துவிட்டார்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இதற்குமேல் இதை நீட்ட வேண்டாமே. (குறுக்கீடு) தேவை இல்லை. அருள்கூர்ந்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 4 ஆம் தேதி உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகு ஏற்கெனவே முதல்வரவர்கள் அறிவித்தபடி ஒரு விவாதத்திற்கு நாள் ஒதுக்கி அதைப்பற்றிப் பின்னால் பேசுவது தமிழ்நாட்டிற்கு நல்லதாக இருக்கும். அந்தக் கருத்திலே இந்தப் பிரச்சினையை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதுபோல இந்த அளவிலே முடித்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) இன்னொரு நாளைக்குப் பேசலாம். தனியாக விவாதத்திற்கு ஏற்பாடு செய்வோம். அப்பொழுது வந்து என்னென்ன தவறுகள் என்றெல்லாம் பார்த்துவிடுவோம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

10-25 மணி

### 3. அறிக்கை அளித்தல்.

#### (அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1989-90-ஆம் ஆண்டிற்கான 47 மற்றும் 48-வது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, பதிவு எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக

வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்,

## 4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு சட்ட திருத்த முன்வடிவு ஒன்றை இங்கே நாம் விவாதித்தோமே, அதற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்து விட்டார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாநில ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால் அந்தச் சட்ட முன்வடிவு இன்னும் நிலுவையில் இருக்கிறது என்று பொருள். அந்தச் சட்ட முன்வடிவு நிலுவையில் இருக்கிறபோது, மீண்டும் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவரக் கூடாது என்பது விதிமுறை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன். ஏற்கெனவே 1937 ஆம் ஆண்டு சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. தற்கு கவர்னருடைய இசைவு வந்திருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (இ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

(கோ. சி. மணி)



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத்துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,14,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் பக்கத்து மாநிலமான பாண்டி-காரைக்காலில் இருந்து மது வகைகளை கொண்டு வந்து வியாபாரம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,14,82,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கு நடைமுறைப் படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,14,82,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



10-30 மணி

(ஆ) கோரிக்கை எண். 15—காவல் துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,14,56,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் போதுமான அளவில் காவல் நிலையங்கள் ஏற்படுத்தவும், காவல் நிலையங்களில் காவலர் எண்ணிக்கையை உயர்த்தவும், அவர்களுக்குப் போதுமான வாகன வசதி செய்யவும், பெண் காவலர்களுக்கு பாதுகாப்பு பற்றியும், காவலர்கள், அதிகாரிகள் போன்ற வர்களுக்கு ஏற்படுகின்ற இடர்களை போக்குவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,14,56,96,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை காவலர் எண்ணிக்கை தொடர்பான விகிதத்தில் ஏற்புடைய மாற்றங்களைச் செய்து, காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவும், காவல் நிலையங்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது குறித்து நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,14,56,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் கைகளத்தூரில் காவல் துறை ஆய்வாளர் நிலையம் அமைப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,14,56,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தொகைக்கேற்ப காவலர்கள் இல்லாமல் இருக்கும் நிலை, காரணம், சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும் பணி சீராக நடைபெற முடியாத நிலை இருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,14,56,96,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும். "

(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,66,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும். "

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் உள்ள தீயணைப்பு வண்டிகள் மிகவும் பழுதடைந்து உபயோகத்திற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளதை புதியதாக மாற்றுவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,66,73,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,66,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இருந்து செயல்படுகிறதை அரசு சொந்தமான இடத்தில் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,66,73,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருக்கும் தீயணைப்பு பழைய இன்ஜினை புதிதாக மாற்றுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,66,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தருகிற கருத்துக்களைச் சிந்தித்து, அதற்கேற்ப என்னுடைய நிறைவு உரையிலே விளக்கம் அளிக்க இருக்கிறேன் என்பதைக் கூறி இந்த மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளை* அவைக் குறிப்பிலே பதிய வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய காவல்துறை மானியக் கோரிக்கை 15-ல், அவர்களுடைய ஆய்வு உரையில், 101-வது பத்தியில், " 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாள் அன்று பி. மீனாட்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தேவேந்திரகுல வெள்ளாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜான் பாண்டியன் பேசுகையில் மேற்படி உள்ளூர் ஆதி திராவிடப் பெண்மணியின் மரணம் குறித்து உள்ளூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அக்கறை செலுத்தவில்லை எனக் குற்றஞ்

---

*709 முதல் 810 வரையிலான பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

சாட்டினார் '' என்று ஒரு வரி இருக்கிறது. இது மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுடைய பொதுச் செயலாளர் மீது தேவையில்லாத ஒரு குற்றச்சாட்டை—ஜான் பாண்டியன் சொன்னாரா, சொல்லவில்லையா என்பது எனக்குத் தெரியாது, அதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரில் வந்திருக்கிற இந்த ஆய்வுரையில் இது இருக்க வேண்டுமா என்பதையும், இதை அவர்கள் திருத்த வேண்டும் என்பதையும் நான் உங்கள் மூலமாக அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே 101-வது பாராவில், ''அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர் ராஜு பிள்ளை, ஆதி திராவிடர் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தாமைக்காக அன்னாரது மகளை வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்து தாலி கட்ட வேண்டியிருக்கும் என்றும் ஜான் பாண்டியன் பேசினார் ''. என்று இருக்கிறது. இந்த வார்த்தைகள் இந்த உரையிலே இடம் பெற வேண்டுமா ? இது காலம் காலமாக நமது ஆவணங்களிலே நின்று ஒரு சமூகத்தினுடைய மனப்புண்ணை கிளறிக் கொண்டிருக்கிற வார்த்தைகள் அல்லவா ? அந்த வார்த்தைகள் இங்கே இடம் பெறவேண்டுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப் படுகிறேன்.

*10-35 மணி*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்தக் கலவரத்திற்கு ஆரம்ப காரணமாக எது இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக அவருடைய பேச்சு இங்கே வெளியிடப் பட்டிருக்கிறது. அப்படிப் பேசக் கூடாது என்பதை வலியுறுத்து வதற்காகத்தான் அது வெளியிடப்பட்டிருக்கிறதே அல்லாமல், வேறு அல்ல. இத்தகைய வன்முறைப் போக்கான பேச்சுக்களால், தரக் குறைவான பேச்சுக்களால் வன்முறை தூண்டப்படுவதற்கு அவைகள் காரணமாக அமைந்து விடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இது வெளியிடப்பட்டிருக்கிறது. யாரையும் குறை கூறுவதற்காக அல்ல.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியவிளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஜான் பாண்டியன் கூறினார் என்பதனாலே எங்களுடைய பொதுச்செயலாளரை குற்றஞ்சாட்டி அல்லது ராஜுபிள்ளையைக் குற்றஞ்சாட்டி, அவ்வுரையிலே தெரிவிக்க வேண்டியது அவசியம் தானா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



ஏனென்றால் அவர் பேசியிருக்கலாம். ஜான் பாண்டியன் எது வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம். சொல்லாமலும் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அதிலே அவரைப் பற்றிச் சொல்லும் போது அந்த சட்டமன்ற உறுப்பினரையும், ஊராட்சித் தலைவரையும் சேர்த்து குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அது தேவையில்லை என நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட இழிவான, தரக் குறைவான வார்த்தைகளால் தான் அந்த வட்டாரத்தில் கிளர்ச்சி உருவாயிற்று என்ற காரணத்தினால் அவைகள் தவிர்க்க முடியாதவைகளாக ஆகியிருக்கின்றன.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்களையும், ...... (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரும் போலீஸ் மானியத்தில் பேசும்போது தெரிவிக்கலாம். இன்றும், நாளையும் நிறைய நேரமிருக்கிறது. அதிலே பேசலாம். இப்படி இரண்டு பேரும் எழுந்து எழுந்து, உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது எனக்கே சரியாகத் தெரியவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதில் குறிப்பிட்டுக் கூறி, திட்டவட்டமாக குற்றச்சாட்டை தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, இது தெரிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இதைக் கண்டித்து மட்டும் நாங்கள் வெளி நடப்பு செய்கிறோம். விவாதத்தில் கலந்து கொள்வோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது எடுத்த எடுப்பில் உங்கள் உறுப்பினர் தான் பேசுகிறார்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் இந்தக் குறிப்பை நேற்றே படிக்கின்றபோது நினைத்தேன். ஏனென்று சொன்னால், ஜான் பாண்டியன் என்ன பேசினார் என்பது நமக்குத் தெரியாது. என்ன பேசவில்லை என்பதும் நமக்குத் தெரியாது. உங்களுக்கு குறிப்பு வந்திருக்கும். அதிலே ஒன்றும் ஐயப்பாடு இல்லை. ஆனால் அவர் பேசிய வாசகம் எல்லாம் கொள்கைக் குறிப்பிலே இடம் பெற வேண்டுமா என்பது தான். மன்னிக்கவேண்டும். ஏனென்றால் இப்போது என்னைப்

[திரு. குமரி அனந்தன்]

பற்றிப் பலர் பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக மேடையிலே பேசுகிறார்கள். அப்படி பேசுகின்றபோது, குமரி அனந்தனைப் பார்த்தால் அவனை அடி என்று ஒருவர் பேசுவார். அப்படிப்பட்ட பேச்சுக்கள் பேசுபவற்றை எல்லாம் நாம் கொள்கைக் குறிப்பில் கொண்டுவர வேண்டுமா? அப்படிக் கொள்கைக் குறிப்பிலே, அல்லது ஆய்வுக் குறிப்பிலே, கொண்டு வரும்போது, அதுவும் இந்த அவையில் இருக்கின்ற ஒரு உறுப்பினரைப் பற்றி அது காலாகாலத்திற்கு நிற்கின்ற ஒரு ஆய்வு அறிக்கையிலே அது வர வேண்டுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நேற்று திரு. குமரி அனந்தன் அவர்களைப் பற்றிப் பிரச்சினை வந்தது. அப்போது பேசிய திரு. சிங்காரம் அவர்கள், அவருடைய கூட்டத்தில் இரண்டு பேர் வம்பு செய்தார்கள், துண்டு அறிக்கை வெளியிட்டார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். நான் பேசும்போது திரு. குமரி அனந்தனைப் பற்றி என்று கூறி துண்டு அறிக்கை வெளியிடப்பட்டது என்று நான் கோடுகாட்டி, விவரங்களுக்குள் போகாமல் திரு. குமரி அனந்தனைப் பற்றி, அவர் பிரபாகரனைப் பற்றி கேவலமாகப்பேசினார். அதற்குக் கண்டன அறிக்கை வெளியிடப்பட்டது என்று நான் சொன்னேன். அதனால் ஒரு சம்பவம் நடைபெற்றபோது அது அங்கே, எந்தக் காரணத்தினால் நடைபெற்றது என்பதைச் சொல்லவேண்டியிருக்கிறது. நேற்று எப்படி அது தவிர்க்கமுடியாததோ, அதுபோன்றுதான் இதுவும் தவிர்க்க முடியாதது.

திரு. குமரி அனந்தன் : அதிலேகூட எனக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த நிகழ்ச்சி நடந்தவுடனே என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டது எனக்கு ஆறுதலாக ...... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் தொடர்ந்து விவாதித்துப் பேசிக்கொண்டிருக்கப் போகிறீர்களா? நாளைக்காலையில் பேசும்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மாத்திரம் அல்ல. இது ஆய்வு உரைதான். காவல் துறை ஆய்வு செய்து அளித்துள்ள உரை. கொள்கைக் குறிப்ப அல்ல. அது மானியக் குறிப்பில் தெளிவாக இருக்கிறது. அதிலே இடம் பெறவில்லை. காவல் துறை ஆய்வு செய்து அளித்துள்ள உரையிலே இருக்கிறது. இதை ஒரு முரண்பாடான அளவில் இப்போது எடுத்துக் கொள்ளக் கூடாது.

திரு. குமரி அனந்தன் : எல்லா இடங்களில் நடைபெற்றவைகள் எல்லாம் இப்படி ஆய்வில் வந்திருக்கிறதா? அந்த ஒரு இடத்திலே மட்டும் இப்படி ஆய்வு வருவதற்கு என்ன காரணம்?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆய்வு உரையை முழுக்கப் படித்தால் தெரியும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளில் ஒரு மானியக் கோரிக்கையின் மீது விவாதம் வரும்போது, அவையில் வைத்திருக்கக் கூடிய கொள்கை அறிக்கையின் மீது, ஆய்வு அறிக்கையின் மீது ஒரு குறிப்பிட்ட வார்த்தை இருக்கலாமா, இருக்கக் கூடாதா என்பதைப் பற்றி ஒரு விவாதத்தை இந்த அவையில் எந்த விதியின் கீழ் நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்பதையும், அதன் தீர்ப்பையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

10-40 மணி

திரு. குமரி அனந்தன் : ஆய்வு செய்து அந்த துண்டு அறிக்கையிலே இருந்ததைக் கூட அவர்கள் சொன்னதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஐ.பி.கே.எஃப். போன்றவைகளையெல்லாம் சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு. இனிமேலும் இதற்கு மேலும் வாதத்தை நீட்ட வேண்டாம். திரு. வீரையன் அவர்கள் கேட்டதற்குச் சொல்கிறேன். பொதுவாகவே விதிமுறைகளின்படி பார்த்தால் சில மணி நேரங்களில் யாருக்கும் பேசுவதற்கு வாய்ப்பே இருக்காது. ஆய்வு உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். பிறகு காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அந்த அளவோடு அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு முழு வாய்ப்பு இருக்கிறபோது இதனையும் சேர்த்துப் பேச வேண்டுமே தவிர இதையே ஒரு பிரச்சினையாக எழுப்புவது என்பதை இனி மேல் முற்றாகத் தவிர்க்க வேண்டும். இனிமேல் அது அனுமதிக்கப்பட மாட்டாது. முதலில் திரு. அண்ணாநம்பி அவர்கள் உரையாற்றுவார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் நாளைக்குப் பேசும்போது விரிவாக அதைப் பேசிக் கொள்ளலாம். இதற்கு மேலும் நேரத்தை நீட்டக்கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெளிநடப்புச் செய்தாகிவிட்டது. முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) டாக்டர் து. திருமூர்த்தி. (கூச்சல் - குழப்பம்).

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகனாம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே,

' உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு '

(குறுக்கீடுகள்) பகலவன் முன் பனி என பசி, பிணி அகன்றிட நோய் எனும் கொடிய (கூச்சல் - குழப்பம்) விலங்கு நாட்டிலிருந்து அகன்றிட, பகுத்தறிவுக் கண்கள் திறந்திடத் திறம்பட படைத் திட்ட நிதிநிலை அறிக்கையின் அங்கமாக விளங்கும் மானிய கோரிக்கையின் மீது (குறுக்கீடுகள்) காவல்துறை கோரிக்கையின் மீது திருவள்ளுவர் ஆண்டு 2021 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 20-ஆம் நாள் அன்று பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்...... (கூச்சல்- குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்து உறுப்பினர் களும் அமர வேண்டும். இல்லாவிட்டால் நான் அடுத்த நடவடிக் கைக்குப் போகவேண்டி இருக்கும். டாக்டர் து. திருமூர்த்தி .... (கூச்சல் - குழப்பம்).

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்தவர்கள் வெளிநடப்பு செய்வதற்கு உரிமை உண்டு. ஆனால் சபையை நடக்க விடாமலேயே தடை செய்கின்ற உரிமை எந்த உறுப்பின ருக்கும் இல்லை. இந்த அவையைக் காப்பாற்ற வேண்டிய கடமை உங்களுடையது. (கூச்சல் - குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அனைவரும் உட்கார வேண்டும். இல்லாவிட்டால் நான் 120-வது விதியின் கீழ் வெளியேற்ற வேண்டியிருக்கும். (கூச்சல் - குழப்பம்) திரு. இராதா அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் இப்போது அவையிலிருந்து வெளியேற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். (கூச்சல் - குழப்பம்).

Sergeant இப்போது அவர்களை வெளியேற்றலாம்.

(பேரவைக் காவலர்கள் திரு. எஸ். ஆர். இராதாவையும் அவரைச் சார்ந்தவர்களையும் அவையிலிருந்து வெளியேற்றினர்).

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வேறு யாரும் பேச வேண்டாம். உட்காருங்கள். பேச வேண்டியவை எல்லாம் பேசியாகிவிட்டன.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவரும் அவருடைய துணைவர்களும் வெளிநடப்பு செய் தாலும் திரும்பி வந்து அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்பதற்கு....(குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் அதற்குப் பின்னர் ஒரு பிரச்சினையை எழுப்பி அப்படி தொடர்ந்து எழுப்புவது நல்லதல்ல என்ற கருத்து ஏற்பட்டு அவரே அதை ஏற்றுக்கொண்டு அவையினுடைய ஒழுங்கை காப்பாற்றுவதற்கு குமரி அனந்தன் அவர்களும், காங்கிரஸ் கட்சி நண்பர்களும் ஒத்துழைத்து அமர்ந்திருக்கின்றபொழுது மறுபடியும் முதலில் எந்தப் பிரச்சனையை எழுப்பி வெளியேறினார்களோ அந்தப் பிரச்சனையையே தொடர்ந்து தாங்கள் சபாநாயகர் இடத் திலே, அவர் மறுத்தும் கூட தொடர்ந்து பேச முயற்சிக்கிறபோது, சபை ஒழுங்கை மீறுவோம் என்பது அந்த குரல். ஆகவே சபை ஒழுங்கை மீறுவோம் என்ற குரலுக்கு இங்கே இடம் இல்லை.

10-45 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர் என்ன பேசப் போகிறார் என்று தெரியாது என்ற காரணத் தால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லாம் ஆராய்ச்சி வேண்டாம். திரு. து. திருமூர்த்தி பேசுங்கள்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறி னர்).

டாக்டர் து. திருமூர்த்தி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகனாம், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே,

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு "

பகலவன் முன் பனி என பசி பிணி அகன்றிட நோய் என்னும் கொடிய விலங்கு நாட்டிலிருந்து அகன்றிட பகுத்தறிவுக் கண்கள் திறந்திட.....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு இடைக்குறிப்பு. இன்று வெளியேற்றப்பெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்று முழுவதும் அவைக்கு வர இயலாது.

*திரு. ஆஸ்கார் சி. நிக்லி : Mr. Speaker, Sir, I just want a clarification. I want to point out that the dignity of this House is going .own by slogan-shouting. I request you kincly to see tnat th. slogan-shouting is prevented in future. It can be done outside and there will be no objection. But, it should not be done inside the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is added.

டாக்டர் து. திருமூர்த்தி : திறம்பட படைத்திட்ட நிதிநிலை அறிக்கையின் அங்கமாக விளங்கும் காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது திருவள்ளுவர் ஆண்டு 2021, சித்திரைத் திங்கள், 20ஆம் நாள் அன்று பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சீருடை அணிந்து செம்மாந்து நடைபோடும் சிறப்பு மிக்க சமுதாயப் பணியினை தலையாய கடமை என ஏற்று சட்டம், ஒழுங்கு நலிவு அடையாமல் நாட்டினைப் பாதுகாக்கும் பணியினை பேணி போற்றும் காவல் துறையினை உள்நாட்டு ராணுவம் என்றால் அது ஏற்புடையது என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் காவல் துறை மீது மாறாது மோகம் கொண்டு சேரும் எண்ணம் படைத்து இருந்தாலும் நல்ல உடல் நிலை, மன நிலை உடையவர்களை தேர்வு செய்து, அதற்குப்பின் பயிற்சிகள், படைப்பயிற்சி, பாதுகாப்புப் பயிற்சி, சட்டங்கள், உளவியல், குற்றவியல் இவைகளை நன்கு கற்று அறிந்தபின் பொறுப்பு ஏற்கும் காவல் துறை நண்பர்களை அரணாகக்கொண்டது தான் அரசு. சட்டம் மீறப்படுமானால் ஆய்ந்து அறிந்து பின் குற்றவாளிகளை கையகப்படுத்தி நீதி மன்றங்களில் நிறுத்தி அவரவர்களுக்கு உகந்த தண்டனைகளைப் பெற்றுத் தந்து சிறைச்சாலைகளில் குற்றவாளிகளை சமுதாயத்தில் இருந்து பிரித்து, பிரித்தக் காலத்தில் உபயோககரமான, பொருளாதார மனமாற்ற முன்னேற்றங்களுக்கு வழி வகுத்து மீண்டும் குற்றம் புரியா வண்ணம் அவர்களை மீண்டும் சமுதாயத்தில் பண்பாளனாக, பழக வழி வகுக்கவும், மிகப்பெரிய, சமுதாயத் தொண்டினை தங்களது ஊதியத்தோடு இணைந்து வாழ்பவர்கள், வாழ வேண்டியவர்கள் தான் காவல் துறைப்பணியாளர்கள், இப்படி வேலியாக அரணாக, ஆசானாக அமைய வேண்டியவர்கள் சில நேரங்களில் வேலியே பயிரை மேய்வது போல் சமூக விரோதிகளாக அக்கறை இன்மையால், அரசியல் சாயலினால், அதிக, சுகம் காணவிரும்புவதால், நிலை அற்ற உலகில் நிலையான குடும்பப் பொருளாதாரம்



பெற்றிட, பெருக்கிட சட்டத்தை மறந்து, கடமையைத்துறந்து,
மனசாட்சியை இழந்து பொருள் ஈட்டும் முயற்சியை மேற்
கொள்ளும் மிகக்கேவலமான எண்ணத்தால் உந்தப்பட்டுஅதிகாரத்
தைத் தவறான முறையில் உபயோகித்து படிக்காத பாமர மக்களை
வதைத்து, அப்பாவிகளை கொடுமைப்படுத்தி, வள்ளுவர் வாக்காம்

" மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு "

என்பதை உணராமல் பணியை மறந்து பணம் பெறும் பாதையில்
வேகமாக நடை போடுவதும் தடுத்து நிறுத்திட யாராலும்
இயலாது என்ற மனப் போக்கும் பெற்று விட்டால் காக்கும்
தெய்வமே களபலி கேட்பது போல் நாட்டு மக்களுக்கு நலன் தரும்
துறையாக இருக்க வேண்டியவர்கள் மாறாக செயல்படுவது
வேதனையைத் தரும் உண்மைகளை நாம் மறந்துவிடல் ஆகாது ;
மறக்கவும் இயலாது. இவைகளை தடுத்து நிறுத்தி மக்கள் மத்தி
யில் மரியாதைக்குரிய நண்பனாக, நல்லவனாக மாற்றி அமைத்
திடல் வேண்டும். மக்கள் காவல் துறையினை குறை கூறும் நிலை
மாறவேண்டும், சான்றோர்கள் கூறும் அறிவுரைகளை நாம்
அலட்சியப்படுத்தக் கூடாது ; புறக்கணிக்கவும் கூடாது. நாம்
செய்ய வேண்டிய வசதிகள் காவல்துறை பணியாளர்களுக்கு,
தேவையான அடிப்படைச் சம்பளமும் அதேபோல பஞ்சப்படியும்,
வீட்டு வாடகை இவைகளைச் சூழ்நிலைக்கு ஏற்ப அளிப்பதன்
மூலம் கையூட்டு பெரும் அவலநிலையை ஓரளவிற்கு குறைக்கலாம்.
அதைப்போல பணி இடத்திலே காவல் நிலையங்களின் அத்தியா
வசியத் தேவைகளான தொலைபேசி, மின்சாரம், மின்சார விசிறி,
தட்டச்சு இயந்திரம், எழுது பொருள்கள், மேலும் மற்ற நிலையங்
களுடன் நேரடித் தொடர்பு, வங்கிகள், தீயணைப்பு நிலையங்கள்,
பள்ளிகள், போக்குவரத்துத் துறை அதிகாரிகளுடன் தொடர்பு
கொள்ளுதல் தடையுறா வண்ணம் அமைத்திடல் வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-50 மணி.

நவீனமயமாக்குதல், ஒயர்லஸ் மற்றும் மைக்ரோவேவ் வசதி
கள் பரவலாக்கப்பட வேண்டும். வருங்கால வளர்ச்சியினை,
விஞ்ஞான வளர்ச்சியினை கருத்தில் கொண்டு இவைகளைச் செயல்
படுத்துதல் வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

புதியமுறை. கேம்ப்பிங் போலீஸ் ஸ்டேஷன், கலவரங்கள்
மற்றும் பதட்ட நிலை உருவாகும் இடங்களில் காவல்துறையினர்
பாதுகாப்புக்காக நிறுத்தப்படுகின்றனர். இதைமாற்றி, தற்
காலிக நிலையங்கள், கூடாரங்கள், தொலைபேசி மற்றும் எழுத்தர்
உள்பட எல்லா வசதிகளுடன் கூடிய தேவைக்கு ஏற்றார்போல்
அங்கு தங்கும் வசதி கொண்ட தற்காலிக காவல் நிலையங்களை
அமைக்கலாம்.

ஆய்வுகள். துப்பறிவு பொறுத்தமட்டில் ஸ்காட்லாந்துக்
இணையாக ஆராய்ச்சி மையமும் பயிற்சி மையமும் பெற்றுத்தர
வேண்டுமென மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்
அதைப் போலவே ஃபாரன்சிக் மெடிசின்ஸ் குறித்து, விபத்து
குள்ளாகி இறந்தவர்களுடைய சடலங்களை உடனுக்குடன் அப்
றப்படுத்தி, சடலப் பரிசோதனையை முடித்து காலம் தாழ்த்த
மல் சுற்றத்தாரிடம் ஒப்புவித்தல் வேண்டுமென கேட்டுக்கொள்
கிறேன். இதுகுறித்து மனிதாபிமான உணர்வோடு செயல்பட
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

வரதட்சணைக் கொடுமை வழக்குகளில் சரியானபடி காவல்
துறை கவனம் செலுத்தவில்லை என்பதை எண்ணும்போது
இவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமெனவும் கேட்டுக்
கொள்கிறேன். பெரும்பாலான கிராமங்களில், நகரங்களில்
பழைய குற்றவாளிகள் தொடர்ந்து, சமூக விரோதச் செயல்,
கொள்ளை அடித்தல், மிரட்டுதல் ஆகியவைகளை மறைமுகமாக
காவல்துறை உதவியுடன் தொடர்ந்து செய்கின்றனர். இவைகள்
களைந்தெறியப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இரவில், காவல் நிலையத்திற்கு விசாரணை என்ற பெயரில்
அழைத்துவந்து கொடுமைகளை இழைக்கும் பழக்கம் மிக மிக
வெறுக்கத்தக்கது. அப்பாவி மக்களை பீதிக்குள்ளாக்கும் இந்த
முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தொகுதி நிலவரம். தொலைபேசி வசதி கோரல், தாலுக்கா
காவல் நிலையம், செங்கல்பட்டில் தொலைபேசி வசதி இல்லை.
திருக்கழுக்குன்றம் ஆய்வாளருக்கு ஜீப் வசதி இல்லை, நாவலூர்,
டெலிபோன் வசதி இல்லை. மகாபலிபுரத்தில் உண்டு.
திருப்போரூரில் உண்டு. பரனூரில் தொலைபேசி வசதி இல்லை.
ஓட்டேரி காவல் நிலையம் வண்டலூர் பூங்கா அருகில் உள்ளது.
ஒரு நாளைக்கு குறைந்தது 10 ஆயிரம் பேர் வந்து செல்கின்றனர்.
இங்கே அவசியம் தொலைபேசி தேவை. பள்ளி சிறுவர்கள் வழி
தவறி விடும் காலகட்டத்தில் இந்தத் தொலை பேசியினுடைய
முக்கியத்துவத்தை நன்கு உணர முடிகிறது.

மறைமலைநகர் மிக வேகமாக வளர்ந்துவரும் புறநகர்ப்பகுதி
யாகும். அண்மையில் ஏற்பட்ட பதட்டநிலையை சமாளிக்க
காவல் துறையினர் பெரும் அவதிக்கு உள்ளானார்கள்; ஆகவே
தொலைபேசி வசதி மிக மிக அவசியம்.

மீனவர்கள் பிரச்சினை, கடந்த ஓராண்டிற்கு இடைப்பட்ட
காலத்தில் என்னுடைய தொகுதியில் 4 கலவரங்கள் ஏற்பட்டன.
மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் மதிவாணன் அவர்கள்



கூட சமரச முயற்சியில் பங்கு பெற்றார். இறந்தவர்களுடைய
எண்ணிக்கை 3 பேர். படுகாயம் அடைந்தவர்கள் 20-க்கும்
மேற்பட்டவர்கள், நாசமாக்கப்பட்ட வீடுகள் 15. நாசமான
பொருள்கள், 20 வலைகள். காணாமல் போன கட்டுமரம் ஒன்று.
கலவரங்கள் தொடர்ந்து நடைபெறுகின்ற காரணத்தால்
கடலோரப் பகுதிக்கென காவல்நிலையம் கோவளத்தில் அமைத்
தல் அல்லது நடமாடும் காவல் நிலையம் அமைக்கும் வழியினை
ஆராயவேண்டும். இடம் பெயரக்கூடிய காவல் நிலையங்களைக்
கூட அமைத்திடலாம்.

'' நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

சமூகத்தில் பரவி வரும் இனக்கலவரம் மற்றும் கிராமங்களுக்கு
இடையே கலவரங்கள் நோயே ஆகும். இவைகள் சமூகத்திற்கு
ஏற்பட்ட நோயே என கொளல் வேண்டும்.

தற்போது தமிழகத்தில் 689 பெண் காவலர்கள், 80 தலைமை
காவலர்கள், 88 உதவி ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். மக்கள்
தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்களாக இருந்தாலும்
பெண் காவலர்களுடைய எண்ணிக்கை மிகமிகக் குறைவு. ஆகவே,
அதிகமான பெண் காவலர்களை நியமிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். காவல் நிலையங்களில், முதல், இரண்டாம்,
மூன்றாம், நான்காம் தரத் தகுதி காவல் நிலையங்கள் உள்ளன.
ஆனால் திறமையில், செயலில், பெரும்பான்மையான காவல்
நிலையங்கள் நான்காம் தர காவல் நிலையங்களாக செயல்படு
வதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நிலையங்
களைப் பொறுத்தவரையில் தகுதி மேம்பாடும், அதிகாரிகளுக்கு
மனநிலை மேம்பாடும் தேவை என்பதை நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10-55 மணி

போக்குவரத்து காவல் துறை அதிகாரிகள் நடு பாதையில்
பகலில் பகிரங்கமாக கையூட்டு வாங்கும் காட்சி கண்கள் கூசுகின்ற
காட்சி இனிமேலாவது நிறுத்தப்பட வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் செம்பாக்கம், கொட்டமேடு அருகில்
ஒரு காவல் நிலையம் அமைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். வெடிக்கும் நிலையில் தயாராக உள்ள வெடி
குண்டு போல் இருக்கும் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட
இந்தப் பகுதிக்கு தடுப்பு முறையாக, பிரிவென்ஷன் ஆக்ட் என்ற
வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த இடத்தில்தான்

துப்பாக்கிச் சூடு நடந்தது. ஒருவர் இறந்தார். பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே காவல் நிலையம் இந்த இடத்தில் ஏற்படுத்துதல் மிக, மிக அவசியம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு என்ற நல்ல திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்ற நிலைக்குத் தள்ளியவர்கள், செம்மையாகச் செயல்படுத்த முடியாத நிலைமையை உருவாக்கியவர்கள் சமூக விரோதிகள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் ஆகியோர்தான். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்குக் கை கொடுக்கும் நண்பனாக..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : இன்னும் ஒரே மணித்துளியில் முடித்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் து. திருமூர்த்தி : தலைவர் அவர்களே, அவர்களுக் குத் துணை போகும் காவல் துறையினருக்கு விதிவிலக்கு அளித்தால் தான் அவர்களை தண்டனையிலிருந்து தப்புவிக்க முடியும். இனி வரும் நல்ல திட்டங்கள் பாழடிக்கப்படாமல் இருக்க, காவல் துறையால் பங்கம் விளையாமல் இருக்கத்தக்க வகையில் பாது காக்க வேண்டியது இந்த அரசின் தலையாய கடமை என்று நான் நம்புகிறேன். நடைமுறையில் உள்ள மக்களுக்கு நன்மை புரியும் நல்ல திட்டங்கள் இனி வரப்போகும் நல்ல திட்டங்கள் பயனற்றுப் போகாமல் இருக்க, செயல் இழக்காமல் இருக்க காவல் துறையின் குறுக்கீட்டினையும், அதன் பொறுப்பற்ற செய்கையினையும் கண் காணித்து, அவ்வப்போது தீய சக்திகளைக் களைதல் வேண்டும். உடல் திறனைக் கண்டு, வேலைக்கு அமர்த்தப்படும் காவல் துறையினர் நல்ல உள்ளங்களை, நிமிர்ந்த உள்ளங்களை உடைய வர்களாக, நீதிக்குத் தலை வணங்கும் உறுதி படைத்த உள்ளம் உடையவர்களாக அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதுபற்றி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேவைப் படும்போது அரசாங்கத்திற்கு........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) ; இந்த வார்த்தையோடு முடித்துக் கொள்ளுங்கள்.

டாக்டர் து. திருமூர்த்தி : தேவைப்படும் அரசாங்க ஆணை களைப் பிறப்பித்து சீர்படுத்த வேண்டும்.

" விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் "

மாறுபட்ட சூழ்நிலையில் அமைய இருக்கும் மது மற்றும் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்க உதவும் திட்டங்கள் எல்லாம் மாறுபடாமல் இருக்க மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



Before I conclude I would like to say that the commenda- ble work that has been done personally by the top brass D.G.P. Thiru P. Dorai is the greatest gift that has been brought to Tamil Nadu as well as to the nation and the guiding soul, the living deity, and the present day politician now being adored by the whole world. My greatest respects to the Hon. Chief Minister.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : இத்துடன் முடித்துவிடுங்கள்.

டாக்டர் து. திருமூர்த்தி : ஆக இனி வரும் நாட்களில் காவலர்கள் மெய்க்காவலர்களாக, காக்கும் கரங்களாக தமிழக அரசின் மெய்க்காவலர்களாக அமையவேண்டும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமைகிறேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறை, மாநில ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு பெற்றமை குறித்து என்னுடைய மகிழ்ச்சி யினை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஜனநாயக நாட் டில் அமைதியான சகஜமான வாழ்க்கைக்கு அரசாங்கம் உத்தர வாதம் அளிக்கிறது. அரசாங்கத்தின் இந்தக் கடமையை காவல் துறையே நிறைவேற்றுகிறது. இப்போது நமது நாட்டிலுள்ள காவல் துறை ஏற்படுத்தப்பட்டது வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தில். முதல் சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற பின்னால் 1861-ஆம் ஆண்டில் போலீஸ் சட்டம், அதாவது போலீஸ் ஆக்ட் இயற்றப்பட்டது. இன்றைய காவல் துறைக்கு வடிவமைப்பு கொடுத்தது அந்தச் சட்டம்தான்.

சுதந்திரத்திற்கு முன்பு அன்னிய ஆட்சியைப் பாதுகாக்கிற சாதனமாகவே காவல்துறை பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இன்றைய காவல்துறை மக்களின் நண்பனாகப் பணி யாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. மக்களை முறைப் படுத்துதல், குற்ற நிகழ்வுகளைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் ஆகிய பொறுப்புகள் காவல் துறையிடம் இருக்கின்றன. இவ்வளவு சிறப்புப் பெற்ற காவல் துறையினர் மக்களால் மதிக்கத் தக்கவர்க ளாக இருக்க வேண்டும். மக்களுக்கு அவர்களிடம் நம்பிக்கை இருக்க வேண்டும். காவல் துறையிடம் சென்றால் நீதி கிடைக் கும், நியாயம் கிடைக்கும் என்ற எண்ணம் மக்களுக்கு வரவேண் டும். போலீஸ் நடவடிக்கைகள் கேலிக்குரியதாக இருக்கக்கூடாது. அதைப்போலவே, பிறர் போலீஸ்காரர்களை கேலிக்குரிய பொரு ளாக மாற்றக்கூடாது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை

அரசாங்கம் ஊக்குவிக்கக் கூடாது. அனுமதிக்கக் கூடாது. சினிமாப் படங்கள் இப்போது வந்திருக்கின்றன. 'இதுதாண்டா போலீஸ்', 'போலீஸ்காரன் பொண்டாட்டி' என்ற தலைப்புகளில் படங்கள் வந்திருக்கின்றன. இந்தப் படங்களை உடனடியாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று போலீசை கேலிப் பொருளாக்கும் செயல்களை அனுமதிக்கக் கூடாது. தமிழ் நாட்டில் காவல்துறையில் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 67,094.

11-00 மணி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) :** உறுப்பினர்கள் ஆங்காங்கு கலந்துரையாடலைத் தவிர்த்து, அவரவர்களுடைய இருக்கைகளில் அமைதியாக அமருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** இதில், கிரேடு 1 மற்றும் 2 கான்ஸ்டபிள்கள் 50 ஆயிரம் பேர்தான் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை போதுமானதா என்றால் நிச்சயமாகப் போதாது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். சில ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். விநாயகருக்கு முன்னாலே வேண்டுவதைப்போல,

'பல்லிளிப்பும் சலாமும் காக்கையுடன் குல்லாவும்
இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
சங்கச் சுடுமுகத்து மணியே
நீ எனக்கு மங்காத வேலை ஒன்றுதா'

என்று இன்றைக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுகளுக்கு முன்னாலே இளைஞர்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சில ஆயிரம் பேர்களுக்காவது வேலை கிடைக்கலாம். எனவே புதிய காவலர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்களின் நலம் பேணுவதில் அரசு தனிக் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். 1985-86 ஆம் ஆண்டு காவல் துறையில் பணி ஆற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கு 80 விழுக்காடு வீடு கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் காவல்துறை வீட்டு வசதித் திட்டம் அன்றையதினம் தொடங்கப்பட்டது. ஆனால் இதுவரை காவல் ஆய்வாளர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர்களுக்கு 30 விழுக்காடும், காவல் தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு 45 விழுக்காடும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு நிலை. அந்த நிலையில் இந்த ஆண்டு எந்தவிதமான மாற்றமும் இல்லை. சென்ற ஆண்டு



ஆய்வுரையில் சென்னை மாநகரிலும் அதைச் சுற்றியுள்ள இடங்
களிலும் நகர்ப்புற உச்சவரம்பு சட்டத்தின் கீழ் பெறப்பட்ட
உபரி நிலத்தைப் பயன்படுத்தி, சொந்த வீடு கட்டிக் கொடுக்கும்
திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை
எடுக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருந்ததே, அந்தத்
திட்டம் என்ன ஆயிற்று? நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா?
இந்த ஆண்டு ஆய்வுரையில் அதைப்பற்றி ஏதும் குறிப்பிடப்பட
வில்லையே? அதுபற்றி விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

காவலர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டு
மென்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
1980 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. சென்ற ஆண்டு மார்ச்சு
31-ந் தேதி அது கலைக்கப்பட்டு, அதன் பணிகள் தமிழ்நாடு
வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. நான் சென்ற
ஆண்டு பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். அந்தக் கழகம்
கலைக்கப்படக் கூடாது என்று. அந்த அமைப்பு கலைக்கப்
பட்டது, வீடு கட்டும் திட்டத்தை நிச்சயமாக பாதித்திருக்கிறது.
எனவே மீண்டும் காவலர்களுக்குத் தனியாக வீட்டு வசதிக் கழகம்
ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இன்னும் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயே
பணியாற்றக்கூடிய நிலையில் இருக்கின்றன. அந்த நிலை மாற
அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். காவல்துறைக்கு என்று தனியாக ஒரு வாரியம் (போலீஸ்
போர்டு) தேசிய அளவிலும் மாநில அளவிலும் ஆக இரண்டு
மட்டங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். நேஷனல் போலீஸ் போர்டு மற்றும் ஸ்டேட் போலீஸ்
போர்டு என்று ஏற்படுத்த வேண்டும். நீதித் துறை, காவல்
துறை, சட்டத்துறை இவைகளிலிருந்து, சமுதாயத்தால் மதிக்கப்
படுபவர்களையும் நீடித்த அனுபவம் பெற்றவர்களையும், ஜனாதி
பதி நேஷனல் போர்டுக்கு நியமிக்க வேண்டும், அதே போல மாநில
போர்டுக்கு ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும்.
அதற்கு, நீதித்துறையிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களைத்
தலைவர்களாகவும், காவல் துறையிலிருந்து தேர்வு செய்யப்பட்ட
வர்களை உறுப்பினர் - செயலாளராகவும் போட்டு அந்த வாரியம்
அமைக்கப்பட வேண்டும். அந்த வாரியம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்
ஆற்றும் பணிகளைப் போன்று ஒரு நீதிமன்ற அந்தஸ்தில்
பணியாற்ற வேண்டும். அது அரசு வகுக்க வேண்டிய கொள்கை
களைப் பற்றி ஆலோசனை வழங்கும். காவல்துறையின் பல்வேறு
பணிகளை உருவாக்கி, ஒருங்கிணைத்து, கண்காணிக்கும் முழுப்
பொறுப்புக்கான ஆலோசனையையும் அது அரசுக்கு வழங்கும்.
அவர்கள் நடவடிக்கைகளைப் பற்றி முழு விவரத்தையும் சட்டப்
பேரவைக்கு அந்த வாரியம் தெரிவிக்க வேண்டும். அரசு ஒப்புக்
கொள்ளாத தங்கள் ஆலோசனைகள் பற்றிய விவரத்தையும் அது

11-05 மணி.

தெரிவிக்கும். அப்படி அந்த வாரியம் வழங்கிய ஆலோசனைகளை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்தை அரசு விளக்க வேண்டிய நிலை ஏற்படும். காவல்துறையின் செயல்பாட்டை செம்மையாக்க இது உதவும். மக்களுக்கும் காவல் துறையின் மீது நம்பிக்கை வளரும். காவல்துறையை நவீனமயமாக்க வேண்டும். முகமூடிக் கொள்ளைகள் மக்கள் மத்தியில் பீதியைக் ஏற்படுத்தியிருக்கின்றன. கோவையிலே ஓரிரு மாதங்களுக்கு முன்பு முகமூடிக் கொள்ளைகள் ஏராளமாக நடைபெற்றன ஒரு குறிப்பிட்ட முகமூடிக் கொள்ளை நடைபெற்ற பகுதியிலே இருந்த இரண்டு பேரும் டாக்டர்கள். அவர்கள் கன்ட்ரோல் ரூமை அழைத்து தொலைபேசியில் தகவலைச் சொன்னார்கள். இங்கே கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, முகமூடிக் கொள்ளைக்காரர்கள் உள்ளே வந்திருக்கிறார்கள், உடனடியாக போலீசை இங்கே அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டால் கன்ட்ரோல் ரூமிலிருந்து வருகிற பதில் ‘ இங்கே ஆள் கிடையாது’ என்று. பிறகு என்ன செய்ய வேண்டும், அவர்கள் ஆர். எஸ். புரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எல்லாம் எனக்கு அவகாசம் கிடையாது ஆர். எஸ். புரம் போலீஸ் ஸ்டேஷன் நம்பர் என்னிடத்தில் இல்லை அது நடைபெறக்கூடிய சாத்தியம் இல்லையென்றால் அங்கேதான் டெலிபோன் செய்ய வேண்டும் என்று சொல்லி பிறகு நம்பர் வேண்டுமானால் தருகிறேன் என்று சொல்லி ஆர். எஸ். புரம் டெலிபோன் நம்பரைத் தருகிறார்கள். ஆர். எஸ். புரம் போலீசுக்கு டெலிபோன் செய்தால் கடைசிவரை பதில் இல்லை. வந்தவர்கள் கொள்ளையை முடித்துக்கொண்டு, நடந்தே போய் மத்திய பஸ் நிலையத்தில் வைத்து எந்தெந்தப் பண்டங்கள் தங்களுக்குத் தேவையோ அவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளை விட்டுவிட்டு போய்விட்டார்கள். இதுவரையில் நடவடிக்கை எதுவும் அதன்மீது எடுக்கப்படவில்லை.

பல நவீன ஆயுதங்கள் சர்வ சாதாரணமாக இன்றைய தினம் கிடைக்கின்றன. வங்கி போன்ற இடங்களில் அவற்றை வைத்து கொள்ளையடிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

இளைஞர்கள் மத்தியில் துப்பாக்கிகள், நவீனமான புது ஆயுதங்கள் போன்றவைகளைப் பயன்படுத்தும் மனோபாவம் இன்றையதினம் வளர்ந்திருக்கிறது. நெய்வேலி, பெல் நிறுவனம் இருக்கும் இடங்களில் எல்லாம் நிறைய திருட்டுகள் போவதாக புகார்கள் வந்திருக்கின்றன. தினசரி குறைந்தபட்சம் 5 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரை திருட்டுப் போவதாக அந்த நிறுவனங்களில் பொறுப்பில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். இவைகளை எல்லாம் சமாளிக்கும் ஆற்றல் போலீசுக்கு வரவேண்டுமென்று சொன்னால் முழுவதுமாக காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும்.



ஒரு டி.ஜி.பி. இருக்க வேண்டிய இடத்தில் இன்றையதினம் பல டி.ஜி.பிக்கள் இருக்கிறார்கள், காவல் துறைக்கு ஒரு டி.ஜி.பி தேவை என்று சொன்னால் மற்ற டி.ஜி.பி. க்களை வேறு பணிக்கு அனுப்பி விடுகிறார்கள். இப்படி அதிக டி.ஜி.பி.-க்களை போட்டால் போலீசுடைய தன்னம்பிக்கைத் தகர்ந்து விடும். நிச்சயமாக அந்தத் தன்னம்பிக்கை போய்விடும.

அடுத்து, போலீஸ்காரர்கள் சர்வ சாதாரணமாக இன்றைய தினம் ஜாதிச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்கிறார்கள். போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் இன்றைய தினம் செக்கரட்டேரியட்டை எடுத்துக்கொண்டால் கூட பல ஜாதி சங்கங்களில் அவர்கள் இடம் பெறறிருக்கிறார்கள். எந்தக் குறிப்பிட்ட ஜாதியையும் நான சொலலவிலலை. பல ஜாதிச் சங்கங்களில் அவர்கள் இடம பெற்றிருக்கிறார்கள். இந்த ஜாதிச் சங்கங்களில் அவர்களுககு எல்லாம் சீக்ரட் கோட் நமபர் கொடுத்திருப்பதாகவும் சொல்கிறார்கள். அந்த நம்பரை அவர்கள் ஜாதிச் சங்கங்களின் டைரிகளில் குறிப்பிட்டு வைத்திருப்பதாகவும, குறிப்பிட்ட அதிகாரியிடத்தில் அதைக் காட்டி, நான் வந்திருக்கிறேன் என்று சொல்லி, காரியங்களை சாதித்துக் கொள்வதாகவும் பகிரங்கமாகவே இன்றையதினம் புகார்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. இந்த நிலையை நிச்சயமாக நாம் அனுமதிக்கக் கூடாது. யாராக இருந்தாலும், எந்த ஜாதியைச் சார்ந்தவராக இருந்தாலும் எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஜாதிச் சங்கங்களின் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று அரசாங்கம் தடை விதிக்க வேண்டும். எப்படி, அரசியல் கட்சிகளில் அவர்கள் இருக்கக் கூடாது என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அதுபோல, எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் எந்த ஜாதிச் சங்கங்களிலும் இடம் பெறக் கூடாது என்பதை அதிகாரிகளுக்குத் தெளிவாக்க வேண்டும். இந்த நிலை நீடிக்குமேயானால் மக்களுக்கு போலீஸ் இலாகா மீதுள்ள நம்பிக்கை முழுவதுமாக தகர்ந்து போய்விடும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1971-ல் .போலீஸ் கமிஷன் தெரிவித்த அனைத்து பரிந்துரைகளும் அமுல்படுத்தப்பட்டுவிட்டன என்று இந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 1971-ஆம் ஆண்டு போலீஸ் கமிஷன் பரிந்துரைகளில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் போலீசை மதுவிலக்கை அமுல்படுத்தும் பணியிலிருந்தும், பந்தோபஸ்து பணியிலிருந்தும் விடுவித்துவிட வேண்டுமென்று கூறியிருந்தது. அந்தப் பரிந்துரையின்படி மதுவிலக்குப் பிரிவு அமுல்படுத்தப்பட்டது. அதாவது அதற்கு தனிப்பிரிவு போலீசில் ஏற்படுத்தப்பட்டது. பந்தோபஸ்துக்கு மட்டும் தனிப்பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. சட்டம் ஒழுங்கு போலீசை பந்தோபஸ்து பணிக்குப் பயன்படுத்தினால் பலவித குழப்பங்கள் ஏற்படுகின்றன. வரும் புகார்களை ஸ்டேஷன்களில் கவனிக்க ஆட்கள்

இருக்க மாட்டார்கள். அவர்கள் பந்தோபஸ்து பணியிலிருந்து திரும்பி வரும்வரை காத்திருக்க வேண்டும். அண்மையில் நம் முடைய தமிழக போலீஸ் பாண்டிச்சேரிக்கு போயிற்று. காரணம் கேட்டால் பந்தோபஸ்துக்கு போனோம் என்கிறார்கள். இங்கே யிருந்து போகிறவர்களுக்கு அங்கே இருப்பவர்கள் பாதுகாப்பு தர மாட்டார்களா? பெர்சனல் செக்யூரிட்டி என்று ஓரிருவர் மட்டும் போகலாம். லாரிக் கணக்கில் போலீசார் செல்ல வேண் டிய அவசியம் என்ன? எஸ்.பி.யே தலைமை தாங்கி செல்ல வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? இந்த நிலைமை அங்கே எவ்வளவு பெரிய குழப்பத்தை விளைவித்தது என்பதை நாம் பார்த்தோம். அதுகுறித்து ஏதேனும் விசாரணை நடத்தப் பட்டதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தங்களுடைய கடமைகளை மிஞ்சிய முறையில் நடந்து கொண்டதாக புகார்கள் வந்தன.

11-10 மணி

அண்மையில், இராமேஸ்வரத்திற்கு ஒரு அதிவேக படகு வந்ததாகச் செய்தி வந்தது. அந்தப் படகின் நீளம் 40 அடி. முழுவதும் பைபர் கிளாசால் ஆனது. 5 அவுட் போர்டு மோட் டார்கள் பொருத்தப்பட்ட, மோட்டார் படகு என்று சொல்கி றார்கள். மிக வேகமாக கடிது வேகமாக செல்லக்கூடிய அந்தப் படகில் 9 போராளிகள், இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்தி வந்தார் கள் என்றும் சொல்கிறார்கள். அந்தப் படகுக்குள் ஆயுதங்கள் இருந்தன. நிறைய மூட்டைகள் இருந்தன. போராளிகள் நகரத்திற்குள்ளே வந்தார்கள். 35 லிட்டர் பெட்ரோல் வாங்கி னார்கள். காலைச் சிற்றுண்டி வாங்கினார்கள். அதற்கெல்லாம் பணம் நம் நாணயத்தில் செலுத்தப்பட்டதாகச் செய்திகள் வரு கின்றன. 5 மணி நேரம் தங்கியதாகச் சொல்லப்படுகிறது. யாரும் கண்டுகொள்ளவில்லை. ஏன்? போராளிகள் வந்தால் கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அங்கே பேசிக்கொள்ளப்படு கிறதே, அதில் ஏதேனும் உண்மை உண்டா? அதற்கு முன்தினம் ஒரு செய்தி வந்தது. நாகைக் கடற்கரையில் பரபரப்பு. காவல் துறை உஷாராகிறது. கஸ்டம்சுக்குத் தகவல் தரப்படுகிறது. கஸ்டம்ஸ் துணைக் கலெக்டர் வருகிறார். மீனவர் படகுகள் கரையை நோக்கி வருகின்றன. ஒரு படகு சற்று தூரத்தில் நின்று விடுகிறது. பிறகு ஒரு படகில் கஸ்டம்ஸ் துணைக் கலெக்டர் தகுந்த பாதுகாப்போடு செல்கிறார். அந்தப் படகிலே இருந்த இருவர் கடலில் குதித்து தப்பிவிடுகிறார்கள். படகு சோதனை இடப்படுகிறது. சிலோன் லக்ஸ் சோப்பு, கிராம்பு, சிகரெட் இருக்கிறது. அந்தப் படகைப் பிடித்த அதிகாரிகள் இராமேசுவரம் வந்த படகைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கவில் லையே, ஏன்? (மணியடிக்கப்பெற்றது). இராமேஸ்வரத்தில் ஈழப் போராளிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் குறித்த



விசாரணை என்னவாயிற்று? நம்முடைய போலீசார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு உயிர்ப் பலிகள் நடைபெற்று இருக்கின்றன. இதில் மெத்தனம் ஏன்? இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்?

தமிழகத்தில் ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதாகத் தகவல்கள் வருகின்றன. குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் உடுமலைக்கு அருகே சின்னாற்றுக்குப் பக்கத்தில் பயிற்சி முகாம் நடப்பதாகச் சொல்கிறார்கள். இதைக் காவல் துறை கண்காணிக் கிறதா? சட்டமன்றத்தில் தேசப் பாதுகாப்புக்கு ஏற்படுகிற ஆபத்து குறித்து பேசக் கூடாதா? பேசினால் தாக்குதல்தான் பரிசா? திரு. குமரி அனந்தன் அவர்களைத் தாக்க நடைபெற்ற முயற்சி ஒரு சாதாரண நிகழ்ச்சிதானா? அல்லது தமிழகத்தில் இனிவரவிருக்கிற துப்பாக்கிக் கலாச்சாரத்திற்கு ஒரு முன்னோ டியா? அங்கே வந்திருந்தவர்களின் கையில் இருந்த துண்டு பிரசுரத்தில் கொலை வாளினை எடடா, மிகு கொடியோர் செயல் அறவே என்ற வரிகள் இருந்ததாக அறிகிறேன். பாவேந்தருக்கு விழா எடுத்தால் பரிசு கொலை வாளா? இதற்குக் காரணம் என்ன? சட்ட மன்றத்தில் பேசிய பேச்சுக்களுக்கு இப்படிப் பகிரங்கத் தாக்குதல் என்றால், ஜனநாயகம் எப்படி நிலைக்கும்? இது சட்டசபை உறுப்பினரின் உரிமை பறிக்கப்படும் செயலா காதா? தாக்க வந்தவர்கள் கொடுத்த புகாரும் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா ஒரு காம்பவுண்டுக்குள் ஒரு வளாகத்திற்குள், ஒரு கீற்றுக் கொட்ட கைக்குள் நடைபெற்றதாக அறிகிறேன். அழைப்புகள் அனுப்பப் பட்டிருக்கின்றன. அழைப்பு பெறாதவர்களுக்கு அங்கே என்ன வேலை? அப்படி இருக்கும்போது தாக்க வந்தவர்கள் கொடுத்த புகாரை எப்படிப் பதிவு செய்யலாம்? வேண்டுமானால் ஸ்டேட் மென்டாகப் பதிவு செய்திருக்கலாம்.

இதேபோல சமீபத்திலே இன்னொரு பிரச்சினை நடை பெற்றது. சிட்டி பப்ளிக் பிராசிக்கியூட்டர் மூன்று பேரை தாக்கியதாக அவர்மீது புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே கூட கொடுத்தோம். இன்றுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

தீவிரவாதிகள் நடவடிக்கை பற்றி ஆய்வுரையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். பாரா 107 ல் "தீவிரவாதிகளின் நடவடிக்கை கள் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. பல்வேறு தீவிரவாத அணி களும் மற்றும் அவற்றின் இதர அமைப்புக்களும் காவல் துறையின ரின் அடக்கு முறை, பொய் வழக்கு போடப்படுவது ஆகியவற் றைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டியும் மற்றும் மாநிலத்தின்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 மே 3

பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டம், மாநாடு, ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம் ஆகியவற்றை நடத்தினர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் படித்துப் பார்த்தால் ஒப்புதல் வாக்கு மூலம் போலத் தெரிகிறது. அதில் குறிப்பிட்டுள்ளது சரிதானா? போலீஸ் அடக்குமுறை என்பது உண்மையா? பொய் வழக்கு போடப்படுவது என்பது உண்மையா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலும், மதுரையிலும் நடைபெற்ற தீவிரவாதிகளின் கூட்டங்களில் இந்திய ஐக்கியத்திற்கு எதிராகப் பேசப்பட்ட பேச்சுக்களுக்கு எதிராக என்ன நடவ்டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? மைய அரசுக்கு எதிராக மட்டுமல்ல, மாநில அரசுக்கு எதிராகவும் பேசப்பட்டிருக்கிறது. துப்பாக்கி ஏந்தி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று பகிரங்கமாகப் பேசப்பட்டதே, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்.

அதைப்போல இன்றைய தினம் இனக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் பரவிக் கொண்டே இருக்கின்றன. ஒரு நாளிலே முடிந்துவிடும், இரண்டு நாட்களிலே முடிந்துவிடும், சாத்தூரைத் தாண்டாது என்று சொன்ன இனக் கலவரம், இன்றையதினம் இராஜபாளையத்திற்கு போயிருக்கிறது. இங்கே ஆம்பூரிலே நடைபெற்றது, கோவையிலே நடைபெற்றது. பல்வேறு இடங்களிலேயும் இனக் கலவரங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏன் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து, அவற்றைத் தடுக்க முடியவில்லை? நிச்சயமாக சாத்தூர் இனக் கலவரத்தைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், தவிர்த்திருக்க முடியுமென்று நான் நம்புகிறேன். போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. போலீசில் poor intelligence network. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அங்கே இருக்கும் நிலைமைகள் என்ன? அங்கே குழப்பம் வருமா, வராதா: கலவரம் வரப்போகிறதா, இல்லையா! அமைதி திரும்பிவிட்டதா. பதட்டம் இருக்கிறதா என்பதைக் கண்காணித்திருக்க வேண்டும். ஆனால் கண்காணிக்காததன் குறையை இன்றையதினம் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். கிராமங்களுக்கு எல்லாம் அது பரவிக் கொண்டு வருகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது எல்லாம் வழக்குப் போட்டு இருக்கிறீர்கள்.....

11-15 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ.ரா. வரதராசன்) : இந்தச் செய்தியோடு முடித்துக் கொள்ளவும்.



1990 மே 3]

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : I have spoken to the speaker. ஆய்வுத் துறையைப் பொறுத்தவரையில் முன்பு பிராந்தி கடையில் குடிக்கக் கூடாது என்ற விதி அமல் படுத்தப்பட்டு வந்தது. இப்போது அது தளர்த்தப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பிராந்திக் கடையிலும் குடிக்க அனுமதிக்கிறார்கள். அது எந்த அளவுக்குப் போய் இருக்கிறது என்றால், சென்னை நகரத்தில் ஒரு இடத்தில் அரசு இடத்தைக் கையகப் படுத்தி, மாநகராட்சியின் பிளாட்பாரத்தில் ஒரு மரத் தட்டி அடித்து ஒரு கொட்டகை போட்டு இருக்கிறார்கள். அந்தக் கொட்டகைக்கு வெளியே இரண்டு பக்கத்திலும் என்ன எழுதி இருக்கிறார்கள் தெரியுமா? 'cold beer available' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி இருக்கிறார்கள். அது ஒரு பிரதானமான இடத்தில் இருக்கிறது. இடம் வேண்டுமானால் சொல்லத் தயாராக இருக்கிறேன். அது சேத்துப்பட்டு பிரிட்ஜ் பக்கத்தில் இருக்கிறது. ஹாரிங்டன் ரோடும், ஸ்பர் டேங்க் ரோடும் சேரும் இடத்தில் அந்த பிரிட்ஜுக்குப் பக்கத்தில் கீழேயே — உள்ளே போய் யாரும் குடிக்க முடியாது. அதனால் என்ன பண்ணுகிறார் என்றால், அங்கே முன்னாலே ஒரு கடை இருக்கிறது. அந்தக் கடைக்கு உள்ளே போக முடியாது. வெளியே மரத் தட்டி அடித்துப் போட்டு, அதில் cold beer available என்று போட்டு பகிரங்கமாக வியாபாரம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதனால் என்ன ஆயிற்று என்று சொன்னால். பொது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. பெண்கள் அந்தப் பகுதியில் நடமாட அஞ்சுகிறார்கள். இதுபோன்ற நிலைமையை நீங்கள் மாற்ற வேண்டும். நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பரிபூரணமான மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது].

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : 18 மணித்துளிகள் ஆகிவிட்டன.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : I have told the Speaker. If need be, I will tell him.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : இங்கே கொடுத்த நேரப்படிதான் நான் சொல்ல முடியும். நீங்கள் பேரவைத் தலைவரிடம் என்ன பேசினீர்கள் என்று எனக்குத் தெரியாது. சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தீயணைப்பு துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே 12-வது பாராவில், எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுகள் காரணமாக விபத்து ஏற்படும் என்று அஞ்சி சென்னை மாநகரத்திலுள்ள இல்லத்தரசிகளிடம்

இருந்து வரும் அவசர அழைப்புகளுக்கும் சென்று செயல்படுவது போன்று அனைத்துத் தருணங்களிலும் உதவி வேண்டுவோருக்கு இத்துறையினர் உதவி செய்கின்றனர் என்று இருக்கிறது. அப்படி யானால் நான் சமைக்கப் போகிறேன் : அனேகமாக சிலிண்டர் எப்போது வெடிக்கும் என்று தெரியாது : விபத்து ஏற்படுகிற ஆபத்து இருக்கிறது என்று கூறி அவர்கள் அழைத்தால் இவர்கள் போவார்களா ? இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் அப்படித் தான் இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தால் தீ விபத்து ஏற்படும் என்று அஞ்சி வருகின்ற அழைப்புகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு இவர்கள் செல்வார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அதுபோல் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிற நலத் திட்டங்களில் இந்த ஆண்டு மலிவு விலையில் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் சனவரி 1981 முதல் அமலில் இருந்து வருகிறது. இதற்காக கடந்த 5 ஆண்டுகளில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் வருமாறு என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த ஐந்து ஆண்டுகளை எடுத்துப் பார்த்தால் 1986-87, 1987-88, 1988-89 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக 28 இலட்சம், 28 இலட்சம், 29 இலட்சம் என்று செலவு செய்யப் பட்டுள்ளது.....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 11-ஆம் பக்கத்தைக் குறிப்பிட்டார்கள். இல்லத்தரசிகள் சமைக் கப் போகும்போதே, தீ விபத்து ஏற்படும். சிலிண்டர் வெடிக்கும் என்று முன் கூட்டியே அவர்களுக்கு ஜோசியம் தெரிந்து, இவர்க ளுக்கு அழைப்பு விடுப்பார்களா என்று திரு. பாலசுப்பிரமணியம் கேட்டார். அதிலே முழு வரியையும் அவர் படித்து இருந்தால் சந்தேகம் வராது. ' எரி வாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுகள் காரணமாக விபத்து ஏற்படும் என்று அஞ்சி ' என்று இருக் கிறது. சில நேரங்களில் கசியத் தொடங்கி இருக்கும் : அந்த அபாயம் வரும் என்று அவர்களுக்குத் தெரிகிற நேரத்திலே உடனடியாக ஃபோன் செய்து கூப்பிடுவது வாடிக்கை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** அதைத்தான் நான் கேட்டேன். ' in anticipation ' முன்பே ஒரு வேளை வெடித்து விடும் என்று அஞ்சி அழைத்தாலும் செல்வார்களா என்றுதான் கேட்டேன். அப்படிப் போவார்கள் என்று முதலமைச்சர் சொன்னால் அந்த விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவரும் ஆருடம் பார்த்து அழைக்கமாட்டார்கள். குறிப்பிட்ட ஒரு ' ஸ்மெல் ' வரும். அது ஒழுக ஆரம்பித்து இருந்தால், ' லீக்கேஜ் ' இருந்தால்



ஒரு ஸ்மெல் ' வரும். அதைத் தெரிந்துகொண்டு அழைப்பார்கள் என்னுடைய வீட்டிலே கூட அப்படி நடைபெற்று இருக் கிறது. உடனடியாகக் காவலர்கள் அழைக்கப்பட்டு அந்த ஆபத்தைத் தவிர்த்து இருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** விளக்கத்துக்கு நன்றி. கடைசியாக 1989—90-ஆம் ஆண்டில் 17.31 இலட்சம் தான் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டில் 12 இலட்சம் குறைவாக இருக்கிறது. சனவரி முடிய என்று எடுத்துக் கொண் டாலும் கூட அடுத்த அந்த இரண்டு மாதங்களில் அதிகம் இருக்க முடியாது. ஒரு இரண்டு அல்லது மூன்று இலட்சம் என்று இருக்க லாம். இவ்வளவு பெரிய தொகையை வெட்ட வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது). ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

11-20 மணி

தீயணைப்புப் படையினருக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பள விகிதங்கள் என்று சொல்லியிருந்தாலும் அவர்கள் கொடுத் திருக்கிற பட்டியல்படி பார்த்தால் மத்திய அரசுக்கு இணையான சம்பளங்கள் இல்லை. அண்டையிலே இருக்கிற மாநில அரசு களுக்கு இணையாக இருக்கிற சம்பளம் கூட இல்லாமல் Firemen in the Tamil Nadu Fire Service என்று எடுத்துக் கொண்டால்

Tamil Nadu Fire Service ; Rs. 825.
Kalpakkam Fire Service; Rs. 950.
Delhi Fire Service; Rs. 950.

என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்படி ஒரு Additional Divisional Fire Officer is needed என்று கூட இப்படி ஒவ்வொன்றுக்கும் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, சென்ற ஆண்டு திரு. கோவிந்தசாமி அவர்கள் ஒரு கேள்வி கேட்டார். இவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிக் கேட்டபொழுது போலீஸ் கமிஷனிலே அவர்களுடைய பிரச்சினை கள் ஆராயப்பட்டு, அவர்கள் நிச்சயமாகப் பரிந்துரை செய்ய இருக்கின்றார்கள். அதை இந்த அரசு அமல்படுத்தும் என்று அன்றையதினம் முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் அவர்கள் போலீஸ் கமிஷனிலே போய்க் கேட்டால், எங்களுக்கு அப்படிப்பட்ட ஜீ ஓ. எதுவும் வர வில்லை : தீயணைப்புப் பணியைப் பொறுத்தவரையில் எந்த விதமான ஜீ. ஓ. வும் எங்களுக்குக் கிடையாது. ஆகவே நாங்கள் விசாரிக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லிவிட்டதாக இவர்கள் சொல்கிறார்கள்.

அதேபோல Director of Fire Services போலீசில் இருந்து
ஐ. ஜி. நியமிக்கப்படுகிறார். அவர் ஓராண்டுக்கு, இரண்டு
ஆண்டுகளுக்குத்தான் இருக்கிறார். அந்தப் பணியைப் புரிந்து
கொள்வதற்கு முன்பாகவே அவர் மாறுதல் செய்யப்பட்டு
விடுகிறார். எனவே, ஒரு மூத்த அதிகாரியை அதிலே டைரக்ட
ராக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் குற்றங்களைக் கண்டு
பிடிப்பது இப்பொழுது குறைந்திருக்கிறது. அவர்கள் திறமை
யாகச் செயல்பட வேண்டும். Intelligence network மிகவும்
மோசமாக இருக்கிறது. அதனால் கலவரங்களை உரிய
நேரத்திலே அடக்க முடியவில்லை. காவல் துறையினர்
திறமையாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால் நான்
முன்னே கூறியபடி சுதந்திரமான போலீஸ் வாரியம் ஏற்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, காவல் துறையில் கடமையாற்றுபவர்களுக்குக் காவல்
ராக விளங்கி வரும் கருணை மிக்க முதல்வரை வணங்கி, அவர்
கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று
ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு எத்தனையோ பேர் குறையாக எடுத்துச் சொன்
னாலும், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் குறை சொல்
வதற்குத் தயாராக இல்லை, ஏன் என்று சொன்னால், தயவு
செய்து சிந்திக்க வேண்டும், பகுத்தறிவுத் தந்தை ஐயா அவர்
களும், அண்ணா அவர்களும் யாத்துத் தந்த இலட்சியங்கள் எவை
எவை என்பதையெல்லாம் உணர்ந்து பார்த்து, இன்றைக்குத்
தாழ்த்தப்பட்ட சமுதாயம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக
போலீஸ் துறையின் தலைவராக ஒரு தாழ்த்தப்பட்டவரை
இன்றைக்குத் தலைவராக உயர்த்தி இருக்கிறார்கள் என்று
சொன்னால் மிகையாகாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதுமட்டுமல்லாமல் நீதித் துறையாக இருந்தாலும் அல்லது
இன்னும் மற்ற பல்வேறு துறைகளாக இருந்தாலும், இப்படித்
தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர்களை உருவாக்க வேண்டு
மென்பதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற தலைவன்
என்கின்ற முறையில் இந்த மானியக் கோரிக்கைகளை நான் வர
வேற்றுப் பேசுகிறேன்.

சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவல்துறை
பணியாளர்களுக்காக அவர்களுடைய நலனைக் கருதி கமிஷன்
நியமிக்கப்பட்டது. ஆனால் இடையில் அந்தக் கமிஷன் எடுக்கப்
பட்டது. ஆளுகிற பொறுப்பைத் திராவிட முன்னேற்றக்



மீண்டும் காவல் துறை பணியாளர்களுக்காக
ழகம் ஏற்றவுடன் சபாநாயகம் அவர்கள் தலை
ந்தக் கமிஷனை மரியாதைக்குரிய இருக்கிறார்கள் என்று சொன்
மயில் இன்றைக்கு உருவாக்கி பல்வேறு குறைபாடு
ால், இதையெல்லாம் பாராட்டாமல் இங்கே ஒருசிலர் காத்திருந்
ளை எடுத்துச் சொல்வதற்காகவே இந்த மாண்புமிகு
ாலும், எங்களைப் பொறுத்த வரையில் கடமைப்பட்டவர்களாகத்
தலைமைச்சரவர்களைப் பாராட்ட வேறொன்றும் அல்ல.
ான் நாங்கள் இருக்கிறோமே தவிர

இருக்கின்ற துப்பாக்கிகள் எல்லாம்
தொன்று தொட்டு காட்சி அளிக்கின்றனவே தவிர,
ன்றுவரை பளபளப்பாகக் இல்லை எனக்குறையாகச்
வை பயன்படுத்துவதற்கு ஏற்றதாக உலகத்தின் கருத்தறிந்த
சால்கிறார்கள். ஆகவே, இந்த நவீன காரணத்தால், போலீஸ்
ஆற்றல் மிக்க தலைவர் இருக்கின்ற துப்பாக்கிகளையெல்லாம்
றையினருக்கு நவீன இயந்திரத் நேரத்தில் வேண்டி விரும்பிக்
காடுக்க வேண்டுமென்று இந்த
கேட்டுக்கொள்கிறேன்.

L and O Sub-Inspector களுக்கு
1972-73 ஆம் ஆண்டு சைக்கிள்கள்தான் இன்றும்
காடுக்கப்பட்ட மோட்டார் ஆனால் அவை சரியான
டமாட்டத்தில் இருக்கின்றன. காரணத்தினால் பொறுப்பில்
செயலாக்கத்தில் இல்லாத Sub-Inspector களெல்லாம்
இருக்கின்ற அந்தந்த L and O சைக்கிளை வாங்கிச்
ங்கள் சொந்தச் செலவில் மோட்டார் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல்,
செயல்படுகின்ற வகையில் பெட்ரோல் பணம்
வர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பிறகுதான் குறிப்பிட்ட பெட்
ன்று நான்கு மாதங்களுக்குப் ஆகவே, பெட்ரோல் பங்க்
ரால் பங்குகளுக்குச் செல்கின்றன. காலதாமதமாக வருகிறது.
ாரர்களெல்லாம் எங்களுக்குக் என்று கேட்கிறார்கள். இந்தக் குறை
ஆகவே பணம் இருக்கிறதா வகையில் அவர்களுக்கு
ளையெல்லாம் நிவர்த்தி செய்கின்ற இந்த வங்கிக்குச் செல்வதற்கு வழி
ரிய நேரத்தில் அந்தப் பணம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
வகை செய்ய வேண்டுமென்று

பொறுத்தவரையில் 11,000 காவல் துறை
சென்னையைப் இருக்கிறது என்றெல்லாம் இங்கே
ினருக்கு வீடு இல்லாமல் அவர்களுக்கு இந்த ஆண்டு 2,000
கட்டிக் காட்டினார்கள், முடிக்கப்பட்டிருக்கின்றன. கர்நாடகா. கேரளா
வீடுகள்தான் கட்டி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.
யில் ஒரு ஆண்டுக்கு 2,000

அவை Housing Development Corporation மூலமாகக் கட்டித் தரப்படுகின்றன. அதனுடைய முறைகளைப் பின்பற்றி காவல் துறையினருக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கிராமப் புறங்களில் இருக்கின்ற காவல் துறையினர் ஒரு குறிப்பிட்ட அதிக மான எண்ணிக்கை இல்லாமல், ஒரு ஸ்டேஷன் என்றால் 18 பேர் 19 பேர் தான் இருக்கிறார்கள். அவர்களில் L and O க்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினர்கள் என்றும், கிரைம்களுக்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினர்கள் என்றும், புறக் காவல் நிலையத்திற்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினர் என்றும் சென்று விடுகிறார்கள். இப்படிப் பிரிகின்ற காரணத்தால் பந்தோபஸ்து என்ற அடிப் படையில் ஒரு சிலரும் சென்று விடுகிறார்கள்.

11-25 மணி

மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளைப் போக்குவதற்கும், அவர்களுடைய உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கும் காவல் நிலையங்களில் காவலர்கள் எண்ணிக்கை யை அதிகப்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

அடுத்து சென்னை, திருச்சி, கோயமுத்தூர் போன்ற நகரங்கள் மட்டுமல்லாமல் கிராமப்பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களும் ஓரளவிற்குத்தான் அரசாங்கக் கட்டடங்களில் இருக்கின்றன அதிகமாக அவை வாடகைக் கட்டடங்களில்தான் இருக்கின் றன. நிரந்தரமாக, நீண்ட காலமாக 30, 40 ஆண்டுகளாக அவர்கள் தனியார் கட்டடங்களை வைத்துக் கொண்டிருக்கிறார் கள். இதுபற்றி அவர்களிடம் கேட்பதற்கும் பயமாக இருக் கிறது. அந்தக் கட்டடங்களை அவர்களுக்குத் திரும்ப கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களே, பயன்படுத்திக் கொண்டிருக்கி றார்கள். எனவே, சர்க்காரே காவல் நிலையங்களுக்குக் கட்டடங் களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல அங்கு பணியாற்றுகிற அனைத்துக் காவலர்களுக்கும் குடி யிருப்பு வசதிகளைச் செய்ய, வீடுகளைக் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, இன்றைக்கு பல்வேறு பகுதிகளில் அவர்களுக்குக் குடியிருப்புகள் இல்லாத காரணத்தால், பல பிரச்சினைகள் வருகின்றன. கள்ளக்குறிச்சி என்று எடுத்துக்கொண்டால் 4, 5 தெருக்கள் இருக்கிற அந்த இடத்தில், ஒவ்வொரு தெருவிலும் வாடகை வீடுகளில் அவர்கள் குடியிருக்கிறார்கள். மக்களுக்குத் திருட்டு, கொள்ளை போன்ற பாதிப்பு ஏற்பட்டு, போலீஸ் நிலையத்திற்குப் புகார் கொடுக்கப் போகிறபோது, அங்கே சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரும், பாரா பி. சி. யும் தான் இருப்பார்கள். அவர்களிடம் குறையைச் சொல்கிறபோது, போலீஸ்காரர்கள் சாப்பிட வீட்டிற்குச் சென்று இருக்கிறார்கள், அவர்களைக் கூப்பிட்டு வரவேண்டுமென்று சொல்கிறபோது, அந்த பாரா பி. சி. என்ன சொல்வார் என்றால்



அவர்வீடு தெரியாது என்று சொல்வார், ஏனென்றால், 4, 5 தெருக் களுக்கு அந்தப் பக்கம் இருக்கிற போலீஸ்காரர்கள் வீடுகளைத் தெரியாமல் இருக்கிறது. அதுவே தவறு. இப்படிப்பட்ட நிலைமைகளை நிவர்த்தி செய்ய, காவல் நிலையங்களுக்கு அர சாங்கம் கட்டடம் கட்டிக் கொடுக்கிற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போல, குடியிருப்பதற்கு வீடுகளும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னசேலத்தை எடுத்துக்கொண்டால் 72 பஞ்சாயத்துக்களுக்கு ஒரே ஒரு காவல் நிலையம்தான் இருக்கிறது. 18 காவலர்கள், 2 ரைட்டர்கள், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள் தான் இருக்கிறார்கள். மக்களுடைய உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்க, அவ் வப்போது புகார் கொடுக்கிறபோது, அவர்கள் அங்கு செல்வதற்கு சரியான வாகன வசதி கிடையாது. 1972, 1973-ம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மாற்றி, புதியதாக அவர்களுக்குத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, அப்படிப்பட்ட காவல் நிலையங்களுக்கு ஒரு ஜீப் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் விரைவாக செல்ல போதிய வாகன வசதி இப்போது இல்லாமல் இருக்கிறது. அப்படி அவற்றை அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லையென்றால், காவ லர்களுக்கு மொபட், மோட்டார் சைக்கிள் வாங்க கடனுதவி வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளவிரும்பு கிறேன்.

மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்று வரும் காவல் துறையை நான் பாராட்டுகிறேன். 1988 ஆம் ஆண்டு திருடுபோன பஞ்சலோக சிலைகளை எல்லாம் 1989 ஆம் ஆண் டிற்குள் கண்டுபிடித்துள்ள போலீஸ் துறையையும், அதிகாரிகளை யும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், சின்ன சேலத்தில் காவல் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் இருக் கிறது. ஆனால், காவலர்கள் குடியிருக்க 5, 6 வீடுகள்தான் இருக்கின்றன. ஆகவே, அதனை அதிகப்படுத்தி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல கள்ளக்குறிச்சியை எடுத்துக்கொண்டாலும், காவல் நிலையத்திற்கு நிலையான கட்டடம் இருக்கிறது. காவலர் குடியிருப்பு கட்டடங்கள் பழுதடைந்து, சீர்கெட்டு இருக்கின்றன. அந்தச் சீர்கேட்டைப் போக்கி, பழுதுகளைச் சரிபார்த்து கொடுப்ப துடன், புதிய கட்டடங்களும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புறநகர் காவல் நிலையமாக இருக்கிற நைனார்பாளையம் காவல் நிலையத்தில் வான் தந்தி வசதி கிடையாது, டெலிபோன் வசதி கிடையாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால்,

நைனார்பாளையத்தில் ஏதாவது தகராறு என்றால் சின்னசேலத்
லிருந்து காவலர்கள் மோட்டார் சைக்கிள்களிலோ, பஸ்களிலோ
செல்கிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற
அங்கே வான்தந்தி வசதியையும், டெலிபோன் வசதியையும் ஏற்
படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

22 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு காவல் நிலையம் இருப்பதால்
அவர்களால் சரியான முறையில் பணியாற்ற முடியவில்லை.
ஏனென்றால் இருக்கிற காவலர்கள் எண்ணிக்கையை மூன்றாகப்
பிரிக்கிற காரணத்தால், பந்தோபஸ்திற்கு செல்கிற காரணத்
தால் அவர்களால் மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை.
ஆகவே, புறநகர் காவல் நிலையமாக நைனார்பாளையத்தில்
இருப்பதை, காவல் நிலையமாக மாற்றித்தர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

11-30 மணி

பொதுவாக போலீஸ் துறை மானியத்தை வரவேற்று,
அடுத்து தீயணைப்புத் துறை மானியம் குறித்துப் பேச விரும்பு
கிறேன். அடுக்கு மாடி கட்டடங்களில் விபத்து என்றாலும்,
தண்ணீரில் மூழ்குகிற சூழ்நிலை என்றாலும் பல்வேறு விபத்துக்களி
லிருந்தும் மக்களை காப்பாற்ற விரைந்து செயல்படும் தீயணைப்புத்
துறையை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.
ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப்பொறுப்
பிலே இருந்தபோதுதான் தீயணைப்பு நிலையங்கள் பல்வேறு
பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன. பொதுவாக குடிசைப்
பகுதிகள் அதிகமாக இருக்கின்ற இடங்களுக்கு எல்லாம்
தீயணைப்பு நிலையங்களை உருவாக்கி அமைத்தது. ஆனால் அப்
போது கொடுக்கப்பட்ட வாகனங்கள்தான் இன்றும் செயல்
பட்டுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 15, 20 ஆண்டு
களுக்கு முன்பு கொடுத்த வாகனங்கள். அவை சரியான
முறையில் தற்போது இல்லை. பழுது அடைந்த நிலையில் இருக்
கின்றன. எனவே பழுதடைந்தவற்றையெல்லாம் ஒரு பக்கம்
ஒதுக்கிவைத்துவிட்டு, புதிய வாகனங்களைக் கொடுப்பதற்கு நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சங்கராபுரம் தொகுதியை எடுத்துக் கொண்டால்,
சென்ற ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 தீயணைப்பு
நிலையங்களைத் தமிழகத்திலே ஒதுக்கினார்கள். அதிலே ஒன்றை
சங்கராபுரம் தொகுதிக்கு கொடுத்தார்கள். அப்படிக்
கொடுத்தும்கூட அங்கே நிரந்தரமான இடம் கிடையாது. இடம்
கிடையாத அந்த அடிப்படையில், நெடுஞ்சாலைத் துறைக்குச்
சொந்தமான ஒரு இடத்தில் கொட்டகையை அமைத்து,
அங்கு தீயணைப்பு நிலையம் துவங்கப்பட்ட பிறகுதான் அந்த



வண்டி அங்கே நிறுத்தப்பட்டது. ஆனால் மறுநாள் நெடுஞ்
சாலைத்துறை அதிகாரிகளால் அது அகற்றப்பட்டது. நான்
என்ன சொல்கிறேன் என்று சொன்னால், பொது இடங்களை
சுயநலத்திற்காக எத்தனையோ பேர்கள் கடைகள் வீடுகளைக்
கட்டிக்கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற இந்தநேரத்தில்
பொது நலனுக்காக-பயன்படுத்துகிற இந்தத் தீயணைப்பு நிலையத்
திற்கு ஒரு இடம் இல்லை. ஆகவே, இன்றைக்கு சங்கராபுரம் பேரு
ராட்சியிலே தான் அந்த தீயணைப்பு வண்டி நிறுத்தப்பட்டு இருக்
கிறது. ஆகவே தீயணைப்பு அதிகாரிகளுக்கு நான் வேண்டு
கோளாக விடுக்க விரும்புகிறேன். எங்கள் பகுதியைப் பொறுத்த
வரையில், தீயணைப்பு அதிகாரிகள் சரியான முறையில் செயல்
படுவதில்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன். எனவே, தயவுசெய்து அதற்கு அதிகாரிகள்
உரிய நடவடிக்கை எடுத்து அதை சீர்செய்ய வேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கடலூரில் இருக்கிற அந்த அதிகாரிகளை நீங்கள்
சந்தித்துப் பேசுவீர்கள் என்று சொன்னார்கள், பல்வேறு குறை
பாடுகளை அவர்கள் எடுத்துச் சொல்வார்கள். எனவே இதைக்
களையவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கி
றேன்.

ஆகவே இன்றைக்கு கள்ளக்குறிச்சியை எடுத்துக் கொள்வோ
மானால் கள்ளக்குறிச்சியிலே ஒரு நிரந்தரமாக இடம் அமைக்கப்
பட்டுள்ளது. கீற்றுக்கொட்டகையில்தான் அமைக்கப்பட்டுள்
ளது. எனவே நிலையான ஒரு காங்கிரீட் கட்டிடத்தைக் கட்டிக்
கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
பேரூராட்சியில் பணியாற்றுகிற ஸ்வீப்பர் போன்றவர்கள்
வாழ்வதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தான் இவர்கள்
பணிபுரிகிறார்கள். பேரூராட்சியில் உள்ளவர்கள் எங்களுக்கு
அந்த இடம் வேண்டும் என்று தொந்திரவு செய்கிறார்
கள். ஆகவே, அவர்கள் குடியிருப்புக்காக, அவர்களுக்கு குடி
யிருப்பு வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே
வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இன்றைக்கு 25 கிலோ மீட்டர் தூரத்தில்
தீயணைப்பு நிலையங்கள் உருவாக்கப்படுவதாக குறிப்புகளிலே
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்கு
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சின்ன சேலத்திற்குப்
பக்கத்திலே கள்ளக் குறிச்சியிலேதான் இருக்கிறது. இப்போது
புதிதாக சங்கராபுரத்திலே இருக்கிறது. அதை விட்டால்
திருக்கோவிலூர் அல்லது அதைவிட்டால், ஆத்தூர்தான்.
ஆகவே, இடையில் நிறைய ஊர்கள் இருக்கின்ற காரணத்தால்,
நைனார்பாளையத்தில் — ஒரு தீயணைப்பு நிலையத்தை
ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு
வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களால், சமர்ப்பித்து இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

நியாயம் கிடைக்கும் என்று நம்பி, காவல் நிலையத்திற்குச் சென்று, அங்கேயே காவலர்களால் பாலியலில் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்கள், மருமகளைக் காணவில்லை என்று காவல் நிலையத்திற்கு பணயக் கைதியாக இழுத்துச் சென்று, சித்திர வதை செய்யப்பட்ட மாமியார்கள், கொடுமைகள் நடந்து வருடக் கணக்காகியும் இன்னும் நீதியின் நிழல்கூட அண்டாத அப்பாவிப் பெண்கள், பத்து மாதம் சுமந்த வயிறு இன்னும் எத்தனை ஆண்டு களுக்குப் பற்றி எரிய வேண்டும் என்ற கேள்வியோடு வரதட்சனை கொடுமையால் பெண்ணைப் பறிகொடுத்த பெற்றோர்கள், இவர் களின் சார்பாக சில ஆலோசனைகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல ஆண்டுகாலமாக, அந்த ஆட்சியிடமும் இந்த ஆட்சியிடமும் திரும்பத் திரும்ப கொடுத்த மனுக்கள் ஏராளம். ஆனால் அதற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. ஒரு சின்ன திருத்தம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கொடுக்கக் கூடிய என்னுடைய மனுக்களுக்கு உரிய பதில் வந்து கொண்டி ருக்கிறது என்ற போதிலும்கூட, நடவடிக்கைக்கான பதில் வர வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் பல்வேறு விதமான கொடுமைகளால் பாதிக்கப்படு வது தொடர்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
பெண்களைவிசாரணைக்காக அழைத்துவருவதுபற்றிய குற்றவியல்
சட்டத்திருத்தம், ஆகிய அனைத்தும் காவல் நிலையங்களில்
அச்சிட்டு ஒட்டப்படவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.
தமிழ்நாட்டில் மாலை 6 மணிக்கு மேல் இரவு நேரங்களில்
பெண்களைக் காவல் நிலையங்களுக்கு அழைக்கக்கூடாது என்றும்,
அப்படி அழைக்கக்கூடியவர்கள் அழைத்தாலும் போகவேண்டாம்
என்றும் பெண்களுக்கு ஒரு வேண்டுகோளை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் விடவேண்டும். அதை விளம்பரம்
செய்ய வேண்டும். மாலை 6 மணிக்கு மேல் பெண்கள் போகக்
கூடாது என்ற அந்த விதிமுறையை நம்முடைய சென்னை
மாநகரத்தைச் சார்ந்திருக்கிற இரண்டு ஏ.சி.-க்கள் கூட, அதில்
தவறு இல்லை என்ற வாதாடுகிறார்கள் எங்களுடைய ஜனநாயக
மாதர் சங்கத்தினுடைய பெண்களிடம். நான் ஒன்றை மட்டும்
குறிப்பிட விரும்புகிறேன். இதே மன்றத்தில், எல்லம்மாள்
என்ற பெண்ணை இரண்டு வார காலம் சென்னை நகரக் காவல்
நிலையத்தில் மிருகத்தனமாக சித்திரவதை செய்திட்ட அநீதியைக்
குறிப்பிட்டு, இங்கே கேட்டபோது, முதல்வர் அவர்கள் கை
யாண்ட அணுகுமுறை எங்களுக்கு அதிர்ச்சியை அளித்தது



11-35 மணி

பெண்களுக்கு நல்ல பல காரியங்
ஏனென்று சொன்னால், நான் பார்க்கவில்லை. ஒரு
களைச் செய்யக் கூடிய ஒரு முதல்வராக என்னால் பார்க்க முடிந்தது.
காவல்துறை அமைச்சராகத்தான் நான்கு ஆண்டுகளில் என்
எல்லம்மாவின் முன்னாள் மருமகன் எந்தெந்த கொலைகளைச்
னென்ன குற்றங்களைச் செய்தான், இது நியாயம்
செய்தான் என்று பட்டியல் போட்டு படித்தார். கடுமையான
தானா? காவல் துறை அப்படி நடந்திருந்தால் இன்று என்ன நிலைமை
நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? எம்.எல்.ஏ.,வை வைத்து
என்று சொன்னால், சட்டமன்றத்தில் கவனித்துக் கொள்கிறேன்.
பேசுகிறாயா? உன்னை நன்றாகக் இன்னொரு கையையும்
ஒரு கையை உடைத்தது போதாது. மிரட்டுகிற துணிச்சலை
துண்டாக உடைக்கிறேன் என்று யார்? இந்தப் பேரவையில்
அந்த போலீசாருக்குக் கொடுத்தது அந்த போலீசாருக்கு
பேசியதைப் பற்றி கண்டனம் தெரிவிக்க வேண்டாமா? இந்திரா
என்ன தைரியம்? இதை நாம் கவனிக்க கொடுமையைக் குடும்பத்தோடு
காந்தி ஆட்சியின் எமர்ஜென்சி அவர்கள் அவரா இப்படிச்
அனுபவித்தவர் நம்முடைய முதல்வர் நான் ஆச்சரியப்பட்டுப்
சொன்னார்கள் என்று உண்மையிலேலே எல்லம்மாளைக்
போனேன். இன்றைக்கு நான் கேட்கிறேன். ஆய்வாளரின் மீது
கொடுமைப்படுத்திய அந்தக் காவலர், என்று நான் கேட்க
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் கொண்டிருக்கும் ஒரு
விரும்புகிறேன். போலீஸ் தேடிக் பெண்களை பணயக்
நபரைக் பிடிக்க அவருடைய குடும்பப் என்ன நியாயம்?
கைதிகளாக காவல் நிலையத்தில் வைப்பது குற்றவாளிகளைத்
போலீசார் அவ்வளவு திறமையற்றவர்களா? சகோதரியை,
தேடிக் கண்டுபிடிக்க அவருடைய மனைவியை, வைப்பது
மகளை அழைத்துக்கொண்டு வந்து ஸ்டேஷனில் திறமை
என்ன நியாயம்? தேடிக் கண்டுபிடிக்கக் கூடிய அதற்காக
உங்களுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன். அவர்
அவர்களை வைக்கக்கூடிய முறை கோழைத்தனமானது வைத்துக்
களை சட்ட விரோதமாக காவல் நிலையத்தில் புகார்
கொடுமைப்படுத்தக் கூடாது. காவல் நிலையத்திற்குப் ஏன்
செய்யச் செல்லும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. கணவனைக்
நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால். ஒரு
கூட்டிக்கொண்டு போகலாம் என்று சொன்னாலும், ஆண்டுக்கு
உதாரணத்தை நான் சொல்கிறேன். 1984-ஆம் சென்ற
முன் நாங்குநேரி காவல் நிலையத்திற்குக் கணவனோடு வேறு
திருமதி சுப்புலட்சுமியின கதி என்னவாயிற்று? கணவனை குழந்தைகளைப்
வேலைக்கு அந்த எஸ். ஐ. அனுப்பி விட்டு, பல கற்பழித்த
பெற்ற அந்தத் தாயை உள்ளே அழைத்துச் சென்று, தன்ராஜ்
கொடுமை இருக்கிறது. அவர் பெயர் மங்களம் போல்
துடைப்பக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது இருக்கிறது.
என்று சொல்வார்கள். பெயர் அழகாகத்தான்

ஆனால் அவருடைய செயலைப் பார்க்கும்போது அவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. குற்றம் நிரூபிக்கப்பட்ட போதும் கூட, அவர் மீது நடவடிக்கை இல்லை. இன்றைக்கு அவர் பட்டுக்கோட்டையில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். ஆனால் இப்போது என்ன நிலைமை என்று எனக்குத் தெரியாது, அவர் பட்டுக்கோட்டை டி. எஸ். பி. யாக பதவி உயர்வு பெற்றிருக்கிறார், நான் முதலமைச்சரிடம் நேரிலே இந்த விஷயத்தை எடுத்துக் கூறினேன். ஒரு பெண்ணைக் கற்பழித்தால் டி.எஸ்.பி. பதவி என்று நான் சொன்னபோது, முதலமைச்சர் அந்த வாக்கியத்தை முடித்து வைத்தார்கள். இரண்டு பெண்களைக் கற்பழித்தால் எஸ். பி. மூன்று பெண்ணைக் கற்பழித்தால் ஐ.ஜி..என்று நீங்கள் சொல்ல வருகிறீர்களா என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால் இன்னும் அந்த மங்களம் தன்ராஜ் மீது நடவடிக்கை இல்லை, அவர் இந்த வழக்கையே விசாரிக்கக் கூடாது என்று கோர்ட்டில் தடை உத்தரவு வாங்கி யிருக்கிறார். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இப்படி ஒரு உரையாடல் எனக்கும் அம்மையார் அவர்களுக்கு மிடையில் நடைபெறவே இல்லை.

**திருமதி பாப்பா உமாநாத் :** சரி, நான் இங்கே மறுக்க விரும்பவில்லை. ஆகவே அந்த மங்களம் தன்ராஜ் இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறார் என்பதை முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்லவேண்டுமென்று நான் கேட்க விரும்பு கிறேன்.

காவல் துறை அதிகாரிகள் காவல் நிலையத்திலே இப்படி பெண்களை கொடுமையாக நடத்தியவர்களையாவது விசேஷமாகத் தண்டிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் ஹைரூ பீபீ என்ற முஸ்லிம் சகோதரி 10 பிள்ளைகளைப் பெற்ற நடுத்தர வயதுடைய இஸ்லாமியப் பெண். அவரிடமுள்ள சொத்துக்களை அபகரிக்க ஊரில் பணபலமும், அடி ஆட்களையும் வைத்துள்ள ஒரு நபர், அந்தப் பெண்மணிக்கு கொடுத்து வந்த தொல்லைகள் ஏராளம். அதுபற்றி முதலமைச்சர் அவர்களை நேரில் நான் சந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினேன். அவர்களும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் அனுப்பி வைத்தார்கள். அந்தப் பெண்ணை விபச்சாரி என்றார்கள். அந்த அம்மையாருக்கு எய்ட்ஸ் நோய் வந்துவிட்டது என்று பரப்பி, அவரை மதுரை அழைத்துச் சென்று, மருத்துவ செக்-அப் செய்தார்கள். அதிலே இல்லையென்று சொல்லப்பட்டது. பிறகு அந்தப் பெண்ணை



விடவில்லே. அதற்கு ஒரு சட்ட மன்ற உறுப்பினரும் உதவியாக இருந்துகொண்டிருக்கிறார். ஆகவே அந்தப் பெண் எங்கே போவார் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? நான் கூட எஸ்.பி. யிடம் நாகர்கோவில் சென்று சொல்லியும்கூட, இன்று வரை நடவடிக்கை இல்லை என்பதை நான் இந்த நேரத்துலே சொல்ல விருமபுகிறேன்.

பல வழக்குகளில் 2, 3 ஆண்டுகள் ஆகியும் விசாரணைக்கு வராத நிலைமை. பலதார மன்னன் ராகவன், பல பெண்களை மணந்து ஏமாற்றியவன். அவன் சம்பந்தமான வழக்கு ஏறத் தாழ 4 வருடங்கள் ஆகியும் விசாரணைக்கு வரவில்லை. சீஃப் ஜட்ஜிடம் எங்களுடைய ஜனநாயக மாதர் சங்கத்தினர் புகார் செய்திருக்கிறார்கள்.

1-40 மணி

இது சிறுமியர் ஆண்டு, எனக்கு வந்த தகவல்படி மூன்று, 10 வயது உள்ள பெண்கள் இந்தக் காலத்தில் கற்பழிக்கப்பட்டிருக்கி றார்கள். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார்கள், நாகர்கோவில் தனம் என்பவர் இன்னொருவர். இங்கே யிருக்கக்கூடிய நம்மாள்வார்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. மாநகராட்சி நடத்தக் கூடிய ஒரு மேல் நிலைப்பள்ளி. அந்த பள்ளியிலே பக்கத்திலே சாராயக் கடையும் வைக்கப்பட்டி ருக்கிறது. அந்த சாராயக் கடைக்கு வரக்கூடிய மீன்கார பழனி என்பவர் 9, 10 வயது பெண் ஜெயந்தியை பின் பக்கம் அழைத்துச் சென்று த்வறாக நடத்தியிருக்கிறார். அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைப் போய் சொல் லும்போது காவல் துறையைச் சார்ந்தவர்கள் அறிவுரை கூறினார் கள். ஒரு பெண் குழந்தையாச்சே, எதிர்காலம் பாதிக்கப்படுமே என்று சொன்னார்கள். எதிர்காலம் பாதிக்கப்படும் என்று அமுக்கி வைத்துக்கொண்டே போனால் இப்படிப்பட்ட குற்றவாளி களை எப்படித் தண்டிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத் திலே கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல இன்னொன்று நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். பல வரதட்சணைக் கொலை வழக்குகள் மிக காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றன உதாரணத்தை நான் கூற முடியும். பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை விசாரிப்பதிலே உதவ பெண் பிரதிநிதி களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைப்பதாக குறிப்பிடப் பட்டது. திருச்சியில் என் பெயரை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரரக இருந்த திரு. விஸ்வநாதன் அவர்கள் பரிந் துரை செய்து பல ஆண்டு காலமாகியும் அது கவனிக்கப்பட வில்லை. தற்போதுதான் எங்களுடைய ஜனநாயக மாதர் சங்கத்தினுடைய தலைவர் திருமதி மைதிலி சிவராமனை சென்னை யிலே இணைத்து இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இதிலே இன்னும் சில யோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப்பொறுத்தவரையில் வரதட்சணைத் துன்புறுத்தல் புகார்கள் தற்போது'டெபுடி கமிஷனர்கள்(வடக்குகிரைம்) பிரிவு) அவர்கள் பொறுப்பிலுள்ள வரதட்சிணை சாவு மற்ற துன்புறுத்தல் போன்றவை மூன்று கமிஷனர்கள் (சட்டம் ஒழுங்கு) 'டவுரி' செல் கமிஷனர் அலுவலகத்தில் செயல்படுகிறது. இந்த ஏற்பாடுக்குப் பதிலாக பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கான செல் என்று அனைத்து கொடுமைகளையும் உள்ளடக்கிய பிரிவுகளையும் அதற்குப் பிரத்யேகமான 'டெபுடி கமிஷனரையும்' சில துணைக் கமிஷனர்களையும் அமைப்பது நல்லது. தற்போதுள்ள ஏற்பாட்டின்படி பாதிக்கப்பட்டவர்கள் பலதரப்பட்ட அதிகாரிகளைப் பார்க்க வேண்டி அலைக்கழிக்கப்படுகிறார்கள். மேலும் போலீஸ் அதிகாரிகளின் வேலைப் பளு காரணமாக பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்க அவர்களுக்கு நேரமே இல்லை. அதனால் இதுபோன்ற ஒரு பிரிவு Deputy Commissioner incharge of Crimes against women என்ற முறையில் ஒரு ஏற்பாட்டை செய்வது பயனுள்ள வகையாக இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட பெண்கள் உயிர்போகும் தருவாயில் மரணவாக்குமூலம் வழங்குகின்ற போது கணவனோ அல்லது அவரைச் சார்ந்தவர்களோ அங்கே இருக்க அனுமதிக்கக்கூடாது. வரதட்சிணை வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகும் தீர்ப்பு கிடைக்க மிக மிக கால தாமதமாவதால், சாட்சி சொல்ல முன்வரக்கூடியவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் விரக்தி அடைந்து போய்விடுகிறார்கள். இறுதியில் போதுமான சாட்சியம் இல்லாமல் அந்த வழக்குகளிலிருந்து குற்றவாளிகள் தப்பிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, வரதட்சணை கொலை வழக்குகளிலாவது ஒரு குறிப்பிட்ட காலவரை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வரதட்சணை கொடுமை அல்லது கொலை நடந்துவிட்டால் யாருக்கு போன் செய்ய வேண்டும் என்ற முறையில் திரையரங்குகளில், டி. வி., வானொலி போன்றவற்றில் பிரசாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வரதட்சணைப் பிரிவில் 'டவுரி செல்'' அதாவது வரதட்சணை கொடுமை என்கிற அந்த 'டவுரி செல்லின், செயல்பாடு திருப்திகரமாக இல்லை. சீதனப் பொருட்களை பெற்றோரிடமிருந்து வாங்கி கொடுப்பதில் இருபக்கமும் கமிஷன் வாங்கப்படுகிறது. பல இடங்களில் எனக்கு பல புகார்கள் வந்தன. நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய அலுவலகத்தில் நான் கொடுத்திருக்கிறேன். நகைகளைத் திரும்ப வாங்கித் தருவதற்கு இந்த ஏற்பாடு. இந்தப் பிரிவின் செயல்பாடு பற்றி குறிப்பான ஒரு வரையறை வேண்டும். உதாரணமாக வரதட்சணை பற்றிய ஒரு புகார் வந்தால் விசாரித்து உண்மையிருந்தால் எடுத்துக்கொள்வது இல்லையென்றால் விட்டுவிடுவது. அவ்வளவு தான். அதற்கெல்லாம் பஞ்சாயத்து செய்கிற வேலையை அந்த அதிகாரிகளுக்குத் தரக்கூடாது. ஏனென்றால் சட்ட உதவி



கமிட்டி, ஏராளமான மையங்களில் இருக்கும்போது சமாதானத்திற்கு அவர்களிடம் அனுப்புவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த போலீஸ் அதிகாரிகள் பஞ்சாயத்து செய்ய வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருச்சியிலே எனக்கு ஒரு அனுபவம் உள்ளது. இரண்டாவது மனைவியை திருமணம் செய்து கொண்டார், முதல் மனைவி பிரசவத்திற்குப் போயிருக்கும்போது. அப்பொழுது இவள் ஒரு வழக்கு போடும்போது அந்த இன்ஸ்பெக்டர் ரொம்பவும் வருத்தப்பட்டாராம்.நாட்டிலே நடக்காதததா.நம்முடைய நாட்டிலே முருகபெருமானுக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள். இரண்டு இல்லையா, நீங்கள் இதை கொஞ்சம் 'அட்சஸ்ட்' பண்ணிக்கொண்டு போகவேண்டுமே தவிர வழக்கு என்று போகக் கூடாது என்று, எனக்குக் கூட இரண்டு மனைவிதான் என்று அவர் சொன்னாராம், இப்படி ஒரு நபர், பெண்களுடைய சம்பந்தப்பட்ட விஷயத்தில் அந்த டவுரிசெல்லில்' இருக்கலாமா? இந்த மனப்பான்மை உள்ளவர்களை நீங்கள் பார்க்க வேண்டும். ஆகவே ஒரு ஆண் ஆதிக்க மனோ நிலையில் இருந்து எப்படி நியாயம் வழங்க முடியும்? ஆகவே, சில முறைகளில் அவர்களுக்கு பயிற்சி தருவது அதோடு கூட பெண்களுடைய பெற்றோர்கள் மற்றும் இருக்கக் கூடிய அக்கறை உள்ள வழக்கறிஞர்கள், பொதுத் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் மாதர் அமைப்புகள் கொண்ட ஒரு கலந்துரையாடல் கூட இந்த வழக்குகளை எப்படி அணுகலாம் என்ற முறையில் ஏற்பாடு செய்வது உதவியாக இருக்கும்.

**11-45 மணி**

அடுத்து மணமான 7 ஆண்டுகளுக்குள் சந்தேகத்திற்கு இடமான முறையில் பெண் மரணம் அடைந்தால் நடத்தப்படும் விதம் மேஜிஸ்டிரேட் விசாரணை திருப்தியளிப்பதாக இல்லை. இதுபற்றி எங்களுடைய ஜனநாயக மாதர் சங்கம் நடத்திய முதல்கட்ட மேலோட்டமான ஆய்வில் மாஜிஸ்டிரேட் சில சமயங்களில் மரணம் சம்பவித்த இடத்திற்குச் சென்று பார்ப்பதில்லை. அருகில் உள்ள மக்களையும் விசாரிப்பதில்லை. ஆஸ்பத்திரியில் அந்தப் பெண் இருக்கிறார் என்றால் அங்கு போய் மட்டும் விசாரித்துவிட்டு சென்று விடுகிறார்கள். ஆகவே அந்த வீட்டிற்கு சுற்றுப்புறம் இருக்கின்றவர்களையும் விசாரிப்பது வழக்குக்கு உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாஜிஸ்டிரேட் விசாரணை ரிப்போர்ட் அளிக்க ஏறத்தாழ 1 வருடம் 2 வருடம் ஆகிறது. ஒரு மாதத்திற்குள்ளாக போலீசாருக்குக் கொடுக்க வேண்டும் என்று இருந்தால்தான் வழக்கை விரைவிலே தொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆனால் தாமதம் ஆவதால் வழக்கினுடைய தன்மையே மாறிவிடுகிறது. அதேமாதிரி காவலர்களால் செய்யப்படுகின்ற முழுமையான விசாரணைக்கு மாஜிஸ்டிரேட் விசாரணை ஈடாகாது. ஆகவே முன்னதாகவே இந்த விசாரணையைத் துவக்க வேண்டுமென்று காவல்துறையினருக்கு

கட்டளையிட வேண்டும். மரணம் சம்பவித்த இரண்டு மாதத்திற்குள்ளாக குற்றவாளிகள் மீது போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். இப்போது ஒரு ஆண்டுக்கு மேல் தாமதம் ஆகிறது. பிரேத பரிசோதனை அறிக்கையை விரைவாகத் தயார் செய்வது, காவல்துறைக்கு அளிப்பதோடு, பெற்றோர்களுக்கு அதை அளிப்பதற்கு சட்ட பூர்வமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல. வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலும் பெண்களுக்கு உள்ள சட்டப் பூர்வமான உதவிகள், சலுகைகள் என்ன என்பதை தொடர்ச்சியாக மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக பிரச்சாரம் செய்ய வேண்டும். வரதட்சணை கொலை சம்பந்தப்பட்ட வழக்குகளில் அக்கறை கொண்ட பொது நல அமைப்புகளில் இத்தகைய வழக்குகளில் அனுபவம் பெற்ற வழக்கறிஞர்கள், பாதிக்கப்பட்ட பெண்களின் பெற்றோர், போலீஸ், மாஜிஸ்டிரேட் விசாரணை நடத்தும் அதிகாரிகள் மற்றும் இவர்களைக் கொண்டு ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்வது உண்மையிலேயே இந்த வழக்கை முறையாக முடிப்பதற்கு உதவி செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே காவல்துறை சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் சென்றகால ஆட்சியினுடைய தொடர்ச்சிகள் பல நீடித்துக்கொண்டிருக்கின்றன அது தவிர்க்கப்பட வேண்டும் குறிப்பாக பெண்கள் மாலை நேரத்திற்குப் பிறகு காவல் நிலையத்திற்குச் செல்லக்கூடிய கொடுமையைத் தவிர்க்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு, அதற்கான நடவடிக்கையை உறுதியாக முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தீயணைப்புத்துறை சம்பந்தமாக பணியாளர்களுக்கு மத்திய அரசு ஊதியம் தரப்படுவதாக அந்த கொள்கை குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் விசாரித்த வரையில் அதில் குறைபாடுகள் இருப்பதாகவும் தரப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். காவல்துறைக்கு நியமிக்கப்பட்ட போலீஸ் கமிஷன் இவர்கள் பிரச்சினையையும் கவனிக்கும் என்று சென்ற முறை கூறப்பட்டது. ஆனால் அந்த கமிஷனில் தீயணைப்புத் துறை சேர்க்கப்படவில்லை என்று அறிகிறேன். இதற்கென்று தனியாக இத்துறை வல்லுநர்களைக் கொண்ட புதிய கமிஷன் அமைத்து இத்துறையை நவீனப்படுத்தி மக்களுக்கு மேலும் நன்மைகள் செய்ய உதவி செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீயணைப்பு தடுப்பு சட்டம்– ஃபையர் ஆக்டை—நடைமுறைப்படுத்த வேண்டும். கால்நடைத் துறைக்கு 100 ரூபாய் விபத்துப்படி கொடுக்கும் போது இவர்களுக்கு 20 ரூபாய் தான் தரப்படுகிறது. இது ரொம்ப கடுமையான பணி. ஆகவே மத்திய அரசு கொடுப்பது போல 100 ரூபாய் கூட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10 ஆண்டுக்காலமாக தீயணைப்புத் துறையில் காவல் துறையைச் சார்ந்தவர்களையே



ஐ. ஜி. யாக, இயக்குநராகப் போடப்படுகிறது. இது சரியல்ல. இத்துறையைச் சேர்ந்தவர்களுக்கே வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. திருப்பூர், கரூர் போன்ற பஞ்சு நூல் துணிகள் நிறைந்துள்ள நகரங்களுக்கு எந்த நேரமும் தயாராக இந்த தீயணைப்பு என்ஜின் வைக்கப்பட வேண்டும். டாங்குகள் தண்ணீர் ஸ்டாக் இருக்கும்படி செய்வது அவசியம். பல இடத்தில் நம் தமிழ்நாட்டில் சமீப காலமாக 1, 2 புதிய வண்டிகள் வந்த போதிலும் கூட பெரும்பாலும் தள்ளு மாடல்களாக வண்டிகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, இன்றைக்கு நவீனமான விஞ்ஞான ரீதியிலே இவை போன்ற விஷயங்களைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விரைவில் முடிக்க வேண்டும்.

**திருமதி பாப்பா உமாநாத் :** அவசர அழைப்பு காலத்தில் வருவதில்லை. எரிந்து சாம்பலான பிறகு பல கிராமங்களுக்கு வருகிறது. இதில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல்துறை பயணப்படி சம்பந்தமாக ஒரு மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது சமீபத்தில் பயணப்படி அவர்களுக்கு 40 சதவீதம் பிடிப்பதாகவும் ஆனால் பஸ் வாரண்டுகளில் பணத்தை பயணப்படியில் பிடிப்பது சரியல்ல என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு விடுப்பு 20 நாட்கள் என்பதை நீட்டிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு வாரத்தில் 2 நாட்கள் லீவு என்பதால் இவர்களுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு அப்படி லீவ் இல்லை. ஆகவே அதை கவனத்தில் கொள்ள வேண்டும். வாரத்தில் ஏழாவது நாளும் பணி புரிந்தால் தரப்படும் பத்து ரூபாய் படி மிகவும் குறைவு. ஒரு நாள் ஊதியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன்.

11-50 மணி

காவலர்களுக்கு வழங்கும் சீருடைகள் சரியான முறையில் ஆண்டுதோறும் தரப்படுவதில்லை. 1987 இல் மாநகர காவலர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குண்டான அனைத்துத் தேர்வுகளும் பெற்றுக்கூட, மூன்று ஆண்டுகளாக வேலைக்கு எடுக்காதவர்களை எடுக்க வேண்டும். சென்ற ஆட்சிக்காலத்தில் பழி வாங்கப்பட்ட 150 காவலர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும். வீட்டு வசதி வாரியத்தின் மூலம், வீடு வழங்கி, ஊதியத்தில் பிடித்துக்கொள்ளும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவர்கள் வாரிசுக்கு வேலை தரவேண்டும். 10 ஆண்டுகளில் 10,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் சென்னை மாநகரில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் போதுமான குடியிருப்புக்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீஸ் வேலை பார்க்கும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை, அவர்களுக்குக் கிடைக்க

வேண்டிய நியாயமான பதவி உயர்வுகள் தகுதி அடிப்படையில் தரப்படுவதில்லை. நான் முதலமைச்சர் அவர்களிடம் ரொம்ப கவலையோடு சொல்ல விரும்புகிறேன்.

சமீப காலமாக சாதிய உணர்வுகள் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இயக்குநராகவோ, மேலதிகாரியாகவோ இருக்கக்கூடியவர்கள், தங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் கீழ்மட்ட பதவிகளுக்கு வர வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்க்ள். இன்றைக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் சாதியக் கலவரங்கள் வெடித்துக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் காவல் துறையில் இப்படிப்பட்ட உணர்வுகளுக்கு இடம் அளிக்கக்கூடாது. முதலமைச்சரைப் பொறுத்த வரையில் அதற்கு இடம் கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. ஆகவே, அந்த முறையில் நல்ல அதிகாரிகள் கூட, எங்கள் ஜாதியில்லை என்று மாற்றக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. அந்த அறிகுறியை உடனடியாகத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அதுபோன்றுள்ள பிரச்சினைகளில் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், தன்னுடைய சாதி, தன்னுடைய சாதி ஆட்களை வைக்க வேண்டும் என்று சொன்னால், தங்களுடைய பகுதி மக்களுக்கு, அந்தப் பகுதி தங்களுடைய பகுதி ஜாதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கலவரத்தில் முடிவு எடுத்தால், பிரச்சினை எதிர் விதமாகப் போகும் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இதில் கூடுதலாகக் கவனம் முதலமைச்சர் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காவல்துறை இயக்குநரால், 1989 ஆம் வருடம் டிசம்பர் 5 ஆம் தேதி வெளியிடப்பட்ட 131 சப்-இன்ஸ்பெக்டர்கள். 3 பெண் சப இன்ஸ்பெக்டர்களுடைய அந்தப் பதவி உயர்வு லிஸ்ட்டை ரத்துச் செய்யும் நோக்கோடு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிகிறேன். உண்மையிலேயே அது இன்றைக்கு கூடாது. அவர்களுக்கு வேலை தரவேண்டும் என்பதோடு, சென்ற ஆண்டு 1987 ஆம் ஆண்டில் காவலர்களைத் தேர்வுசெய்து எல்லாவித டெஸ்ட்டும் முடிந்தும் கூட அவர்களுக்கு இன்னும் வேலை தரப்பட வில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களையும் கவனித்து இந்தக் காவல்துறை மானியம் சிறப்பாக இருப்பதற்கு இந்த ஆலோசனைகளை முதல்வர் அவர்கள் ஏற்று ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

டாக்டர். பெ. துரைபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய முழுக்கருத்தையும் சொல்வதற்கு ஒரு சில மணித் துளிகள் அதிகமானாலும் வருடத்திலே ஒரு நாள் பேசு





பவன் என்ற காரணத்தினாலே அனுமதிக்க வேண்டும். இந்தப் போலீஸ் துறையைப் பொறுத்த மட்டிலே, ஒரு நல்ல கால கட்டத்திலே அமைந்திருக்கக்கூடிய ஒரு அமைப்பு. நல்ல கால கட்டம் என்று சொல்வதற்கு காரணம், இந்தத் துறையினுடைய அமைச்சரும், இந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பேற்று இருப்பவரும், இந்தத் துறையினுடைய சட்ட ஒழுங்கு பொறுப்பேற்று இருக்ககூடிய அந்தப் பெரியவர்கள் எல்லோரும் சாதாரண மக்களை, சாதாரண கிராமத்தில் இருக்கக்கூடிய குப்பனையும், சுப்பனையும் நன்கு புரிந்தவர்கள் என்ற காரணத்தினால் மாடமாளிகைகளில் இருக்கக்கூடிய அந்த மகான்களையும் நன்கு தெரிந்தவர்கள் என்ற காரணத்தினால் இந்த ஒரு காலக்கட்டம், ஒரு நல்ல கால கட்டம், என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

அமைச்சர் மட்டத்திலும், வரக்கூடிய அதிகாரி, ஒரு அதிகாரியின் பிள்ளையாக இருப்பாரானால், என்னுடைய கிராமத்திலும் இன்னொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய அந்தக் குப்பன் சுப்பன் ஆகியோருடைய நிகழவுகளை, அவனுடைய செயல்களைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு நிலை இருக்காது என்ற காரணத்தினால், இன்றைய இந்த அமைச்சரும், இன்றைய இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய அதிகாரிகளும் உண்மையிலேயே சாதாரண மனிதர்களுடைய நிலையைப் புரிந்தவர்கள் என்ற காரணத்தினால் இது ஒரு நல்ல கால கட்டம்.

அந்த அடிப்படையிலே, இதற்கு நம்முடைய அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தப் பொறுப்பை ஏற்று இருப்பது உண்மையிலேயே சாலச் சிறந்தது. கடந்த காலத்திலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அந்த நாட்களிலே நிலவிய சீர்கேடுகளும், அசிங்கமான ஒரு ஆட்சி முறையும், கறை படிந்த கைகள் நிறைந்தவர்கள் ஆட்சி செய்தார்கள் என்பதையும் அதிகாரிகள் கூட அதை தட்டிக் கேட்க முடியாது, சொல்ல முடியாது என்ற ஒரு நிலை இருந்தது என்பதை எல்லாம் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

11-55 மணி

In Shakespcare மேக்பத் புலம்புவான்: All the Neptunes and oceans will nct wash these little hands: All the Perfumes of Arabia will not smeeten these little hands என்று அந்த அளவுக்கு அந்த சமுத்திரங்களும், நீர்ப்பரப்புகளும் கூட கழுவ முடியாத கைகளுக்குச் சொந்தக்காரர்களாகவும் அரேபியாவில் தயாரிக்கக்கூடிய அத்தனை வாசனை திரவியங்களைப் போட்டு கழுவினாலும் அந்த அசிங்கங்கள் போகாத அளவுக்கு கறை படிந்த கைகளுக்குச் சொந்தக்காரர்கள் இருந்த காலம் மாறி, இன்றைய சூழ்நிலையில் தவறு ஏற்படுமானால் ஒன்று நான். இல்லை என்னுடைய குடும்பம் என்ற அளவுக்கு கூட

பேசக்கூடிய அளவுக்கு நீதி நிலை நாட்ட முடியும் இந்த தமிழகத்திலே, நீதி நிலை பெறும் என்ற அளவுக்கு உறுதியாக சொல்லக்கூடிய ஒரு தலைவர் இருக்கிறார் என்றால் அவர் தலைவர் கலைஞர் தான் அவர் இந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்று இருப்பது நம் எல்லோருக்கும் பெருமை. அந்த வகையிலே அவர் ஏற்று இருக்கிற அந்த துறையின் மேல் நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றியைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய போலீசைப் பொறுத்த வரையில், போலீசுக்கு சில பிரச்சினை போலீஸ் துறைக்கு ஒரு பிரச்சனை. போலீஸ் துறைக்கு என்றால் 'கம்யூனல் டென்ஷன்' இப்போது பேசிய நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்திலே இன்றைக்கு கம்யூனல் டென்ஷன் அதாவது ஜாதிக் கலவரங்கள் மிக மோசமாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை நாம் கடந்த காலத்தில் சற்று தொட்டுப் பார்ப்போம் ஆனால் ஒரு காலத்திலே காங்கிரஸ் ஆட்சி நடந்த காலம் 'அருங்குளம் தீ கலாட்டா, என்பது எல்லோருக்கும் தெரிந்து இருக்கும். அந்த அருங்குளம் தீ கலாட்டா இராமநாதபுரத்தில் இருக்கிறது. ஆனால் அது பரவியது எங்கே என்றால் இன்றைய பசும்பொன் மாவட்டத்தில் பரவி, மதுரை மாவட்டம் வரை வந்து தொட்டது என்பதை யாரும் மறக்க முடியாது. ஆனால் இன்று சாத்தூரில் தொடங்கியது சாத்தூரில் நின்று விட்டது; இராஜபாளையத்தில் தொடங்கியது இராஜபாளையத்தில் நின்று விட்டது; அல்லிநகரத்திலே தொடங்கியது அல்லிநகரத்திலே நின்று விட்டது; ஆம்பூரில் தொடங்கியது ஆம்பூரில் நின்று விட்டது; இதை சற்று சிந்தித்துப் பார்ப்போமானால் இந்த போலீஸ் துறையும் அதைச் சார்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எவ்வளவு திறமையாக கையாண்டு இருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சியினர் ஒத்துக்கொள்வார்கள் என்பதுதான் இந்த நேரத்தில் என்னுடைய கருத்து. இன்னும் கூட இதற்கு சில மாற்று வழிகளை நாம் ஏற்பாடு செய்யலாம். எல்லா ஜாதியைச் சேர்ந்த தலைவர்களை அழைத்து, எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களை அழைத்து, சில குழுக்களை அமைக்கலாம். போலீஸ் துறைக்கு தெரிந்து விடுகிறது. அங்கே மோசமான சூழ்நிலைக்கு போய்க்கொண்டிருக்கிறது. இதை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலை தெரிந்த உடனே போலீஸ் இறங்கினால் ஒன்று பயந்து அவன் ஓடுவான், எதிர்க்கிறவன் வெட்ட வருவான். போலீஸ் இறங்கினால் இது தான் நடக்கும். ஆனால் இப்படி ஒரு பீஸ் கமிட்டி அமைத்து அவரவர்கள் ஜாதிக்காரர்களைப் போய்ப் பார்த்துப் பேசுங்கள் பிரச்சினை ஆரம்பிப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பே போய்ப் பார்த்துப் பேசுங்கள் என்று சொன்னால் அவர்கள் அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் வருகிறார்கள் என்று சொன்னால் ஓரளவுக்கு ஆறுதலாக கேட்பார்கள்.



அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்குமானால் நாம் இப்படிப்பட்ட ஜாதிக்கலவரங்களை தவிர்க்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு கொஞ்சம் போலீஸ் ஸ்டிரெங்த் போதவில்லை என்று நான் பேசிப் பார்த்த அளவுக்கு சொல்கிறார்கள். ஒரு தாலுக்கா போலீஸ் ஸ்டேஷனில் 20 போலீஸ் இருக்க வேண்டும் என்று சொன்னால் 18 பேர் தான் இருப்பது போல் தெரிகிறது, 18 பேர் தான் போட முடிகிறது. ஏன் என்றால் ஸ்டிரெங்த் இல்லை என்று சொல்லுகிறார்கள், அதிலே இன்னும் சில பிரச்சினை என்னவென்று சொன்னால் இருக்கும் 18 போலீசில் 2 பேர் சிக்கில் இருந்து விடுவார்களாம். வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள். இந்த நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அரசு சம்பளம் கொடுக்கும் டாக்டர்கள் சர்டிபிகேட் கொடுத்து விடுவார்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால் அவருடைய திறமை நமக்கு கிடைப்பதில்லை; அரசுடைய பணமும் வீணடிக்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஒரு நிவர்த்தியைச் செய்யலாம். 4 வருடம், 3 வருடம் அவர்களுக்கு சர்வீஸ் இருக்கிறது என்று சொன்னால் ஒரு லம்ப்சம் அமௌண்ட் கொடுத்து நீ சர்வீசை விட்டு போய்விடு என்று சொல்லி அனுப்பலாம். அதிலும் நாம் இன்னும் ஒன்றைச் செய்யலாம், அதிலே லாபம் என்னவென்று சொன்னால் அவர்களுடைய வேகன்சிகளுக்கு புதியவர்களை புகுத்த முடியும்; இளைஞர்களை அங்கே தயார் செய்ய முடியும். படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் செலக்ஷனுக்கு இன்னும் நாம் பிரிட்டிஷ்காரன் முறையைத்தான் பின்பற்றி வருகிறோம். இந்த ஆர்ம்டு போர்சுக்கு எல்லாம் எழுத படிக்கத் தெரிந்தால் போதும் என்று பிரிட்டிஷ்காரன் எதற்கு வைத்தான் என்றால் அடி என்றால் அடிக்க வேண்டும், அதற்கு ஆள் தயார் செய்தான் அவன். ஆனால் இன்றைக்கு படித்து இருக்கிற இளைஞர்களுக்கு வேலை கொடுக்க முடியாத காலக்கட்டத்தில் அப்படிப்பட்ட சிஸ்டத்தை நாம் எடுத்து விட்டு ஏன் நாம் படித்தவர்களுக்கு எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர்களுக்கு முழுமையாக அந்த ஆர்ம்டு போர்சில் சேர்க்கக்கூடாது. ஒரு காலத்திலே மிலிட்டரிக்குப் போவதற்கு பயப்படுவார்கள். இன்றைக்கு மிலிடெரிக்குக் காசு கொடுத்துப் போவதாக எல்லாம் பேசிக் கொள்கிறார்கள். ஏன் அப்படிப்பட்ட ஒரு நிகழ்வை மாற்றக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அதை போல தாலுக்கா போலீஸ் ஸ்டேஷனுக்கு எட்டாவது படித்தால் போதும் என்று சொல்கிறார்கள், எட்டாவது படித்தால்போதும் என்று சொன்னால்

12-00 மணி

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே பேங்க் செக்கிலேயே
கையெழுத்தை மாற்றிப் போடுகிறான். கம்ப்யூட்டர் சிஸ்ட்டத்தை
வைத்து நாம் சில இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டி இருக்கிறது.
எட்டாவது படித்தவர்களுக்கு எப்படி இங்கிலீஸ்லே கம்ப்யூட்டர்
சிஸ்ட்டத்தை சொல்லிக் கொடுக்க முடியும்? எனவே அப்படிப்பட்ட
காலகட்டத்திலே, எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் என்று மினிமம்
குவாலிபிகேஷனை வைத்தால் அவர்களுக்கு வேண்டிய கோச்சிங்
தரலாம். ஃபாரின் கன்ட்ரீஸ்லே எல்லாம் என்னென்னவோ
செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே
படித்தவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது
தான் என்னுடைய கருத்து. அதோடு வீடுகளைப் பற்றி
நிறையபேர் இங்கே பேசினார்கள். போலீஸ்காரர்களுக்கு
உண்மையிலேயே வீடு. கொடுக்க வேண்டும். அதிலே என்ன
பிரச்சினை என்றால் ஒரு கிராமத்திலே எஸ்.ஐ., வந்து தங்கு
வதற்காகவே ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்
டிருக்கிற சமுதாய துரோகிகள் இந்த நாட்டிலே அதிகம் என்
பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகி
றேன். எஸ்.ஐ., வந்துவிட்டால் நம்ம வீட்டிலேதான் தங்கி
யிருப்பார் என்று அவன் சொல்லுவான். அவருக்கு தெரியாது
அவன் எப்படிப்பட்டவன் என்று, ஆனால், அவன் வீட்டிலே
தங்கியதற்கு பிறகு, அவன்தான் அந்த ஊரிலேயே ஊறல்
பானை போடுபவனாக இருப்பான். இவராலே ஒன்றும் செய்
முடியாது. ஏனென்றால், இவர் ஆக்ஷன் எடுக்க வேண்டுமென்று
நினைத்தார் என்றால், நாளைக்கே பெண்டாட்டி, பிள்ளைகளை
யெல்லாம் வெளியே கூட்டிக்கொண்டு போ என்று சொல்லுவான்.
இப்படிப்பட்ட ஒரு காலகட்டம் இருந்தால் போலீஸ் துறை
என்றைக்குமே ஸ்ட்ரெய்ட் ஃபார்வேடாக இருக்க முடியாது.
அவர்களுக்கென்று ஒரு குவார்ட்டர்ஸ் இருக்க வேண்டும், குவார்ட்
டர்சை விட்டு ஆபீசுக்கு போனால்தான் மற்றவர்கள் மதிப்பார்
கள். எல்லோரும் மனிதன்தானே. அந்த மாரல் ஹேபிட்
வரவேண்டுமென்று சொன்னால், அவரவர்கள், அவரவர்கள்
ஸ்டேடஸ்சிலேதான் இருக்க வேண்டும். அதேமாதிரி, டி.ஜி.பி.
ஐ.ஜி., இவர்களுக்கெல்லாம் முக்கியமாக பங்களா ஒன்றுகொடுக்க
வேண்டும். டி.ஜி.பி. இருக்கிறார் என்று சொன்னால், டி.ஜி.பி.,
யினுடைய பொருளாதாரம் எப்படி இருக்கும் என்று சொல்ல
முடியாது, அவர் ஒரு வாடகை வீட்டில் இருந்து கொண்டு இருப்
பார். டி.ஜி.பி., ரேங்கிலே பிக்-அப் பண்ணவேண்டுமென்றால்,
முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். எனவே,
டி.ஜி.பி., பங்களா.இதுதான்; ஐ.ஜி., பங்களா இதுதான் என்று
எந்த சாதாரண மனிதனும் போய் அவர்களைச் சந்திக்கக்கூடிய
அளவிலே நோட்டபிள் பிளேசாக இருக்க வேண்டும். மந்திரி
வீடு இதுதான் என்று சொல்கிற மாதிரி, இவர்களுடைய வீடுகளும்
இருக்க வேண்டும். அவர்களுடைய டிக்னிட்டியைக் காப்பாற்றக்
கூடிய அளவிலே அந்த வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டு
மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



போலீஸ்காரர்களுக்கு சில ஊர்களிலே வீடே கொடுக்க
மாட்டார்கள், சில ஜாதியைச் சேர்ந்த போலீஸ்காரர்கள் என்
றால் அவர்களுக்கு வீடுகளே கிடைக்காது. இளஞ்சம்பூர் என்ற
போலீஸ் ஸ்டேசனைப் பற்றி இங்கே சொன்னார்கள். அங்கே
சில குறிப்பிட்ட ஜாதிக்கு வீடே கிடையாது. அவன் எங்கே
போய் இருப்பான். மூன்றாவது, நான்காவது மைலிலே குடி
யிருந்து கொண்டு, அந்த இடத்திலேயிருந்து போலீஸ் ஸ்டேஷ
னுக்கு வந்து போய்க்கொண்டு இருக்க முடியுமா? எனவே இப்படிப்
பட்ட ஒரு சூழ்நிலையெல்லாம் உருவாகாமல் இருப்பதற்கு
போலீஸ் குவார்ட்டர்ஸ் மிக மிக அவசியம் என்பதை இந்த
நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மெட்ராஸ் போன்ற பெரிய நகரங்களுக்கு அலுவல் காரண
மாக போலீஸ்காரர்கள் வருகிறார்கள், ஹைக்கோர்ட் இங்கேதான்
இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலே இருக்கிற கேஸ்களுக்கு
தமிழகத்திலேயிருந்து, பல இடங்களிலிருந்து, மெட்ராசுக்கு
வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கிற பயணப்படி
10 ரூபாயோ, 20 ரூபாயோ என்று சொல்கிறார்கள். அந்த
ரூபாயிலே, மெட்ராஸ் வந்து தங்கி, சாப்பிட்டு விட்டு போக
முடியுமா? அப்படியானால், அதுவே, தவறு உருவாவதற்கு
காரணம் ஆகிறதா இல்லையா? வரும்போது சாட்சிகாரன்
யாரையாவது கூட்டிக்கொண்டு வந்து அவன் செலவிலே தங்கு
வார்கள். எனவே, போலீஸ் துறையைச் சார்ந்தவர்களுக்கு
மெட்ராஸ் மாதிரி உள்ள நகரங்களிலே, கல்யாண மண்டபம்
மாதிரி கட்டிவிடலாம். தண்ணீர் வசதி மட்டும் வைத்து வந்தால்
படுத்து விட்டு, காலையிலே முகத்தைக் கழுவிக்கொண்டு டியூடிக்கு
செல்வது மாதிரி அமைத்துத் தரவேண்டும். (குறுக்கீடு) ரெஸ்ட்
அவுஸ் என்றால், பெரிய வசதிக்காகச் சொல்வது. சாதாரண
கல்யாண மண்டபம் போதும். போலீஸ்காரர்களுக்கு மட்டும்
தான் சொல்கிறேன். அப்படி கட்டிக்கொடுத்துவிட்டால்
செலவுக்குக்கூட 10 ரூபாயை விட 5 ரூபாய்கூட கொடுக்க
லாம். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்ய
வேண்டும். அதேபோன்று, இன்ஸ்பெக்டர், எஸ். ஐ., போன்ற
வர்களுக்கு 5, 6 ரூம்களை சேர்த்து வைத்துக் கட்டி அவர்கள்
வந்தால் அவர்களுடைய ஸ்டேடசுக்கு தங்கலாம். இந்தமாதிரி
ஒரு உதவியைச் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு ஸ்பெசல் போலீஸ் என்று இருக்கிறார்கள். சிறப்புக்
காவல்படை என்று இருக்கிறார்கள். அவர்கள் வருடத்திலே
10 மாதங்கள் வீட்டை விட்டு, குடும்பத்தைவிட்டு பிரிந்து இருக்கி
றார்கள். இரண்டு மாதம்தான் வீட்டுக்குப் போகிறார்கள்.
இரண்டு மாதத்திலே ஒரு மாதம் ஃபுல் பே; அடுத்த மாதம்
பாதிச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நான் மதுரையை விட்டு
கிளம்பினேன் என்றால் அடுத்த சனிக்கிழமை எப்போது வரும்

போய் பெண்டாட்டி, குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலிலே இங்கே வந்தவுடனே டிக்கெட் புக் பண்ணிடுவேன். ஆனால் 10 மாதங்கள் மனைவி மக்களைப் பிரிந்து இருக்கக் கூடிய மனிதனுக்கு ஏன் நாம் முழுச் சம்பளம் கொடுக்கக்கூடாது இரண்டு மாதங்களுக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆசிரியர்களுகெல்லாம் லீவ் பிரியடிலே முழுச் சம்பளம் தானே கொடுக்கிறார்கள்? அதேமாதிரி இவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பாதிச் சம்பளம் என்பதை மாற்றி இரண்டு மாதங்களுக்கும் முழுச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதை பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-05 மணி

அதேபோல் போலீஸ் துறைக்கு தனியாக ஒரு ஸ்கூல்— இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் வேண்டுமென்று— பெரிய நகரங்களில் வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கருத்தாக இருக்கிறது. ஏன் என்று சொன்னால், ரெயில்வேக்கு தனியாக ரெயில்வே ஸ்கூல் என்று இருக்கிறது; பேங்க் ஆபீசர்களுக்கு எஸ்.பி.ஓ.ஏ. மாதிரி ஒரு ஸ்கூல் இருக்கிறது; அதேபோல் இவர்களுக்கும் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் இருந்தால், கன்செஷனில் சீட் வாங்கி படிக்க முடியும். செண்ட்ரல் ஸ்கூலில் போய் போலீஸ் காரன் பிள்ளைகளுக்கு இடம் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்; மன்னிக்கவும்; போலீஸ்காரன் என்று சொல்லி விட்டேன்; போலீஸ்காரர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு அப்படிப்பட்ட ஒரு வசதியை நாம் செய்து கொடுக்க வேண்டியது நமது கடமை.

பசும்பொன் மாவட்டத்தைச் சார்ந்த—இது ஒரு ஸ்டேட் லெவல் பிராப்பளம் என்னுடைய தொகுதியைச் சார்ந்த ஒரு சின்ன பிரச்சினையை மட்டும் சொல்லி விடுகிறேன். அங்கே அந்த மாவட்டத்தினுடைய 'ஆர்ம்டு ஃபோர்ஸஸ்' இன்னும் மதுரையில்தான் இருக்கிறது. மாவட்டம் பிரித்தாகிவிட்டது. அங்கே எஸ்.பி. இருக்கிறார். கலெக்டர் இருக்கிறார். கலெக்டருக்கு பெரிய காம்பஸ் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த 'ஆர்ம்டு ஃபோர்ஸையும் பசும்பொன் மாவட்டத்திற்கு மாற்றி விட்டீர்களேயானால், கலெக்டர், மற்றும் எஸ்.பி., விரும்புகிற நேரத்தில் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வசதியாக இருக்கும்.

என்னுடைய திருப்பாச்சேத்தி போலீஸ் ஸ்டேஷனைப்பற்றி எல்லா போலீஸ்காரர்களும் தெரியாமல் இருக்க முடியாது. அவர்கள் 'ப்ரமோஷனில் வந்தார்கள் என்றால், ஒவ்வொருவரும் திருப்பாச்செட்டியைத் தெரிந்திருப்பார். ஆளை வெட்டக்கூடிய அரிவாளை தயாரிக்கக்கூடிய புதிதாகத் தயாரிக்கக்கூடிய திருப்பாச் சேத்தி ஸ்டேஷன் அது: அந்த ஸ்டேஷனுக்கு இடம்வேண்டி



'சைட்' டை 'அக்கொயர்' செய்திருக்கிறார்கள். இப்போது வாடகை வீட்டிலிருந்து மானாமதுரையிலிருந்து வருகிறார் ஒரு எஸ்.ஐ. ஒரு 'ஆக்ஷன்' நடந்தது என்றால், கண்டுபிடிக்க முடியாது. லாரியில் தகவல் சொல்லி, பிறகு அவர் வந்து, அதன் பிறகுதான் கம்ப்ளெயின்ட் எழுத வேண்டும். அதற்கிடையில் வெட்டுப்பட்டவன் உயிரோடு இருப்பானா என்பது தெரியாது. திருப்பாச்சேத்தியில், வருடத்திற்கு ஒரு 2 பேராவது இறப்பார்கள், அதாவது அந்த 'மோடிவ்'லே வெட்டுப் படுகிறவர்கள். எனவே, அங்கு ஒரு ஸ்டேஷன் கட்டி கொடுக்க வேண்டும் இந்த வருடத்திலேயே. அதற்கான 'சைட்' எல்லாம் 'அக்கொயர்' பண்ணியாகி விட்டது.

போலீஸ் துறையைப் பொறுத்த மட்டில், நான் சொல்வ தெல்லாம், தமிழகத்தினுடைய மானம், மரியாதை. நீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு ஆகியவையெல்லாம் உங்களு டைய கையில் இருக்கிறது. அங்கு என்ன தவறு நடந்தாலும், அதற்கு பதில் சொல்ல வேண்டியவர் நம்முடைய அருமைத் தலைவர் கலைஞர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) தலை வர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையை ஏற்றிருப்பதனால் அவ் வாறு சொல்கிறேன். தாமஸ் ஹாடி என்ற ஒரு இங்கிலீஸ் ரைட்டர் சொல்கிறார். Wherever the beauty is sold. I will be the purchaser 'பியூட்டி' என்றால் என்னவென்று சொல்வதற்கு, ஜான் ஹிட்ஸ் கொடுக்கிற விளக்கம். A thing of beauty is a joy for ever. "மனித னுக்கு சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டு இருப்பதுதான் அழகு" என்று சொல்கிறார். என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற சந்தோஷம் எல்லாம் தமிழன் தமிழனாக வேண்டும்; தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற ஒரே எண்ணத் திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அப்படி ஏன் என்று கேட்கலாம் அவருடைய அன்றைய கால கட்டத்தைத் தொட்டுப் பார்த் தீர்களேயானால், தமிழகம் தொழில் மயமாக மாறவேண்டும் என்பதற்காக சங்கங்களையும், தொழிலதிபர்களையும் அழைத்து பேசி, அதற்காக அவர் செய்திருக்கிற சாதனையையும், தமிழ கம் உலக அரங்கிலே தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற் காக விளையாட்டுப் போட்டியிலே—ஒலிம்பிக் போட்டியிலே, ஃபர்ஸ்ட் பிரைஸ் ரூ. 5 லட்சமும், வீடும் கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதையும் பார்த்தால். தமிழனுடைய உயர்வைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறார்; பேசிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர் கலைஞர் அவர்கள் என்பது புரியும். அப்படிப் பட்ட தலைவருக்கு நீங்கள் உறுதுணையாக இருந்து, அவர் கையைப் பலப்படுத்த வேண்டுமென்றும். தமிழகத்தை உயர்த்த வேண்டுமென்றும் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு, ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இன்றையதினம், போலீஸ் மானியம், ஆயத் தீர்வை மானியம், தீயணைப்பு மானியம் ஆகிய மானியங்களிலே எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக் களைக் கூற முன் வருகிறேன்.

போலீஸ் மானியத்திற்கு இன்றைக்கு ஒதுக்கி இருக்கிற மானியத் தொகையானது ரூ. 214 கோடியே 56 லட்சத்து, 96 ஆயிரம். அடுத்தபடியாக, தீயணைப்புக்கு ரூ. 16 கோடியே 66 லட்சத்து 73 ஆயிரம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆயத்தீர்வைக்கு ரூ. 5 கோடியே 14 லட்சத்து 82 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறார் நமது கலைஞர் அவர்கள்.

12-10 மணி

நாட்டிலே போலீஸ் இல்லையென்றால், ஒன்றுமே முடியாது. உரலுக்கு ஒரு பக்கம் தான் இடி. மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி. போலீஸ் வேலை பார்ப்பது சாமானியம் இல்லை. சர்வ ஜாக்கிரதையாக பார்க்க வேண்டியிருக்கிறது. போலீஸ் வேலைக்கு இரண்டு பக்கமும் இடி ஜாஸ்தியாக இருக்கிறது. குற்றம் பண்ணினாலும் சரி, குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதானாலும் சரி இரண்டும் அவர்களுக்கு கஷ்ட்டமான உத்தியோகம். அப்படி இருந்தும், நம்நாட்டிலே குற்றம் இந்த நிலைமையில் இருக்கிறது என்றால், காவல் துறையிலே என்ன நிலைமை இருக்கிறது. மேல் நாடுகளில் இன்றைக்குப் பார்க்கிறோம். கல்ஃப் கன்ட்ரிகளிலே பார்க்கிறோம். நம் நாட்டிலிருந்து ஜனங்கள் கல்ஃப் கன்ட்ரிகளுக்குப் போய், அவர்களுடைய நடவடிக்கைகளைப், பார்த்துவிட்டு, இங்கிருப்பவர்களை கவனிக்கும் போது அங்கு குற்றங்குறைகள் எல்லாம் எப்படி இருக்கிறது என்பதை கவனித்துக் கொண்டு வருகிறார்கள். முக்கியமாக முஸ்லீம் கன்ட்ரியிலே—நம்முடைய பக்கத்தில் உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் இருக்கிறார்கள். முஸ்லீம் கன்ட்ரியிலே நாளுக்கு நாள் குற்றம் குறைந்து கொண்டு வருகிறது. கற்பழிப்பே அங்கு இல்லை. கற்பழிப்பு இருந்தால் போச்சு. திருட்டு என்பதே கிடையாது. (குறுக்கீடு). இருக்கட்டும். நான் சொன்னால் யார் கேட்கிறார்கள்? தனித்தனியாகத் தானே வைத்துக் கொண்டிருக்கிறோம். நாட்டிலே குற்றம் குறையவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அங்கே மட்டும் ஏன் குற்றம் குறைகிறது? அங்கே கற்பழிப்பு கிடையாது. திருட்டு கிடையாது. அப்படியே ஏதாவது நடந்தாலும் ஒன்றிரண்டுதான் நடக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன ? இந்தியாவில் இருப்பவர்கள், தமிழ் நாட்டில் இருப்பவர்களாகிய நாம் எல்லாம் இதைக் கொஞ்சம்



கவனிக்கவேண்டும். அங்கே கடுமையான தண்டனை கொடுக்கிறார்கள் ? திருட்டு நடந்தால் அங்கே என்ன பண்ணுகிறார்கள்? திருட்டுக் குற்றத்தைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் தீர்ப்பு வழங்கி பப்ளிக்காக பல இலட்சம் ஜனங்களுக்கு நடுவில் தண்டனையை நிறைவேற்றுகிறார்கள். எந்தக்கையால் திருடுகிறானோ அந்தக் கையை வெட்டிவிடுகிறார்கள். இரண்டு கைகளையும் சேர்த்துப் பயன்படுத்தினால் இரண்டு கைகளையும் வெட்டி விடுகிறார்கள். இப்படிச் செய்தால் ஏன் திருடுகிறான் ? திருடுவானா ?

அதேமாதிரிதான் கற்பழிப்புக்கும் தண்டனை வழங்கப்படுகிறது. இங்கே மாதிரி இல்லை. கடுமையான தண்டனை அங்கே வழங்குகிறார்கள். இங்கே பொம்பளையை என்ன பண்ணுகிறார்கள்? காவல் துறையைக் கூட சந்தேகப்படக்கூடிய அளவில், இங்கே திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பேசினார்கள். கற்பழிப்பைப் பற்றி வெகுதூரம் பேசினார்கள். கிட்டத்தட்ட 10 நிமிஷம் அதிலேயே நேரம் இழுத்துக் கொண்டுவிட்டது. ஆனால் கற்பழிப்பு பற்றி தீட்சிதர் பேசினால் இது என்ன இப்படி பேசுகிறார், பொம்பளையைப் பற்றி என்று சொல்கிறார்கள். இந்த அம்மையார் இன்றைக்கு அதைப்பற்றி விரிவாக எழுதியே வாசித்துவிட்டார். அங்கே என்ன பண்ணுகிறார்கள்? கற்பழிப்பு நடந்தால் உடனே அதற்கு மரணதண்டனை கொடுக்கிறார்கள். எல்லோரும் கூடி கல்லால் அடி என்கிறார்கள். கொலையே செய்து விடுகிறார்கள். இப்படி தண்டனையை நிறைவேற்றுவதற்கு லட்சம் ஜனங்கள் முன்னிலையில் தண்டனையை நிறைவேற்றுகிறார்கள். ராஜாவின் மகனாக இருந்தாலும், இளவரசியாக இருந்தாலும் கூட தண்டனை கொடுக்கப்பட்டது. மற்றவர்களைப் பொறுத்தவரையில் தண்டனையை நிறைவேற்றும்போது சாதாரண இரும்பு கத்தியைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் அவர்களுக்குத் தங்கத்தால் வாள் பண்ணி வெட்டினார்கள் என்று சரித்திரம் சொல்கிறது. அப்படிப்பட்ட கடுமையான தண்டனை நாட்டிலே இருந்தால் தான் குற்றங்கள் குறையும். எனவே இதிலே போலீசைச் சொல்லி குற்றம் இல்லை. ஆட்சியைச் சொல்லிக் குற்றம் இல்லை. தண்டனை அப்படி இருக்கிறது. கொலை பண்ணியதற்காக மரணதண்டனை கொடுத்தால் கூட அதைக் குறைத்துவிடுங்கள் என்று சொல்கிறோம், அரசியல் கட்சியே அப்படி கேட்கப் போகிறார்கள். எங்கே போகிறார்கள் ? வெங்கட்டராமன் வரைக்கும் அதாவது ப்ரெசிடென்ட் வரைக்கும் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நாடாக இருக்கிறது. தண்டனை ஏன் கொடுக்கப்படுகிறது ? அது சரியான முறையில், கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனிக்கவில்லை. அங்கே என்ன பண்ணுகிறான் ? தண்டனை கொடுக்கும்போது: அந்தக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவனைக் கேட்கிறான்,

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மே 3

அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று சொல் கிறாய் என்று கேட்கிறான். அவன் சொல்வதையே. தீர்ப் பாகவும் அளிக்கிறார்கள். அதாவது உங்கள் வீட்டிலே திருடி விட்டானா ? அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கச் சொல்கிறீர்கள் ? உங்கள் வீட்டு மகளை கற்பழித்து விட்டானா, என்ன தண்டனை கொடுக்கச் சொல்கிறீர்கள் என்று கேட்கிறான். அது எல்லாம் இங்கே கிடையாது. அதுபோலவே அங்கே குடிப்பழக்கமும் கிடையாது. எனவே அந்தமாதிரி நன்றாக சுயமாக அரசாங்கத்தை நடத்தினால் தமிழ்நாட்டில் போலீஸ் துறை சரியான முறையில் நடக்கும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

இராஜபாளையத்தில் நடந்த சர்ச்சை பற்றி நாங்கள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தோம். அங்கே எப்படி நடந்திருக்கிறது ? வகுப்புக் கலவரம். 144 தடை உத்தரவு போட்டாகிவிட்டது. அதாவது 144 இஷ்யூ பண்ணி யாகிவிட்டது. பீஸ் கமிட்டி போட்டாகிவிட்டது. இத்தனையும் போட்டு அங்கே நடவடிக்கை எடுக்கும்போது மறு படியும் கலவரம் ஒன்றுக்கு மூன்று மடங்காக விஸ்வரூபம் எடுக்கிறது. அதாவது பீஸ் கமிட்டி போட்டு, 144 போட்டு, போலீஸ் எல்லாம் குவிக்கப்பட்டதற்குப் பிறகுதான் அது விஸ்வரூபம் எடுக்கிறது. அதனுடைய நிலைமை நாம் கொஞ்சம் உன்னித்து கவனிக்கவேண்டும். எப்படிப்பட்ட வேகம் ? அங்கே இருக்கின்ற வாழைகள் எல்லாம் அழிக்கப் படுகின்றன. கரும்புகள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. பயிர்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன அதற்கும் மேலே ஆங்காங்கே இருக்கிற விரோதிகள் எல்லாம், எந்த விரோதி என்று சொல்ல முடியாது — இரண்டு பக்கமும் சேர்ந்து கிட் டத்தட்ட 11 கொலைகள் செய்திருக்கிறார்கள். இது தெரிந்து நடந்தது. தெரியாமல் நடந்தது எத்தனையோ தெரியவில்லை. கணக்குக்கு வருவது பத்திரிகையில் போடு வது 11 கொலை. இதற்கெல்லாம் காரணம் என்ன ? போலீஸ் அங்கே அறிக்கை கொடுக்கிறார்கள். ''1987-லே கூட நடந்தது ஒரு கலவரம். அது நாள் கணக்கில் இல்லை. 3 மாதத்திற்கு மேலே எக்ஸீட் ஆனது. இப்போது ஒரு வகுப்புக் கலவரம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொல் கிறார்கள். இப்படி ஒப்பினியன் தரும்போது, இது எந்த விதமான கலவரம், அதாவது 1987-லே நடந்த கலவரம் 3 மாதங்கள் நீடித்திருக்கிறது என்றெல்லாம் சொல்கிற அந்த மனப்பான்மை இருக்கிறது. எனவே மறுபடியும், மறுபடியும் கலவரத்திற்கு இடம் இல்லாமல் பண்ணவேண்டும். இப்படி வகுப்பு கலவரங்கள் நடந்திருக்கின்றன. நாட்டிலே வகுப்புக் கலவரம் என்பது ஓட்டலிலே மட்டும்தான் ஒழிந்து இருக்கிறது எவனோ சமைக்கிறான். எவனோ பரிமாறுகிறான் எவனோ தின்கிறான். எனவே அந்த ஓட்டல் ஒன்றைத் தவிர மற்ற



1990 மே 3] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

இடங்களில் வகுப்பு என்பது மறையவே இல்லை. வேண்டு மென்றால் பஸ்ஸில் போகும்போதும், இரயிலில போகும் போதும் ஓரளவுக்கு அது மறைந்திருக்கலாம். அதுகூட உண் மையான ஒற்றுமை என்று கிடையாது. அங்கே ஒரு கம் பல்ஷன் அவ்வளவுதான் அதேபோல் கேன்டீனுக்குப் போனால் யாரோ சமைக்கிறான், யாரோ பரிமாறுகிறான். யாரோ தின்கிறான். அதேபோல் இரயிலிலும் பஸ்சிலும் இருக் கிறது. ஆனால் நாட்டிலே எல்லா இடத்திலேயும் அந்த மாதிரி நிலைமையைக் கடைப்பிடித்தால்தான் ஒரு ஒற்றுமை ஏற்படும். இல்லை என்றால் மைனாரிட்டிகள் எல்லாம் என்ன பண்ணுவது ? எங்களைப் போன்ற நோஞ்சான் எல்லாம் என்ன பண்ணுவது ? லா அன்ட் ஆர்டரை வற்புறுத்துவது யார் ? யார் அதை நடத்துவது ? சர்க்கார்தான் நடத்த வேண்டும். சர்க்கார் யார் மூலம் நடத்த வேண்டும்? போலீஸ் மூலம் நடத்தவேண்டும். இராஜபாளையத்தை போல் நீடித்தால் என்னவாகும் ? இராஜபாளையத்திலே நடந்தது பக்கத்திலே ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நீடித்தது. பிறகு பக்கத்து கிராமங்களுக்கெல்லாம் நீடித்தது.

அதேமாதிரிதான் மதக் கலவரம், ரம்சான் பண்டிகை அன்று நடந்தது. அதுபற்றி முக்கியமான ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இது மதக் கலவரம்.

12-15. மணி.

இப்படி மதக்கலவரம் வெடிக்கும் என்று ஒரு மாதத்திற்கு முன்னாலேயே 10 பேரைக் கூட்டிக்கொண்டு போய், ரெவின்யு டிபார்ட்மென்டில் டிபுடி செகரட்டரியைப் பார்த்து சொல்லியிருக்கிறேன். அங்கே மதக்கலவரம் வெடிக்கும் போல இருக்கிறது என்று அங்கே இருந்த நிலைமை அப்படி, ஏனென்றால் எனக்கு அங்கே உள்ள நிலைமை எல்லாம் தெரியும். ஸ்தாபன காங்கிரசிலும் டிஸ் டிரிக்ட் பிரசிடென்ட் ஆக இருந்தேன். இப்போது ஜனதா தளத்தின் டிஸ்டிரிக்ட் பிரசிடென்டாக இருக்கிறேன். இன் அண்ட் அவுட் எல்லா கிராமங்களிலும், திருச்சி ஜில்லாவில் தெரியும். ஆகையினாலே எங்கெங்கே மதக்கலவரம், எப்படி எப்படி யார் இருப்பார்கள் என்று எனக்கு நல்லா தெரியும். ஒரு வருஷம் இரண்டு வருஷம் இல்லை. 25 வருஷமாக தெரியும். 15, 20 நாளைக்கு முன்னாலேயே ரெவின்யூ டிப் பார்ட்மென்ட் டிபுடி செக்ரட்டரியைப் பார்த்து சொன் னேன். அவரும் சும்மா இருக்கவில்லை. போன் செய்து. இன்ஸ்பெக்டர் ஜாக்கிரதை என்று சொல்லவில்லை, பீஸ் கமிட் டியையும் போட்டார்கள். அதில் ஒன்றும் தவறில்லை. சர்க்கார்மீது நான் குற்றம் சொல்லவில்லை. அங்கே இருக் கிற நிலைமை அப்படி. பீஸ் கமிட்டி போட்ட பிறகும்கூட

ரம்ஜான் தினத்தன்று கலவரம் வந்தது. 24—4—1990 காலை 9-½ மணிக்கு. மாமூல் பாதையில் போக வேண்டுமென்று கமிட்டியில் சொன்னார்கள். ஐயா, இந்தப் பாதையில் போக வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக பீஸ்கமிட்டி போடுகிறார்கள். அதில் எல்லா ஜாதியினரும் இருக்க வேண்டும். எல்லா உறுப்பினர்களும் இருக்க வேண்டும். அவர்கள் போட்ட பீஸ் கமிட்டியில் போலீஸ் அதிகாரியிலிருந்து எல்லோரும் இருக்க வேண்டும். அப்போதுதான் சரியாக இருக்கும் என்று போட்டார்கள். அப்படியாகப்பட்ட பீஸ் கமிட்டி போடுவதில் தவறில்லை. அங்கே இருக்கிற கலெக்டர் போட்டு, சரியான முறையில் போட்டு, அரியலூரில் உள்ள சப்-கலெக்டரையும் போட்டார்கள். அப்படி நல்லபடியாக அதை நடத்தி இருக்கும்போதே, 24—4—1990 அன்று காலை 9-30 மணிக்கு மாமூல் பாதையை விட்டு, விலகி ஏற்கெனவே பஞ்சாயத்தார் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை மீறி ஒரு மதத்தார் செல்கிறார்கள். அப்படி ஸ்தாபிக்கும் போதுதான் 1,000 பேர் 3,000 பேர் போகும்போது, ஒரு சிலர் மாற்றிப் போகிறார்கள். எல்லோரும் அப்படி என்று சொல்ல முடியாது. 100 பேரில் 2 பேர் இருப்பார்கள் இல்லையா? அதுமாதிரி ஒரு சாரார் முஸ்லீம்கள் அப்படி செய்கிறார்கள். பீஸ் கமிட்டிக்காரர்கள் அங்கே போகக் கூடாது, பேய் இருக்கிறது, பிசாசு இருக்கிறது என்று சொல்லியிருந்தும் அப்படி ஜாக்கிரதையாக இருந்தும், போனால் என்ன, பேய் இருந்தால் என்ன, பிசாசு இருந்தால் என்ன என்று சொல்லிவிட்டு, எல்லார் சொல்வதையும் மீறிக் கொண்டு அவர்கள் போகிறார்கள். வகுப்புக் கலவரம் ஏற்பட்டுவிட்டது. மாமூலை ஏன் மீறுகிறார்கள் என்று காவல் துறையினர் கேட்டபோது, அவர்கள் மீது கற்களால் அடித்தார்கள். போகக்கூடாது என்று சொல்லி, தடியடி செய்கிறார்கள். பள்ளிவாசலில் பதுங்கி இருந்து, காவல்துறையினர் மீது நாட்டு வெடி குண்டுகளை வீசுகிறார்கள். இது எனக்கு வந்த தகவல். கண்ணால பார்த்தியா என்று கேட்கக் கூடாது. இதை எல்லாம் கண்ணால் பார்க்க முடியாது. எல்லாம் பேப்பரில் வந்த தகவலை வைத்துதான் சொல்கிறேன். 3 காவலர்கள் கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் மீது பட்ட அடியானது தீ மாதிரி பரவுகிறது. தீ அணைப்பு பற்றி அடுத்த சப்ஜெக்ட் வருகிறது. அதுபோல தீ பரவுகிறது. ஆங்காங்கே மோதல்கள் ஏற்படுகின்றன. அப்படி பரவுகிறபோது, அவனவன் சும்மா இருப்பானா? இவன் 4 பேர், அவன் 4 பேர், கைகலந்து விடுகிறான். தெற்கு வீதியில் உள்ள பள்ளிவாசலிலிருந்தும், மேற்கு வீதியிலிருந்து செங்கல்லும், ஜல்லிக் கற்களும் விசப்படுகின்றன. அங்கே பள்ளி வாசலுக்கு வந்தால், தேர் ஓடும் பகுதியில்தான் முதலில் கலவரம் ஏற்படுகிறது. அங்கேதான் தகராறு ஆரம்பம். மேற்கு வாசலில் இருந்து வீசிய வெடிகுண்டு பள்ளி வாசலுக்கு அருகில், அதாவது





30 அடி தூரத்தில் இருந்து வீசப்பட்ட வெடிகுண்டு கூரைமீது விழுந்தது. இது பெரம்பலூரில் நடந்த சமாச்சாரம். தீ பற்றிக் கொள்கிறது. ஆனால் அதை இந்துக்கள் கொளுத்தினார்கள் என்று கூறப்படுகிறது. நான் உள்ளதைச் சொல்கிறேன். இதையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். தங்கள் இனத்து மக்கள் தாக்கப்பட்டுவிட்டார்கள் என்று நினைத்து ஜாதி இந்துக்களின் மீது திட்டமிட்டபடி முஸ்லிம்களின் ஒரு வீட்டு மாடியிலிருந்து செங்கற்களும், ஜல்லிக் கற்களும் வீசப்பட்டு, அது வீதி எங்கும் பரவிக் கிடப்பதை பார்க்க முடிந்தது. அந்தக் கற்களை வெளியிலிருந்துதான் கொண்டு வந்திருக்க முடியும். கலவரத்துக்கான காரணம் மாமூல் பாதையை மீறியதுதான் என்று வருவாய்த் துறையும், காவல் துறையும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பீஸ் கமிட்டியினுடைய அறிக்கையை மீறி அந்த மாமூல் வழியை மீறிப் போனதுதான் காரணம். வெடிகுண்டு வீசியது முஸ்லீம்களே என்று காவல் துறையினர் கூறுகின்றனர். முஸ்லீம்களின் வீட்டிலிருந்து 50 வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டு உள்ளது என்று சொல்லுகிறார்கள். ஆனால் முஸ்லிம்களில் பெயரளவுக்கு 30 பேரை மட்டும், கைது செய்துவிட்டு, ஜாதி இந்துக்களில் அப்பாவிகள் உட்பட 160 பேரை கைது செய்திருக்கிறார்கள். அவ்வளவு நடந்தும் ஒரு பக்கம் 30, இன்னொரு பக்கம் 160. அதாவது 1:5 என்ற விகிதாச்சாரத்தில் கைது செய்கிறார்கள். மேலும் ஜாதி இந்துக்களின் வீடுகளில் நடத்திய கெடுபிடி வேறு இருக்கிறது. அத்தனை பேரும் விவசாயக் கூலிகள் எல்லாம் விவசாயிகளின் வீடுகள். விவசாயக் கூலிகளின் வீடுகள். இப்படி அங்கே நடந்தது மட்டுமல்ல. அடுத்தபடியாக திருச்சியில், துவரங்குறிச்சி. அது எனது ஜில்லா. துவரங்குறிச்சியில் சின்னக் கலவரம். மணப்பாறை பக்கத்தில் இரண்டு முஸ்லீம் சென்டர்கள் இருக்கின்றன. ஒன்று துவரங்குறிச்சி, மற்றொன்று இன்னொரு ஊர். அங்கே இது மாதிரி கலவரம் நடந்தது. அடிதடி நடந்தது. பம்ப்-செட் எல்லாம் அடித்து நொறுக்கினார்கள். பாவம், பம்பு செட்டு என்ன செய்யும். ராஜபாளையத்தில் இதுமாதிரி நடந்து அங்கும் பம்பு செட்டு எல்லாம் அடித்து உடைத்திருக்கிறார்கள். இதே மாதிரி பல இடங்களில் கலவரங்கள் நடப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்? போலீஸ் என்ன செய்ய முடியும்? இங்கே குற்றம் நடந்தால் இங்கே வருகிறது. அங்கே குற்றம் நடந்தால் அங்கே போலீஸ் வந்துவிடுகிறது. உடனே அதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். ஆனாலும் நம்மால் சமாளிக்க முடியவில்லை.

12-20 மணி.

நம்முடைய நாட்டிலே வகுப்புக் கலவரம், ஜாதிக் கலவரம் அடிக்கடி நடப்பதால் இதற்காக என்று காவல் துறையில் தனிப்

பிரிவை ஏற்படுத்தி இவற்றைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல முத்துப்பேட்டையில் ஒரு சம்பவம் நடைபெற் றிருக்கிறது. ஒரு பெண் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண் டிருந்தாள். அவளை தினசரி கண் வைத்து, கால் வைத்து, எப்படி இருக்கிறது இந்தப் பெண், அது, இது என்று கேலி பண்ணினால் அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் சும்மா இருப் பார்களா? நாம் சும்மா இருப்போமா? யார் தான் சும்மா இருப்பார்கள்? அங்கே அதன் காரணமாக பெரிய கலவரம் மூண்டு, அப்புறம் அடிதடி, ஏற்பட்டு எனக்குத் தகவல் வந்தது. இங்கிருந்து அங்கே தனியாக போலீசை அனுப்பி னார்கள். (மணியடிக்கப்பெற்றது) நான் எப்படியும் உட் கார்ந்துவிடுவேன் ஐயா, அடுத்து, தீயணைப்புத் துறை பற்றி சொல்ல வேண்டும். இன்னும் கொஞ்சம் மணித் துளிகள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐயா, எல்லாவற்றையும் உள்ளடக்கித்தான் 15 மணித்துளிகள். இன்னும் 3 மணித் துளிகள் இருக்கின்றன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, போலீஸ் என்பது தர்ம தேவதை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் நேரத்திற்குக் கட்டுப்படுவது பெரிய தர்மம் ஐயா.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதே நேரத்தில் திருப்பரங் குன்றத்தில் தண்ணீர் விடுவது பற்றிய பிரச்சினை சம்பந்த மாக சர்க்கார்மீது மிஸ்டேக் இல்லை. அங்கே 2 ஆயிரம் விவசாயிகள் சேர்ந்து பஸ்ஸை மறித்து, இதை மறித்ததால் தடியடி நடத்தப்பட்டது. அங்கே பெரும் கலவரம் ஏற்பட்டு ஏராளமான பேர்களை அரஸ்ட் பண்ண வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்கெல்லாம் பொறுப்பு காவல் துறையிடம் தான் இருக்கிறது. அப்படிப்பட்ட போலீசை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதிலே இன் றைக்கு ரிசர்வ் என்றும், டிராபிக் என்றும், லா அண்ட் ஆர்டர் என்றும், கிரைம் என்றும், ரெயில்வே போலீஸ் என்றும் பல்வேறு பிரிவினர் இருக்கிறார்கள். ஆனால் எல்லாம் சேர்ந்து போலீஸ் தான். இந்த 4, 5 பிரிவையும் சேர்த்து நாம் மொத்தமாக போலீசாகத் தான் பார்க்கின் றோம். இப்படி எல்லாம் செயல்படுகின்ற காவல் துறை யினருக்கு நாமும் இன்னும் நிறைய சலுகைகளைக் கொடுக் கலாம்.



காவலர்களின் நலனுக்காக, அவர்கள் குடும்பத்திற்கு ஈமச் சடங்குச் செலவிற்காக ரூபாய் 150 தரப்படுவதாக இருக்கிறது. இந்த 150 ரூபாய் என்பது இன்றைக்கு சாமா ணியம். ஏனென்று சொன்னால் ஒருவன் வீட்டில் இறந்து விட்டான் என்று சொன்னால் ஈமச் சடங்கை நடத்த செல்லும்போது சுடுகாட்டில் இருக்கிறானே, அவன்கூட இன் றைக்கு 300 ரூபாய்க்குக் கீழே வாங்க மாட்டான். அவ னுக்கே ரூபாய் 300 என்றால், அது, இது, மேளம் கொட் றது, பல்லக்கு கட்றது, அதற்கு அப்புறம் வந்து போகிறது இவற்றை எல்லாம் சேர்த்து இன்றைக்கு 3,000 ரூபாய் கொடுத்தால் கூட கட்டாது. இந்த 150 ரூபாயை கொடுத்து விட்டு, அவர்களுக்கு நிறைய கொடுப்பதாக, போலீஸ் துறைக்கு நிறைய கொடுப்பதாக நினைக்கிறார்கள். இது ரொம்ப சாமானிய தொகை. ஒரு நிமிஷ செலவுக்குக் கூட இது ஆகாது. அங்கே வாங்குகிற தீர்த்ததிற்கு ஆகிற செல வுக்குக் கூட ஆகாது.

இன்றைக்கு கன்ட்ரோல் எல்லாம் போலீஸ் தான். கற் பழிப்பிலிருந்து, தற்கொலையிலிருந்து, கள்ளச்சாராயம் வரை அனைத்தையும் அவர்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். ஆயத்தீர்வை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். கள்ளச் சாராயத்தை இனிமேல் இல்லாமல் ஒழித்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஒழிக்க முடி யுமா? நான் சொல்லி வைக்கிறேன். இந்தக் கள்ளச்சாரா யத்தை ஒழித்துவிட்டால் நான் பொறுப்பு. 1947-ல் இருந்து இது வேக வேகமாக, படிப்பு எதுவும் இல்லாமல், உற்பத்தி ஆகிறது கள்ளச்சாராயம்தான். இதற்கு மட்டும் வாத்தியார் கிடையாது. புரபசர் கிடையாது. எந்தவிதமான பள்ளிக் கூடமும் கிடையாது. நடுநிலைப் பள்ளி இல்லை. ஆரம்பப் பள்ளி இல்லை, காலேஜ் இல்லை. ஒன்றும் கிடையாது. ஆனாலும் எப்படியோ கற்றுவிடுகிறான். இவர்கள் சுவை யாக கொடுக்கிறார்கள். அதோடு நாம் 4 ரூபாய்க்குக் கொடுத்தால் இவன் 2 ரூபாய்க்குக் கொடுக்கிறான். எப்படி காய்ச்சுகிறான், எங்கே காய்ச்சுகிறான் என்று முன்பு கண்டு பிடிக்க முடிந்தது. ஆனால் இப்போது கண்டுபிடிக்க முடிய வில்லை. இதையும் நாம் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐயா, வாக்கியத்தை முடித்துவிடலாம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சாராயத்தைப் பற்றி எங்களு டைய அபிப்பிராயத்தைக் கேட்பார்கள். என் அபிப்பிராயம், நாங்கள் எல்லாம் காந்தீயத்தைக் கடைப்பிடிப்பவர்கள், நாங்கள் குடிக்கக் கூடாது. டோட்டல் பிரகிபிசன். நாட்டிலே யாரும் குடிக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆனாலும்

களுக்கு பணம் வர வேண்டியிருக்கிறது. பணம் வேண்டும் என்பதற்காக எதையாவது செய்யலாமா? பணம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பேயைக் கல்யாணம் பண்ணிக்கலாமா? காட்டேரியை கல்யாணம் பண்ணிக்கலாமா? ஐயா பணத்திற்காக எதையும் பண்ணக் கூடாது. கள்ளச்சாராயத்தை ஒழிப்பதாக சொல்லியிருக்கிறார்களே, உள்ளபடியே கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியுமா? கள்ளச்சாராயத்தை நிச்சயமாக நாம் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் ஒழிக்க முடியாது. இங்கே மட்டுமா, எந்த நாட்டிலேயும் ஒழிக்க முடியாது. எப்படி ஒழிக்க முடியும்? இங்கேதான் வெளியேயிருந்து வந்து கொண்டிருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சவாலோடு முடித்தால் நன்றாக இருக்கும் ஐயா.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையினாலே மனமுவந்து நம்ம மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, தமிழ் இனத்தலைவர் கலைஞர் அவர்களை ஒன்று கேட்கிறேன், தயவு செய்து இந்த ஒரு வருடத்தில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஜனங்கள் நல் வாழ்வு வாழ்கிற காலத்தில், கொஞ்சம் மனம் வைத்து, கள்ளச்சாராயம் ஒரு பக்கம் இருந்துகொண்டிருந்தாலும் இன்றைக்கு சட்டத்தை எல்லாம் தளர்த்தியிருக்கிற நிலையில் வெளியே நாங்கள் எல்லாம் போக முடியவில்லை, குடிச்சி விட்டால் புரள்கிறான், சண்டைக்கு வருகிறான். இப்போது இதற்கெல்லாம் ஒரு பாதுகாப்பும் இல்லாமல், பொறுப்பும் இல்லாமல் சட்டத்தைத் தளர்த்தினால் எங்களைப் போன்றவர்கள் வெளியே போக முடியுமா? விடாதே, பிடி என்பான். இன்றைக்கு குடிக்கிறவன் பாதி பேர், குடித்துவிட்டு அடிக்கிறவன் முக்கால்வாசி பேர். ஆகையினாலே மனமுவந்து இந்தச் சட்டத்திலே கொஞ்சம் கட்டுப்பாடு கொண்டு வர வேண்டும். சரி, இன்றைக்கு பணத்திற்காக கொண்டு வருகிறீர்கள், கள்ளச்சாராயத்தை ஒழிப்போம் என்று சொல்வதைப் பொறுத்தவரையில் ஒழிக்க முடியாது. ஆனாலும் ஒருவகையில் அதை ஒத்துக்கொண்டாலும்கூட, அது சம்பந்தப்பட்ட ரெகுலேஷன் இருக்கிறதே, இன்ன இடத்தில் குடிக்கலாம், இன்ன இடத்தில் குடிக்கக் கூடாது, குடிச்சா வெளியே வரக்கூடாது, வெளியே வந்தால் உள்ளே தள்ளுவோம் என்று கடுமையான முறையில் சட்டத்தைப் பிரயோகித்தால் எங்களைப் போன்ற ஏழை பாழைகள், நோஞ்சான்கள், மைனாரிட்டிகளுக்கு எல்லாம் கொஞ்சம் சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்தால்தான் குடிக்காதவன் கொஞ்சம் நாட்டிலே 'நடமாட்ட வசதியாக' இருக்கும் என்று கேட்டுக்கொண்டு தீயணைப்புப் பற்றி ஒன்றை சொல்ல மறந்துவிட்டேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீயை வேறு அணைக்க வேண்டுமா ஐயா, (சிரிப்பு).

12-25 மணி.

தீ அணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது. இருந்தாலும், எந்த இடத்திலே தீ பிடித்தாலும் அணைத்த பிறகுதான் வண்டி வருகிறது. திருச்சியிலே பி. எச். இ. எல். நிறுவனத்திலே புதியதாக, பளபளவென்று வைத்திருக்கிறார்கள். துப்பாக்கித் தொழிற்சாலையில் வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் அமைச்சர் தொகுதியில் தீப்பிடித்து, கிட்டத்தட்ட 2,000 சொச்சம் வீடுகள் வெந்த பிறகுதான் வண்டிகள் வந்தன. ஒரு வீட்டிலே உள்ளே போனபோது, அந்தப் புகையிலேயே, பலர் இறந்து விட்டார்கள். இதற்கெல்லாம் ஒரு நிவாரணம் அளிக்க வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது) நம்முடைய நாட்டிலே இன்னும் போன் பண்ணத் தெரியலை. வாழ்க்கைத் தரம் கம்மியாகத்தான் இருக்கிறது. இந்த தீயணைப்புத் துறையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி ஜனங்களுக்கு கிளாஸ் நடத்த வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீ அணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இன்றைக்குக் காவல் துறை மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு காவல் துறை எப்படி சிறந்த முறையிலே செயலாற்றி வருகிறது, பணியாற்றி வருகிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட கடந்த காலங்களிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஜாதி மதக் கலவரங்களை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் தமிழ் நாட்டினுடைய காவல் துறையினர் எந்த அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கூர்ந்து பார்க்கவேண்டும். இன்றைக்கு போலீஸ் துறையிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரிவுகள், சி.ஐ.டி. இலாக்கா உட்பட பல்வேறு பிரிவுகள் தமிழகத்திலே சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டாலும்கூட, பல்வேறு இடங்களில் சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் தோன்றிய பின்னாலேதான் காவல் துறையினர் தலையிடும் நிலை இருக்கிறது. கலவரம் ஏற்படுவதற்கு முன்னதாகவே அதில் சம்பந்தப்பட்டவர்களைத் தடுப்பதற்கு மாறாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு பீதியை ஏற்படுத்தும் வகையிலே காவல் துறையினர் சில இடங்களில் அத்து மீறி செயல்படுவதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதன் காரணமாகக்கூட அந்தப் பகுதியில் பதட்ட நிலை
மைகள் காணக்கூடியதை நாம் பார்க்கிறோம். காவல் துறை
என்று சொன்னால், சாதாரண பொது மக்களுக்கு, ஏழை
எளிய மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமென்று நம்பியிருக்
கிறார்கள். அனேகமாக பொதுமக்கள் மத்தியிலே சின்னப்
பிரச்சினை எழுகிறபோது, காவல் துறையிலே புகார்
கொடுத்தால், நேரத்தோடு அவர்கள் ஈடுபட்டால், அதைக்
கட்டுப்படுத்த முடியும். அதில் அலட்சியம் காட்டுவதால்
அந்தப் பிரச்சினைகள் பெரிதாக உருவெடுத்து, மிகப் பெரிய
கலவரமாகப் பல்வேறு இடங்களில் தோன்றுவதற்கு அடிப்
படைக் காரணமாக இருக்கிறது.

இன்றைக்கு சி.ஐ.டி. இலாக்காக்களை எடுத்துக்கொண்
டால தொழிலாளர்கள் போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்
தினால் அல்லது அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்
தினால் முன்கூட்டியே நிலைமைகளை அறியும் முறையில்
அவர்களுடைய செயல்பாடுகள் இருக்கின்றன. அனேக இடங்
களில் இது போன்ற சம்பவங்கள் நடக்கப்போகிறதென்பதை
முன்கூட்டியே அறிவதில் காலதாமதம் ஏன் ஏற்படுகிறதென்பதை
தமிழக முதல்வரவர்கள் கண்டறிவார்கள் என்று நம்புகிறேன்.
இன்றைக்குப் பல்வேறு இடங்களில் இது போன்ற சம்ப
வங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக
திருச்சி, சென்னை போன்ற நகரங்களில் எல்லாம் இப்படிப்
பட்ட பிரச்சினைகள் வருகிறபோது, பொது மக்கள் பாதிக்கப்
படக்கூடிய விதத்தில் இருக்கிறது. இதற்கும் மேலாக
ஒன்று நான் சொல்ல வேண்டும். இப்படிக் கிளர்ச்சிகள்
நடக்கும் நேரத்தில், சாதி மதக் கலவரங்கள் நடக்கும்
நேரத்தில் பொறுப்பிலே இருக்கக்கூடிய காவல் துறையினர்,
சட்டத்தைக் கையாள்கிறவர்கள், ஜாதிய உணர்வோடு செயல்
படும் காரணத்தாலேதான், இப்படிப்பட்ட கலவரங்களுக்கு
காரணமாக அது பல இடங்களில் அமைந்திருக்கிறது. காவல்
துறை அதிகாரிகள் தாங்கள் ஏற்றுள்ள பொறுப்பை
உணர்ந்து, எந்த ஜாதியாக இருந்தாலும், பாகுபாடின்றி,
இப்படிபபட்ட கலவரங்கள் நடக்கும்போது எந்த உணர்
வுக்கும் இடம் அளிக்காத வகையில் காவல் துறையினர்
செயல்பட வேண்டும். அதற்காக தமிழக முதல்வர் அவர்கள்
முயற்சி செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

12-30 மணி.

காவல் துறை பற்றி எல்லாம் நம்முடைய தமிழக
முதலமைச்சருக்குச் சொல்லத் தேவையில்லை. அவர்கள்
ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத காலங்களில், அவர்கள் பல்வேறு
இயக்கங்கள் நடத்திய காலங்களில் அவர்களுக்கும், அவர்



குடும்பத்துக்கும் ஏற்பட்டு இருக்கிற துன்ப துய
களுடைய கொஞ்சநஞ்சமல்ல என்று தொடர்ந்து இந்த அவை
ரங்கள் அறிவித்து இருக்கிறார்கள். காவல்
யிலே அவர்கள் கொண்டோம் என்று சொன்னால், எந்த
துறையை எடுத்துக் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அந்த
ஒரு அரசியல் கட்சி சொல்கின்ற, பணி நடத்துகின்ற உத்திரவு
அரசியல் கட்சி பல்வேறு அதிகாரங்களைப் பயன்
இல்லாமல் இருக்கக்கூடிய பொதுவான நீதிக்காக தவறு
படுத்தி யாருக்கும் பணியாமல் எடுப்பதற்கான முயற்சிகளில்
செய்பவர்கள் மீது நடவடிக்கை செயல்பட வேண்டும் என்று கேட
நிச்சயமாக காவல் துறை அப்போதுதான் தமிழ்நாட்டு மக்களின்
டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்களின் நியாயம் தீர்க்கப்
நீதி நிலைக்கும்; நடைபெறுகின்ற கொள்ளைகள், கொலைகள்,
பட முடியும். ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்
தவறுகள் அமையும். அந்த வகையிலே அரசியல் தலையீடு
பாக அது போலீஸ் துறை செயல்பட வேண்டும் என்று
இல்லாமல் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
நான் இந்தச்

இன்றைக்கு பல்வேறு இடங்களில் சாதிக்கலவரங்கள்
தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. சாத்தூர்,
ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற இடங்களில்
அனேகமாக சாதிக் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. இது ஒரு இடத்தில் நடந்த பிறகு
அடுத்த இடத்தில் அது பரவாமல் இருப்பதற்கு உரிய பாது
காப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தி அதன் மூலம் செயல்
பட வேண்டுமே தவிர, ஊர் ஊராக சம்பந்தம் இல்லாத
இடங்களுக்கு எல்லாம் போய் காவல் துறையினர் தெருக்
களில் புகுந்து, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு பாதுகாப்பு
இருக்கிறதா என்று சொல்லி, ஊர் மக்களை பீதி அடையச்
செய்வது என்பது மேற்கொண்டும் செய்யக்கூடிய தவறு
களுக்கு குற்றம் புரிபவர்களுக்குச் சாதகமாக இருக்கும்
அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு பாதக
மாக அமைந்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை
தடுக்க தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு நவீன திருட்டுகள் நாடு பூராவும் நடை
பெறுகிறது. அது பற்றி பத்திரிகைகளில் பல செய்தி
களைப் பார்த்தேன். சென்னை மாநகரத்தில் செய்திகளைப்
பார்த்தேன். பேனாவிலே தூக்க மருந்தை போட்டுக்
கொண்டு லாட்ஜுகளில் தங்கி இருக்கிறவர்கள், வரக்கூடிய
வர்களுக்கு டீயோ, காபியோ வாங்கி வர வேண்டுமென்று
சொன்னால், அதை வாங்கி வருகிறபோது. தூக்க மருந்தை
இரண்டு சொட்டு அதில் விடுகிறார்கள். அவர்கள்
அதைச் சாப்பிட்டுவிட்டு படுத்த உடனே தூங்கிவிடுகிறார்கள்.
அப்போது கொள்ளைகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட

நவீனமான திருட்டுகள் நாட்டில் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட திருட்டுகளைத் தடுப்பதற்கு நம்முடைய போலீஸ் துறை நன்கு கண்காணிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பொது மக்கள் ஏமாறக்கூடிய பல்வேறு சீட்டுக் கம்பெனிகளை நடத்தி, மோசடிகள் நடைபெறுகின்றது. தமிழகம் முழுவதிலும் இலட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய பணத்தை அவைகளில் கட்டி ஏமாந்து உள்ளார்கள். சீட்டுக் கம்பெனிகள் நடத்துபவர்கள் போர்டு போடாமல் இல்லை; அரசு அங்கீகாரம் பெற்ற கம்பெனி என்றே போர்டு போடுகிறார்கள் ; காவல் துறைக்கு அது தெரியாமல் இல்லை. காவல் துறை அதிகாரிகள் கூட அந்த கம்பெனிகளில் பணம் போட்டு ஏமாந்து இருக்கிறார்கள் என்பதை நாம் பத்திரிகை செய்திகளில் பார்க்க முடிகிறது. இன்றையதினம் கூட தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணியில் இப்படிப்பட்ட கம்பெனிகள் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு பல இலட்சக்கணக்கான பணம் மோசடி செய்யப்பட்டு இருக்கிறது. பொது மக்கள் எங்கு லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து இப்படிப்பட்ட கம்பெனிகளில் பணத்தைப் போடுகிறார்கள். இதையெல்லாம் போலீஸ் துறையினர் கண்காணித்து, அவைகளை காலத்தோடு தடுப்பதற்கான முயற்சிகளிலே செயல்படவேண்டும். போலித்தனமான சீட்டு கம்பெனிகள் நடத்தப்படுவதை அரசு தடை செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்...............

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேராவூரணியில் சீட்டு கம்பெனி நடத்தப்படுவதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு. அப்படி ஒரு நிகழ்ச்சியோ அல்லது ஒரு கம்பெனியோ நடக்வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேராவூரணிக்காரர்களே தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் பல்வேறு மாநிலங்களில் இதுபோன்று நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை ஆதாரப்பூர்வமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நான் கண்டிப்பாகச் சொல்கிறேன்.

அடுத்து லா-அண்டு ஆர்டர் பிரச்சினை இல்லாமல் காவல் துறையினர் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



கள்ளச்சாராயத்தை ஒழிக்க அநேகமாக தமிழக காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் காவல் துறை நினைத்து இருந்தால் கள்ளச்சாராயத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். அதற்கு போலீசே பல்வேறு இடங்களில் துணை போகக்கூடிய நிலைமைகளை நாம் பார்த்து இருக்கிறோம். போலீஸ் அலுவலகங்களில் இரண்டு கோஷ்டியாக இருக்கிறார்கள். கள்ளச்சாராயத்தை உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஆதரவாக ஒரு கோஷ்டியும், அதை ஒழிப்பதற்கு ஆதரவாக இன்னொரு கோஷ்டியும் ஆக இரண்டு கூறாக காவல் துறையில் பல இடங்களில் இருப்பதை நாம் காண முடிந்திருக்கிறது. காவல் துறைக்கு திறமை இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் உரிய நடவடிக்கையை அவர்கள் எடுக்க முடியாத காரணத்தால் இன்றைக்கு தமிழக அரசு அந்த சட்டத்தை வாபஸ் வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகையால்

12-35 மணி.

அதேபோன்று இப்பொழுது என்னுடைய தொகுதியி லேயே நான் முதலமைச்சரவர்களிடத்திலே சொல்லியிருக் கிறேன். இங்கேயும் கிளப்பியிருக்கிறேன். பல்வேறு படு கொலைகள் நடந்திருக்கின்றன. கற்பழிப்புகள் நடத்தப் பட்டிருக்கின்றன.

சத்துணவு அமைப்பாளர் சாவித்திரி பற்றி நான் சொன் னேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந் திருக்கிறேன். அரசியல் தலையீட்டின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை. இன்றைய தினத்திலே குற்றவாளிகள் வெளியிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று திருப்பூரில் அம்மணி அம்மாள் என்பவர் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டு கிணற்றிலே தூக்கி எறியப்பட்டிருக்கிறார். இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் காவல்துறையினர் கண் காணித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காவல் துறைக்கு நிச்சயமாகத் தெரியாமல் இருக்க முடியாது. அது என்ன காரணத்தினாலேயோ அவர்கள் இதுவரையில்

நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகையினாலே, இதுபோன்ற நடவடிக்கைகளிலே காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. முடித்து விடுகிறேன். அங்கு புதிய தீயணைப்பு நிலையத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் காவல் நிலையங்கள் கூட பலயிடங்களிலே இன்றைக்கு வாடகைக் கட்டிடங்களிலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதற்கெல்லாம் அரசு காவல் நிலையங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்றுதான் இன்றைக்குக் காவலர்கள் குடியிருக்கின்ற அந்தப் பகுதிகளில் அநேகமாகப் பார்த்தோம் என்று சொன்னால்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாக்கியத்தை முடிக்கலாம்.

திரு. ஜி. பழனிச்சாமி : வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடு, வசதிகள் போதவில்லை இவ்வளவு நவீன காலத்திலே கூட அவர்கள் குடியிருப்பதற்கு........ (மணியடிக்கப்பட்டது).

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத்தின் காவலன் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் காவல் துறை மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களை இந்த மாமன்றத்தில் பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில்தான் முதல் முதலில் போலீஸ் கமிஷன் அமைத்தவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான்.

வெள்ளைக்காரர் காலத்தில் கொடுத்த சீருடை, தொப்பி ஆகியவற்றை மாற்றி, கமிஷன் பரிந்துரையை



ஏற்று, முழுக்கால் உடுப்பும், மாற்றுத் தொப்பியும் கொடுத்து, காவலர்கள் கம்பீரமாக இருக்கச் செய்தவர் நமது முதல்வர் அவர்கள்.

அதைப்போல, சட்டம்-ஒழுங்கு காவல்துறையுடன், மதுவிலக்கு போலீசையும் இணைத்ததை வரவேற்று, அவர்கள் பயன்படுத்திய வாகனங்களை ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைதிப் பூங்காவாக இருக்கும் தமிழகத்தை சில அராஜக சக்திகள், தீய சிந்தனையுடன் அழிவு மனப்பான்மையுடன் சில நவீன ரக ஆயுதங்களுடன் கொடூரச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழக போலீசார் இந்தப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டாலும் அவர்கள் மேலும் சிறப்பாகப் பணியாற்ற அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பழைய துப்பாக்கிகளை மாற்றி இவர்களுக்கும் புதிய நவீன ஆயுதங்களை வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம் காவல் நிலையத்தில் குறைவான காவலர்களே உள்ளனர். ஒரு காவல் நிலையத்திற்கு ரைட்டர் பணிக்கு இருவர், சென்ட்ரி இருவர், சம்மன் வாரண்ட் கொடுப்பதற்கு இருவர், ரோந்து பீட் செல்வதற்காக ஆறுபேர். விசாரணைக்குச் செல்ல நான்கு பேர். லீவ் ரிசர்வ் போஸ்டுக்கு ஒன்று என்று வைத்துக் கொண்டாலும் சுமார் 15 பேர்களுக்கு மேல் தேவைப்படுகின்றது. ஆனால், அதற்கும் குறைவான காலவர்களேதான் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் உள்ளனர். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், மக்கள் தொகை அடிப்படையில் கூடுதல் காவலர்களை காவல் நிலையங்களுக்கு நியமிக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு, கிராமப் பகுதிகளில் 7 அல்லது 8 ஊராட்சிகளுக்கு ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அல்லது ஒரு புறக்காவல் நிலையமாவது அமைக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதனால் இரவு நேரங்களில் காவல் நிலையத்திற்கு வரும் புகார்களை உடனுக்குடன் கவனிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1973-ம் ஆண்டு பெண் குற்றவாளிகளை விசாரிக்கவும் திருவிழா மற்றும் ஊர்வலங்களில் பெண்களைப் பாதுகாக்கின்ற பணியில் ஈடுபடவும் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள், நகரங்களில் உள்ளது போல மற்றக் காவல் நிலையங்களிலும் பெண் போலீசாரை நியமிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள் வேலை வாய்ப்பிலே பெண்களுக்கு 30

விழுக்காடு என்று அறிவித்ததை காவல் துறையிலும் அவர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

12-40 மணி.

காவலர்கள் கலவர நேரங்களில் பணியில் ஈடுபடும்போது அவர்களுக்கு இரும்புத் தொப்பி, தடுப்பு ஆகியவை வழங்கப் பட்டாலும் அவற்றால் அவர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாததால், அவர்கள் காயமுறுவதுடன், கலவரத்தை உடன் அடக்க முடியாமலும் போகிறது. எனவே, —சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ், பி.எஸ்.எப். ஆகியவற்றில் வழங்கப்படுவதைப் போல பாதுகாப்பு கருதி, தலைமுழு வதும் மூடும் ஹெல்மெட், பஞ்சு தைத்த கோட், கிரிக்கெட் வீரர்கள் கால்களில் அணிவதைப் போன்ற முழங்கால் பகுதி யில் அடிபடாமல் இருக்க 'பேட்' ஆகியவற்றை அவர்களுக்கு வழங்கிட வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறேன். போலீசாரின் பாதுகாப்பு கருதியும் கலவரம் ஏற் படும்போது அதனை உடன் அடக்குகின்ற வகையிலும் இந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலும் மதுரையிலும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடைபெறும்போது பாதுகாப்பு பணியில் குதிரைப் படை தமிழகப் போலீசாரால் பயன்படுத்தப்படுகின்றது. இதைப்போல, சேலம் மாவட்டம் உள்பட அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் குதிரைப்படை அமைக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றங்களின் தடயங்களைக் கண்டுபிடிக்க காவல் துறையில் துப்பறியும் நாய்களை பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டு துப்பறியும் நாய்கள்தான் உள்ளன. குற்றம் நடை பெறும் இடத்திற்கு தடயங்களை உடனடியாக கண்டுபிடிக்க துப்பறியும் நாய்களை அழைத்துச் சென்றால்தான் தடயங் களை உடனுக்குடன் கண்டுபிடிக்க முடியும். இரண்டு துப் பறியும் நாய்களைக் கொண்டு இரண்டு மாவட்டங்களில் நடைபெறும் குற்றங்களின் தடயங்களைக் கண்டுபிடிக்க முயலும்போது காலதாமதம் ஏற்பட்டு, தடயங்கள் அழிந்து குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாமல் போகின்றன. எனவே, ஒவ் வொரு டி.எஸ்.பி. அதாவது துணை காவல் கண்காணிப் பாளர் அலுவலகத்திற்கும் ஒரு துப்பறியும் நாய் என்கிற வகையில் காவல் துறையினருக்கு வழங்கி, குற்றங்களை உட னுக்குடன் கண்டுபிடிக்க வேண்டும். இதற்கு கூடுதல் துப் பறியும் நாய்களை வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியில் பனமரத்துப்பட்டியில் உள்ள புறநகர் காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் வீரபாண்டி ஒன்றியத்தின் எளம் பிள்ளை பகுதியில் வாழ்கின்ற பொதுமக்கள் காவல் நிலை யத்திற்கு வர வேண்டுமென்றால் சுமார் 26 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டியுள்ளது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருதி ஒரு காவல் நிலையத்தை அங்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் உள்ள செந்துறை ஒன்றியத்தில் ஆர். எஸ். மாத் தூரில் ஒரு காவல் நிலையத்தை திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில், சீர்காழி அருகில் உள்ள வைத் தீஸ்வரன் கோவில் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள முருகனை வழிபட பலதரப்பு மக்கள் வருகிறார்கள். அவர்களின் நலனைக் கருதி அங்கே ஒரு காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1982ஆம் ஆண்டு வனக் காடுகளில் உள்ள திருட்டு களைத் தடுக்க போலீஸ் துறையிலிருந்து தனியாக ஒரு பாரஸ்ட் விஜிலென்ஸ் செல் என்கிற அமைப்பு உருவாக்கப் பட்டது. இதனுடைய நோக்கம் வனத்துறையில் உள்ள குற்றங்களை விசாரிப்பதாகும். இந்தியாவில் சந்தன மரங்கள் அதிகமாக உள்ள மாநிலம் நம்முடைய தமிழ் நாடாகும். அதற்கு அடுத்து உள்ளது கர்நாடக மாநிலமாகும். சுமார் 8,000 பேர் தமிழக வனத்துறையில் பணியாற்றியும் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால், காடுகளிலிருந்து சந்தனக் கட்டைகள், விலை உயர்ந்த மரங்கள், யானைத் தந்தம் போன்றவை மற்ற மாநிலங்களுக்கு கடத்தப்படு கின்றன. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் அதிகமாக சந்தன மரங்கள் இருக்கின்ற காரணத்தால், சேலத்தை பாரஸ்ட் விஜிலென்ஸ் செல்லுக்கு தலை மையிடமாக அறிவித்து, மேலும் இதனை விரிவுபடுத்தி, அதிகமான காவல் துறையினரை நியமித்து, காடுகளை பாதுகாக்கின்ற பணியினை அவர்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்குத் தேவையான புதிய நவீனரக ஆயுதங்களை வழங்கி அழிந்து வரும் காடுகளை பாதுகாக்க நடவடிக் கையெடுக்க வேணுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு காவல் துறையினர் அணிகின்ற காக்கி நிறத் துணி மற்றும் யூனிபார்ம் போன்ற வனக்காவல் அதிகாரிகள், தனியார் செக்யூரிட்டி, தொழிற்சாலைகளில் பணி புரிகின்ற காவலர்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ட்ராபிக் ஊழியர்கள் மற்றும் சிலர் அணிகின்றனர். இதனால், காவல் துறையினருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு பொதுமக்கள் மத்தியில் தெரிவதில்லை. இதனால், பலவித இடையூறுகளும் குற்றங்களும் மோசடிகளும் நடைபெறுகின்றன. ஆகவே, காக்கி யூனிபார்ம் என்பது எப்படி இராணுவத்தில் உள்ள யூனிபார்மை மற்றவர்கள் அணியக் கூடாது என்று இருக்கிறதோ அதைப் போல, தமிழகக் காவல் துறையின் காக்கி யூனிபார்மிற்கு தனி மரியாதை கிடைக்கின்ற வகையில், காவல் துறையினரைத் தவிர, வேறு யாரும் அதனைப் பயன்படுத்தக் கூடாது என்கிற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமாய் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

12-45 மணி.

தமிழ்நாட்டில் பிரைவேட் செக்யூரிட்டி போர்ஸ் என்கின்ற அமைப்பை பலர் அமைத்து அதன் மூலம் தனியார் வியாபார ரீதியில் பலர் கொள்ளை லாபம் அடித்து வருகின்றார்கள். படித்த வேலை இல்லாத பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையில் தமிழக அரசின் மூலம் செக்கியூரிட்டி போர்ஸ் அமைந்து, வேலை வாய்ப்பு வழங்கியும் தனியார் கொள்ளை அடிப்பதைத் தடுக்க வேண்டுமாய் மிகுந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரங்களில் இருப்பதைப் போல புறநகர் மற்றும் கிராமப் பகுதியிலும், காவலர்களால் ரோந்து சுற்ற ஏற்பாடு செய்ய வேண்டும், இதனால், கொள்ளை, கற்பழிப்பு, களவு போன்றவைகளை கட்டுப்படுத்த முடியும் என்றும், காவல் நிலையங்களில் இரவு நேரங்களில் சென்றால், செக்யூரிட்ரி மட்டும்தான் உள்ளார். இந்த நிலையை மாற்றி, இரவு நேரங்களில் ஆய்வாளர் அல்லது ரைட்டர் மற்றும் இரண்டு காவலர்கள் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தற்போது காவலர் பணிக்கு காவல் நிலையங்களில் பணிபுரிகின்ற காவலர்களுக்கு கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு வரை உள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை காவலர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் எனவும் உள்ளது. இது பிரிட்டிஷ் காலத்திலிருந்து இந்த நாள் வரையில் உள்ள நிலையாகும். இருவருக்கும்



பதவி ஒன்றாகவும், சம்பள விகிதம் ஒன்றாகவும் இருந்தும், பணியாற்றும்போது அவர்களுக்குள் அலுவல்களில் வேறுபாடு உள்ளது. இதனால் அவர்களுக்குள் மனமாச்சிரியம் உள்ளது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால்.......... (மணியடிக்கப்பட்டது).

தலைவர் அவர்களே, 18 வயதிலிருந்து 20 வயதுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் காவலர் பணிக்கு கல்வித் தகுதி குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு அல்லது எஸ். எஸ். எல்.சி. என்று வைத்து தமிழ்நாடு சிறப்பு காவல்துறையின் மூலம் எடுக்கப்பட்டு, அவர்கள் 5 ஆண்டுகள் அதில் பணியாற்றி, பின்பு ஒரு ஆண்டு காலம் ஆயுதப்படையில் பணியாற்றி, பின்பு காவல் நிலையத்தில் பணிபுரிய வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இதனால் படித்த இளைஞர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதோடு அனைவருக்கும் ஒரே நிலை ஏற்பட்டு, மனமாச்சரியங்கள் வராத நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை ஆயத் தீர்வைத் துறை தீயணைப்புதுறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் மக்களை சமூக விரோதிகளிடமிருந்து மீட்கவும் ஏழை எளியவர்களின் நலன் காக்கவும் காவல்துறை ஒரு முக்கிய பங்கை ஆற்றி வரவேண்டும். இது செவ்வனே நடைபெறுவதற்கு இருக்கிற சில குறைபாடுகள் களையப்பட வேண்டும். காவல் துறை தன்னிச்சையாகச் செயல்பட அரசு முன்வந்தால்தான் இந்தத் துறையானது சிறப்பாகச் செயல்பட முடியும். இந்தியாவிலே தமிழக காவல்துறை ஒரு சிறப்பான காவல் துறை என்று பல காலமாக சொல்லப்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்போது அந்த நிலையில் கொஞ்சம் சரிவு ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் துறையிலே சில சீர்திருத்தங்களைச் செய்தாலொழிய அந்தப் பெயரைக் காப்பாற்றுவது மிகவும் கடினமாகும்.

சுமார் 20 ஆண்டுக் காலமாக எத்தனை காவலர்கள் ஒவ்வொரு காவல் நிலையங்களிலும் இருந்தார்களோ, அதே நிலைதான் இப்போதும் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டும். காவலர்களுடைய எண்ணிக்கையை அதிக அளவில் கூட்டவேண்டும் குற்றங்கள் அதிகரிக்கின்றன. ஜனத்தொகை பெருகிக் கொண்டு இருக்கிறது.

அதற்கேற்றார்போல காவலர்களுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை நான் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

காவல் நிலையங்கள் மிகவும் பழமையானவையாகவும் வசதி இல்லாமலும் இருக்கின்றன. சில காவல் நிலையங்களில் லாக்-அப் ரூம்கள் கூட கிடையாது. சில வாடகைக் கட்டிடத்தில் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆலங்குளத்திலே ஒரு போலீஸ் ஸ்டேசன் சுமார் 40 ஆண்டுக் காலமாக இடிந்த கட்டிடத்தில் இருந்து கொண்டு இருக்கிறது. மற்ற அறைகள் பூட்டப்பட்டு, இப்போது ஒரு அறையில்தான் அந்த போலீஸ் ஸ்டேசன் நடந்து கொண்டிருக்கிறது. இதைக் கட்டுவதற்கு பல கோரிக்கைகளை வைத்த பின்பும் கூட இன்னும் அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

அதைப்போல போலீஸ் சர்க்கிள் ஆபிசிலே போன் செய்வதற்குக் கூட வசதி கிடையாது. ஏதாவது ஒரு காரியத்திற்கு சர்க்கிளிடம் சொல்ல வேண்டும் என்றால், போன் வசதி கூட இல்லாத நிலைமை இருக்கிறது. அதேபோன்று இப்போது 20 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு போலீஸ் ஸ்டேசன் என்ற நிலைமையை உருவாக்கி, 20 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு போலீஸ் ஸ்டேசன் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி என்றால்தான் இந்தத் துறையானது சிறப்பாக செயலாற்ற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களுக்கு சலுகைகள், காவலர்களுக்கு காலனி, வீடுகள் இல்லாததால், பல இடங்களில் வாடகைக்கு வீடுகளைப் பிடித்து பல இன்னல்களுக்கு அவர்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். காவலர்களுக்கு ரேஷன் மூலம் முந்திய ஆட்சிக் காலத்திலே 24 கிலோ அரிசி மற்றும் 4 கிலோ சீனி, 4 கிலோ துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு போன்ற பொருட்கள் அவர்களுக்கு வினியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அது 12 கிலோ அளவிற்கு குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-50 மணி

பருப்பு, சீனி, எல்லாமே——அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் எல்லாமே குறைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு குறைக்கப்பட்டிருப்பது என்ன நியாயம் என்று தெரியவில்லை. அது கூட, இப்பொழுது அவர்களுக்கு முறையாக, ரேஷன் கடை



களில் வழங்கப்படாமல் ரூ. 150 கொடுத்துவிட அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால், இப்பொழுது விலைவாசி ஏற்றத்தில் அவர்கள் எப்படி தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்த முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவல் துறையில் பெண்களை அதிகமாக எடுத்து, அவர்களுக்குத் தனியாக ஒரு பிரிவைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

துப்பறியும் நாய்கள் 946 வழக்குகளில், 330 வழக்குகளில்தான் பயன் உள்ளனவாக இருந்தன என்று கூறப்பட்டுள்ளது. அந்த நாய்களுக்குச் சிறப்பான பயிற்சியினை அளித்து, அந்த நாய்கள் போலீசுக்கு குற்றங்களை கண்டு பிடிக்க உதவியாக இருக்கும் வகையில் ஒரு சிறந்த படையாக அதனை ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை தன்னிச்சையாக செயல்படாத அவல நிலை உள்ளது. அதாவது முந்தைய ஆட்சிக்காலத்திலே பலர் பயிற்சி துணை காவல் ஆய்வாளர்களாக போடப்பட்டார்கள். ஆனால் அவர்களில் பலர் இப்பொழுது நிரந்தரம் ஆக்கப்படாமல் அவர்கள் காலத்தை 6 மாதத்திற்கு நீடித்தது மட்டும் அல்லாமல், அவர்களை ஒவ்வொரு இடமாகப் பல இடங்களுக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ அரசியல் உள் நோக்கத்தோடு செய்யப்படுகிறதோ என்பதைப் போல் தோன்றுகிறது.

அது மட்டும் அல்ல, 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்த காவலர்களுக்கு செலக்ஷன் கிரேட் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. வேறு துறைகளிலே செலக்ஷன் கிரேட் என்ற முறையைக் கொண்டு வந்து, போலீஸ் துறைக்கு மட்டும் அந்த முறையைக் கொண்டு வராதது பெரும் வருத்தத்தைக் கொடுப்பதாக இருக்கிறது.

அது மட்டும் அல்ல, இப்பொழுது எங்கு பார்த்தாலும் வீரப்பன் கோஷ்டிகள் போன்றவற்றால் போலீசாருக்குத் தொந்தரவு. அது மட்டும் அல்ல, விடுதலைப் புலிகளால் போலீஸ்காரர்களுக்குத் தொந்தரவு. போலீசார் கொல்லப்படுகிறார்கள். வீரப்பன் கோஷ்டிகளால் போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டார்கள். ஆகவே, போலீஸ்காரர்களுக்கு, மேற்கண்ட கோஷ்டிகள் வைத்திருப்பது போன்ற உயர்ரக இயந்திரத் துப்பாக்கிகள் எதுவும் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து, புதிய இயந்திரத் துப்பாக்கிகளை எல்லாம் அவர்களுக்குக் கொடுத்து, அரசாங்கம் தனிப் படையை எடுத்து, அவர்கள் அதை ஃபேஸ் பண்ணுவதற்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைக்கின்றேன்.

ஆளுங்கட்சித் தலையீடுகள் சிலவற்றை நான் உங்களிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. நல்ல கோரிக்கைகளுக்காக, போலீஸ் துறையிலே தலையிடுங்கள். தயவு செய்து சில நேரங்களிலே பிரச்சினைகளை உண்டு பண்ணுவது போல் நீங்கள் இருக்க வேண்டாம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஆலங்குளத்திலே, இரண்டு வாரத்திற்கு முன்னால் ஒரு பிரசசினை வந்தது. ஒரு கோஷ்டியினர், எப்போதுமே அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மிகவும் கொடுமையானவர்கள்; போலீஸ் ஸ்டேஷனைக் கூட உடைத்து, அங்கு வைத்திருந்தவர்களை மீட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழிலே சாராயம் விற்பது. ரோடுகளிலுள்ள கடைக்காரர்களை மிரட்டி, பணத்தைப் பறிப்பது ; அவர்களை யாராவது தட்டிக் கேட்டால் அவர்கள் மிரட்டுவார்கள். அக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் பட்டப் பகலில், இரண்டு பேரைக் கத்தியால் குத்திவிட்டுச் சென்று விட்டார்கள். போலீசார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும்போது கூட, சில நேரங்களிலே, அதிலே ஒருவர் உங்கள் கட்சிக்காரர் ; அவர் ஏதோ ஓராண்டுக்கு முன்னால் அந்தக் கட்சியில் சேர்ந்திருக்கலாம். அவர்கள் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியிலே இருப்பார்கள். ஒரு கட்சி இல்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்; வேறு கட்சி வந்தால் அந்தக் கட்சியில் இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தக்க கவனம் செலுத்தி, அதைக் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இராதாபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அவருடைய தொகுதிக்கு தண்ணீர் விட வேண்டுமென்று கோரி அறப் போராட்டம் நடத்தினார்கள். ஆனால், அப்படி அறப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் மத்தியிலே அடிதடி நடத்தி, அவரை அவமானப்படுத்தி, இழிவுபடுத்திப் பேசியிருக்கிறார், அங்குள்ள டி.எஸ்.பி. அவர்கள். ஆனால், இங்கே உங்களுக்குத் தகவல் கொடுக்கும்போது, தண்ணீர் எல்லாம் விடப்பட்டது என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே சட்டமன்றத்தில் பேசுவது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது. ஒரு தவறான தகவலை டி.எஸ்.பி. கொடுத்திருக்கிறார். அந்த விவரத்தை நீங்கள் இங்கு சட்டமன்றத்தில் படிப்பது நியாயம்தானா என்று கேட்கிறேன். இராதாபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய நியாயமான ஒரு கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல், டி.எஸ்.பி. அவர்களை ஆதரிப்பது அவ்வளவு சரியான முறை அல்ல; அதை நீங்கள் கண்டிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்ல, சிவகாமிபுரத்திலே ஒரு பெண் கொலை செய்யப்பட்டார். அதை ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன்



12-55 மணி

அவர்கள் கூட அதுபற்றி கடிதம் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார். அதில் இன்னும் தக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அதில் கூட தலையீடுகள் இருக்கின்றனவோ என்று நான் ஐயப்படுகிறேன். போலீஸ் அதிகாரிகள் முதலாவதாக அவர்களை நாங்கள் பிடித்து விட்டோம்; கிட்டத்தட்ட 65 சதவீதம் பிடித்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் பிடித்தவர்களை மீண்டும் வெளியே விட்டு விட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இதிலே ஏதாவது மேலிடத்திலிருந்து தலையீடு இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. இந்தக் கேஸை நான் உங்களிடம் சொன்னபோது கூட இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் அந்தக் குடும்பத்திற்கு அந்த ஊருக்கு, அந்த ஊர் மக்களுக்கு இன்னும் பதட்டம் அதிகமாக இருக்கிறது. ஆக, கொலை செய்தவன் கூட காப்பாற்றப்படுகிறான் என்ற நிலைமை இருக்கிறது.

மேலும் குற்றங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் பெரிய திருட்டுகள் 1989-90-ல் 21,738; ஆனால் கண்டு பிடிக்கப்பட்டவை 15,598. அதைப்போல வழிப்பறி 414, கண்டுபிடிக்கப்பட்டவை 199 என்று குறிப்பிலே போடப்பட்டிருக்கிறது. ஆகவே காவல் துறையை இன்னும் துரிதப்படுத்த வேண்டும். ஏனென்றால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. 1988-89-லே 68.3 என்று இருந்த சதவீதம் 1989-90-லே 67.5 என்று குறைந்துள்ளது. அப்படி என்றால் காவல் துறையினுடைய பரிசீலனையை நீங்கள் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சாராயம். எங்கு பார்த்தாலும் கள்ளச்சாராயம் இருக்கிறது. ஓராண்டுக்கு முன்னால் போன தடவை தமிழக மக்கள் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். தமிழக முதலமைச்சர் இந்தக் கள்ளச்சாராயத்தை எப்படியாவது ஒழித்துவிடுவார் என்று எதிர்பார்த்தார்கள். கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஒரு பெரிய போலீஸ் அதிகாரி சிறப்பாகச் செயல்பட்டு, நன்றாக நடத்தி வந்தார். அப்படி நடத்தி, கிட்டத்தட்ட கள்ளச்சாராயம் ஒழிக்கப்படும் நிலையில் இருந்தது. ஒவ்வொரு கிராம மக்களும், பெண்களும் தாய்மார்களும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சந்தோஷப்பட்டார்கள். ஆனால் அந்த மக்களை ஏமாற்றக்கூடிய வகையில் இப்படி திடீரென்று மலிவு விலையில் சாராயம் விற்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது இப்போது கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. எங்கே பார்த்தாலும் இப்போது கள்ளச் சாராயம் விற்பனையாகிறது; அதைத் தடுக்க முடியவில்லை. அரசாங்கமே மலிவு விலையில் சாராயம் கொடுக்கும்போது

D
V21,31(N90
N9.. 31.3
143978

நாங்கள் ஏன் கள்ளச்சாராயம் காய்ச்சக் கூடாது என்று கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் இதிலே தீவிரமாக இருக் கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதற்கு நம்முடைய அரசாங்கம் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன்.

அது மட்டுமல்லாமல், பல்வேறு குற்றங்களுக்கும் சில நேரங்களில் இந்தக் காவல் துறை காரணமாக இருக்கிறது. பண்ருட்டியில் நடைபெற்ற சம்பவத்திற்குக் கூட காவல் துறை அதிகாரிகளே காரணமாக இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகள் மீது அரசாங்கம் கடுமையான நட வடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் பண்ருட்டியிலே நடந்தது சாராயச் சாவு, கொலையானது, அங்கே இறந் தார்களே, அதற்கு விஷத்தன்மை சாராயம் மதுவிலக்குப் பிரிவிலே இருக்கிற போலீசாரிடமிருந்து வந்தது என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இது போன்ற சம்ப வங்கள் மேலும் நடைபெறக் கூடாது. சில போலீஸ்காரர் களே கள்ளச்சாராயம் காய்ச்சக் கூடிய அளவில் அதாவது கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களிடமிருந்து சென்று சாராயம் காய்ச்சுவதாக பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன.

மேலும், கற்பழிப்பு சம்பவம் பரவலாக நடைபெறு கிறது. இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட குற்றங்களுக்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும். தமிழகக் காவல்துறை சிறப்பாகப் பணியாற்றக் கூடிய ஒரு காவல் துறையாக மீண்டும் ஆக்கப்பட வேண்டும்; அரசாங்கம் அதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஜெ. அசேன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு, ஆயத்துறை, காவல்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கி யமைக்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்தமுறை இந்த மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெற்றபோது என்னுடைய தொகுதியிலிருக்கிற தீயணைப்பு நிலையத்திற்கு சரியான வாகனங்கள் இல்லை என்று நான் முறையிட்டேன். " சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் " என்று சொல்லி, அதையே கடைப் பிடித்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறர் சொல்லுகின்ற நல்லவற்றையும் கேட்டு, அதில் உண்மை இருக்கு மானால் அதையும் செய்யக்கூடிய முதலமைச்சர் என்ற காரணத் தினாலே என்னுடைய தொகுதியிலே ஓட்டை உடைசலாக இருந்த வாகனங்களை மாற்றி, இரண்டு புதிய வாகனங்களையும் அதைப் போல ஒரு ஆம்புலன்ஸ் வண்டியையும் வாங்கித் தந்திருக்



கிறார்கள். அது மட்டுமல்ல. 40 அடி ஆழத்திலே இருக்கிற நீரை உறிஞ்சக்கூடிய மோட்டாரை 3,08,000 ரூபாய் செலவிலே வாங்கி என்னுடைய தொகுதிக்குத் தந்திருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ் சார்ந்த நன்றியை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற தீயணைப்பு நிலையங்களை நவீனப்படுத்தும் முயற்சியிலே தமிழக முதல்வர் அவர்கள் ஈடுபட்டிருப்பது பாராட்டுதற்குரியது. அதுவும் இல்லாமல் கடந்தமுறை அவர்கள் சொல்லும்போது 10 புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். சொன்னபடியே இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முடிவதற்குள் 10 புதிய தீயணைப்பு நிலையங்களை அமைத்திருக்கிறார்கள் என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, ஆயத்தீர்வை பற்றி சொல்ல வேண்டுமானால் 1988 -89 ஆம் ஆண்டு சுமார் 148 கோடி ரூபாயாக இருந்த வருமா னத்தை இன்றையதினம் ஏறத்தாழ 300 கோடி ரூபாயாக உயர்த்திய பெருமை தமிழக முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

13.00 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் ஒப்புதலு டன் அவையின் அலுவல் நேரம் 8 மணித் துளிகள் நீட்டிக்கப்பட் டிருக்கிறது.

**திரு. ஜெ. அசேன்** : அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட ஆயத் தீர்வை மானியத்தின் மீது பேசுகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வது எல்லாம், நீங்கள் பாக்கெட் சாராயம் வழங்குவதற்காக திட்டத்தை வகுத்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சாராயம் என்பது இனிமேல் அடக்கமுடியாத ஒன்று, கள்ளச் சாராயம் என்பது யாராலுமே கட்டுப்படுத்த முடியாத ஒன்று என்ற நிலை வந்த பிறகு, ' முழுக்க முழுக்க நனைந்துவிட்ட பிறகு முக்காடு எதற்கு ' என்பதைப் போல் பாக்கெட் சாராயம் மட்டும் போதாது. இனிமேல் கள்ளுக் கடைகளை நீங்கள் திறக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதனால் உடல்நலம் சீராகக் கூடிய ஒரு மருந்தாக கள் கருதப் பட்டு வருகிறது. எனவே அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பாக்கெட் சாராயம் தயாரிக்கின்றபோது அதை அரசாங்கமே சாராவித் தொழிற்சாலைகள் மூலமாக செய்வதாகவும் அதன் மொத்த விற்பனையை ' டாஸ்மாக் ' மூலம் செய்வதாகவும் சொல்கிறார்கள். சில்லரையை ஏலம்

விடுவதாகச் சொல்கிறார்கள். அல்லது டெண்டர் மூலமாக
விடுவதாகச் சொல்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். சில்லரையை நீங்கள் ஏலம் விடுவதன் மூலமாக
வருமானம் பணக்காரர்களுக்குத்தான் போகிறது. இன்னும்
குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஏலம் எடுப்
பவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்த
சாராய வியாபாரத்தில் எல்லோரும் ஒற்றுமையாக சேர்ந்து
விடுகிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒற்றுமையாக
சேர்ந்துகொண்டு இந்தக் கடை எனக்கு, அந்தக் கடை உனக்கு
என்று சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். ஏலம் விடுவதைவிட சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்
பல பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடைகளை
நீங்களே பார்த்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இதைச் சொல்கிறபோது ஏதோ ஒரு குறைபாடு ஏற்பட்டுவிடும்
என்று முதலமைச்சர் அவர்கள் எண்ணுவாரேயானால், அவர்
களுக்கு நினைவுபடுத்துகின்றேன். கடந்த காலத்திலே உறுப்பினர்
கார்டு இருந்தாலே போதும் என்று சாராயக் கடைகளைத் தந்த
ஆட்சி நடந்திருக்கிறது. எனவே நான் கட்சிக்காரர்களுக்காக
கேட்கவில்லை. நான் கேட்பது எல்லாம் நலிந்த பிரிவினருக்கு
விடவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி
யும் உங்களாலே தருவதற்கு முடியாது என்று சொன்னால்,
நீங்கள் நேர்மையான ஆட்சி நடத்தவேண்டுமென்று கங்கணம்
கட்டிக்கொண்டு செயல்படுத்தி வருவதை நாங்கள் அறிகின்
றோம். எனவே அப்படியும் முடியவில்லை என்று சொன்னால்
நீங்கள் ஒரு ஊருக்கு 20 கடைகள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.
20 கடைகளை அரசுக் கடைகளாகவே வைத்து விடுங்கள். அதிலே
அந்த ஊரிலே படித்த இளைஞர்களுக்கு வேலையும் கிடைக்கும்.
அந்தக் கடைகளை நடத்துவதற்கு வாய்ப்பாகவும் இருக்கும்.
எனவே ஏலம் விடுகின்ற முறையை தயவுசெய்து நீங்கள் பரிசீலனை
செய்யவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து சில தொழிற்சாலைகள் ஆல்கஹாலைப் பயன்படுத்தி
ரசாயனப் பொருட்களை தயாரிக்கின்றோம் என்று சொல்லி
லைசன்ஸ் வாங்குகிறார்கள். என்னுடைய தொகுதியில் இப்படி
3, 4 தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் அந்த தொழிற்
சாலைகளில் ஆல்கஹால் வாங்கப்படுகிறது. ஆனால் அதற்கு
வேண்டிய ரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படவில்லை.
அது முழுவதும் பாக்கெட் சாராயமாக மாற்றப்படுவதற்கு போய்க்
கொண்டிருக்கிறது. எனவே அதையும் தயவுசெய்து நீங்கள்
கவனிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கி
றேன்.

அடுத்து, காவல்துறையைப் பொறுத்தவரையில் ஒரு நாட்டிற்கு
இரண்டு கண்கள், இராணுவமும் போலீசும் என்று சொல்வார்கள்,
எனவே இந்த இரண்டு பிரிவுகளும் ஒழுங்காக இருக்குமானால்,



நாட்டிலுள்ள மக்கள் நலமாக வாழ்வார்கள். அதற்கேற்ப
இராணுவத்தில் இருக்கின்றவர்களுக்கு 45 வயது இருந்தால்
போதும் என்று சொல்லி, 45 வயதிற்கு மேற்பட்டவர்களை
'ரிடையர்டு' என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அவர்க
ளுக்கு வேறு வேலை தரப்படுகின்றது. அதேபோல் போலீஸ்
இலாக்காவில் இருக்கின்றவர்களுக்கும் 45 வயது என்று நிர்ணயிக்
கப்பட்டு, 45 வயதிற்கு மேல் வேறு வேலை தருவதற்கு நீங்கள்
முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுககொள்
கிறேன். காரணம், இன்றையதினம் காவல் இலாக்காவில் இருக்
கின்றவர்கள் எல்லாம் வயதானவர்களாகவே, குற்றங்களைக்
கண்டுபிடிப்பதற்கு முடியாத நிலையில் திருடனைத் துரத்துவதற்
குக் கூட முடியாத நிலையிலே வயதானவர்களாக இருக்கின்ற
காரணத்தினால் தயவு செய்து நீங்கள் இதை எண்ணிப்பார்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று காவல்துறையில் இருக்கின்ற எண்ணிக்கை
போதவில்லை. சில நேரத்திலே விபத்து நடைபெற்று ரோடில்
பிணங்கள் அநாதையாக விழுந்து கிடக்கின்ற காட்சியை நாம்
பார்க்கின்றோம். ரம்ஜான் பெருநாளில் 27ஆம் தேதி வாலாஜா
விலிருந்து சென்னைக்கு வருகின்ற வழியிலே பாப்பான்சத்திரம்
என்கின்ற இடத்திலே காலையிலே விபத்து ஏற்பட்டிருக்கிறது.
அந்தப் பிணம் 11-30 மணியளவில் போலீஸ் இல்லாமல் ரோடிலே
கிடத்தப்பட்டிருக்கின்ற காட்சியைப் பார்த்தேன். மாண்புமிகு
முதலமைச்சரை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு
25 கிலோ மீட்டருக்கும் ஒரு 'ஆக்சிடெண்ட் மொபைல் போலீஸ்'
என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி இப்படிப்பட்ட விபத்துக்களி
னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு நீங்கள்
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே குற்றங்கள் குறைந்துகொண்டு
இருக்கின்றன. அதற்குக் காரணம், எங்களுடைய மாவட்டத்
தில் இருக்கின்ற மாவட்டத் தலைமை காவல்துறை அதிகாரி
அவர்கள் போலீசை ரோந்து வைத்து, அந்தப் போலீஸ்காரர்கள்
இரவில் ரோந்து சுற்றுகின்ற காரணத்தினாலே இன்றையதினம்
அவைகள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு
நல்ல திறமையாக செயல்படக்கூடிய நம்முடைய முதலமைச்சரைக்
கேட்டுக் கொள்வது எல்லாம் 'டிராஃபிக் போலீஸ்' என்றிருக்
கிறது.

13-05 மணி

தமிழ்நாட்டிலே நீங்கள் நல்ல பெயர் எடுக்க வேண்டும்.
இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களைவிட உங்க
ளுடைய ஆட்சி திறமையான ஆட்சி என்று பலபேர் புகழ்ந்து
கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர்
உண்டாக்க வேண்டும் என்கிற வகையிலே 'டிராபிக் போலீஸ்,

செயல்பட்டுக் ' கொண்டிருக்கிறது. அது ' டிராபிக் போலீசாக '
இல்லாமல் ' டேரிப் ' போலீசாக இன்றையதினம் செயல்பட்டுக்
கொண்டிருக்கிற காட்சியை நாம் பார்க்கின்றோம். ரோடு ஓரத்
திலே பல இடங்களிலே லாரிகளை நிறுத்தி மாமூல் வாங்கிக்
கொண்டு, அதைப் பார்க்கின்றவர்கள் எல்லாம் அருவருப்பாகத்
திட்டக்கூடிய அளவுக்கு, இந்த ஆட்சியைக் கேவலமாக விமர்சனம்
செய்யக்கூடிய அளவுக்கு 'டிராபிக் போலீஸ்' இருக்கிறது. இன்னும்
சொல்லப் போனால் அந்த லாரியை ஓட்டுகின்ற ' டிரைவர்
களை ' இழுத்துப் போட்டு அடிக்கின்ற காட்சியை பொதுமக்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனுடைய பின் விளைவு
என்னவென்று சொன்னால், அந்த லாரி எங்கெங்கு போகிறதோ
எந்தெந்த ' டீ ' கடையிலே அந்த லாரி ' டிரைவர் ' ' டீ ' குடிக்
கின்றானோ, அத்தனை இடங்களிலும் இந்த ஆட்சியைப் பற்றி
விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனக்கு இருக்கின்ற
ஒரே எண்ணமெல்லாம் இந்த ' டிராபிக் போலீஸ் ' இந்த
ஆட்சியை எப்படியாவது களங்கப்படுத்த வேண்டுமென்று திட்டம்
போட்டு இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபடுகிறது என்று நான்
நம்புகின்றேன். எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
இது குறித்து தயவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே
போல கலால் போலீசாரை நீங்கள் மாற்றி அமைத்திருக்கிறீர்கள்.
கலால் போலீசாருக்கு இப்பொழுது என்ன வேலை என்பதுகூட
திட்டவட்டமாக தெரியவில்லை. அவர்கள் எந்த 'ஸ்டேஷனில்'
' சார்ஜ் ' எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற நிலையும்
தெரியாமல் இருக்கிறது. அதேபோல் லஞ்சத்தை ஒழிக்க வேண்டும்
என்று சொல்லி லஞ்சத்துறை போலீஸ் இருக்கிறது. அவர்கள்
எத்தனை வழக்குகள் போட்டிருக்கிறார்கள் என்று இதுவரையிலும்
தெரியவில்லை. எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன், அரசு ஊழியர்களுக்கெல்லாம்
அதிகமாக சம்பளம் கொடுத்திருப்பதாக மக்கள் சொல்கிறார்கள்,
நாங்களும் நம்புகிறோம். இவ்வளவு சம்பளம் வாங்கிக் கொண்டு
கூட சில இடங்களிலே லஞ்ச லாவண்யம் பெருக்கெடுத்துக்
கொண்டிருக்கிறது. இந்த லஞ்சத்தை ஒழிக்கின்ற போலீஸ்
உடனடியாக நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட குற்றங்களைத்
தடுப்பதற்கு அவர்கள் முயலவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, இறுதியாக ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
கடந்த 1976-லே ஏறக்குறைய 282 உதவி ஆய்வாளர்களை அரசு
எடுத்தது, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக,
தேர்வாணையத்தின் மூலமாக. அதனுடைய விளைவாக 1987-லே
90 பேருக்கு ஆய்வாளராக பதவி உயர்வு கிடைத்தது. அதற்குப்
பிறகு 1988-லே 120 பேர் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்
றார்கள். அதற்குப் பிறகு மிஞ்சியுள்ள 35 பேர் இதுவரையிலே
பதவி உயர்வு கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கின்ற காட்சி



இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அந்த 35 பேரும் பதவி உயர்வு பெறுவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன், வணக்கம்.

## 6. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண் டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (4-5-1990) தளர்த்த வேண்டும் .''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4-5-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்,

பின்னர் பேரவை பிற்பகல் 13-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

86. தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

159. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

160. தமிழ்நாடு காவல் துறை மீதான ஆய்வுரை, 1989-90. (தமிழ். ஆங்கிலம்).

161. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு இயனைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

162. ' நீர் வளமும் பாசனத் திட்டங்களும், 1990 ' என்கிற புத்தகம். (தமிழ்).

163. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை, 1989-90.

164. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை, 1989-90.

165. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை, 1989-90,





633—ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தமிழ்நாடு காவல் துறை.

### ஆய்வுரை.

மக்கள் நலன் பேணும் அரசில் காவல் துறையின் பணிகள் பல்வேறு பொறுப்புடையதாகவும், சிக்கல்கள் நிறைந்ததாகவும் உள்ளன. மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கான பாதுகாப்பை அளித்து பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சட்டங்களைச் சீராகவும், முறையாகவும் அமல்படுத்துவதில், காவல் துறை அரசுக்கு பேருதவியாக இருந்து வருகிறது. மாநிலத்தில் தொழில், வர்த்தகம் போன்றவைகள் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஏற்ற வகையில், சூழ்நிலையையும், நிலைமைகளையும் கட்டிக் காப்பது காவல் துறையின் கடமையாகும். மாநிலத்தில் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு அமைதியான சூழ்நிலையும், தொழில் அமைதியும் மிகவும் அவசியமானது. இதற்கு காவல் துறை துணை நிற்கிறது.

2. காவல் துறையின் கடமைகளை, மக்களை முறைப் படுத்துதல், குற்ற நிகழ்வைத் தடுத்தல் மற்றும் கண்டு பிடித்தல் என வகைப்படுத்தலாம். முறைப்படுத்தும் பணிகள், நகர சாலைகளில் போக்குவரத்துச் சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்துதல், பல்வேறு பிரிவு மக்களுக்கும் முக்கிய நபர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தல் போன்றவைகளைக் கொண்டதாகும். தடுப்புப் பணிகள் என்பவை முன்கூட்டியே தகவல் சேகரித்தல், வகுப்புக் கலவரம், தொழிலாளர் அல்லது மாணவர்களின் அமைதியின்மை ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து, சட்டம், ஒழுங்கு, அமைதி காத்திட நடவடிக்கைகளை எடுப்பதாகும். காவலர்களின் துப்பு துலக்கும் பணியானது குற்றங்களை உடனுக்குடன் புலன் விசாரணை செய்து கண்டுபிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் தொடர்ந்த வழக்குகளின் அடிப்படையில் தண்டனை பெற்றுத் தருதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தொழில் மயமாக்கம் மற்றும் நகர்ப்புறங்களின் விரிவாக்கம், கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடிபெயருதல் மற்றும் மாறிவரும் சமூக நீதிகள் ஆகியவற்றால், குற்றங்கள் மற்றும் குற்றங்கள் புரிதலின்

நன்மைகள் ஆகியவை பெரிதும் மாறியுள்ளன. இவ்வாறு மாறிய சூழ்நிலையில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினர் நவீனக் கருவிகள் மற்றும் நடைமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது.

3. தனது பொறுப்புகளை நன்குணர்ந்த தமிழ்நாடு காவல் துறை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு பணிகளை கரடு முரடான பாதைகளைக் கடந்து நல்ல முறையில் நிறைவேற்ற, தக்க ஆர்வம் மற்றும் பணியின்பால் ஈடுபாடு ஆகியவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதன் மூலம், அரசு மற்றும் பொது மக்களின் பாராட்டை ஒருங்கே பெற்றுள்ளது. 1989ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவல் துறையை பொறுத்தமட்டில், நாடாளுமன்ற தேர்தல், போன்ற பல பிரச்சினைகள் நிறைந்ததாக இருந்தது. இருப்பினும், நமது காவல் துறை இத்தகைய நிலைமைகளை திறமையாக சமாளித்தது.

4. சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள நலிந்த பிரிவினர் களுக்கு உதவும் வகையில் காவல் துறையினர் சமுதாய நலச் சட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றனர்.

5. குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் குண்டர்கள் சட்டம், கள்ளச் சாராயக்காரர்கள் தடுப்புச் சட்டம், வழக்கமாக குற்றம் புரிவோர் தடுப்புச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றை காவல் துறை தீவிரமாக அமல்படுத்தி மாநிலத்தில் பல சமுதாய விரோதிகளை கைது செய்து அவர்களை தடுப்புக் காவலில் வைத்துள்ளது.

6. குற்றவாளிகளை காலதாமதமின்றி கண்டு பிடித்து அவர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுத் தந்ததன் மூலம், தமிழ்நாடு காவல் துறையினர் நாட்டிலேயே தனக்கென ஒரு தனி இடத்தை பெற்றுள்ளனர். கிராமப் புறங்களில் காவல் துறையினர் பணியாற்ற, மக்கள் தங்களுக்கு உதவிடும் வகையில் அவர்களின் ஆதரவைப் பெறுதல் மற்றும் இது போன்ற நடவடிக்கைகள் காவலர்-பொது மக்கள் உறவுகளை வெகுவாக மேம்படுத்தியுள்ளன.

7. காவல் துறையினரின் பொறுப்பு மிக்க கடமைகளை மனத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான போக்கு வரத்து வசதி, நல்ல தகவல் தொடர்பு முறை, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கான நவீன விஞ்ஞான கருவிகள் போன்ற வசதிகளை அளிப்பதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.



நிதிப் பற்றாக்குறை அதிகமாக இருந்தபோதிலும் காவல் துறைக்கு நிதி ஒப்பளிப்பதில் அரசு தனது தாராள தன்மையைக் காட்டியுள்ளது. காவல் துறையில் பணியாற்றுபவர்களுக்கு அவர்களுக்கு ஒப்பாக மத்திய மற்றும் மாநில அரசு துறைகளில் பணியாற்றுபவர்களை விட அதிகமாக ஊதியங்களை மாநில அரசு வழங்கியுள்ளது.

8. நவீன காவல் படைக்கு, அதன் பணியாளரமைப்பு, நவீன கருவிகள், தெளிவான வரையறுத்த ஆணை, கட்டுப்பாடு ஆகியவை மிகவும் இன்றியமையாதவையாகும். பணியாளர் தொகுதியைப் பற்றியும, காவல் துறையினுடைய அமைப்பு பற்றியும் விவரங்கள் பகுதி-1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. காவல் துறை திறமையாக செயல்பட வேண்டுமானால், அதற்கு நல்ல தகவல் தொடர்பு சாதன அமைப்பும், வலுவான வாகன வசதியும் அளிக்கப்படுவது அவசியமாகும். பகுதி-2 மற்றும் 3 ஆகியவை காவல் துறையில் உள்ள தகவல் தொடர்பு மற்றும் அறிவியல் சாதனங்கள் பற்றிக் கூறுகின்றன.

10. காவலர்கள் ஒழுக்க உணர்வுடன் செயல்படுவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு ஏற்படுத்தியுள்ள பல்வேறு நல வளர்ச்சித் திட்டங்கள் பகுதி 4-ல் குறிப்பிடப் பட்டுள்ளது.

11. காவல் துறையினை நவீனப்படுத்துவதற்கு மைய அரசு கொடுக்கும் உதவி பற்றி, பகுதி-5 விவரிக்கிறது.

12. குற்றங்கள், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் விவரங்கள் பகுதி 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

13. பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக தமிழக காவல் துறை மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் தற்போது அவர்களுக்கிடையே நிலவும் நல்லுறவு ஆகியவை பகுதி 7-ல் விவரிக்கப்பட்டுள்ளன.

14. 1989 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு ஒப்பளிக்கப் பட்ட பல்வேறு திட்ட விவரங்களை பகுதி-8 குறிப்பிடுகிறது.

[1990 மே 3

பகுதி 1.

அமைப்பும், பணியாளர் தொகுதியும்.

15. தமிழ்நாடு காவல் துறை, காவல் துறை இயக்குநரின்
தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவர் சட்டம், ஒழுங்கை
பராமரிப்பதுடன் மொத்தமாக மாநிலத்தின் காவல் துறை
நிருவாகப் பொறுப்பினையும் கவனித்து வருகிறார். காவல்
துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (சட்டம் மற்றும் ஒழுங்கு)
இம்மாநிலத்தின் அன்றாட நிருவாகம், சட்டம் ஒழுங்கினை
நிலைநாட்டும் பணிகளில் காவல் துறை இயக்குநருக்கு
உதவியாக உள்ளார். காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்
(குற்றங்கள்) சிறப்பு குற்ற வழக்குகள் மற்றும் தொழில்
நுட்ப பணிகளைக் கவனித்து வருகிறார். காவல் துறை
இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (வனப் பிரிவு குற்றப் புலனாய்வுத்
துறை) வனவளம் மற்றும் உணவுப் பொருள் வழங்கு
துறை தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியினை
மேற்கொண்டுள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்
(ஊர்க் காவல் படை) மாநிலத்தின் சிவில் பாதுகாப்பு மற்றும்
ஊர்க்காவல் படை நிருவாகத்தைக் கவனித்து வருகிறார்.
காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு அமல் பிரிவு) மது
விலக்கை செயல்படுத்தும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளார்.
தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மற்றும் பயிற்சி நிருவாகப்
பொறுப்பு 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம்
தேதி வரை காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (படைக்
கலப் பிரிவு மற்றும் பயிற்சி) பொறுப்பில் இருந்து வந்தது.
அதன் பிறகு படைக்கலப் பிரிவு மற்றும் பயிற்சி ஆகிய
வற்றினை காவல் துறைத் தலைவர் மதுவிலக்கு அமல் பிரிவு
மேற்கொண்டுள்ளார். காவல் துறைத் துணைத் தலைவர்
(நுண்ணாய்வு) பாதுகாப்பு மற்றும் நுண்ணாய்வு பணிகளைக்
கவனித்து வருகிறார்.

16. தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல்
பணி பதவிகளின் (I.P.S.) எண்ணிக்கை 180 ஆகும். 1989 ஆம்
ஆண்டு ஒரு இ.கா.ப. அதிகாரி பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
நேரடியாக தேர்வு செய்யப்பட்ட 7 இ.கா.ப. அதிகாரிகள்
தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டனர். பதவி உயர்வு அடிப்
படையில் இந்தியக் காவல் பணி பதவிக்கு தமிழ்நாடு காவல்
பணி அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படவில்லை. காவல்
துறை துணை கண்காணிப்பாளர்கள் பதவிக்கு பத்துப்
பேர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள்
பயிற்சிக்காக காவல் துறை பயிற்சிக் கல்லூரியில் 1989 ஆம்
ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதியன்று சேர்ந்தனர்.



990 மே 3]

17. இணைப்பு 1-ல் கண்டுள்ளவாறு 1990 ஆம் ஆண்டு
னவரித் திங்கள் 1 ஆம் தேதியன்று தமிழ்நாடு காவல்
துறையின் மொத்த பணியாளர் எண்ணிக்கை 67,094 ஆகும்.
இணைப்பு 2-ல் குறிப்பிட்டுள்ளபடி 1989 ஆம் ஆண்டு 231
நிர்வாகப் பணி பதவிகளும், 57 அமைச்சுப் பணி பதவிகளும்
மற்றும் 14 பிற பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன.

18. தமிழ்நாடு சேமக் காவல் படையின் 189 பிரிவுகளும்
தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 9 அணிகளும் சட்டம்
மற்றும் ஒழுங்கை திறம்பட பேணிக் காத்திட உள்ளூர் காவல்
துறையினருக்கு உதவி வருகின்றனர். மாநிலத்திற்கு வெளியே
மைய அரசின் கீழ் முகமைப் பணி புரிய 1989 ஆம் ஆண்டு
ஆகஸ்ட் திங்கள் 10 ஆம் தேதி வரை தமிழ் நாடு சிறப்புக்
காவல் படையின் 6-வது அணியும், 1989 ஆம் ஆண்டு
ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் தேதி முதல் 9-வது அணியும்
டெல்லிக்கு அனுப்பப்பட்டன.

19. இம்மாநிலத்தில் சென்னை நகரம், தென் ஆற்காடு,
மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு-
அம்பேத்கார், சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி
கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய 10 மாவட்டங்
களில் உள்ள துப்பறியும் நாய்ப்படைகள் குற்றங்களைக்
கண்டுபிடித்து, காவல் துறையினருக்குத் துணை புரிவதில்
சிறப்பான பணியினை ஆற்றி வருகின்றன. 1989 ஆம் ஆண்டு
இவைகளின் பணி 946 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டன.
337 வழக்குகளில் அவை பயனுள்ளனவாக இருந்தன.

20. மக்கள் கூட்டங்களை கட்டுப்படுத்துவதிலும், போக்கு
வரத்தை ஒழுங்கு படுத்துவதிலும் குதிரைப் படை
தொடர்ந்து தனது பணியினை நல்ல முறையில் நிறைவேற்றி
வருகிறது. சென்னையில் உள்ள குதிரைப் படைப் பிரிவில்
34 குதிரைகளும், கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய
இடங்களில் ஒவ்வொன்றிலும் 10 குதிரைகளும் உள்ளன.

21. ஆதி திராவிட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்
மற்றும் தீண்டாமை ஆகியவற்றை ஒழிக்கும் நோக்கத்தைச்
சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காகக் குடியுரிமைப்
பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் தொடர்ந்து செயல்படுத்தப்
பட்டு வருவதில் அரசு முக்கிய கவனம் செலுத்தி
வருகிறது. குடியுரிமைச் சட்டம் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக்
காவல் நிலையங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர
ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு ஆய்வாளர், ஒரு சார்பு
ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு இரண்டாம்
நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஜீப்பும் கொண்ட 25 நடமாடும்
காவல் அணிகள் இந்தச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்
படுத்துவதற்காக 25 காவல் மாவட்டங்களில் பணியாற்றி

வருகின்றன. இந்த நடமாடும் காவல் அணிகள் அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையில், மாவட்டக் குற்றப் பிரிவு வைப்பறைக்கூடக் காவல் துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கான காவல் துறைத் துணைத் தலைவர், இச்சட்டம் திறம்படச் செயல்படுவதைக் கண்காணித்து வருகின்றனர். சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்படும் மூன்று மேற்பார்வை அணிகள் காவல் துறை துணைத் தலைவருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றன. இது தவிர இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்களை அவ்வப்போது முறைப்படி கண்காணிக்க மாவட்டந்தோறும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் ஒரு சார்பு ஆய்வாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் மேற்கண்ட பணியாளர்களின் உதவியோடு ஒரு பொருளாதார நிபுணர் மற்றும் ஒரு சமூக இயல் வல்லுநர் அடங்கிய ஒரு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, தீண்டாமை அதிகமாகத் தென்படும் இடங்களில் மாதிரி ஆய்வுகள் நடத்தி குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்புகிறது. நலிவடைந்த பிரிவினருக்கு குடிநீர், தெரு விளக்குகள், இடுகாட்டுக்குச் செல்வதற்கான பாதை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து அரசின் கொள்கைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றுவதற்காக மாவட்டங்களில் உள்ள குடியுரிமைப் பாதுகாப்பு பிரிவுகள் மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுடன் நெருங்கி ஒத்துழைக்கின்றன.

22. நீதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு முதற் வகுப்பு குற்றவியல் நீதிபதி மற்றும் பணியாளர்கள் அடங்கிய நான்கு சிறப்பு நீதி மன்றங்கள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய சிறப்பு நடுவர் மன்றங்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகளை நடத்துவதோடல்லாமல் ஆதி திராவிடர், மலை சாதியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிரான வழக்குகளையும் நடத்துகின்றன. 1989-ம் ஆண்டில் புகார் செய்யப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் 660 ஆகும். இவை 1988-லும் 1987-லும் முறையே 882-ம், 1,016-ம் ஆகும். அதேபோன்று 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர், மலை சாதியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 489 ஆகும். இவை 1988-லும் 1987-லும் முறையே 716-ம், 655-ம் ஆகும்.



பெண் காவலர்கள் :

23. 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ் நாடு காவல் துறையின் பெண் காவலர்களின் பணி தொடர்ந்து பயன் அளிக்கும் வகையில் அமைந்து உள்ளது. பெண் கைதிகளைச் சோதனையிடல், மற்றும் பெண் குற்றவாளிகளைக் கைது செய்து நீதி மன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல், இளம் குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல், மகளிர் மருத்துவ மனைகள் மற்றும் கல்வி நிலையங்களில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் இழைக்கப்படுவதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பளித்தல் போன்ற பணிகளை இவர்கள் திறமையாகச் செய்து வருகின்றனர். தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள மகளிர் காவல் பிரிவின் எண்ணிக்கை 88 சார்பு ஆய்வாளர்கள், 80 மகளிர் தலைமைக் காவலர்கள் மற்றும் 690 மகளிர் காவலர்கள் ஆகும்.

பகுதி 2

**தகவல் தொடர்பு முறை :**

24. தமிழகக் காவல் துறை பணியில் நுண்ணலை மற்றும்
மின்னியல் ஆகியவை நடைமுறைப்படுத்தப் பட்டதையடுத்து,
தமிழகக் காவல் துறையின் தகவல் தொடர்பு முறையில் ஒரு
விரைவான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தொடர்பு முறையி
னால் இம்மாநிலத்தில் அனைத்துக் காவல் நிலையங்களும்,
ரேடியோ பொருத்தப்பட்ட வாகனங்களும், உடனடி தொடர்பு
கொள்ள முடிகிறது. நுண்ணலை இணைப்பின் மூலம் அனைத்து
மாவட்டங்களும் மாநில காவல் துறை தலைமையகத்துடன்
தொடர்பு கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள்,
மிக மிக முக்கிய நபர்களின் வருகைகள், சட்டம், ஒழுங்கு பிரச்சி
னைகள் முதலியன காவல் தகவல் தொடர்பு சாதனங்கள் மீது
பெரும் பளுவை ஏற்படுத்துகின்றன. காவல் துறையை நவீனப்
படுத்தும் திட்டத்தின் கீழ் 1989-ஆம் ஆண்டு காவல் துறை
வானொலி பிரிவிற்கு தொலைத் தொடர்புச் சாதனம் மற்றும்
கம்ப்யூட்டர் அடிப்படையிலான மின் தொலையச்சுப் பொறிகளை
வாங்குவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

25. தகவல் தொடர்பான பணியில் அனைத்து மாநிலங்களு
டன் ஒப்பிடும்போது தமிழ்நாடு காவல் துறை முன்னிலையில்
உள்ளது. 545.5 கி. மீ. தூரம் அளவிலான தொடர்பை நுண்
ணலை முறை பெற்றுள்ளது. மாவட்ட தலைமை இடங்களுக்
கான தொடர்புகள் 1,164 கி.மீ. தூரத்திற்கு அதிமீவுயர் அலை
(UHF) மூலம் உள்ளன. இராமநாதபுரம், பசும்பொன் தேவர்
திருமகன், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் காமராஜர்
மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்ட தலைமையகங்கள் மாநில
காவல் தலைமையகத்துடன் நுண்ணலை,அதிமீவுயர் அலை(UHF)
மற்றும் மீவுயர் அலை (VHF) மூலம் இணைக்கப்பட்டுள்
ளன. 1,035 காவல் நிலையங்களில் 1,004 காவல் நிலையங்
களிலும், 108 உட் கோட்டங்களில் 84 உட் கோட்டங்களிலும்
மீவுயர் அலைக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில்
23 கட்டுப்பாட்டு அறைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும்,
மாநிலத்தில் மீவுயர் அலைக் கருவிகள் (VHF) பொருத்தப்பட்ட
230 நடமாடும் வாகனங்கள், மீவுயர் அலைக் கருவிகள் பொருத்
தப்பட்ட 148 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 1,800 நட
மாடும் தொலைபேசிக்கருவிகளும் செயல்படுகின்றன. இவற்றைத்
தவிர, சென்னையில் 200 இணைப்புக்களுடன் கூடிய மின்னணு
தொலைபேசித் தொடர்பகம், 16 மாவட்ட தலைமையிடங்களில்
50 இணைப்புகள் கொண்ட இ.பி.எ.எக்ஸ். தொடர்பகம் மற்றும்
மாவட்டத் தலைமையிடம் இரண்டில் நேரடியாக தொடர்பு
கொள்ளக்கூடிய 10 இணைப்புகளுடன் கூடிய தொடர்பகங்கள்
ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன,





26. சிறப்பான தகவல் தொடர்பு வசதிகளைக் கொண்ட
காவல் வானொலிப் பிரிவு குற்றங்கண்டு பிடிப்பு, மிக மிக முக்கிய
நபர்கள் பாதுகாப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும்
சட்டம் ஒழுங்கு பணிகளில் காவல் துறைக்குப் பெரிதும் உதவு
கின்றன.

27. 1989 ஆம் ஆண்டில் ரூ. 144.35 இலட்சம் செலவில்
பழைய வாகனங்களுக்குப் பதில் புதிதாக 138 வாகனங்கள்
வாங்குவதற்கும் மற்றும் ரூ. 59.44 இலட்சம் செலவில் 64
மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கும் அரசு அனுமதி வழங்கி
யுள்ளது. காவல் துறையின் வாகனங்கள் செவ்வனே பராமரிக்கப்
பட ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரண்டு பணி மனைகள்
திறுவப்பட்டுள்ளன. 1989-ஆம் ஆண்டு நிலவரப்படி தமிழ்நாடு
காவல் துறையில் 3,629 மோட்டார் வாகனங்கள் உள்ளன.

பகுதி 3

விஞ்ஞானக் கருவிகள் :

28. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியலில் ஏற்பட்ட முன்னேற்றம் அதிகரித்து வரும் கணினிகளின் (Computers) பயன் ஆகியவை உலகமெங்கிலும் நிர்வாக முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய முன்னேற்றங்களைப் பயன்படுத்திக்கொண்ட தமிழ்நாடு காவல்துறை, குற்றப் புலனாய்வில் புதிய உத்திகளைப் புகுத்தியதோடு குற்றங்கள் தொடர்பாக தகவல்கள் மனித ஆற்றலைப் பயன்படுத்துதல் பணியாளர் செய்தி முறை ஆகியவற்றின் விவரங்களைக் கணினிகளில் சேர்த்து வைக்கும் முறையையும் புகுத்தியுள்ளது.

கம்ப்யூட்டர் பிரிவு :

29. மாநில காவல் துறையை நவீனப்படுத்தும் மைய அரசின் திட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டிலேயே காவல் துறையில் ரூ. 74 இலட்சம் மதிப்புள்ள டி.டி.சி. 316 கம்ப்யூட்டர் ஒன்று நிறுவப்பட்டது. இதுவரை மொத்தத்தில் 3,11,122 குற்ற ஆவணங்களும், 3,07,662 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு கணினி தகவல் சேகரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. நுண்ணலை தொலைத் தகவல் தொடர்பு மூலம் செய்யப்படும் கம்ப்யூட்டர் செயலாக்கம் 1984 ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் மாவட்டத் தலைமையகங்கள் தொலையச்சுத் தொடர்பு மூலம் நேரடியாக கம்ப்யூட்டரைத் தொடர்பு கொண்டு கண்டுபிடிக்கப் படாத சொத்து தொடர்பான குற்றங்கள் குறித்து உடனுக்குடன் தகவல்களைப் பெற இயலும். 1989 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்க முடியாத சொத்து பற்றிய குற்ற வழக்குகளில் குற்ற முறைகளின் அடிப்படையில் சந்தேகப்படும் குற்றவாளிகள் பற்றிய பட்டியல் தயார் செய்யப்பட்டு 18,778 தகவல் குறிப்பாணைகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. தேசிய குற்ற ஆவணக்காப்பகம், பழைய கணினி இருந்த இடத்தில் மிக நவீன கணினியைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் முதல் கட்டமாக கணினி பிரிவில் 8 மாவட்டங்களில் ஒரு சிறு கணினியும் 8 பர்சனல் கணினிகளும் செயல்படும். இவை, மாவட்ட மற்றும் மாநில அளவில் குற்ற ஆவணங்களைக் கம்ப்யூட்டர் மயமாக்கி, தேசிய அளவில் காவல் கணினி பிரிவிற்கு உதவியாக செயல்படும்.

30. மோட்டார் வாகனப் போக்குவரத்து விபத்துக்கள் பற்றிய குறிப்புகளை கம்ப்யூட்டரில் சேகரிக்கும் இரண்டு பர்சனல் கணினிகளை வாங்குவதற்காக ரூ. 3.92 இலட்சத்தை அரசு 1988-ஆம் ஆண்டு அளித்தது.



தடய அறிவியல் துறை :

31. தமிழ்நாடு தடய அறிவியல் துறை, 1849-ஆம் ஆண்டில் முதன் முறையாக தனது தடய அறிவியல் பணியைத் துவக்கியது. ஆசியாவிலேயே மிகவும் பழமையான நிறுவனங்களில் தடய அறிவியல் துறையும் ஒன்றாகும். சட்டத்தைச் செயல்படுத்தும் மைய, மாநில அரசைச் சார்ந்த அனைத்து நிறுவனங்களுக்கும் தேவைப்படும் போதெல்லாம் தடய அறிவியல் பணியை இவ்வறிவியல் துறை செய்து வருகிறது.

32. சென்னையில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணம், ஆயம், நிழற்படப் பிரிவு, இயற்பியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியியல் பிரிவு, நஞ்சியல், போதைப் பொருட்கள் பிரிவு, கருவிகள் பிரிவு என 13 பிரிவுகளும் உள்ளன. மேலும் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர், சேலம் ஆகிய ஆறு இடங்களில் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சை ஆய்வகங்களில் மதுவிலக்கு மற்றும் நஞ்சியல் பிரிவுகள் மட்டும் உள்ளன. திருநெல்வேலியில் உள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் மேற்படி பிரிவுகளோடு உயிரியல் பிரிவும் உள்ளது. வேலூர், சேலம் ஆகிய வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில், மதுவிலக்குப் பிரிவு மட்டும் செயல்பட்டு வருகிறது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை பெருநகரில் குற்றம் நடந்த இடத்தில் அறிவியல் பணிக்காக 24 மணிநேர நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக் கூடம் ஒன்று உள்ளது.

33. இத்துறை, அறிவியல் பணியுடன், கல்விப் பணியையும் மேற்கொண்டு வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, தடய அறிவியல் துறையில் எம்.எஸ்சி. மற்றும் டாக்டர் பட்டத்திற்கான வகுப்புகளை நடத்தி வரும் ஒரே அரசுத் துறை இதுதான். மேலும் சுற்றுப்புற நஞ்சியியலில் எம்.எஸ்சி. பட்டத்திற்கான மாணவர்களுக்கும் தடய மருத்துவத்தில் முதுகலை பட்டத்திற்கான மாணவர்களுக்கும் குற்றவியலில் முதுகலைப் பட்டத்திற்கான மாணவர்களுக்கும் இத்துறையில் வகுப்புகள் நடத்தப்படுவதில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் மாநில மருத்துவ நிறுவனங்களுக்கும் இத்துறை உதவுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தடய அறிவியலில் எம்.எஸ்சி. வகுப்பில் 18 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். தடய அறிவியலில் டாக்டர் (Ph.D.) பட்டத்திற்கான ஆராய்ச்சிகளை நடத்த ஆராய்ச்சி மையமாக இத்துறையை சென்னை மற்றும் அண்ணா பல்கலைக் கழகங்கள் அங்கீகரித்துள்ளன. தற்போது 15 ஆராய்ச்சியாளர்கள் தடய அறிவியல் பற்றிய வெவ்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

34. தற்பொழுது இத்துறையில் இயக்குநர் உட்பட 181 விஞ்ஞானிகளும் மற்றும் 213 இதர பணியாளர்களும் ஆக 394 பேர் உள்ளனர். இத்துறையில் ஆண்டுதோறும் சுமார் 1,00,000 வழக்குகளில் சம்மந்தப்பட்ட சுமார் 3,00,000 பொருட்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. 1-1-1989 முதல் 31-12-1989 வரையில் 1,13,835 வழக்குகளில் சம்மந்தப்பட்ட 3,07,959 பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

35. ரூபாய் 8.20 இலட்சம் மதிப்புள்ள மாஸ் செலக்டிவ் டிடெக்டருடன் கூடிய காஸ்குரோ மோடாக்ராப் கருவி மற்றும் ரூபாய் 15 இலட்சம் மதிப்புள்ள ஸ்கானிங் எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப் மற்றும் ஹெட் ஸ்பேஸ் அனலைசருடன் கூடிய வாயு நிற ஆய்வுக் கருவி, மிகுதிறன் திரவ நிற ஆய்வுக் கருவி போன்ற நவீன கருவிகள் இந்த ஆய்வகத்தின் தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்துவதற்காக வாங்கப்பட்டுள்ளன.

36. மேலும் நாட்டிலேயே முதல் முதலாக மின் திருட்டு வழக்குகளில் இத்துறை அறிவியல் முறையில் சாட்சியம் அளிக்க வகை செய்கிறது.

37. சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய குழந்தையின் பெற்றோர் யார் எனும் வழக்கில் விஞ்ஞான பூர்வமான சான்றுகளை அளித்து உண்மையான பெற்றோரிடம் குழந்தையை சேர்க்க இத்துறை வழி வகுத்துள்ளது. இப்பணி அனைவராலும் பாராட்டப்பட்டது.

---



## பகுதி 4.

### காவலர் நலம் :

38. காவலர்கள் ஆற்றிடும் பணிகள் பலதரப்பட்டவையாகவும் ஆபத்து நிறைந்தவையாகவும் உள்ளன. உறுதியுடன் கூடிய நேர்மையும் கடமைப் பற்றும் காவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, அரசு காவலர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### உணவுப் பொருட்களை குறைந்த விலையில் வழங்கும் திட்டம்:

39. 1980ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இத்திட்டம் 1984ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை காவல் ஆய்வாளர்கள் வரையிலான காவல் துறை அலுவலர்கள், காவல் வானொலி பிரிவில் உள்ள தொழில் நுட்பப் பிரிவு அலுவலர்கள், சுருக்கெழுத்துப் பிரிவு அலுவலர்கள் போன்றவர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காகும் மானியத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது. 1989-90ஆம் ஆண்டு (பிப்ரவரி மாதம் வரை) ரூபாய் 2,28,20,501-ஐ அரசு மானியமாக அளித்துள்ளது.

### காவலர் வீட்டு வசதித் திட்டம் :

40. ஏழாவது நிதிக்குழு 1979—80 முதல் 1980—84 வரையிலான காலத்திற்கு, காவல் துறை மேல்நிலை சார்பணியாளர்கள் மற்றும் கீழ்நிலை சார்பணியாளர்களுக்கு முறையே 5,24/830 குடியிருப்புகள் கட்டிடவும் 5,097 படை வீடுகள் கட்ட வகை செய்திட ரூபாய் 6.75 கோடி நிதி ஒதுக்கியது. ஏழாவது நிதிக் குழு அளித்த தொகையை பயன்படுத்தி ரூபாய் 16,65 கோடி செலவில் மேல் நிலைசார் பணியாளர்களுக்கு 523 வீடுகளும், கீழ்நிலை சார் பணியாளர்களுக்கு 3,487 வீடுகளும் மற்றும் 2,445 படைவீடுகளும் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

41. 4,007 குடியிருப்புகளும், 2,445 படை வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. இக்குடியிருப்புகள் சென்னை நகரிலும், செங்கை-அண்ணா, புதுக்கோட்டை, மதுரை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி-கட்டபொம்மன் சேலம், பெரியார், தருமபுரி, வட ஆற்காடு-அம்பேத்கார், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டு உள்ளன. மீஞ்சூரில் மீதமுள்ள 3 குடியிருப்புகள் கட்டும் பணி நடந்து வருகிறது.

[1990 மே 3

42. எட்டாவது நிதிக் குழு நீதி ஒதுக்கீடு எதனையும் செய்யவில்லை. ஆனால், காவல் துறையில் பல பதவித் தரங்களிலுள்ளவர்களுக்கு 1,924 குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்காக மாநில அரசு ரூபாய் 12.92 கோடி அனுமதி அளித்துள்ளது.

43. காவல் துறையினருக்கு 80 சதவீதம் வீட்டுவசதி செய்து தரப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், இதுவரை காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர்களுக்கு 30 விழுக்காடும், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு 45 விழுக்காடும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

44. காவலர் குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மின் விசிறி வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. ரூ.130.40 லட்சம் செலவில் 15,662 மின் விசிறிகள் பொருத்தும் இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயல்படும். முதல் கட்டமாக ரூபாய் 40 இலட்சம் செலவில் 4,800 மின் விசிறிகள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

45. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் 1980-ல் அரசால் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம், பல்வேறு பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1,554 வீடுகளை ரூபாய் 590.45 இலட்சம் செலவில் "அட்கோவின்" மொத்த நிதியுதவியான ரூ. 273.24 இலட்சத்தைப் பயன்படுத்திக் கட்டிக் கொடுத்துள்ளது. இது தவிர இக் கழகம் ரூபாய் 65.83 இலட்சம் செலவில் 100 குடியிருப்புகளை கட்டியது. 1989ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கலைக்கப்பட்டு அதன் பணிகள் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வீட்டு வசதிக் கழகம் தற்போது திண்டுக்கல்லில் ரூ. 163.80 இலட்சம் செலவில் 257 காவல் துறை பணியாளர் குடியிருப்புகளையும் காஞ்சிபுரத்தில் ரூ. 175.92 இலட்சம் செலவில் 234 பணியாளர் குடியிருப்புகளையும் கட்டத் தொடங்கியுள்ளது.

காவல் நிலையக் கட்டிடங்கள் :

46. அனைத்துக் காவல் நிலையங்களும் கூடிய அளவில் அரசு கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போது மாநிலத்தில் உள்ள 1,035 காவல் நிலையங்கள் மற்றும் 184 புறக்காவல் நிலையங்களில் 768 காவல் நிலையங்களும் 108 புறக் காவல் நிலையங்களும் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்றவை வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.



1990 மே 3]

காவல் பதக்கங்கள் :

47. காவலர்கள் மிகத் திறமையுடன் செயல்படும் பொழுது அதனை அறிந்து அவர்களின் செயலினை பாராட்டும் பொருட்டு அவர்களுக்கு ஊக்க ஊதியம் அளித்து, அவர்களது தொழில் ரீதியான திறமைகளை வளர்க்கும் நோக்கத்துடன் அரசு பல்வேறு பதக்கங்களை அளித்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் (வீரச் செயல் பாராட்டத்தக்க பணிக்காக) :

48. இத்திட்டத்தின் கீழ் 1989ஆம் ஆண்டு காவல் துறையை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் 55 பேர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் (பாராட்டத்தக்க பணிக்காக) :

49. தமிழ்நாடு காவல் துறையில் பணி புரியும் தலைமைக் காவலர்கள், காவலர்கள் மற்றும் அதற்கு சமமான பதவியிலுள்ளவர்கள் 10 ஆண்டுக் காலம் தண்டனை ஏதுமின்றி பணி புரிந்திருந்தால் இத்திட்டத்தின் கீழ் பதக்கங்கள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். 1989 ஆம் ஆண்டு 1,400 பேர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் (பாராட்டத்தக்க மற்றும் குறிப்பிடத்தக்க பணிக்காக) :

50. இந்த ஆய்வு ஆண்டில் பாராட்டத்தக்க மற்றும் குறிப்பிடத்தக்க பணிக்காக குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் 24 நபர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் ஆறு, இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. காவல் துறை இயக்குநர் திரு. பி. துரை, காவல் துறை துணைக் தலைவர்கள் திரு. சி. துரைராஜ், திரு. எஸ். ஐ. ஜாபர் அலி, திரு. கே. குருவையா, திரு. செல்வராஜ், திரு. காளிமுத்து ஆகியோர் ஆவர். மற்ற துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு எஞ்சிய பதினெட்டு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு காவலர் நல நிதி :

51. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் அனைத்து சார்நிலைப் பணியாளர்களின் நிலையினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு காவலர் நல நிதி தொடங்கப்பட்டது. இந்நிதியின் வருவாய் இத்திட்டத்தில் தாமாகவே சேருபவர்களிடமிருந்து பெறப்படும் சந்தாத் தொகை மற்றும் அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் நன்கொடை ஆகியவை மூலம் திரட்டப்படுகிறது.

மேலும் இதைத் தவிர இத்திட்டத்திற்கு அரசு ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் மானியமாக அளிக்கிறது. இந்நிதி கீழ்க் கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது :—

(அ) காவலர் குடியிருப்புகளில் நூல் நிலையங்கள் அமைத்தல், குறித்த கால வெளியீடுகளை வாங்குதல் ;

(ஆ) சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகளின் தொழில் நுட்ப கல்விக்கு உதவித் தொகை அளித்தல் ;

(இ) உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு ஈமச்சடங்கு செலவிற்காக ரூபாய் 150 வழங்குதல் ;

(ஈ) இறந்துபோன உறுப்பினர்களின் மனைவி மற்றும் வாரிசுகளுக்கு குடும்ப நிவாரண உதவி வழங்குதல் ;

(உ) காச நோய், புற்று நோய், தொழு நோய் போன்ற நோய்களினால் அல்லல்படுபவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடைய வருமானத்திற்கு மேற்கொண்டு ஆகும் செலவை ஏற்பதற்காக நிதி உதவி அளித்தல் ; மற்றும்

(ஊ) காவல் துறை குழுவின் பரிந்துரையின்படி உறுப்பினர்களின் நலனிற்காக தேவையானவர்களுக்கு உதவி அளித்தல்.

52. இவை தவிர ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், மருத்துவம் கலை, அறிவியல் போன்ற பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்காக (Diploma) சார்நிலைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்பின் தன்மையைப் பொறுத்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 375 முதல் ரூ. 1,500 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. காவல் துறை பணியாளர் இறந்தால் அவர் வகித்து வந்த பதவிக்கேற்ப ரூ. 300-லிருந்து ரூ. 700 வரை உதவித் தொகை அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. 1989ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 5,67,633 செலவழிக்கப்பட்டு 1,470 பேர்கள் இதனால் பயனடைந்தனர்.

**தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை :**

53. சார்நிலைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகள் கல்லூரிகளில் தொழில் நுட்பம் மற்றும் மேல் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு வருடாந்திர கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. வருடாந்திர நன்கொடை மற்றும் கொடை உள்ளம் படைத்தவர்கள்



அளிக்கும் நிதி உதவிகள் மூலம் இத்திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகையாக 71 நபர்களுக்கு ரூ. 40,500 வழங்கப்பட்டுள்ளது.

54. காவலர் நலத் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு காவலர் நல அமைப்பு, காவல் துறையில் பணி புரியும் நிருவாக மற்றும் காவல் பணியாளர் குடும்பங்களின் வருவாயினைப் பெருக்கிடவும், அவர்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகிறது. அப்பணியாளர்களின் குடும்ப வருவாயினை அதிகரிப்பதற்காக நூல் நூற்றல், தையல் வேலை, பாய் முடைதல், தறி நெய்தல், தீக்குச்சி செய்தல், பால் பண்ணை, கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

55. ஒன்பது தையல் பிரிவுகளும், 20 மாதர் சங்கங்களும் (மகளிர் தையல் பிரிவுகள்) காவல் துறையினர் சீருடை, பொதுத் துறை நிறுவன ஊழியர் மற்றும் பள்ளிச் சிறுவர்களின் சீருடைகள் ஆகியவற்றையும், தமிழ்நாடு அரசின் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ளவர்களின் சீருடைகளையும் தைத்து வருகின்றனர்.

56. இருபது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் பிரிவுகளைச் சார்ந்த காவல் துறையினரின் குடும்ப உறுப்பினர்கள் பனியன், காலுறை, ஹோஸ்-டாப் உடைகள், தொப்பிகள், கொசு வலைகள், பட்டிகள், ஜமுக்காளம், கூடைகள், பாலிதின் பைகள் போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

57. ஆவடி மற்றும் மதுரையில் இரண்டு கூட்டுறவு பால் பண்ணைகளும், விருதுநகரில் பால் உற்பத்தியாளர் சங்கம் ஒன்றும் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் பண்ணைகள் செயல்படுகின்றன. காவலர்களின் குடும்பங்கள் கறவை மாடுகள் வளர்க்கவும், வீட்டுத் தோட்டங்களை அமைக்கவும் ஊக்கப்படுத்தப்பட்டு இதன் மூலம் காவலர்களின் குடும்ப வருவாய் பெருக்கப்படுகிறது.

58. தமிழ்நாடு காவல் கம்ப்யூட்டர் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கம், காவலர்களின் பிள்ளைகளை மின்னணுக் கருவிகள் தயாரித்தலில் ஈடுபடச் செய்யவும், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், கம்ப்யூட்டர் திட்டமிடுதல், டிரான்சிஸ்டர்களை இணைத்தல், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் கம்ப்யூட்டர் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் தொழில் மற்றும் வணிகத் துறையினரின் உதவியுடன் டிரான்சிஸ்டர்கள், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் மற்றும் கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றின் பாகங்களை இணைக்கும் பணியிலும் கம்ப்யூட்டர்களுக்குத் தேவை

யான கணிப் பொறிகளையும் அடிப்படைத் தகவல் குறியீட்டுத் துணை சாதனங்களையும் தயாரிககும் பணியிலும் காவலர்களின் பிள்ளைகளுக்குப் பயிற்சியளிக்கவும் ஒரு திட்டமுள்ளது.

59. முப்பது உறுப்பினர்களுடன் துவக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், அரசு போக்குவரத்துக் கழகங்களால் ஒப்படைக்கப்பட்ட சில பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

60. இருபது உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு காவலர் விளையாட்டுப் பொம்மைகள் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் முப்பது உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு காவலர் பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை சென்னை புறநகர்ப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

61. மணிமுத்தாறு மற்றும் சிவகாசியில் உள்ள தீப்பெட்டி தயாரிக்கும் பிரிவும், சென்னையிலுள்ள புத்தக பைண்டிங் மற்றும் கவர் தயாரிக்கும் பிரிவுகளும் 1989ஆம் ஆண்டில், காவலர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தன.

**காவல் ஆணைக் குழு :**

62. இதற்கு முன்னர், 1971ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட காவல் ஆணைக் குழுவின் அனைத்து பரிந்துரைகளும் அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ளன. காவல்துறை மேம்பாட்டிற்காகவும் காவல் துறையினரின் நிலைகளை மேம்படுத்தவும் திரு. பி. சபாநாயகம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.



பகுதி 5.

**மைய அரசிடமிருந்து பெற்ற உதவி :**

63. 1969-70 முதல் மைய அரசின் 50 விழுக்காடு உதவியுடன் காவல் படையை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டு முதல் 1988-89 வரை, மைய அரசு ரூ. 556.21 இலட்சமும் மற்றும் மாநில அரசு ரூ. 679.34 இலட்சமும், '' வி.எச்.எஃப். '', வாக்கி டாக்கி, '' யு.எச்.எஃப் '' கருவிகள், வாகனங்கள், கம்ப்யூட்டர் கருவிகள், புலன் விசாரணைக்கான விஞ்ஞானக் கருவிகள், தடய அறிவியல் துறை, பயிற்சிக் கழகம் மற்றும் போக்குவரத்துப் பணிமனை ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1989ஆம் ஆண்டிற்குப் பிறகும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

64. 1989-90ஆம் ஆண்டில் காவல் படையை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 63.46 இலட்சத்தை மைய அரசு அளித்துள்ளது. இந்தத் தொகை பயிற்சிக் கழகம் மற்றும் தடய அறிவியல் துறை ஆகியவற்றின் உபயோகத்திற்காக 19 சிறிய பஸ்கள், 14 ஜீப்புகள், 18 மோட்டார் வண்டிகள் ஆகியவை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இது தவிர இதற்கு முந்தைய ஆண்டுகளில் செலவிடப்படாததும், 1989-90ஆம் ஆண்டில் மீண்டும் செலவிடப்பட அனுமதிக்கப்பட்டதுமான ரூ. 87.97 இலட்சம் எச். எஃப். டிரான்ஸ் ரிசீவர், கம்ப்யூட்டர் அடிப்படையிலான மின் அணு டெலிபிரிண்டர், 25 சிறிய பேருந்துகள், 9 ஜீப்புகள் மற்றும் 50 மோட்டார் சைக்கிள்களை வாங்கப் பயன்படுத்தப்படும்.

பகுதி 6.

குற்றம் :

65. தொழில் மயம், நகரமயமாக்கம், சமுதாய நிலையில் மாற்றம் மற்றும் நவீனமயமாக்கம் போன்றவை குற்றங்களின் தன்மை, குற்றவாளிகளின் நடவடிக்கை, குற்றம் மற்றும் குற்றவாளிகள் தொடர்பாக சமுதாயத்தின் அணுகுமுறை, குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. எனவே காவலர்களின் பணி மேலும் சிக்கல் வாய்ந்ததாகி வருகிறது. குற்றங்களைக் கையாளுவதில் மிகுந்த தொழில் நுட்பத்தோடு செயல்பட வேண்டியுள்ளது. மைய அரசின் உதவியுடன் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் காவல் துறையில் உள்ள வாகனங்கள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் நவீனமயமாக்கப்படுகின்றன. குற்றம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பணிகளில் காவல் துறையினருக்குத் தொழில் ரீதியான பயிற்சியும் மற்றும் செயல்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. தனித் தன்மை வாய்ந்த குற்றங்களைக் கையாளுவதற்கு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிலை திருட்டுப் பிரிவு, குடிமைப் பொருட்கள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, வன இலாகா குற்றப் புலனாய்வுத் துறை, வணிகக் குற்றங்கள் தடுப்பு குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவை சிறப்புத் தகுதிகளைப் பெற்று விளங்குகின்றன.

66. சென்னை, செங்கை-அண்ணா மற்றும் திருச்சிராப்பள்ளி போன்ற மாவட்டங்களின் காவல் துறையினரால் எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கை காரணமாக முக மூடிக் கொள்ளையர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. 1989ஆம் ஆண்டில் நடைபெற்ற இரு பொதுத் தேர்தல்களின் போது, தங்களது விழிப்புணர்ச்சி மற்றும் உடனடி நடவடிக்கை ஆகியவற்றின் காரணமாக சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை கட்டுப்படுத்தியதோடு குற்ற நிகழ்வுகளையும் கட்டுப்படுத்தினர். தமிழ் நாட்டில் 1988 மற்றும் 1989ஆம்



ஆண்டுகளில் சொத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்களும் கண்டு பிடிப்புகளும் :**

| குற்றத் தலைப்பு. | 1988-ல் புகார் செய்யப் பட்டவை. | 1988-ல் கண்டு பிடிக்கப் பட்டவை. | 1989-ல் புகார் செய்யப் பட்டவை. | 1989-ல் கண்டுபிடிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆதாயத்திற்கான கொலை. | 72 | 37 | 76 | 31 |
| கொள்ளை. | 52 | 14 | 96 | 28 |
| வழிப்பறி .. | 420 | 240 | 414 | 199 |
| வீடு புகுந்து திருட்டு. | 7,602 | 3,933 | 8,208 | 4,314 |
| பெரிய திருட்டு. | 20,309 | 14,693 | 21,738 | 15,598 |
| சிறிய திருட்டு. | 1,398 | 1,312 | 1,646 | 1,417 |
| கால் நடைத் திருட்டு. | 692 | 624 | 745 | 650 |
| மொத்தம். | 30,545 | 20,853 | 32,923 | 22,237 |

| | | |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விழுக்காடு. | 68.3 | 67.5 |

67. அறிவியல் சார்ந்த புலன் விசாரணை மற்றும் சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவுக் கூடம், மாவட்டங்களில் உள்ள ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடம், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த தடய அறிவியல் ஆய்வகம், நாய்படை, மற்றும் கம்ப்யூட்டர் பிரிவு ஆகியவற்றின் பணிகள் தொடர்ந்து சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

68. காவல் துறையினரின் துரித நடவடிக்கை மற்றும் சிறந்த புலன் விசாரணை காரணமாக கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் வழக்கு தொடரப்பட்ட சில முக்கிய வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழ்க் கண்ட பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதாயத்திற்கான கொலை :

சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் காவல் நிலையக் குற்ற எண். 389/89.

69. 21-8-1989 அன்று காட்டேரி மங்கலத்தில் பிச்சுமணி என்பவரின் மனைவி பிச்சையம்மா என்பவர் கொலை செய்யப்பட்டு ரூ. 25,000 மதிப்புள்ள நகைகள் களவாடப்பட்டிருந்தன. அறிவியல் முறை மற்றும் திறமையான புலன் விசாரணை காரணமாக காட்டேரி மங்கலம் ஆசீர்வாதம் என்பவருடைய மகன் ஜோசப் என்பவர் 31-8-1989 அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், செம்பட்டி காவல் நிலைய குற்ற எண். 404/89:

70. 10-10-1989 அன்று சித்தையன் கோட்டையில் மல்லையா என்பவரின் மனைவி ராஜம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூபாய் 3,00,000 மதிப்புள்ள தங்க நகைகளும், ரொக்கமும் களவாடப்பட்டிருந்தன. திறமையான மற்றும் அயராத புலன் விசாரணை காரணமாக திண்டுக்கல்லைச் சார்ந்த குற்றம் சாட்டப்பட்ட அனந்த பத்மநாபன் என்பவரின் மகன் தண்டபாணி மற்றும் அவனது கூட்டாளிகள் 4 பேர்களும் 15-10-1989 அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கல்லக்குடி காவல் நிலையக் குற்ற எண். 617/89 :

71. 19-11-1989 அன்று வெந்தாளை கடலூரில் சகாதேவன் என்பவருடைய மகன் கண்ணன் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூ. 48,700 பெறுமானமுள்ள தங்க நகைகளும் மற்றும் ரொக்கமும் களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. முறையான



மற்றும் அறிவியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக கருப்பசாமி என்பவரின் மகன் பாஸ்கரன் மற்றும் அவரது கூட்டாளிகள் ஐந்து பேர்கள் 27-11-1989, 28-11-1989 மற்றும் 1-12-1989 ஆகிய தேதிகளில் கைது செய்யப்பட்டு, அனைத்துச் சொத்துக்களும் கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

கொள்ளை :

தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி காவல் நிலையக் குற்ற எண். 118/89 :

72. 24-4-1989 அன்று தட்டாரஹல்லி காட்டுக் கோட்டையில் கோபால் என்பவருடைய மகன் கந்தசாமி என்ற தங்கவேலு மற்றும் அவனது கூட்டாளிகள் ஏழு பேர்களும் புகார் மனுதாரர் சூரியபிரகாஷ் என்பவருடைய வீட்டினுள் நுழைந்து அங்கிருந்து தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் ரொக்கம் ரூ. 6,000 உட்பட ரூ. 1,00,000 மதிப்புள்ள பொருட்களை களவாடிச் சென்றனர். திறமையான புலன் விசாரணை காரணமாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் 22-5-1989 மற்றும் 17-8-89 ஆகிய தேதிகளில் கைது செய்யப்பட்டனர். 22-5-1989 அன்று ரூ. 86,250 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

செங்கை-அண்ணா கிழக்கு மாவட்டம், பூந்தமல்லி காவல் நிலையக் குற்ற எண். 1298/89 :

73. 10-6-1989 அன்று ஆந்திர மாநிலம் குண்டூரைச் சார்ந்த பாலகோட்டய்யா என்பவரின் மகன் பாலராமசாமி மற்றும் அவனது கூட்டாளிகள் ஏழு பேர்கள் பூந்தமல்லி ருக்மணி நகரில் உள்ள 43 என்ற எண்ணுள்ள கங்காதரன் என்பவரது வீட்டினுள் புகுந்து அங்கிருந்து ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணை காரணமாக 24-8-1989 மற்றும் 26-8-1989 ஆகிய தேதிகளில் குற்றம் சாட்டப்பட்ட 6 பேர்கள் கைது செய்யப்பட்டு ரூ. 20,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட பலராமய்யா மற்றும் பெத்த சாமிய்யா ஆகிய இருவரும் தலைமறைவாகியுள்ளனர். அவர்களை கண்டுபிடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் செங்கை - அண்ணா (கிழக்கு) மாவட்டத்தில் 30-5-1989 முதல் 10-6-1989 வரை நடைபெற்ற இதே போன்ற கொள்ளைகளில் சம்பந்தப்பட்டுள்ளதோடு அவர்களிடம் இருந்து ரூ. 92,500 மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்ற விசாரணையில் உள்ளனர்.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் காவல் நிலையக் குற்ற எண். 221/89 :

74. 5-7-1989 அன்று வீரனந்தலைச் சார்ந்த புகார் மனுதாரர் சூசைநாதன் என்பவரது வீட்டினுள் குற்றம் சாட்டப்பட்ட காவடி முருகேசன் மற்றும் அவனது கூட்டாளிகள் ஏழு பேர்கள் புகுந்து அங்கிருந்து ரூ. 25,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக, கிருஷ்ணகிரியைச் சார்ந்த கிருஷ்ணன் என்பவரின் மகன் காவடி முருகேசன் மற்றும் அவனது கூட்டாளிகள் 9 பேர்களும் கைது செய்யப்பட்டனர். 5-7-1989 முதல் 5-9-1989 வரை திருவண்ணாமலை சம்புவராயர், செங்கை-அண்ணா (கிழக்கு) மாவட்டம், விழுப்புரம், தர்மபுரி, செங்கை-அண்ணா (மேற்கு) ஆகிய இடங்களில் தொடர்ந்து நடைபெற்ற ரூ. 1,07,925 மதிப்புள்ள கொள்ளை வழக்குகளில் இருபது பேர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ரூ. 87,000 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. தலைமறைவாகியுள்ள எஞ்சியுள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

கோவை நகர மாவட்டம், மதுக்கரை காவல் நிலையக் குற்ற எண். 330/89 :

75. 2-10-1989 அன்று தமனப்பாறை என்ற இடத்தில் கோயம்புத்தூரைச் சார்ந்த சின்னையன் மகன் ராமசாமி மற்றும் அவரைச் சார்ந்த நான்கு கூட்டாளிகள் புகார் மனுதாரர் குழந்தைவேலு என்பவரின் வீட்டில் புகுந்து அங்கிருந்து ரூபாய் 1,50,000 மதிப்புள்ள தங்க நகைகளை களவாடிச் சென்றனர். காவல் துறையினரின் திறமையான புலனாய்வினால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் 12-10-1989 அன்று கைது செய்யப்பட்டு ரூபாய் 1,00,000 மதிப்புள்ள பொருள்கள் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

வழிப்பறி :

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் அம்மைய நாயக்கனூர் காவல் நிலையக் குற்ற எண். 45/89 :

76. 15-2-1989 அன்று திண்டுக்கல் —மதுரை சாலையில் இராமநாதபுரம் சென்று கொண்டிருந்த டி.எம்.எல். 2671 என்ற எண்ணுடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்தில், கமலாபுரத்தைச் சேர்ந்த இன்னாசி என்பவரின் மகன் ஆனந்தன் மற்றும் அவரைச் சார்ந்த மூன்று நபர்கள் பேருந்தில் இருந்த பயணிகளிடமிருந்து சுமார் ரூ. 19,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை கொள்ளையடித்து



சென்றனர். தீவிர புலன் விசாரணை காரணமாக 4-8-1989 அன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு ரூ. 15,000 மதிப்புள்ள பொருள்கள் அன்றைய தினமே மீட்கப்பட்டன. இதே குற்றவாளிகள் அம்மையப்ப நாயக்கனூர் காவல் நிலையக் குற்ற எண் 246/89-ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் 29-6-1989 அன்று நடந்த பேருந்து கொள்ளையில் ரூபாய் 70,000 மதிப்புள்ள பொருள்களை கொள்ளையடித்திருந்தனர். இதில் கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டு விட்டன. இரு வழக்குகளும் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

செங்கை - அண்ணா மாவட்டம், அச்சரப்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண் 77/89 :

77. 16-2-1989 அன்று அச்சரப்பாக்கத்தில் சிகரெட்டு கட்டுகளுடன் சென்று கொண்டிருந்த டி.எம்.ஓ. 4991 என்ற எண்ணுள்ள வண்டியை சென்னையைச் சார்ந்த ரோசையாவின் மகன் சுரேஷ் குமார் என்பவர் வழிமறித்து ரூபாய் 3,00,000 மதிப்புள்ள சிகரெட் கட்டுகளை வேனுடன் களவாடினார். உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் குற்றவாளி 26-2-1989 அன்று கைது செய்யப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

தஞ்சை கிழக்கு மாவட்டம், மயிலாடுதுறை காவல் நிலையக் குற்ற எண் 295/89 :

78. 19-3-1989 அன்று மயிலாடுதுறையைச் சார்ந்த கெட்ட நடத்தையுடைய ராஜேந்திரன் என்ற முனியன் மற்றும் அவனது இரு கூட்டாளிகள் மனுதாரராகிய கமாலுதீன் என்பவரின் வீட்டில் புகுந்து ரூபாய் 2,00,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அயராத புலன் விசாரணையின் காரணமாக சம்பந்தப்பட்ட மூன்று குற்றவாளிகளும் 10-5-1989 மற்றும் 5-6-1989 அன்று கைது செய்யப்பட்டு ரூபாய் 1,85,000 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

சேலம் மாவட்டம், சூரமங்கலம் காவல் நிலையக் குற்ற எண் 771/89 :

79. 1989 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25-ஆம் நாளன்று சேலத்தைச் சார்ந்த செரிப் என்பவரது மகன் தவுலப்பா மற்றும் அவனது கூட்டாளிகள் மூன்று பேர் ஆட்டோ ரிக்ஷாவில் வந்து கொண்டிருந்த உத்திரப் பிரதேச மாநிலத்தைச் சார்ந்த அட்டல் பிகாரி என்பவரை வழி மறித்து அவரிடமிருந்து ரூ. 6,00,000 மதிப்புள்ள வெள்ளி நகைகளை களவாடிச் சென்றனர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான மற்றும்

பயனுள்ள நடவடிக்கை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**கன்னக் களவு :**

**வட-ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் காவல் நிலையக் குற்ற எண் 164/89 :**

80. 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ஆம் நாள் அன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த குள்ளசேகர் என்ற சேகர் மற்றும் அவனது கூட்டாளிகள் நான்கு பேர்கள் அரக்கோணம் நகரில் அங்காடி தெருவில் உள்ள புகார் மனுதாரர் நாணிசந்த் என்பவரது வீட்டின் பூட்டினை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 3,47,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைக் களவாடிச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து பொருட்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில். உள்ளது.

**செங்கை - அண்ணா மேற்கு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையக் குற்ற எண் 603/89:**

81. 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாள் அன்று காவனூரைச் சார்ந்த குற்றம் சாட்டப்பட்ட சாரங்கபாணி என்பவரின் மகன் நடராசன் என்ற பாஸ்கரன் மற்றும் அவனது கூட்டாளிகள் மூன்று பேர் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ஆதிகேசவ பெருமாள் கோயிலின் பூட்டினை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ.5,55,178 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் காவல் நிலையக் குற்ற எண் 1238/89 :**

82. 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாள் அன்று பசுபதிபாளையத்தைச் சேர்ந்த குகநாதன் மகன் குமார் என்கிற கொளந்தைவேல் மற்றும் அவரது கூட்டாளி முனியப்பன் ஆகிய இருவரும் கரூர் ராஜாஜி தெருவில் கதவிலக்கம் 1-ல் வசிக்கும் புகார் மனுதாரர் திரு. விக்னேஸ்வரர் என்பவரின் வீட்டின் பூட்டை உடைத்து ரூபாய் 7,00,000 மதிப்புள்ள வைரம்



தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் இருவரும் 1989ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துப் பொருள்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

83. 1989ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாளிலிருந்து 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் தேதிக்கு இடையில் கோம்பையில் அவ்வூரைச் சேர்ந்த ராஜரத்தினம் மகன் கருப்பையா மற்றும் கூட்டாளிகள் மூன்று பேர் புகார் மனுதாரராகிய கணேசன் என்பவரது வீட்டின் சன்னல் கம்பிகளை அகற்றி உள்ளே புகுந்து ரூபாய் 3,33,000 மதிப்புள்ள வைரம் மற்றும் தங்க நகைகளை களவாடினர். அறிவியல் மற்றும் முறையான விசாரணையின் காரணமாக குற்றவாளிகள் 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**கோயம்புத்தூர் ஊரக மாவட்டம், காட்டூர் காவல் நிலையக் குற்ற எண் 1629/89 :**

84. 1989ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் அன்று காந்திபுரத்தில் கதவிலக்கம் 1072-ல் உள்ள ராஜேஸ்வரி நகைக் கடையில் முரளிதரன் மற்றும் அவனது கூட்டாளி சித்தகங்கப்பா ஆகியோர் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 4,00,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஆற்காடு நகர காவல் நிலையக் குற்ற எண் 737/89 :**

85. 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் அன்று ஆற்காட்டில் மேட்டூர் தெருவில் கதவிலக்கம் 65-ல் உள்ள மாசிலாமணி என்பவரது வீட்டின் பூட்டினை அவ்வூரைச் சேர்ந்த சம்பத் என்பவரின் மகன் சரவணன் மற்றும் அவனது கூட்டாளியான நரசிம்மன் ஆகிய இருவரும் உடைத்து அங்கிருந்து

ரூ. 3,25,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர். அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் இருவரும் 1990 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**சிலைத் திருட்டு :**

**தஞ்சை கிழக்கு மாவட்டம் நன்னிலம் காவல் நிலையக் குற்ற எண் 138/89 :**

86. 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாள் அன்று குடவாசலைச் சேர்ந்த குஞ்சு வன்னியர் என்பவரின் மகன் ஜெயராமன் மற்றும் அவரது கூட்டாளி வைத்யநாதன் நெமிலியில் உள்ள பிடாரி அம்மன் கோவிலின் பூட்டை உடைத்து அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள பஞ்சலோகத்தினாலான பிடாரி அம்மன் சிலையை திருடிச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29ஆம் நாள் அன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலையும் அன்றே மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**சிதம்பரனார் மாவட்டம், எட்டையபுரம் காவல் நிலையக் குற்ற எண் 71/89 :**

87. 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7ஆம் நாள் அன்று இரவு எட்டையபுரத்தில் முத்துப்பத்தர் என்பவர் மகன் ராமன் மற்றும் அவரது கூட்டாளிகள் இருவர் அங்குள்ள சிவன் கோவிலின் பூட்டினைக் கள்ளச் சாவி கொண்டு திறந்து அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள இரண்டு பஞ்சலோகத்தினாலான நடராஜர்— சிவகாமியம்மன் மற்றும் வெண்கலத்தாலான மாணிக்கவாசகர் சிலைகளைக் களவாடிச் சென்றனர். திறமையான புலன் விசாரணை காரணமாக குற்றவாளிகள் அனைவரும் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அன்றே களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் காவல் நிலையக் குற்ற எண் 431/89 :**

88. 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5ஆம் நாளுக்கு முன்பு உடையார்பாளையத்தைச் சேர்ந்த குற்றம் சாட்டப்பட்ட ராஜ் என்பவரின் மகன் ரத்தினம் மற்றும் அவரது கூட்டாளிகள் நான்கு பேர் அங்குள்ள திரௌபதியம்மன் கோவிலின் சுவர்



ஏறிக்குதித்து அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள பஞ்சலோகத்திலான திரௌபதியம்மன் மற்றும் அர்ஜுனன் சிலைகளைத் திருடிச் சென்றனர். முறையான மற்றும் திறமையான புலன் விசாரணையின் காரணமாக அனைத்து குற்றவாளிகளும் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ஆம் நாள் மற்றும் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**திருட்டு :**

**சென்னை நகரம் இ-4, அபிராமபுரம் காவல் நிலையக் குற்ற எண் 114/89 :**

89. 1989ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் அன்று ஆலந்தூரைச் சேர்ந்த குற்றம் சாட்டப்பட்ட ராஜேந்திரன் என்பவரின் மகன் ராஜா மற்றும் அவரது கூட்டாளிகள் இருவரும் ஆர். கே. நகரில் தடம் எண் 5-ல் செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த சாந்தி என்பவரிடமிருந்து ரூ. 1,50,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். அயராத புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளிகள் அனைவரும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

**வடஆற்காடு அம்பேதகார் மாவட்டம். அரக்கோணம் நகரக் காவல் நிலையக் குற்ற எண். 341/89 :**

90. 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் அன்று ஜடேரி கிராமத்தைச் சார்ந்த குற்றம் சாட்டப்பட்ட கிருஷ்ணப்பன் என்பவரின் மகன் புருசோத்தமன் அரக்கோணத்தில் T.A.S. 6670 என்ற எண் கொண்ட ரூ. 2,50,000 மதிப்புள்ள ''டிப்பர் லாரியை'' திருடிச் சென்றான். உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3ஆம் நாள் அன்று குற்றவாளி கைது செய்யப்பட்டு அன்றே களவு போன லாரியும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் கோட்டை காவல் நிலையக் குற்ற எண். 1740/89:**

91. 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாள் அன்று திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம் அருகில் உள்ள மெயின்கார்ட் கேட்டில் திருச்சி ராம்ஜி நகரைச் சேர்ந்த பாண்டுரங்கன்

என்பவரின் மகன் சரவணன் மற்றும் ஆறுமுகம் என்பவரின் மகன் மாணிக்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து களவாடப்பட்ட ரொக்கம் ரூ. 3,60,000-ஐ காவல் துறையினர் கைப்பற்றினர். அயராத புலன் விசாரணையின் காரணமாக இப்பணம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் லக்னோவில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து களவாடப்பட்டது எனத் தெரிய வந்தது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வு துறையியினரின் குறிப்பிடத்தக்க சில பணிகள் :**

**பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் குன்னக்குடிகாவல் நிலையக் குற்ற எண் 61/89 :**

92. 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் அன்று மதுரை சாலையில் கூத்தம்பட்டியைச் சார்ந்த ராஜீ சேர்வை என்பவரின் மகன் கண்ணன் மற்றும் பிச்சை, மற்றும் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தைச் சார்ந்த ஆறுமுகம் என்பவர் மகன் பழனிவேல் மற்றும் சங்கர் ஆகியோர் எட்டு பஞ்சலோக சிலைகளுடன் கைது செய்யப்பட்டனர். புலன் விசாரணையின் போது அச்சிலைகள் நேமம் அருள்மிகு ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் கோயிலில் இருந்து களவாடப்பட்டவை எனத் தெரிய வந்தது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம், திட்டச்சேரி காவல் நிலையக் குற்ற எண் 230/88 :**

93. 1988ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14ம் நாள் அன்று இரவு அகர மொந்தை கிராமத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் சுவாமி கோயிலுக்குள் சில அடையாளம் தெரியாத குற்றவாளிகள் நுழைந்து அங்கிருந்து பஞ்சலோகத்தினாலான ஏழு சிலைகளை களவாடிச் சென்றனர். இவ்வழக்கு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்டம் துவரங்குறிச்சி கிராமத்தை சேர்ந்த ராஜீ என்பவரின் மகன் திருநாவுக்கரசு மற்றும் சுப்பையா என்பவரின் மகன் சுவாமிநாதன் ஆகியோர் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு களவு போன அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம், திருவாரூர் காவல் நிலையக் குற்ற எண் 307/89 :**

94. 1989ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24 ஆம் நாள் அன்று குடவாசல் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட புளிச்சகுடி கிராமத்தைச் சார்ந்த கோவிந்தசாமி என்பவரின் மகன் கண்ணன்



மற்றும் அவனது கூட்டாளி சுப்பையா என்பவரது மகன் சுவாமிநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து மூன்று பஞ்சலோகத்தினாலான சிலைகள் கைப்பற்றப் பட்டன. விசாரணையின்போது மேற்படி சிலைகள் நாகப் பட்டினம் காவல் சரக எல்லைக்குட்பட்ட புத்தூரில் உள்ள அருள் மிகு சுப்பிரமணிய மடத்திலிருந்து 1988 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் அன்று களவாடப்பட்டவை என தெரிய வந்தது. குற்றம் சாட்டப்பட்ட கண்ணன் என்பவருக்கு நீதி மன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட சுவாமிநாதன் மீது வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

95. 1988ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18/19ஆம் நாள் அன்று இரவு அடையாளம் தெரியாத குற்றவாளி ஒருவர் மதுரை பெரியசொக்கிகுளத்திலுள்ள பார்த்தசாரதி என்பவரது வீட்டின் ஜன்னல் கம்பிகளை அறுத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 3,45,000 மதிப்புள்ள நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், துப்பாக்கி மற்றும் ரொக்கம் ஆகியவற்றை துப்பாக்கி முனையில் கொள்ளை அடித்துச் சென்றனர். இவ்வழக்கு 1989ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ஆம் நாள் அன்று குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வு துறையினரின் புலன் விசாரணைக்காக மாற்றப்பட்டது.

96. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறையினரின் புலன் விசாரணையின்போது மொத்தம் ரூ. 3,00,000 மதிப்புள்ள உருக்கப்பட்ட தங்கம், வெள்ளிப் பாத்திரங்கள், துப்பாக்கி மற்றும் ரொக்கம் ஆகியவை பேபி வர்க்கீஸ் மற்றும் மதி என்ற மத்யூ என்பவரின் மகன் ராஜு என்ற எட்வின் மத்யூ ஆகியோரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. குற்றவாளிக்கு 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ஆம் நாள் அன்று நீதிமன்றத்தில் ஏழு வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

**சட்டம்-ஒழுங்கு :**

97. 1989ஆம் ஆண்டில் தமிழகத்தில் பெரிதும் அமைதியே நிலவியது. 1989ஆம் ஆண்டில் தமிழகக் காவல் துறையினரால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் பின் வருமாறு :

**இனக் கலவரங்கள் :**

98. தர்மபுரி மாவட்டம், தளி காவல் நிலைய எல்லைக்குள் உள்ள ஒரு கிராமமான மாருப்பள்ளி இந்துக்கள் வசிக்கும் பகுதியாகும். இந்த கிராம பஞ்சாயத்தைச் சேர்ந்த பெத்தப்பள்ளி என்ற சிறு கிராமத்தில் முஸ்லீம்கள் வசிக்கிறார்கள். இந்த

பெத்தப்பள்ளி கிராமம் அருகில் தாராவேந்திரா என்று அழைக்கப் படும் மலையில் மல்லேஸ்வரா என்ற கடவுளுக்கான பாழடைந்த நிலையில் உள்ள ஒரு கோவில் உள்ளது. இம்மலையின் அடி வாரத்தில் உள்ள குகையில் முஸ்லீம் தர்கா ஒன்று உள்ளது. அந்த குகையில் விநாயகர் சிலை ஒன்று ஆரம்பத்தில் இருந்ததாகவும், தர்கா கட்டுவதற்காக முஸ்லீம்கள் அந்த சிலையை அகற்றிவிட்ட தாகக் கூறி அந்த தர்காவை அப்புறப்படுத்தும்படி முஸ்லீம்களை கோரியதோடு 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 3ஆம் நாள் அன்று அந்த குகையில் விநாயகர் சிலை ஒன்றை நிறுவ இந்துக்கள் முடிவு செய்தனர். இது தொடர்பாக இந்துக்களும் முஸ்லீம் களும், மோதிக் கொள்ளக்கூடிய நிலை உருவாகியதால், ஒசூர் துணைக் காவல் கண்காணிப்பாளரும், தேன்கனிக்கோட்டை வட்டாட்சியரும் 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5ஆம் நாள் அன்று 'அமைதிக் குழு' கூட்டம் ஒன்றை கூட்டி, தேன்கனிக் கோட்டை வட்டாட்சியர்— நிர்வாகக் குற்றவியல் நடுவர் மன்றத் தில் தங்களது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுமாறு இந்துக்களையும், முஸ்லீம்களையும் கேட்டுக் கொண்டனர். அதன்படி, இவ்விரு பிரிவினரும் அமைதியைக் காக்கவும் அந் நடுவர் மன்றத்தில் நீதி தேடிக் கொள்ளவும் ஒப்புக்கொண்டனர்.

99. கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட இந்து முன்னணி அமைப்பாளர் வீரகணேஷ் என்பவர் கோயம்புத்தூர் பி-1, காவல் நிலையக் குற்ற எண்கள் 440/88 மற்றும் 410/89 ஆகிய வற்றில் பதிவு செய்யப்பட்ட இரண்டு கொலை வழக்குகளில் குற்றவாளியாவார். இந்து முன்னணி உறுப்பினர்களுக்கும் மற்றும் முஸ்லீம்களுக்குமிடையே நிலவி வந்த கசப்பு உணர்ச்சி காரணமாக 1989ஆம் ஆண்ட் ஆகஸ்டு திங்கள் 26ஆம் நாள் அன்று இரவு கோயம்புத்தூரில் சுபையர் மற்றும் 3 பேர்களால் வீரகணேஷ் கத்தியால் குத்தப்பட்டு அதன் காரணமாக இறந்து போனார். இது சம்பந்தமாக கோயம்புத்தூர் பி-1 அங்காடி காவல் நிலையக் குற்ற எண் 1027/89-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. வீர கணேஷின் மரணம் பற்றி கேள்வி யுற்ற இந்து முன்னணி ஆதரவாளர்கள் கோபமுற்று முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான சில பொருட்களை தீ வைத்துக்கொளுத் தினர். இது சம்பந்தமாக கோயம்புத்தூர் பி-1, அங்காடி காவல் நிலையக் குற்ற எண் 1920/89-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் அன்று நடைபெற்ற வீரகணேசின் இறுதிச் சடங்கு ஊர்வலத் தில் சுமார் 7,000 பேர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு திரும்பிய ஊர்வலத்தினரில் இருவர் முஸ்லீம்களால் தாக்கப்பட்டனர். இதில் காயமுற்ற இருவரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் இது சம்பந்தமாக கோயம்புத்தூர் பி-1 காவல் நிலையக் குற்ற எண் 1036/89-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர் பாக இரு பிரிவினரையும் சேர்ந்த சுமார் 260 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.



100. 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9-ஆம் நாள் அன்று, பி. மீனாட்சிபுரத்தில் முத்துப்பிள்ளை என்கிற ஆதி திராவிடப் பெண்மணி சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இறந்து கிடந்தார். சந்தேகத்திற்கிடமான மரணம் என்ற பிரிவின்கீழ் போடிநாயக்கனூர் (ஊரகம்) காவல் நிலையத்தில் குற்ற எண் 228/89 பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் காவல் துறையினர் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி ஆதி திராவிடர்கள் சுமார் 500 பேர், 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10ஆம் நாள் அன்று, துரைராஜபுரத்தில் போடி—தேனீ சாலையில் போக்குவரத்தை மறித்தனர். தேனீ– கம்பம் சாலை யில் உள்ள காட்டூரிலும் மறியல் செய்தனர். அதிகாரிகள் தலை யிட்டு அவர்களைச் சமாதானப்படுத்தி கூட்டத்தைக் கலைந்து செல்லச் செய்தனர்.

101. 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் அன்று பி. மீனாட்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்ட மொன்றில் தேவந்திரகுல வெள்ளாள சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜான் பாண்டியன் பேசுகையில் மேற்படி உள்ளூர் ஆதி திராவிடப் பெண்மணியின் மரணம் குறித்து உள்ளூர் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் அக்கறை செலுத்தவில்லை எனக் குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் பேசுகையில் அக்கிராமத்தில் சுகாதார வசதிகள் சரிவர செய்து தரப்படவில்லை என்றும் அவ்வாறு அக்கறை செலுத்தாமைக்காக ஊராட்சி மன்றத் தலைவர் கொலை செய்யப்பட வேண்டி இருக்கும் என்றும் கூறினார். ஊராட்சி மன்றத் தலைவர் ராஜூ பிள்ளை, ஆதி திராவிடர் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தாமைக்காக அன்னாரது மகளை வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்து தாலி கட்டவேண்டி இருக்கும் என்றும் அவர் மேலும் பேசினார்.

102. பி. மீனாட்சிபுரத்திலும் அருகாமைப் பகுதிகளிலும் மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து ஆதி திராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்குமிடையில் நிலவிய மனக்கசப்பையொட்டி, 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ஆம் நாள் அன்று தேவாரம், போடிநாயக்கனூர், மற்றும் உப்புக்கோட்டை பகுதி களிலும், 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் அன்று டொம்புச்சேரி, போடிநாயக்கனூர், கண்டமனூர், ஆண்டிப் பட்டி, சின்னமனூர் மற்றும் அல்லி நகரம் ஆகிய பகுதிகளிலும் 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் அன்று கண்டமனூரிலும் உப்புக்கோட்டையிலும் மேலும் 1989ஆம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ஆம் நாள் அன்று தும்மலப்பட்டியிலும் ஆதி திராவிடர்களும் சாதி இந்துக்களும் வன்முறைச் சம்பவங் களில் ஈடுபட்டனர். தேவாரத்தில் நாட்டு வெடிகுண்டுகள் பயன் படுத்தப்பட்டதை அடுத்து அங்கு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர காவல் துறையினர் 12 முறை துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று.

103. 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 19-ஆம் நாள் அன்று அமைதிக் குழுக் கூட்டம், மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்களின் முன்னிலையில் நடை பெற்றது. மேற்படி இரு சமூகத்தினர், அரசியல் கட்சிகள், காவல் துறை, வருவாய்த் துறை ஆகியவர்களின் பிரதிநிதிகள் அக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளும் அமைதி காப்பதாக ஒப்புக் கொண்டனர். சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்த, உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. மேற்படி வன்முறைச் சம்பவங்களில் 29 பேர் மாண்டனர்,

தேர்தல் :

104. 1989-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21-ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. மருங்காபுரி மற்றும் மதுரை (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி ஆகியவற்றிற்கான இடைத் தேர்தல் 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ஆம் நாள் அன்று நடைபெற்றது. 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாளன்று 9-வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மேலும் பழனி பாராளுமன்றத் தொகு திக்கான தள்ளிவைக்கப்பட்ட தேர்தல் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27-ஆம் நாளன்று நடைபெற்றது. சட்ட மன்றப் பேரவை மற்றும் பாராளுமன்றத் தேர்தலின்போது காவல் துறையினரை தவிர காவல் துறையினர் அல்லாத ஊர்க்காவல் படையினர், தீயணைப்பு படையினர், வனக் காவலர்கள், முன்னாள் இராணுவத்தினர், ஓய்வு பெற்ற காவல் துறையினர் மற்றும் மத்திய காவல் படைப் பிரிவுகளான சி.ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., மற்றும் ஆர். பி. எப்., ஆகிய வற்றைச் சேர்ந்தவர்களும் பாதுகாப்புப் பணிக்காக பயன்படுத் தப்பட்டனர். பிற மாநிலங்களைச் சார்ந்த ஆயுதப்படைப் பிரிவினர், ஊர்க்காவல் படையினர், ஓய்வுபெற்ற இராணுவத் தினர் ஆகியோரும் கூட மாநிலக் காவல் துறையினருக்கு உதவி யாகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இத்தேர்தல்களின்போது எவ்வித அசம்பாவித சம்பவங்களும் நிகழாமல் அமைதி யாக நடைபெற வழிவகை செய்யப்பட்டது. காவல் துறை யினரால் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தலை மைத் தேர்தல் அதிகாரி அவர்களின் பாராட்டுதலைப் பெற்றுத் தந்தது.

தொழிலாளர் :

105. பொதுத் துறை மற்றும் தனியார் துறையைச் சார்ந்த பல்வேறு தொழிற் சங்கங்கள் நடத்திய வேலை நிறுத்தம், மறி யல் போன்ற சில சம்பவங்கள் தவிர 1989 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் தொழிலாளர் நிலைமை அமைதியாகவே இருந்தது.



106. பாரத் போக்குவரத்து காண்டிராக்ட் கம்பெனி, பெருங் களத்தூர் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் ஊழியர்கள் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆகியோர் முறையே வேலை கோரியும் மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறக்கக் கோரியும் சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் ஊதிய உயர்வு பற்றி பேச்சு வார்த்தை நடத்த இருதரப்புக் கமிட்டி அமைக்க கோரியும் போராட்டம் நடத்தினர்.

தீவிரவாதிகள் நடவடிக்கை :

107. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. பல்வேறு தீவிரவாத அணிகளும் மற்றும் அவற்றின் இதர அமைப்புகளும் காவல் துறையினரின் அடக்கு முறை, பொய் வழக்கு போடப்படுவது ஆகியவற்றைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டியும் மற்றும் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டம், மாநாடு, ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம் ஆகிய வற்றை நடத்தினர்.

1989-ஆம் ஆண்டில் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடுகள் :

108. 1989-ஆம் ஆண்டில் தமிழகத்தில் காவல் துறை யினர் 13 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அவைகளின் சில விவரங்கள் வருமாறு :—

109. திருச்சி கோட்டை காவல் நிலையக் குற்ற எண் 1858/ 89-ல் 302 மற்றும் 376, இ.த.ச. பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பங்களா ராஜேந்திரன் (எ) ராஜேந்திரன் என்பவர் மேற்படி வழக்கில் சாட்சியான கருப்பன் என்பவரை 1989 பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாள் அன்றிரவில் கொலை செய்ய முயற்சித்தார். இதுபற்றி மேற்படி கருப்பன் திருச்சி கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். உடனே காவல் சார்பு ஆய்வாளர் சில காவலர்களோடு குற்றவாளியைப் பிடிக்கச் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவர் தப்பியோட முயற்சித்த போது தன்னைப் பிடிக்க வந்த காவலரை கத்தியால் குத்தினார். காயமடைந்த காவலர் அபயக்குரல் எழுப்பியவுடன் காவல் சார்பு ஆய்வாளர் முன்னேறி குற்றவாளியைப் பிடிக்க முயற்சித்தார். குற்றவாளி காவல் சார்பு ஆய்வாளரின் வயிற்றில் காலால் எட்டி உதைத்ததோடு அருவாளைக் கொண்டு அவரை வெட்டவும் முயற்சித்தார். காவல் சார்பு ஆய்வாளர் பின்வாங்கி தன்மேல் அருவாள் வெட்டுவிழாது தடுத்திட முயற்சித்தார். இதில் அவரது இடது கையில் 3 வெட்டுக்காயங்களும் நெஞ்சில் ஒரு வெட்டுக்காயமும் ஏற்பட்டன. காவல் சார்பு ஆய்வாளர் மேலும் பின்வாங்கி குற்றவாளியைச் சுட்டுவிடப் போவதாக மிரட்டினார். காவல் சார்பு ஆய்வாளரை கொன்றுவிடப்

போவதாக மிரட்டிக்கொண்டே குற்றவாளி அவரை நோக்கி முன்னேறினார். உயிர் தப்புவதற்கு வேறு வழி இல்லாததாலும் தான் மற்றும் காவலர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும் காவல் சார்பு ஆய்வாளர் தன்னிடமிருந்த கைத் துப்பாக்கியால் குற்றவாளியை நோக்கிச் சுட்டதில் குற்றவாளி கீழே விழுந்து, இறந்தார். காவல் சார்பு ஆய்வாளர் கொடுத்த புகாரின் பேரில் திருச்சி மலைக்கோட்டை காவல் நிலையக் குற்ற எண் 176/89-ல் இ.த.ச. 307-வது பிரிவின் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானது என்று நீதி விசாரணையில் தெளிவாகியது.

110. 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாளன்று தம்மம்பட்டியில் உள்ளூர் திருவிழாவையொட்டி சுமார் 1,000 இந்துக்கள் ஊர்வலமாகச் செல்கையில் உள்ளூர் பள்ளிவாசல் அருகில் பறை அடிக்க அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். காவல் துறையினர் அதற்கு அனுமதிக்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த ஊர்வலக்காரர்கள், காவல் துறையினர் மீது கற்களை எறிந்து வன்முறைச் செயலில் ஈடுபட்டனர். இதில் 12 காவல் துறையினரும் 5 வருவாய்த் துறை அதிகாரிகளும் காயமடைந்ததோடு,4 அரசாங்க வாகனங்களும் சேதமடைந்தன. தடியடிப் பிரயோகம் எதிர்பார்த்த பலனைத் தராததால், காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2பேர் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் வழக்கொன்றைப் பதிவு செய்தனர். காவலர்கள் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதென்று நீதி விசாரணையில் தெளிவாகியது.

111. கன்னியாகுமரியில் 1989-ஆம் ஆண்டு மே திங்கள் 1ஆம் நாளன்று, தேசீய மீனவர்கள் அமைப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தியபோது, அதில் சென்றவர்களில் ஒரு பகுதியினர் காவல் நிலையத்தைத் தாக்கியதால் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச் சம்பவம் தொடர்பாக, கன்னியாகுமரி காவல் நிலையக் குற்ற எண் 196/89-ல் 147, 148, 324, 307 337, 336, 332 இ.த.ச. மற்றும் பிரிவு 2(4) டி.என்.பி.பி. (டி மற்றும் எல்) சட்டம் 1982-ல் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. மொத்தத்தில் 35 பேர்கள் கைது செய்யப்பட்டு 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாளன்றே நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டனர். காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதென்று நீதி விசாரணையில் தெளிவாகியது.

112. சிறைத் தண்டனைக் கைதி பாலச்சந்திரன் என்ற பாலன் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 10 ஆம் நாளன்று தனக்கு காவலாக வந்த தென்னாற்காடு மாவட்ட காவல் ஆயுதப் படைப் பிரிவைச் சேர்ந்த காவலர் (எண் 250) பாலக்குமார் என்பவரைத் தாக்கிவிட்டு, தப்பியோட முயற்சித்தபோது,



தன்னுயிரைப் பாதுகாத்துக்கொள்ளவும், குற்றவாளி தப்பியோடிவிடாமல் தடுக்கும் பொருட்டு அக்காவலர் துப்பாக்கியால் சுட்டதில் மேற்படி கைதி மரணமடைந்தார்.

113. தென்னாற்காடு மாவட்டம் நல்லவாடு கிராமத்திலுள்ள மாரியம்மன் கோவில் திருவிழாவை யொட்டி நிதி வசூல் செய்வது தொடர்பாக இரு உள்ளூர் மீனவர் அணியினரிடையே ஏற்பட்ட மோதலில் 6 பேர் காயமடைந்தனர் காவல் துறையினர் இதனைத் தடுக்க முற்பட்டபோது இவ்விரண்டு அணியினரும் காவல் துறையினரைத் தாக்கியதில் 5 பேர்களும் காயம் ஏற்பட்டது. இக்கும்பலைக் கலைக்க காவல் துறையினர் வானை நோக்கி ஒரு சுற்று சுட்டனர். இச்சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் வழக்கொன்றையும் பதிவு செய்துள்ளனர்.

114. பங்களாப்பு தூர் காவல்நிலையக் குற்ற எண் 192/87-ல் இ.த.ச. 147, 148, 324. 307, 302 மற்றும் 347 பிரிவுகள் மற்றும் ஆயுதப் சட்டப் பிரிவு 25(1)(அ) வழக்கில் சம்பந்தப்பட்ட வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் கண்டுபிடிப்பதற்காகவும். சந்தனமர கடத்தல்காரர்களைக் கைதுசெய்வதற்காகவும் வனப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, காவல் துறைக் கண்காணிப்பாளர் தேடும் பணிக்கு ஏற்பாடு செய்தார். இதில், வனப் பிரிவு காவல் துறை அதிகாரிகளும், வனத்துறை அதிகாரிகளும் ஈடுபட்டனர். சந்தனக்கட்டை கடத்தல்காரர்கள் எனச் சந்தேகப்பட்ட 6 பேர்களை இக்குழுவினர் கண்டவுடன் அவர்களின் கைகளிலிருந்த ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரண் அடையும்படி கோரினர். ஆனால், அவர்கள் அக்குழுவினரை நோக்கி சுட்டனர். தற்காப்பிற்காக, வனத்துறை அதிகாரிகள் துப்பாக்கியால் 2 தடவைகள் சுட்டனர். வனப்பிரிவு காவல்துறை அதிகாரிகள் துப்பாக்கியால் 3 தடவைகள் சுட்டனர் இத்துப்பாக்கி சூட்டில் காயமடைந்த 2 பேர்களை இக்குழு கைது செய்தது. இச்சம்பவம் தொடர்பாக, தாளவாடி காவல் நிலையக் குற்ற எண் 66/89 இ.த.ச. 307 பிரிவின் கீழ் வழக்கு கொன்று பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

115. 1989-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 14-ஆம் நாள் அன்று அருப்புக்கோட்டையில் 'பக்ரீத்' விழாவையொட்டி முஸ்லீம்கள் உள்ளூர் மாரியம்மன் கோவில் அருகில் கொடியேற்ற முயற்சித்த போது முஸ்லீம்களுக்கும் நாடார்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. கற்களும் இதர ஆயுதங்களும் இம் மோதலில் பயன்படுத்தப்பட்டன. நிலைமை கட்டுக்கு அடங்காமல்போனதால், காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இத்துப்பாக்கிச் சூட்டில் 2 பேர்கள் இறந்தனர். மற்றொருவர் இம்மோதலில் கொல்லப்பட்டார். இக் குழப்பத்தில் 55 பேர்களும் மற்றும் 18 காவல் துறையினரும் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக 23 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதென்று நீதி விசாரணையில் தெளிவாகியது.

116. சொரப்பூர் கிராமத்தில் (விழுப்புரம்) அம்மன் கோவில் திருவிழாவைக் கொண்டாடுவது குறித்து ஆதி திராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும்இடையில் நிலவி வந்த மனக்கசப்பின் எதிரொலியாக 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2-ஆம் நாள் அன்று சொரப்பூர் மேல்பாக்கம் மற்றும் வீராணம் (தமிழ்நாடு) மற்றும் பனையாண்டிக் குப்பம் (பாண்டிச்சேரி) ஆகிய கிராமங்களிலுள்ள காலனிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்கள் சுமார் 2,000 பேர் பயங்கர ஆயுதங்களுடன் சாதி இந்துக்களைத் தாக்கியதுடன் அவர்களது வீடுகளுக்கும் தீ வைத்தனர். மேலும் அவர்கள் சொரப்பூரில் பாதுகாப்புப் பணியிலிருந்த காவல் துறையினரையும் தாக்கினர். அவர்களைஅடக்குவதற்கு தடியடிப் பிரயோமும், கண்ணீர்ப் புகை குண்டுகளும் பயன் அற்றுப் போகவே கூட்டத்தினரைக் கலைக்க காவல்துறையினர் 7 தடவைகள் துப்பாக்கியால் சுட்டதில் இருவர் மரணமடைந்தனர். இச்சம்பவத்தில் 26 பேர்கள், 3 சார்பு ஆய்வாளர்கள் உள்ளிட்ட 22 காவல் துறையினர் ஆகியோர் காயமுற்றனர். இது தவிர ரூ. 30,000 மதிப்புள்ள 3 வீடுகள் சேதமாக்கப்பட்டதுடன், 7 கூரை வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணைக் கமிஷன் ஒன்றிற்கு அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

117. 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14-ஆம் நாள்அன்று வையம்பட்டியில் (திருச்சிராப்பள்ளி) உள்ளூர் காவல் நிலையம் அருகில் உள்ள மரமொன்றில் ஒரு உடல் (ஆண்) தொங்கிக் கொண்டிருந்தது. இதற்கு உள்ளூர் காவல் துறையினர் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகித்து, உள்ளூர்வாசிகள் மேற்படி சடலத்தை மரத்திலிருந்து இறக்கவிடாமல் தடுத்ததுடன் சாலையில் அமர்ந்துகொண்டு போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தனர். காவல் மற்றும் வருவாய்த்துறையின் உயர் அதிகாரிகள் தலையிட்டு அவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்ட பின்னரும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்து, அவர்கள்மீது கல்லெறிதலில் ஈடுபட்டனர். இதில் காவல் துறையைச்சேர்ந்த 12 பேரும் வருவாய்த் துறையைச் சேர்ந்த 7 பேரும் காயமடைந்தனர். மணப்பாறை காவல் துணைக் கண்காணிப்பாளரும், வட்டாட்சியரும் காயமடைந்தனர். கூட்டத்தைக் கலைக்க காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது. இதில் 6 பேருக்குக் காயமேற்பட்டது. காயமுற்ற ஒருவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார். இது தொடர்பாகக் காவல் துறையினர் வழக்கொன்றைப் பதிவு செய்தனர். தொங்கிக் கொண்டிருந்த சடலம் கீழிறக்கப்பட்ட பின்னர் மேற்படி மரணமடைந்தவர் உத்தமகவுண்டனூரைச் சேர்ந்த மூப்பன் என்ற அய்யப்பா எனத் தெரிய வந்தது. காவலர் துப்பாக்கியால் சுட்டது நியாயமானதென்று நீதி விசாரணையில் தெளிவாகியது.





## பகுதி—7.

### காவலர்—பொதுமக்கள் தொடர்பு :

118. குற்றத் தடுப்பு, குற்றங் கண்டுபிடிப்பு, போக்குவரத்தினை ஒழுங்குப்படுத்துதல் ஆகியவற்றில் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்கும் காவலர்கள் பொது மக்களுடன் நல்ல முறையில் தொடர்பு கொள்வது இன்றியமையாதது. தமிழ்நாடு காவல் துறையினர் பொது மக்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறுவதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது. காவல்துறையைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களின் அன்பான நடத்தையாலும், பொதுமக்களின் குறைகளைத் தீர்க்க நேர்மையான— உண்மையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், பொது மக்களிடையே அரசினைப் பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்க முடியும்.

119. வெள்ளம், புயல், விபத்து, தீ விபத்து ஆகியவற்றினால் பாதிக்கப்படும் மக்களைக் காப்பாற்றவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணம் அளிக்கவும் அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் காவல் துறையினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு எல்லா உதவிகளையும் செய்து வருகின்றனர். இனம், அரசியல், மதம் சம்பந்தப்பட்ட கலவரங்களினால் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் பொறுப்புணர்ச்சியோடு காவல் துறையினரே முதன்மையாக முன்வந்து உடன்பாட்டுப் பேச்சுவார்த்தைகளுக்கு அடிகோலி சிக்கல்களுக்குச் சுமூகமான முறையில் தீர்வு காண வகை செய்கின்றனர். மேலும் அவர்கள் குடும்பச் சண்டைகள், திருமண தகராறு போன்ற பல பிரச்சினைகளை அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நிறைவு அளிக்கும் வகையில் தீர்த்து வைத்துள்ளனர்.

120. தேசிய மாணவர் படை, தேசிய சமூக நல அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய கிராம விழிப்புக் குழு, மாவட்ட போக்குவரத்துக்குழு மற்றும் புற நகர் குடியிருப்பு சங்கத்தினர் செய்யும் சுற்றுக் காவல் போன்ற அமைப்புகளால் காவலர்-பொது மக்களிடையே நெருங்கிய நல்லுணர்வு வளர்வதுடன், இம் மாநிலத்தில் குற்றங்கள் மற்றும் போக்குவரத்து விபத்துக்களின் எண்ணிக்கையை தடுப்பதற்கும் இயலுகிறது.

121. மாநில காவல் துறையினர் விளையாட்டுப் போட்டி சென்னையில் 1989-ஆம் ஆண்டு மே திங்கள் 17-ஆம் நாள்முதல் 19-ஆம் நாள் வரை நடைபெற்றது. தமிழ்நாடு காவல் நீச்சல்

போட்டியும் ஓட்டப்பந்தயமும் 1989ஆம்ஆண்டு ஜூலைத் திங்கள் 5ஆம் நாள் முதல் 7 ஆம் நாள் வரை சென்னையில் நடைபெற்றது. 1989-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9-ஆம் நாள் முதல் 13-ஆம் நாள் வரை மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரால் டெல்லியில் நடத்தப்பட்ட அகில இந்திய காவல் நீச்சல் போட்டியிலும் ஓட்டப்பந்தயத்திலும் தமிழ்நாடு காவல் துறை அணி கலந்து கொண்டது. சரகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மதுரையில் 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6-ஆம் நாள் முதல் 9-ஆம் நாள் வரை நடைபெற்றது. 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ஆம் நாள் முதல் 22-ஆம் நாள் வரை மதுரையில் நடைபெற்ற 39-வது அகில இந்திய காவல் விளையாட்டு போட்டியை தமிழ்நாடு காவல் துறை முன்னின்று நடத்தியது. கபடி, கூடைப்பந்து, கால் பந்து, உடற் பயிற்சி ஆகியவற்றில் வெற்றி பெற்றது. கைப்பந்து மற்றும் ஹாக்கி ஆகியவற்றில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

**ஊர்க் காவல் படை:**

122. தமிழ்நாடு ஊர்க்காவல் படை சட்டம் மற்றும் விதிகள் 1963-ன்படி ஊர்க்காவல் படை என்ற அமைப்பு காவல் துறைக்கு மனமுவந்து தாமாகவே வந்து உதவும் ஒரு அமைப்பாக இருந்து வருகிறது. காவல் துறை தலைவரின் தலைமையின் கீழ் இயங்கும் இவ்வியக்கத்தில் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 10,010 ஆண்களும், 550 பெண்களும் உள்ளனர். 1989-ஆம் ஆண்டு 1,034 ஊர்க்காவல் படையினர் புதிதாக சேர்க்கப்பட்டனர். 1989-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் அன்று இவ்வமைப்பில் 9,219 ஆண்களும் 473 பெண்களும் இருந்தனர்.

123. 1989-ஆம் ஆண்டு ஊர்க்காவல் படையினர் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல், இரவு ரோந்து பணி, கூட்டத்தினைக் கட்டுப்படுத்துதல், மிக முக்கிய பிரமுகர்களின் வருகையின் போது பாதுகாப்பு அளித்தல், கோவில் திருவிழா காலங்களில் பாதுகாப்பு, சமூக நலப் பணி போன்ற பல்வேறு பணிகளில் காவல் துறையினருக்கு உதவி புரிந்து வந்தனர். 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றம் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் போது ஊர்க்காவல் படையினர் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டனர்.

124. ஊர்க்காவல் படையினருக்கான செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 32,00,000 ஆகும். இதில் சில இனங்கள்குறித்த செலவுகளில் மைய அரசு 50 விழுக்காட்டினை ஏற்றுக் கொள்கிறது. 1989-ஆம் ஆண்டு ஒரு ஊர்க்காவல் படையினருக்கு குடியரசு தின பதக்கமும் இரண்டு ஊர்க்காவல் படையினருக்கு சுதந்திர தின பதக்கமும் வழங்கப்பட்டன.



பகுதி—8

**1989ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சில முக்கிய ஆணைகள் :**

125. 1989-90 ஆம் ஆண்டு காவல் துறைக்கு தேவையான பணியாளர்கள் மற்றும் கருவிகள் சம்பந்தப்பட்ட சில திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சில முக்கிய ஒப்பளிப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு :

126. வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என இரண்டு காவல் மாவட்டங்களாக தேவையான பணியாளர்களுடன் வடஆற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்டது.

127. கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் காவல் ஆணையர் முறையை ஏற்படுத்துவதற்காக நடப்பாண்டில் அரசு தனி அலுவலர்களாக இரண்டு காவல் துறை துணைத் தலைவர்கள் பதவிகளை அவர்களுக்கு தேவையான பணியாளர்களுடன் ஏற்படுத்த அனுமதி அளித்துள்ளது.

128. போரூரில் உள்ள மதுரை தாமரை வளாகத்தில் காவல் நிலையம் திறப்பதற்காக ஒரு காவல்துறை சார்பு ஆய்வாளர், ஒரு தலைமை காவலர் மற்றும் 8 இரண்டாம் நிலை காவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

129. நடப்பாண்டில் 68 காவல் நிலையங்கள் மற்றும் 20 புறக்காவல் நிலையங்களில் தொலைபேசி இணைப்புகள் வழங்கிட அரசு அனுமதித்துள்ளது.

130. தற்போது உபயோகத்திலுள்ள 5 ஸ்டாண்டர்டு வேன்கள் 1 மெடாட்டர், 20 லாரிகள், 3 பிக்கப் வேன்கள், 27 ஜீப்புகள் மற்றும் 82 மோட்டர் சைக்கிள்களை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக ரூபாய் 144.35 லட்சம் செலவில் புதிய வாகனங்கள் வாங்கவும் ரூபாய் 59,44 இலட்சம் செலவில் 12 ஜீப்புகள், 19 மினி பஸ்கள், 2 அம்பாசிடர் கார்கள், 1 பிக்கப்வேன், 29 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு மொபட் வாங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

131. வடஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதையடுத்து ரூபாய் 27,100 செலவில் தொலைபேசிக் கருவிகள் வாங்கவும், ரூ. 2,00,000 செலவில் மேசை நாற்காலி வாங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.

132. காவல் துறையில் பணியாற்றும்போது இறந்து போன காவல் பணியாளர்களின் வாரிசுகள் கல்வித் தகுதி மற்றும் உடல் தகுதிகள் பெற்றிருந்து, மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள வயது

வரம்பிற்குள் இருந்தால், அவர்களை கருணை அடிப்படையில் காவலர்கள் மற்றும் காவல் சார்பு ஆய்வாளர்களாக நியமனம் செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

133. சென்னை துறைமுக வளாகத்தில் உள்ளே அதன் நீர்ப் பரப்பு அடங்கிய பகுதிகளை காவல் செய்ய ஒரு புதிய நீர்பரப்பு காவல் நிலையத்தை திறப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

134. மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் காவல் ஆணையரி அமைப்பு முறை ஏற்படுத்திட அரசு ஆணை யிட்டுள்ளது.

135. செங்கை-அண்ணா (கிழக்கு) மாவட்டத்தில் விருகம் பாக்கம், திருவான்மியூர், வில்லிவாக்கம், வேளச்சேரி மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய ஐந்து காவல் நிலையங்கள் சென்னை பெருநகர் காவல் சரகம் விரிவாக்கத்தின் கீழ் கொண்டு வர அரசு ஆணையிட்டுள்ளது.



பகுதி—9.

முடிவுரை :

136. இந்திய அரசியலமைப்பின் கீழ் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு மும்மரமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, இன்றைய அரசு மக்கள் நல அரசாகச் செயல்படுகிறது. இந்த மக்கள் நல அரசின் பணிகள் சிக்கலானவையும் எண்ணிறந்தவையும் ஆகும். இப்பணிகள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென் றால், குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நாட்டில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் நிலவ வேண்டும். ஆகவே, இவ்வமைப்பில் காவல் துறையினர் மிக முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. கடமையுணர்வோடும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடும் பொதுமக்கள் முன்னிலையில் காவல் துறையினர் மிகுந்த ஒழுக்க உணர்வோடு பணியாற்ற வேண்டும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றும் ஒவ்வொரு வருக்கும் இதில் பெரும் பொறுப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கீழே கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைபிடித் தொழுக தமிழ்நாடு காவல் துறையினர் பெரிதும் முயன்று வருகின்றனர்.

(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளிவிவர நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம்தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டு விடவேண்டும். காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைத் துறை, குற்றவாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிருவாகம் தன் வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்தவோ சிதறடிக் கவோ கூடாது. மதுவிலக்கைப் பொறுத்தவரை காவல் துறை யினர் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகவும் முழு மனதுடன் அமுல் செய்து, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர். சமூக விரோதிகள் ஆகியோர் மக்களுக்குத் தீமை விளைவிக்கும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க எல்லா முயற்சி களும் எடுக்க வேண்டும்.

(இ) மகளிர், இளம் பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப் படும் சமுதாயக் கொடுமை, வரதட்சணைக்கொடுமை ஆகியவை அகற்றப்பட்டு, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட காவல் துறை தீவிரமாகச் செயல்படும்.

(ஈ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவ ராகவோ, உதவி கோரியோ வருபவர்களில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாவும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்களாக வும் இருக்கிறார்கள் என்பதைக் காவல் துறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அவர்களிடம் காவலர் அன்புட னும் அனுசரணையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

(உ) காவல் துறையினரின் தூய்மையையும் திறமையை யும் உறுதி செய்யும் பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும் கட்டுப்பாட்டையும் உயரிய நிலையில் பேணிவரவேண்டும். இதைச் சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொதுமக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை உடையவர்கள் ஆவர். எனவே, இது காறும் போதிய அளவு காவலர்கள் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங் கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவலர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.

(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்பு கிட்டு வதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத் தப்படும். காவல் துறையை நவீனப்படுத்துவதும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம், வனவிலங்குகளைப் பாதுகாத் தல், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைப் தடுத்தல், துப்புரவுக்கேடு, சப்தத்தால்வரும் கேடு, தூய்மைக் கேடு ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல் துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஐ) பொது மக்களின் நன்மதிப்புடன் கூடிய ஆதரவு இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணி களைத் தொடர வேண்டும்.

137. சமுதாயத்தின் நன்மதிப்பையும், அன்பையும் பெறுவது தான் காவல் துறையினரின் தலையாய கடமையாகும். அதற்குப் பின்னர்தான் அவர் தன் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்த வேண்டும். அவர் தன் பணிகாலத்தில் பெறுகின்ற வெகுமதிகள், பதவி உயர்வுகள் போன்றவற்றால் பெற முடியாத மன நிறை வினை இதன் மூலம் மட்டுமே அவர்கள் பெறமுடியும். இதனைக் கருத்திற்கொண்டு காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கை காக்க கடும் பணி ஆற்றுவதோடு குற்றத்தைக் கண்டு பிடித்தல் சமூகப் பணி ஆகிய வற்றில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக்



கொள்ளவேண்டும். காவல் துறையினருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து சமூகத் தலைவர்கள் செயல் பட்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால் காவல் துறையினரின் பணியும் கடமைகளும் எளிதாகும்.

138. மேலே வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநிலக் காவல் துறையினர் தொடர்ந்து செயல்படுவர். வருங்காலத்திலும் மேலும் அவர்கள் திறம்பட பணியாற்றும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு காவல் துறை மேற்கொள்ளும்.

1990ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளன்றுள்ளவாறு தமிழ்நாடு காவல் துறைக்கு அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை :

| தொடர் எண். (1) | பதவி. (2) | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 | காவல் துறை டைரக்டர்-ஜெனரல் .. | 1 |
| 2 | காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்கள். . | 8 |
| 3 | காவல் துறைத் துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்கள். | 21 |
| 4 | காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் .. | 71 |
| 5 | காவல் துறைக் தளவாய்கள் .. .. | 2 |
| 6 | காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள். | 39 |
| 7 | காவல் துறைத் துணைத் தளவாய்கள் .. | 5 |
| 8 | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-1. | 277 |
| 9 | காவல் துறைக் துணைக் கண்காணிப்பாளர்கள், நிலை-2. | 41 |
| 10 | காவல் துறை உதவி தளவாய்கள் .. .. | 39 |
| 11 | காவல் துறை ஆய்வாளர்கள் .. .. | 1,314 |
| 12 | காவல் துறை அட்சுடண்ட் ஆய்வாளர்கள் | 7 |
| 13 | காவல் துறை சேமக் காவல் படை ஆய்வாளர்கள். | 120 |
| 14 | காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் .. | 3,966 |
| 15 | காவல் துறை சேமக் காவல் படை சார்பு ஆய்வாளர்கள். | 621 |
| 16 | காவல் துறைத் தலைமைக் காவலர்கள் .. | 5,920 |
| 17 | காவல் துறை அவில்தார்கள் .. .. | 830 |
| 18 | காவல் துறை காவலர்கள் நிலை-1 .. | 5,898 |
| 19 | காவல் துறை நாயக்குகள் | 679 |
| 20 | காவல் துறை லான்ஸ் நாயக்குகள் | 1,071 |
| 21 | காவல் துறை காவலர்கள், நிலை-2 | 45,366 |
| 22 | காவல் துறை பெண் சார்பு ஆய்வாளர்கள். | 88 |
| 23 | காவல் துறை பெண் தலைமைக் காவலர்கள். | 80 |
| 24 | காவல் துறை பெண் காவலர்கள் .. | 690 |
| | மொத்தம் .. | 67,094 |

[1990 மே 3

1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை காவல் துறைக்கு அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்கள் பற்றிய விவரம்.

| பதவி. (1) | எண்ணிக்கை. (2) |
| --- | --- |
| **(அ) நிர்வாகிகள் :** | |
| காவல் துறைத் தலைவர் .. .. .. | 1 |
| காவல் துறைத் துணைத் தலைவர் .. .. | 2 |
| காவல் துறைக் கண்காணிப்பாளர் .. .. | 1 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (நிலை -1). | 2 |
| காவல் துறை ஆய்வாளர்கள் | 14 |
| காவல் துறை ஆய்வாளர் (சேமப்படை) .. | 1 |
| காவல் துறை சார்பு ஆய்வாளர் .. .. | 38 |
| காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் (சேமப் படை). | 8 |
| காவல் துறைத் தலைமைக் காவலர்கள் .. | 33 |
| காவல் துறைக் காவலர் நிலை-1 .. .. | 1 |
| காவல் துறைக் காவலர்கள் நிலை-2 .. .. | 130 |
| மொத்தம் .. | 231 |
| **(ஆ) அமைச்சுப் பணியாளர்கள் :** | |
| நேர்முக உதவியாளர் .. .. .. | 1 |
| கண்காணிப்பாளர்கள் .. .. .. | 6 |
| உதவியாளர்கள் .. .. .. .. | 13 |
| இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 2 |
| இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் .. | 11 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் .. .. | 5 |
| பதிவுரு எழுத்தர் .. .. .. .. | 3 |
| அலுவலக உதவியாளர் .. .. .. | 16 |
| மொத்தம் .. | 57 |



1990 மே 3]

| பதவி. (1) | எண்ணிக்கை. (2) |
| --- | --- |
| **(இ) இதர பணியாளர்கள் :** | |
| காவல் ஆணைக் குழுத் தலைவர் .. .. | 1 |
| காவல் ஆணைக்குழு உறுப்பினர்கள் .. .. | 5 |
| ஆராய்ச்சி அதிகாரி .. .. .. | 1 |
| தனிப்பிரிவு உதவியாளர் .. .. .. | 1 |
| இரகசியப்பிரிவு உதவியாளர் .. .. | 3 |
| விரல் ரேகை கண்காணிப்பாளர் .. .. | 1 |
| முதுநிலை அறிக்கையாளர் .. .. .. | 1 |
| ஆய்வாளர் (தொழில் நுட்பம்) .. .. | 1 |
| மொத்தம் .. | 14 |

## தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### மானியக் கோரிக்கை எண். 16.

### கொள்கைக் குறிப்பு 1990-91.

தீயினால் ஏற்படும் கேட்டிலிருந்து மக்களைக் காப்பாற்ற, தீயணைப்புத் துறை சிறிய மற்றும் பெரிய தீ விபத்துக்களை அணைத்தும், மேலும் தீ விபத்துக்களை தடுக்கும் வழிகளை மக்களுக்கு கற்றுக் கொடுத்தும் ஒரு முக்கியமான பணியை ஆற்றி வருகிறது. இத்துறை, தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லாமல் வெள்ளம், புயல், நில நடுக்கம், கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. தேர்தல் காலங்களிலும், கலவரங்களிலும், கோவில் திருவிழாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் வருகையின்போதும் பாதுகாப்பிற்காக இத்துறை பணியாளர்களின் சேவை காவல்துறையினருக்கு அளிக்கப்படுகிறது. தொற்று நோய்கள் பெருவாரியாக பரவும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும் உதவி புரிகிறது. அரசுக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் கட்டும்போது தீ விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றிய அறிவுரைகளை இத்துறை வழங்குகிறது, பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட அனைத்துக் கட்டிடங்களையும் இத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர். 1989-90-ஆம் ஆண்டில் இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

2. தற்போதைய நிதி நெருக்கடி நிலையிலும் மாநிலம் முழுவதும் 25 கி.மீ. தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற அடிப்படையில் நிறுவுவதை இத்துறை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக் குறிக்கோளை கருத்திற் கொண்டு, தீ விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ள தொழிற்சாலைகள் மற்றும் குடிசைகள் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஒப்பளித்து வருகிறது.

3. தமிழ்நாடு தீயணைப்புத்துறை, இந்தியக் காவல் பணியில் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ( I.G. ) தகுதிபெற்ற ஒருவரை இயக்குநராகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தீயணைப்புத் துறை, இம் மாநிலத்தை மூன்று மண்டலங்களாகப் பிரித்து செயலாற்றி வருகிறது. முதலாவது மண்டலம் சென்னையையும், இரண்டாவது மண்டலம் மதுரையையும், மூன்றாவது மண்டலம் திருச்சியையும் தலைமை



பீடமாகக் கொண்டு தனித்தனி துணை இயக்குனரின்கீழ் முறையே செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் நான்கு முதல் ஆறு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, ஒரு கோட்டத்தீயணைப்பு அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு உதவியாக நிர்வாக மற்றும் செயல் பணிகளில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பணிபுரிந்து வருகிறார். தற்போது இம் மாநிலத்தில் கீழ்க் கண்ட முறையில் 16 தீயணைப்புக் கோட்டங்கள் செயலாற்றி வருகின்றன :—

### நிருவாக அமைப்பு.

தீயணைப்புத்துறை இயக்குநர்.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| தீயணைப்புத் துறை துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர் தென் மண்டலம், மதுரை. |
| 1. கோட்டத் தீயணைப்பு அலுவலர், வட சென்னைக்கோட்டம். | 1. கோட்டத் தீயணைப்பு அலுவலர். திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம். | 1. கோட்டத் தீயணைப்பு அலுவலர், மதுரைக் கோட்டம். |
| 2. கோட்டத் தீயணைப்பு அலுவலர், தென் சென்னைக் கோட்டம். | 2. கோட்டத் தீயணைப்பு அலுவலர், தஞ்சாவூர் கோட்டம். | 2. கோட்டத் தீயணைப்பு அலுவலர், திண்டுக்கல்—காயிதே மில்லத் கோட்டம். |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. கோட்டத் தியணைப்பு அலுவலர், செங்கை-அண்ணா கோட்டம். | 3. கோட்டத் தியணைப்பு அலுவலர், சேலம்—தர்மபுரி கோட்டம். | 3. கோட்டத் தியணைப்பு அலுவலர், காமராஜர் கோட்டம். |
| 4. கோட்டத் தியணைப்பு அலுவலர், வேலூர்-அம்பேத்கார் கோட்டம். | 4. கோட்டத் தியணைப்பு அலுவலர், கோயமுத்தூர்—பெரியார்—நீலகிரி கோட்டம். | 4. கோட்டத் தியணைப்பு அலுவலர், நெல்லை-கட்டபொம்மன் கோட்டம். |
| 5. கோட்டத் தியணைப்பு அலுவலர், சம்புவராயர் கோட்டம். | | 5. கோட்டத் தியணைப்பு அலுவலர், வ. உ. சிதம்பரனார் கோட்டம். |
| 6. கோட்டத் தியணைப்பு அலுவலர், தென்னாற்காடு கோட்டம். | | 6. கோட்டத் தியணைப்பு அலுவலர், கன்னியாகுமரி கோட்டம். |



**கோட்டங்களைப் பிரித்தல்.**

4. பல புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டதன் விளைவாக ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. எனவே, படிப்படியாக நிர்வாகத் திறமையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் பெரிய கோட்டங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது :—

| முந்தைய கோட்டத்தின் பெயர். | பிரிக்கப்பட்ட கோட்டத்தின் பெயர். | பிரிக்கப்பட்ட தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. திருச்சி-புதுக்கோட்டை-தஞ்சாவூர் கோட்டம். | 1. திருச்சி-புதுக்கோட்டை கோட்டம்.<br>2. தஞ்சாவூர் கோட்டம். | 13—5—1983 |
| 2. தென்னாற்காடு-செங்கற்பட்டு கோட்டம். | 1. தென்னாற்காடு கோட்டம்.<br>2. செங்கற்பட்டு கோட்டம். (தற்போது—செங்கை-அண்ணா கோட்டம்). | 02—9—1985 |
| 3. மதுரைக் கோட்டம் .. | 1. மதுரைக் கோட்டம்.<br>2. அண்ணா கோட்டம், (தற்போது திண்டுக்கல்-காயிதே மில்லத் கோட்டம்). | 15—9—1985 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. திருநெல்வேலி-தூத்துக்குடி-கன்னியாகுமரி கோட்டம். | 1. திருநெல்வேலி-தூத்துக்குடி கோட்டம். 2. கன்னியாகுமரி கோட்டம். | 19—9—1986 |
| 5. திருநெல்வேலி-தூத்துக்குடி கோட்டம். | 1. திருநெல்வேலி கோட்டம் (தற்போது நெல்லை-கட்டபொம்மன் கோட்டம்). 2. வ.உ.சிதம்பரனார் கோட்டம். | 16—3—1987 |
| 6. வட ஆற்காடு கோட்டம். | 1. வேலூர்-அம்பேத்கார் கோட்டம். 2. சம்புவராயர் கோட்டம். | 08—1—1990 |



**புதிய மேற்கு மண்டலம் உருவாக்குதல்.**

5. தற்போது தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் உள்ள (1) வட மண்டலம், சென்னை (2) தென் மண்டலம், மதுரை (3) மத்திய மண்டலம், திருச்சி ஆகிய மண்டலங்கள் மிகப் பெரியனவாய் உள்ளதால், 1990-91 ஆம் ஆண்டில் களப் பணியாளர் பிரிவில் ஒரு துணை இயக்குநரையும், அமைச்சுப் பணியாளர் பிரிவில் ஒன்பது அலுவலக ஊழியர்களையும் கொண்ட ஒரு புதிய மண்டலத்தை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது.

**திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை மற்றும் தென் ஆற்காடு கோட்டங்களை இரண்டாகப் பிரித்தல்.**

6. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட நிலையான தீத்தடுப்பு ஆலோசனைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறு, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவரின் தலைமையின்கீழ் இருக்க வேண்டிய தீயணைப்பு நிலையங்களின் அதிகபட்ச எண்ணிக்கை எட்டு ஆகும். இதன் காரணமாகவும், தீயணைப்புத் துறை திறமையாகச் செயல்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டும் திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம் மற்றும் தென்னாற்காடு கோட்டம் ஆகிய கோட்டங்களை தனித்தனியே இரு கோட்டங்களாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது. தற்போது, திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம் 18 தீயணைப்பு நிலையங்களையும் மற்றும் தென்னாற்காடு கோட்டம் 17 தீயணைப்பு நிலையங்களையும் கொண்டுள்ளது. புதுக்கோட்டையையும் மற்றும் விழுப்புரத்தையும் தலைமையிடங்களாகக் கொண்டு உருவாகும் புதிய கோட்டங்கள் ஒவ்வொன்றும் களப்பணியாளர் பிரிவில் நான்கு அலுவலர்களையும், அமைச்சுப் பணியாளர் பிரிவில் 11 அலுவலக ஊழியர்களையும் கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கும்.

**பணியாளர்கள் எண்ணிக்கை.**

7. 1990 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் நிலவரப்படி தீயணைப்புத் துறையில் மொத்தம் 5,489 பணியாளர்கள் பணி புரிகின்றனர். அவர்களின் விவரம் பிற்சேர்க்கை 3 மற்றும் 4 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## தீயணைப்பு நிலையங்கள்.

8. புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைப்பதிலும் அனைத்து வகைகளிலும் இத்துறையை திருத்தி அமைத்து நவீனப்படுத்துவதிலும் தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இத் துறையின் சேவை விரைவாகவும் பாதுகாப்பாகவும் மிகச் சிறந்த முறையில் கிடைக்க வேண்டுமென்பதிலும் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

## பத்து புதிய தீயணைப்பு நிலையங்கள்.

9. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் அன்று, சட்டப் பேரவையில் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போது, இம் மாநிலத்தில் பல மாவட்டங்களில் குறிப்பிட்ட 10 இடங்களில், 1989-90 ஆம் நிதியாண்டிற்குள் 10 புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும் என்று அறிவித்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, கீழே குறிப்பிட்டவாறு 10 புதிய தீயணைப்பு நிலையங்கள் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாளுக்குள் திறக்கப்பட்டுள்ளன—

| | மாவட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையத்தின் பெயர். | திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | தஞ்சாவூர். | குடவாசல் | 30—07—1989 |
| 2. | தென்னாற்காடு | சங்கராபுரம் | 15—09—1989 |
| 3. | திண்டுக்கல்-காயிதே மில்லத் | நிலக்கோட்டை | 25—10—1989 |
| 4. | நெல்லை-கட்டபொம்மன் | வள்ளியூர் | 29—10—1989 |
| 5. | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | 04—12—1989 |
| 6. | தஞ்சாவூர் | தரங்கம்பாடி | 27—12—1989 |
| 7. | கோயமுத்தூர் | பல்லடம் | 31—01—1990 |
| 8. | திருச்சிராப்பள்ளி | புகளூர் | 08—02—1990 |
| 9. | சேலம் | கொல்லிமலை | 27—02—1990 |
| 10. | தர்மபுரி | பாலக்கோடு | 27—02—1990 |

10. இம் மாநிலத்தில், 1990 ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 192 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரங்கள் பிற்சேர்க்கை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில், 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னையிலும் இதர 171 தீயணைப்பு நிலையங்கள் மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### தீ விபத்து அழைப்புகள்.

11. 1989-ஆம் ஆண்டில் இம் மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு மொத்தம் 10,330 தீ விபத்து அழைப்புகள் வந்தன. மேற்படி தீ விபத்து அழைப்புகளில், 161 பெருந் தீ விபத்து அழைப்புகளாகும். இவை ஒவ்வொன்றிலும் ரூ. 50,000-க்கும் மேற்பட்ட உடமைகளுக்கு சேதமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டது. இம் மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துகளால் அழிந்துவிட்ட அல்லது சேதம் அடைந்த உடமைகளின் மொத்த தோராய மதிப்பு ரூ. 4.72 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், அதே நேரத்தில் தீயின் அழிவினின்றும் காப்பாற்றப்பட்ட உடமைகளின் மொத்த தோராய மதிப்பு ரூ. 64.23 கோடியாகும். 1985-ஆம் ஆண்டிலிருந்து 1989-ஆம் ஆண்டு முடிய கடந்த ஐந்து ஆண்டுகளின் தீயழைப்புகள் பற்றிய புள்ளி விவரங்கள் பிற்சேர்க்கை 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்.

12. தீ விபத்தின்போது எல்லாவிதமான உதவியும் நிவாரணமும் அளிப்பதில் இத்துறை தனித்தன்மையுடன் திகழ்கிறது. எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுதல்கள் காரணமாக தீ விபத்து ஏற்படும் என்று அஞ்சி, சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளுக்கும் சென்று செயல்படுவது போன்ற அனைத்துத் தருணங்களிலும் உதவி வேண்டுவோருக்கு இத்துறையினர் உதவி செய்கின்றனர். இவ்விதமாக இத்துறையின் சேவை இருபத்தி நான்கு மணி நேரமும் பொது மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டில் 1983 அவசர மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை ஏற்று இத் துறை செயல்பட்டது.

### நோயாளர் ஊர்தி.

13. சில முக்கிய நகர தீயணைப்பு நிலையங்களில் அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் நோயாளர் ஊர்திகள்



உள்ளன. இவ்வூர்திகளின் மூலம் நோயுள்ளவர்களையும், காயமுற்றவர்களையும், உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல நியாயமான கட்டணத்தை வாடகையாகப் பெற்றுக் கொண்டு செயலாற்றுகிறது. ஏழை எளிய மக்களை இலவசமாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வூர்திகள் 1989-ஆம் ஆண்டில் 5,121 அழைப்புகளை ஏற்றன. இவற்றுள் கட்டண அழைப்புகளின் எண்ணிக்கை 4,392 ஆகும். நோயாளர் ஊர்திகளில் நோய்வாய்ப்பட்டவர்களைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதற்காக வாடகைக் கட்டணமாக ரூ. 2,17,318 வசூலிக்கப்பட்டது.

### ஊர்திகளும் சாதனங்களும்

14. இத் துறையில் மொத்தம் 303 நீர்தாங்கி வண்டிகளும் 40 நோயாளர் ஊர்திகளும் மற்றும் 115 தீயணைப்புக்கு உறுதுணையான இதர ஊர்திகளும் உள்ளன. இவை தவிர, 8 சிறப்பு ஊர்திகளும் உள்ளன.

15. அனைத்து வகையிலும் இத் துறையை நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. நீண்ட நாட்களாக உபயோகப்படுத்தப்படாமலிருக்கும் பழைய மற்றும் பழுதடைந்த ஊர்திகளுக்குப் பதிலாக படிப்படியாக புதிய ஊர்திகள் வாங்கப்பட்டு வருகின்றன. பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிக்காக ''ஸ்நார்க்கல்'' என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அது சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எற்படும் பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின்போது பங்கேற்று பணியாற்றுவதில் இத்துறைக்கு பெரிதும் உதவி புரிந்து வருகிறது. இவ்வூர்தி, சென்னை மாநகரத்தில் நிரந்தரமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

### ஜப்பான் நாட்டு தீயணைப்புக் கருவிகள் வாங்குதல்.

16. ஜப்பான் நாட்டு மிக நவீன தீயணைப்பு வாகனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை மாநிலங்களுக்கு வாங்கி வழங்கும் உதவித் திட்டமொன்றை 1989-ஆம் ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாநில அரசுக்கும் ரூபாய் மூன்று கோடியிலிருந்து நான்கு கோடிவரை ஜப்பான் நாட்டு தீயணைப்பு வாகனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வாங்கி வழங்க இந்திய அரசு உத்தேசித்துள்ளது. இந்த உதவித் திட்டத்தின்கீழ், 70 சதவீதச் செலவினம் மாநில அரசுக்கு கூடுதல் உதவித் தொகையாக இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். எஞ்சியுள்ள 30 சதவீதச் செலவினம்

இந்திய பொது ஈட்டுறுதிக் கழக சட்ட திட்டங்களின் அடிப் படையில், மாநிலங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை யாகக் கொள்ளப்படும். இத் தொகை, 15 ஆண்டுகள் நீண்ட காலக் கடன் தொகையாக அசல் மற்றும் வட்டி யுடன் மாநில அரசால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், மேற்சொன்ன முழுச் செலவுத் தொகையையும் மேற்குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் மாநில அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். சென்னை மாநகரத்தின் தீயணைப்பு நிலையங்களை நவீனப்படுத்துவதற்குத் தேவை யான தீயணைப்பு வாகனங்கள், கருவிகள் மற்றும் உபகர ணங்கள் ஆகிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு இந்திய அரசு மாநில அரசைக் கேட்டது. அதன்படி, மொத்தம் 3.24 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு, ஹைட்ராலிக் பிளாட்ஃ பார்ம், உயிர் மீட்பு வாகனங்கள், மூச்சுக் கருவிகள், சறுக்கித் தப்பிக்க உதவும் உபகரணம், நோயாளர் ஊர்திகள், கிராஷ் டெண்டர்கள் ஆகிய தீயணைப்புக் கருவிகள் வேண்டும் என்ற விவரங்களை இந்த அரசு அனுப்பியுள்ளது. மேற்சொன்ன அந்நிய நாட்டு (ஜப்பான்) தீயணைப்பு வாகனங்களையும் கருவிகளையும் மற்றும் உபகரணங்களையும் இந்த மாநில அரசுக்கு இந்திய அரசு வாங்கி வழங்கினால், நிச்சயமாக இந்த மாநகரத் தீயணைப்பு நிலையங்கள் நவீனமயமாக்கப் பட்டு எந்த பெரிய தீ விபத்துக்களையும் திட்டவட்டமாக சமாளித்து மக்களின் மிகுந்த பாராட்டுகளைப் பெறும் வகையில் செயல்படும்.

### கம்பியில்லா வான் தந்திகள்.

17. தீயணைப்பதிலும், மீட்புப் பணி புரிவதிலும் குறைந்த கால அளவில் செயலாற்றி முடிப்பது இன்றியமையாத ஒன்றாகும். சென்னையில் 41 கம்பியில்லா வான் தந்திகள் நகர முழுவதிலுமுள்ள தீயணைப்பு நிலையங்களுடன் பொருத் தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

### பட்டறை.

18. தீயணைப்புத் துறை ஊர்திகளுக்கு ஏற்படும் பெரும் பழுதுகளை செப்பனிடும் பொருட்டு சென்னையில் பட்டறை ஒன்றை இத்துறை நிர்வகித்து வருகிறது. இப் பட்டறையை புனரமைக்கும் பொருட்டு அரசு ஒரு உதவிப் பொறியாளர் (தானியங்கி) பதவியை ஏற்படுத்தியுள்ளது.



### பயிற்சி.

19. சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப்பள்ளி நேரடியாக நியமிக்கப்பட்ட அலு வலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இப் பயிற்சிப் பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு அவசரப் பணிகளில், நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும் முன்னணித் தீயணைப் போர் இருவரும் உதவி புரிகின்றனர். இப் பயிற்சி வகுப்பு களில் 1989-ஆம் ஆண்டு பயிற்சி பெற்றவர்களின் எண் ணிக்கை விவரங்கள் கீழே வருமாறு :—

| | துறையைச் சார்ந்த வர்கள். | மற்ற வர்கள். |
|---|---|---|
| 1. நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி. | 44 | .. |
| 2. தீயணைப்போர் பயிற்சி .. | .. | 135 |
| 3. தீயணைப்போர் ஓட்டி பயிற்சி .. | 32 | .. |
| 4. இயந்திரக் கம்மியர் ஓட்டி பயிற்சி | 16 | .. |
| 5. முன்னணித் தீயணைப்போர் மறு பயிற்சி. | 26 | .. |

### வெகுமதிகள் மற்றும் பதக்கங்கள்.

20. இந்தியக் குடியரசுத் தலைவரது பதக்கம் இத்துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்தியக் குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது. மேலும், முதல் அமைச் சரின் காவல் மற்றும் தீயணைப்புப் பணிப் பதக்கமும் பணி யாளர்களின் வீர தீரச் செயல்களுக்காகவும் சீரிய பணித் திறமைக்காகவும் வழங்கப்படுகிறது.

21. மேலும், ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று தமிழக முதல்வரின் தீயணைப்புப் பணி பதக்கம் என்ற ஒரு புதிய பதக்கமும் இத் துறையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பதக்கம் கிடைக்கப் பெற்ற தீயணைப்போர்கள் மற்றும் அதற்குச் சமமான பணியாளர்களுக்கும் மாதந்தோறும் ரூ. 20-ம் முன்னணித் தீயணைப்போர்கள், இயந்திரக் கம்மியர் ஓட்டிகள் மற்றும் தீயணைப்போர் ஓட்டிகள் ஆகியோர் களுக்கு மாதந்தோறும் ரூ. 25-ம் ரொக்கப்படியாக வழங்கப் படுகிறது. இப்பதக்கம் இத்துறையில் 1985ஆம் ஆண்டி லிருந்து ஒவ்வொரு ஆண்டும் 120 நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

22. தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 1989-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பதக்கங்கள் வழங்கப்பட்டன :—

| பதக்கங்கள். | அலுவலர். | வழங்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பாராட்டத்தக்க பணிக்கான குடியரசுத் தலைவரின் குடியரசு தின பதக்கம் (இந்திய அரசின் பதக்கம்). | நிலையத் தீயணைப்பு அலுவலர் | 2 |
| | முன்னணித் தீயணைப்போர் | 1 |
| | மொத்தம் | 3 |
| 2. வீர தீர செயல்களுக்காகவோ அல்லது சீரிய பணித் திறமைக்காகவோ வழங்கப்பட்ட சுதந்திர தின பதக்கம் (இந்திய அரசின் பதக்கம்). | நிலையத் தீயணைப்பு அலுவலர் | 4 |
| 3. பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளன்று வழங்கப்படும் தமிழ் நாடு முதலமைச்சரின் பதக்கம். | நிலையத் தீயணைப்பு அலுவலர் .. | 2 |
| | முன்னணித் தீயணைப்போர் .. | 2 |
| | யந்திர கம்மியர் ஓட்டி .. | 1 |
| | தீயணைப்போர் ஓட்டி .. | 2 |
| | தீயணைப்போர் .. | 2 |
| | மொத்தம் | 9 |
| 4. பொங்கலன்று வழங்கப்படும் தமிழ் நாடு முதலமைச்சரின் பதக்கம். | முன்னணித் தீயணைப்போர் .. | 50 |
| | தீயணைப்போர் ஓட்டி .. | 67 |
| | தீயணைப்போர் .. | 3 |
| | மொத்தம் .. | 120 |



## குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள்.

23. பெரும்பான்மையான தீ விபத்துக்கள் அடிக்கடி திரும்பத் திரும்ப குடிசைப் பகுதிகளிலேயே ஏற்பட்டன. இதனால் பெரும் இழப்பு ஏற்பட்டு வந்தது. இதனைத் தடுக்க கோடைக் காலத்தில், பற்கோல், கூரைக் கொக்கி முதலிய எளிய தீயணைப்புச் சாதனங்களுடன் புறநகர் தீயணைப்பு நிலையங்களை குடிசைப் பகுதிகளில் ஏற்படுத்துவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இப்புறநகர் தீயணைப்பு நிலையங்களில் எந்நேரமும் தீயணைப்போர்கள் இருந்து வந்ததோடு அவர்கள் இப்பகுதியினை விழிப்புடன் கண்காணித்தும் வந்தனர். இப்புறநகர் தீயணைப்பு நிலையங்கள் மிகவும் உபயோகமாக இருந்தன. இதன் விளைவாக சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் தீ விபத்துக்கள் மிகக் கணிசமான அளவில் குறைந்துள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில் இப்புறநகர் தீயணைப்பு நிலையங்கள் எதிர்நோக்கிய தீ அழைப்புகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வருடம். | தீ அழைப்புகள். |
|---|---|
| 1983 | 362 |
| 1984 .. | 291 |
| 1985 .. | 80 |
| 1986 .. | 74 |
| 1987 .. | 68 |
| 1988 .. | 58 |
| 1989 .. | 61 |

## தீயணைப்புத் துறை சேமநல நிதி.

24. துயருற்ற தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 1962-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல நிதி துவக்கப்பட்டது. காசநோய், தொழுநோய் அல்லது புற்று நோயினால் அவதிப்படும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற்காகவும், பணியாளர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விக்காகவும் மற்றும் பணியாளர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறக்க நேரிட்டால் அவர்களின் ஈமச் சடங்கு செலவிற்கும் இந்நிதியிலிருந்து

உதவித் தொகை அளிக்கப்படுகிறது. குடும்ப நிவாரணத் தொகையும் அளிக்கப்படுகிறது. மேலும், எல்லாப் பணியாளர்களுக்கும் பணியிலிருந்து ஓய்வுபெறும் சமயம் தலா ரூ. 200 இந்நிதியிலிருந்து அடையாள உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற 35 நபர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகையாக மொத்தம் ரூ. 7,000 வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,359 ஆகும். 1989 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தாத் தொகை ரூ. 65,294 ஆகும். அவ்வாண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையின் மதிப்பு ரூ. 85,564 ஆகும். இந்நிதிக்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூ. 50,000 மானியமாக அளித்து வருகிறது.

நலத் திட்டங்கள்.

25. இத்துறைப் பணியாளர்களின் நலன் கருதி அரசினர் அநேக நிவாரணங்கள் வழங்கியுள்ளனர். அவைகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்குவது போல் தீயணைப்புத் துறையைச் சார்ந்த உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரத்திலும், அதற்குக் கீழுள்ள பணியாளர்களுக்கும் மலிவு விலையில் அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் ஜனவரி 1981 முதல் அமுலில் இருந்து வருகிறது. இதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் பின்வருமாறு :—

| நிதியாண்டு. | | செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1984—85 | .. | 14.49 |
| 1985—86 | .. | 20.43 |
| 1986—87 | .. | 28.00 |
| 1987—88 | .. | 28.00 |
| 1988—89 | .. | 29.00 |
| 1989—90 | .. | 17.31 |
| | | (1990-ஆம் ஆண்டு ஜனவரி முடிய). |





26. அரசுப் பணியாளர்களின் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகை ரூ. 40,000 உடன், இத்துறைப் பணியாளர்கள் பணிபுரியும் நேரத்தில் உயிர் துறக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் தீயணைப்பில் பணிபுரியும் சமயம் அவர்களுக்கு காயம் ஏற்பட்டால், அவர்களுக்கு காயத்தின் தன்மைக்கேற்ப ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை உதவித் தொகை வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது.

27. மேலும் இத்துறையில் பணி புரியும் தீயணைப்போர்கள் முதல் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஈடாக அனைத்து அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு செட் பருத்தி சீருடைகளுக்குப் பதிலாக, ஒரு செட் டெரிக்காட்டன் சீருடைகள் 1987ஆம் ஆண்டு முதல் வாங்கப்பட்டு வருகிறது. இதனால், அவர்கள் நல்ல மிடுக்கான தோற்றத்துடன் விளங்குகின்றனர். மேலும், தன்னம்பிக்கையும், உத்வேகமும் கொண்டு நன்முறையில் பணியாற்றத் தேவையான மனநிறைவும், அவர்களுக்கு ஏற்படுகிறது.

குடியிருப்புகள்.

28. இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்கும் நோக்கத்துடன் முதற்கண் தீயணைப்புப் பணியாளர்களுக்கு உடுமலைப் பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சென்னையில் கலைஞர் கருணாநிதி நகர், நந்தனம் மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது.

சம்பளம்.

29. இத்துறைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பளம் அரசினரால் வழங்கப்பட்டுள்ளதால், அனைவரும் மனநிறைவுடன் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை.

30. சுருங்கக்கூறின், இந்த மாநிலத்தில் எந்த மூலையிலும் ஏற்படுகின்ற தீ விபத்துக்களையும், திறம்பட சமாளித்து மக்களின் உயிரையும், உடமைகளையும் பெருத்த அளவிற்குக் காப்பாற்றி, மக்களுக்கு மிகப் பயனளிக்கக்கூடிய அரசுத் துறைகளில் இன்று என நிரூபித்துக் காட்டி, தீயணைப்புத் துறை தொடர்ந்து தனது புகழை நிலைநாட்டி வருகிறது.

பிற்சேர்க்கை—1.

1989-90-ஆம் ஆண்டு தீயணைப்புத் துறை அதிகாரிகளால் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை விவரங்கள் :—

| வரிசை எண். | சட்டங்கள் மற்றும் விதிகள். | ஆய்வு செய்யப் பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டம் .. | 487 |
| 2 | 1955ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகள் .. .. | 253 |
| 3 | பொது மக்கள் கூடுமிடங்கள் குறித்த சட்டம் .. .. .. | 182 |
| 4 | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் மாநகராட்சிகள் சட்டம். | 573 |
| 5 | தமிழ்நாடு மாவட்ட குழுக்கள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம். | 371 |
| 6 | தொழிற்சாலைகள் விதிகள் .. .. .. .. .. | 1,881 |
| 7 | ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டடங்கள் .. .. .. | 1,179 |
| 8 | படைக்கல சட்டம்—விதிகள் .. .. .. .. .. | 1,002 |



பிற்சேர்க்கை—2.

1990ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாளைய நிலவரப்படி தமிழ்நாட்டில் இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் விவரம்.

| மாவட்டம். | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|
| | **வட மண்டலம், சென்னை.** |
| வட சென்னைக் கோட்டம். | 1. வண்ணாரப்பேட்டை. |
| | 2. எஸ்பிளனேடு. |
| | 3. ராயபுரம். |
| | 4. வியாசர்பாடி. |
| | 5. செம்பியம். |
| | 6. கீழ்ப்பாக்கம். |
| | 7. வேப்பேரி. |
| | 8. தண்டையார்பேட்டை. |
| | 9. வ.உ.சி. நகர். |
| | 10. எண்ணூர். |
| | 11. மணலி. |
| தென் சென்னைக் கோட்டம். | 1. எழும்பூர். |
| | 2. திருவல்லிக்கேணி. |
| | 3. மைலாப்பூர். |
| | 4. தேனாம்பேட்டை. |
| | 5. அசோக்நகர். |
| | 6. சைதாப்பேட்டை. |

| மாவட்டம் | தீயணைப்பு நிலையங்கள் |
|---|---|
| தென் சென்னைக் கோட்டம் | 7. கிண்டி. |
| | 8. ராஜ்பவன். |
| | 9. தாம்பரம். |
| | 10. அம்பத்தூர். |
| தென் ஆற்காடு கோட்டம் | 1. சிதம்பரம். |
| | 2. கடலூர். |
| | 3. நெல்லிக்குப்பம். |
| | 4. பண்ருட்டி. |
| | 5. விருத்தாசலம். |
| | 6. வேப்பூர். |
| | 7. கள்ளக்குறிச்சி. |
| | 8. உளுந்தூர்பேட்டை. |
| | 9. விழுப்புரம். |
| | 10. திண்டிவனம். |
| | 11. செஞ்சி. |
| | 12. காட்டுமன்னார்கோயில். |
| | 13. திருக்கோவிலூர். |
| | 14. குறிஞ்சிப்பாடி. |
| | 15. திட்டக்குடி. |
| | 16. சங்கராபுரம். |
| | 17. கடலூர் (சிப்காட்) |



| மாவட்டம். | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|
| செங்கை-அண்ணா கோட்டம். | 1. காஞ்சிபுரம். |
| | 2. ஸ்ரீபெரும்புதூர். |
| | 3. மதுராந்தகம். |
| | 4. செங்கற்பட்டு. |
| | 5. திருவள்ளூர். |
| | 6. கும்மிடிப்பூண்டி. |
| | 7. மறைமலைநகர். |
| | 8. செங்குன்றம். (ரெட்ஹில்ஸ்). |
| | 9. உத்திரமேரூர். |
| | 10. பொன்னேரி, |
| வேலூர்-அம்பேத்கார் கோட்டம் | 1. வேலூர். |
| | 2. ராணிப்பேட்டை. |
| | 3. ராணிப்பேட்டை. (சிப்காட்). |
| | 4. அரக்கோணம். |
| | 5. சோளிங்கர். |
| | 6. திருப்பத்தூர். |
| | 7. நாட்ராம்பள்ளி. |
| | 8. வாணியம்பாடி. |
| | 9. ஆம்பூர். |
| | 10. குடியாத்தம். |

| மாவட்டம். | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|
| சம்புவராயர் கோட்டம். | 1. திருவண்ணாமலை. |
| | 2. செங்கம். |
| | 3. போளூர். |
| | 4. செய்யார். |
| | 5. வந்தவாசி. |
| | 6. ஆரணி. |
| | 7. தண்டராம்பட்டு. |

வட மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்கள் : 65

மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி.

சேலம்-தர்மபுரி கோட்டம்.

| | |
|---|---|
| சேலம் | 1. மேட்டூர் அனல் மின் நிலையம். |
| | 2. சேலம். |
| | 3. சேலம் உருக்காலை. |
| | 4. திருச்செங்கோடு. |
| | 5. ஆத்தூர். |
| | 6. மேட்டூர். |
| | 7. நாமக்கல். |
| | 8. ராசிபுரம். |
| | 9. சங்கரி. |
| | 10. ஏற்காடு. |
| | 11. கொல்லிமலை. |



| மாவட்டம். | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|
| தர்மபுரி | 12. தர்மபுரி. |
| | 13. ஒசூர் (சிப்காட்). |
| | 14. கிருஷ்ணகிரி. |
| | 15. அரூர். |
| | 16. பெண்ணாகரம். |
| | 17. பாலக்கோடு. |

திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை கோட்டம்.

| | |
|---|---|
| திருச்சிராப்பள்ளி. | 1. திருச்சிராப்பள்ளி. |
| | 2. ஸ்ரீரங்கம். |
| | 3. முசிறி. |
| | 4. துறையூர். |
| | 5. பெரம்பலூர். |
| | 6. ஜெயங்கொண்ட சோழ புரம். |
| | 7. கரூர். |
| | 8. மணப்பாறை. |
| | 9. அரியலூர். |
| | 10. கீரனூர். |
| | 11. புள்ளம்பாடி. |
| | 12. அரவக்குறிச்சி. |
| | 13. புகளூர். |

| மாவட்டம். | | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|---|
| புதுக்கோட்டை | | 14. புதுக்கோட்டை. |
| | | 15. அறந்தாங்கி. |
| | | 16. பொன்னமராவதி. |
| | | 17. ஆலங்குடி. |
| | | 18. திருமயம். |

தஞ்சாவூர் கோட்டம்.

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | .. | 1. தஞ்சாவூர். |
| | | 2. கும்பகோணம். |
| | | 3. மன்னார்குடி. |
| | | 4. நாகப்பட்டினம். |
| | | 5. திருவாரூர். |
| | | 6. நன்னிலம். |
| | | 7. மயிலாடுதுறை. |
| | | 8. பட்டுக்கோட்டை. |
| | | 9. ஒரத்தநாடு. |
| | | 10. சீர்காழி. |
| | | 11. திருத்துறைப்பூண்டி. |
| | | 12. பேராவூரணி. |
| | | 13. திருக்காட்டுப்பள்ளி. |
| | | 14. பாபநாசம். |
| | | 15. குடவாசல். |
| | | 16. தரங்கம்பாடி. |



| மாவட்டம். | | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|---|

கோவை-பெரியார்--நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | .. .. | 1. கோவை (வடக்கு). |
| | | 2. கோவை (தெற்கு). |
| | | 3. மேட்டுப்பாளையம். |
| | | 4. திருப்பூர். |
| | | 5. பொள்ளாச்சி. |
| | | 6. உடுமலைப்பேட்டை. |
| | | 7. வால்பாறை. |
| | | 8. பல்லடம். |
| பெரியார் | | 9. ஈரோடு. |
| | | 10. தாராபுரம். |
| | | 11. காங்கேயம். |
| | | 12. கோபிச்செட்டிப் பாளையம். |
| | | 13. சத்தியமங்கலம். |
| நீலகிரி | .. .. | 14. கூடலூர். |
| | | 15. உதகமண்டலம். |
| | | 16. குன்னூர். |

மத்திய மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்கள்: 67

தென் மண்டலம், மதுரை.

மதுரை கோட்டம்.

| | | |
|---|---|---|
| மதுரை | .. .. | 1. மதுரை. |
| | | 2. தல்லாகுளம். |

| மாவட்டம். | | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|---|
| | | 3. மேலூர். |
| | | 4. உசிலம்பட்டி. |
| | | 5. பெரியகுளம். |
| | | 6. தேனி-அல்லிநகரம். |
| | | 7. ஆண்டிப்பட்டி. |
| | | 8. மயிலாடும்பாறை. |
| | | 9. உத்தமபாளையம். |
| | | 10. போடிநாயக்கனூர். |
| | | 11. திருமங்கலம். |
| | | 12. கம்பம். |
| | | 13. சோழவந்தான். |
| | | 14. கொட்டாம்பட்டி. |

திண்டுக்கல்-காயிதே மில்லத் கோட்டம்.

| | | |
|---|---|---|
| திண்டுக்கல். | .. | 1. நத்தம். |
| | | 2. வத்தலகுண்டு. |
| | | 3. திண்டுக்கல். |
| | | 4. பழனி. |
| | | 5. ஒட்டன்சத்திரம். |
| | | 6. வேடசந்தூர். |
| | | 7. கொடைக்கானல். |
| | | 8. நிலக்கோட்டை. |



| மாவட்டம். | | தீயணைப்பு நிலையங்கள். |
|---|---|---|

காமராஜர் கோட்டம்.

| | | |
|---|---|---|
| இராமநாதபுரம் | .. | 1. இராமநாதபுரம். |
| | | 2. இராமேஸ்வரம். |
| | | 3. கமுதி. |
| | | 4. பரமக்குடி. |
| பசும்பொன் தேவர் திருமகன் | | 5. காரைக்குடி. |
| | | 6. தேவக்கோட்டை. |
| | | 7. சிவகங்கை. |
| | | 8. சிங்கம்புணரி. |
| | | 9. திருப்பத்தூர். |
| காமராஜர் | .. | 10. ஸ்ரீவில்லிபுத்தூர். |
| | | 11. ராஜபாளையம். |
| | | 12. சாத்தூர். |
| | | 13. சிவகாசி. |
| | | 14. அருப்புக்கோட்டை. |
| | | 15. விருதுநகர். |
| | | 16. வத்திராயிருப்பு. |
| | | 17. முதுகுளத்தூர். |
| நெல்லை-கட்டபொம்மன் கோட்டம். | | 1. பாளையங்கோட்டை. |
| | | 2. திருநெல்வேலி (பேட்டை). |
| | | 3. தென்காசி. |

| மாவட்டம். | தியணைப்பு நிலையங்கள். |
|---|---|
| | 4. கடையநல்லூர். |
| | 5. நாங்குனேரி. |
| | 6. அம்பாசமுத்திரம். |
| | 7. சங்கரன்கோவில். |
| | 8. வாசுதேவநல்லூர். |
| | 9. வள்ளியூர். |
| வ.உ.சிதம்பரனார் கோட்டம் | 1. கோவில்பட்டி. |
| | 2. தூத்துக்குடி. |
| | 3. தூத்துக்குடி அனல் மின் நிலையம். |
| | 4. திருச்செந்தூர். |
| | 5. சாத்தான்குளம். |
| | 6. ஸ்ரீவைகுண்டம். |
| | 7. விளாத்திகுளம். |
| கன்னியாகுமரி கோட்டம். | 1. நாகர்கோவில். |
| | 2. கன்னியாகுமரி. |
| | 3. குழித்துறை. |
| | 4. குலசேகரம். |
| | 5. பத்மநாபபுரம் (அ) தக்கலை. |

தென் மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்கள்..60



மொத்த தீயணைப்பு நிலையங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வட மண்டலம் | .. | .. | 65 |
| மத்திய மண்டலம் | .. | .. | 67 |
| தென் மண்டலம் | .. | .. | 60 |
| | மொத்தம் | .. | 192 |

## பிற்சேர்க்கை—3

**தீயணைப்புத் துறை களப் பணியாளர்கள் (1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளைய நிலவரப்படி)**

| வரிசை எண். (1) | பதவியின் பெயர். (2) | பதவி எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநர் .. .. .. .. | 1 |
| 2. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் .. .. .. | 3 |
| 3. | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. .. .. | 17 |
| 4. | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. .. | 18 |
| 5. | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து) | 1 |
| 6. | நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. .. | 192 |
| 7. | நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) .. .. .. .. | 13 |
| 8. | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. .. .. | 15 |
| 9. | முன்னணித் தீயணைப்போர் .. .. .. .. .. | 587 |
| 10. | இயந்திரக் கம்மியர் ஓட்டி .. .. .. .. .. .. | 180 |
| 11. | தீயணைப்போர் ஓட்டி .. .. .. .. .. .. | 868 |
| 12. | தீயணைப்போர் கம்மியர் .. .. .. .. .. .. | 3 |
| 13. | பற்ற வைப்பாளர் .. .. .. .. .. .. | 1 |
| 14. | தீயணைப்போர் தச்சர் .. .. .. .. .. .. | 1 |
| 15. | தீயணைப்போர் .. .. .. .. .. .. .... | 3,363 |
| | மொத்தம் | 5,263 |



## பிற்சேர்க்கை—4.

**அமைச்சுப் பணியாளர்கள்.**

**(1990-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளைய நிலவரப்படி.)**

| வரிசை எண். (1) | பதவியின் பெயர். (2) | பதவி எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. | நிர்வாக நேர்முக உதவி அலுவலர்கள் .. .. .. .... | 2 |
| 2. | கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) .. .. .. .. | 2 |
| 3. | கண்காணிப்பாளர்கள் .. .. .. .. .. .. | 18 |
| 4. | உதவியாளர்கள் .. .. .. .. .. .. .. | 50 |
| 5. | இளநிலை உதவியாளர்கள் .. .. .. .. .. .. | 52 |
| 6. | சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. .. .. .. .. | 4 |
| 7. | தட்டச்சர்கள் .. .. .. .. .. .. .. | 22 |
| 8. | பதிவுக்கட்டறை எழுத்தர்கள் .. .. .. .. .. | 18 |
| 9. | அடிப்படை பணியாளர்கள் .. .. .. .. .. | 58 |
| | மொத்தம் .. | 226 |

பிற்சேர்க்கை—5.

1985-ஆம் ஆண்டிலிருந்து 1989-ஆம் ஆண்டு முடிய ஐந்தாண்டுகளில் பெறப்பட்ட தீ அழைப்புகளின் விவரங்கள்.

| வருடம். | தீ அழைப்புகளின் எண்ணிக்கை. | சொத்து சேத விவரம். | உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை. | காப்பாற்றப்பட்ட சொத்து விவரம். | காப்பாற்றப்பட்ட உயிரினங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூபாய். | | ரூபாய். | |
| 1985 | 8,795 | 5,84,00,250 | 141 | 68,65,21,000 | 345 |
| 1986 | 8,937 | 5,27,35,000 | 137 | 58,21,45,310 | 425 |
| 1987 | 10,668 | 8,20,36,000 | 182 | 60,72,37,235 | 271 |
| 1988 | 10,200 | 3,98,75,900 | 126 | 35,01,03,900 | 148 |
| 1989 | 10,330 | 4,72,53,750 | 178 | 64,23,41,510 | 211 |



கொள்கை விளக்கக் குறிப்பு.

1937-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் செயல்பாடுகள் முதன் முறையாக 1971 ஆகஸ்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மறுபடியும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு 1973 ஆகஸ்டில் கள்ளுக்கடைகளையும், 1974 செப்டம்பரில் சாராயக் கடைகளையும் மூடிவிட்டு மீண்டும் மதுவிலக்குச்சட்டம் முழுமையாக அமல் படுத்தப்பட்டது. எனினும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் பிற மாநிலங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு உரிமம் பெற்ற கடைகளில் தொடர்ந்து பர்மிட் உள்ளவர்களுக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாட்டில் அப்போது பான உற்பத்திக்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

2. மறுபடியும் 1981 மே திங்களில் மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டு கள், சாராய விற்பனை மீண்டும் அனுமதிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் முதன் முதலாக மதுபானம் தயாரிப்பதற்கு 4 தனி நபர்களுக்கும் கூட்டுத்துறையில் ஒரு நிறுவனத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இது தவிர தனியார் துறையில் ஒரு பீர் தொழிற்சாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கள், சாராயம், மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களைக் குடிப்பதற்கு தன் அனுமதி (பெர்மிட்) முறை கொண்டு வரப்பட்டது. இந்த முறை பெரும்பாலும் ஏட்டளவில் இருந்ததே தவிர கடைகளில் வாங்குவதற்கோ அல்லது குடிப்பதற்கோ பெர்மிட் முறையை அமுல்படுத்த இயலவில்லை. கள்ளுக்கடைகள் ஏல முறையில் அனுமதிக்கப்பட்டன.

3. முதலில் சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்கப்பட்டது. தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த இந்த சாராய உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சாராயத்தை மொத்த வியாபாரம் செய்வதற்கு 15 தனி நபர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இந்த மொத்த வியாபாரிகள் சாராயத்தை சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகித்து வந்தார்கள். இந்த சில்லறை கடைகள் முதலில் ஏலம் மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டன. இந்த முறை 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15-ஆம் நாள் வரை நடைமுறைப் படுத்தப்பட்டது.

4. 1983 ஜூலை 27 ஆம் தேதி முதல் தமிழ்நாடு விற்பனைக் கழகம் 15 தனிப்பட்ட நபர்களிடமுள்ள மொத்த வியாபாரத்தை எடுத்துக்கொண்டது. இருந்த போதிலும் சாராய உற்பத்தி தொடர்ந்து தனிப்பட்டவர்களிடமே இருந்து வந்தது. மொத்த வியாபாரத்தை எடுத்துக்கொண்ட டாஸ்மாக் நிறுவனம், சில்லறை

வியாபாரத்தையும் நடத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்தது. இருப்பினும் சில்லறை வியாபாரத்தை டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தாமல், சில்லறை வியாபாரம் செய்கின்ற உரிமையை தனிப்பட்ட நபர்களுக்கு ஏஜென்சி முறையில் டாஸ்மாக் நிறுவனம் கொடுத்தது. இதில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்படவே மறுபடியும் சில்லறை வியாபாரத்தை 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் முதல் டெண்டர் மற்றும் ஏல முறைக்கு அரசு கொண்டு வந்தது.

5. மறுபடியும் மதுவிலக்கு கொள்கை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1987-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் தமிழ்நாட்டில் கள், சாராய விற்பனை நிறுத்தப்பட்டது. இருப்பினும் 2,000-க்கும் மேற்பட்ட மதுபான சில்லறைக் கடைகளில் ''இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள்'' தொடர்ந்து விற்பனையாகி வந்தது. ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்ட 5 மதுபானத் தொழிற்சாலைகளும் ஒரு பீர் தொழிற்சாலையும் தொடர்ந்து இயங்கி வர அனுமதி வழங்கப்பட்டது.

6. 1989 ஜனவரியில் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட இந்த அரசு, மதுவிலக்குச் சட்டத்திலும் விதிகளிலும் பல திருத்தங்களை உடனடியாக கொண்டு வந்தது. ஏற்கெனவே இழந்து வந்த அரசு வருமானத்தை ஈடுகட்டுகின்ற வகையில் சட்டத்திலும் சட்ட விதிகளிலும் இருந்த ஓட்டை உடைசல்கள் அடைக்கப்பட்டன. ஆயத் தீர்வை மற்றும் மதுவிலக்கு நிர்வாகம், ஆட்சிப் பொறுப்பு ஏற்ற 15 நாட்களுக்குள் வெகுவாக சீரமைக்கப்பட்டன. இந்த நிர்வாக சீரமைப்பின் காரணமாக அரசுக்கு வரவேண்டிய வருமானம் முழுமையாக கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

7. 1988-89 ஆம் ஆண்டு சுமார் 148 கோடி ரூபாயாக இருந்த ஆயத்தீர்வை வருமானம் 1989-90 ல் சுமார் 300 கோடி ரூபாயை எட்டியது. இந்த அதிக வருமானத்தில் ஏறத்தாழ 100 கோடிக்கு மேல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை நிர்வாகத்தின் குறைபாடுகளைக் களைந்த வகையினால் கிடைத்தது.

8. கடந்த ஓராண்டில் மது விலக்கு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதுள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தும் விதத்தில் மதுவிலக்குச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு '' காம்பவுண்டிங் முறை'' கொண்டு வரப்பட்டது. இதனால் கடந்த ஆண்டில் அதிக எண்ணிக்கையில் வழக்குகள் முடிவு பெற்றதோடு, அரசுக்கு அபராதத்தின் மூலம் வருமானம் ரூபாய் 10 கோடியை எட்டியது.



9. அதிகமான அபராதம் வளர்ந்து வரும் வழக்குகளின் எண்ணிக்கையை மறு பரிசீலனை செய்ய காரணமாக அமைந்தது கள்ளசாராயப் பெருக்கத்தினால் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாகிறது. கள்ளச் சாராயப் பெருக்கத்தினால் சமூக விரோத கும்பல் பணபலம் பெற்று சமுதாய நீதிக்குப் புறம்பான முயற்சிகளிலும் செயல்களிலும் ஈடுபடுவதால் கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்க முடியவில்லை. இந்த தீமைகளில் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்ற அரசு மதுவிலக்குக் கொள்கையில் சில மாற்றங்கள் செய்ய முயற்சிகளை எடுத்தது. மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள விதிகளின்படி ''இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களை'' மட்டும் உற்பத்தி செய்ய முடியும். இந்த மதுவகைகளை வசதி உள்ளவர்கள் மட்டுமே வாங்கி பயன்படுத்த முடியும். வசதியற்ற ஏழைகளில் குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு கை கொடுத்து வருவது கள்ளச் சாராயமே. இந்நிலையைத் தவிர்க்கவும் கள்ளச்சாராயத்தை அகற்றவும் அரசுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய வருமானத்தை இழக்காமல் இருக்கவும் பொது மக்களின் நலன் கருதி நாட்டு மதுபானத்தை மலிவு விலையில் தருவது என்ற முடிவை அரசு மேற்கொண்டது. ஆனால் இத்தகைய மது உற்பத்தி முன் போல தனிப்பட்டவர்களின் கையில் இல்லாமல் அதன் முழு உற்பத்தி உரிமையையும் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சாராவி தயாரிபபுக் கழகத்திற்கே கொடுப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

10. தமிழ்நாடு அரசு நிறுவனமான சாராவி உற்பத்திக் கழகத்தில் உற்பத்தி செய்யப்படும் இந்த மலிவு மதுபானங்களை மொத்த விற்பனை செய்கின்ற உரிமையை அரசின் மற்றொரு நிறுவனமான ''டாஸ்மாக்'' நிறுவனமே செய்யும். சில்லறை விற்பனை, ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி மூலம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே மலிவு மது உற்பத்தி, மொத்த வியாபாரம் ஆகியவைகள் முழுக்க முழுக்க அரசு பொறுப்பில் இருக்கும். சில்லறை வியாபாரம் அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டுகின்ற முறையான ஏலம் மற்றும் டெண்டர் முறையில் இருக்கும். 1990-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாள் முதல் மது அருந்த தன் அனுமதி (பெர்மிட்) முறை நீக்கப்பட்டது.

**வடிசாலைகள் :**

11. இந்த மாநிலத்தில் எட்டு வடிசாலைகள் உள்ளன. அவற்றின் உரிமம் பெற்ற மொத்த உற்பத்தித் திறன் 948.80 இலட்சம் லிட்டர் சாராவியாகும். முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்துவதற்கு 4.22 இலட்சம் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டில் அதன் உற்பத்தி உரிமத் திறனில் 80 சதவீதமாகும். மோகனூரிலுள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, ஆகிய

ஒவ்வொன்றிலும் 45,000 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீட்டுடன் கூட்டுறவுத் துறையில் இரண்டு வடிசாலைகள் அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது. வடிசாலைகளிலிருந்து சாராவி அனுப்பப்படும்போது, ஆயத்தீர்வையும், விற்பனைக் கட்டணமும் வசூலிக்கப்பட்டன. தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படும் தொழிலக ஆல்கஹால் மீது ஆயத்தீர்வையும் விற்பனைக் கட்டணமும் விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம், நீதிப்பேராணை மனு எண் 182/1980-இல் 1989 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாளன்று தீர்ப்பளித்திருந்தது. தொழிலக ஆல்கஹால் மீது தீர்வைகள், விற்பனைக் கட்டணங்கள் ஆகியவற்றை விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்ற மேற்கூறிய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, மேல் முறையீடு தாக்கல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் உச்ச நீதி மன்றத்தின் மேற்கூறிய ஆணைகளுக்கிணங்க தொழிற்சாலைகளில் பயன்படுத்துதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் தயாரித்தல், ஏற்றுமதி முதலிய பல்வேறு செயல் நோக்கங்களுக்காக வழங்கப்படுகின்ற பலவகைப்பட்ட சாராவி மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம் ஆகியவற்றை, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நாளான 25—10—1989-லிருந்து திரும்பப் பெறுவதற்காக, 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாள் அன்று அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

**இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் தயாரிப்பு ஆலைகள் :**

12. இம் மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் தயாரிப்பு ஆலைகள் ஐந்து உள்ளன. இவற்றில் நான்கு தயாரிப்பு ஆலைகள் தனியார் துறையிலும் ஒன்று கூட்டுத் துறையிலும் உள்ளன. கூட்டுத்துறையில் உள்ள தயாரிப்பு ஆலையின் நிர்வாகம் இப்போது அரசு கையில் உள்ளது. இந்த ஐந்து தயாரிப்புப் பிரிவுகளில் ஆண்டு மொத்த உற்பத்தித் திறன் 468 இலட்சம் பல்க் லிட்டராகும்.

**பீர் வடிப்பாலைகள் :**

13. தற்போது தனியார் துறையில் ஒன்றும், பொதுத்துறையில் ஒன்றுமாக இரண்டு பீர் வடிப்பாலைகள் உள்ளன. தமிழ்நாடு சாராவி தயாரிப்புக் கழகம் என்றழைக்கப்படுகிற பொதுத்துறை பிரிவிற்கு தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகமும், அரசும் 60 : 40 என்ற வீதத்தில் மூலதனப் பங்குத் தொகை வழங்கியுள்ளன. அக்கழகத்திற்கு 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7 ஆம் நாளன்று உரிமம் வழங்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அது உற்பத்தியைத் தொடங்கியது.



**இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தியும் விநியோகமும்—மொத்த விற்பனை :**

14. (i) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை உற்பத்தி செய்வதற்காக, அவற்றைத்தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் தெளிந்த சாராவி மீதான ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்து, 1982-83 ஆம்ஆண்டில் அளிக்கப்பட்டிருந்த சலுகையை, 1989 ஆம்ஆண்டு சனவரி திங்களில் அரசு திரும்பப் பெற்றது. இந்தச் சலுகையைத் திரும்பப் பெற்றதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.23 கோடி கூடுதல் வருவாய் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டது. இருப்பினும், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையொட்டி, தெளிந்த சாராவி அல்லது தொழிலக ஆல்கஹால் மீது ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம் ஆகியவற்றை விதிப்பது 1989 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாளிலிருந்து திரும்பப் பெறப்பட்டது. தொழிற்சாலைப் பயனுக்கான ஆல்கஹால் மீதுஆயத் தீர்வை அல்லது விற்பனைக் கட்டணம் விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் ஏதுமில்லையென்று கூறினாலும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவிக்கு, தீர்வை விதிப்பதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் உள்ளதென்பதை உச்ச நீதிமன்றம் முழுமையாக அங்கீகரித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க தொழிற்சாலை ஆல்கஹால் மீதான தீர்வையை விலக்கியதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்காக, தமிழ்நாட்டிற்குள் தயாரித்து அருந்தப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவிக்கான ஆயத்தீர்வை 1989ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாள் முதல் புரூப் லிட்டர் ஒன்றுக்கு 55 ரூபாயிலிருந்து 60 ரூபாயாகவும், தயாரிப்பாளர் செலுத்த வேண்டிய விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு 2 ரூபாயிலிருந்து 5 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

(ii) எப்.எல். 2, எப்.எல். 3, எப்.எல். 4-ஏ. உட்பட சில்லறை விற்பனை உரிமதாரர்களின் தேவையினை நிறைவுசெய்வதற்காக இம்மாநிலத்தில் தயாரிக்கப்படாத சில மது பானங்களை, அரசு தொடர்ந்து இறக்குமதி செய்து வந்தது, இறக்குமதி செய்யும் மதுபான வகைகளுக்கான இறக்குமதி உரிமக் கட்டணத்தை பல்க் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாயாக அரசு உயர்த்தியது. இதன் பயனாக 1989-90ஆம் ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவி விற்பனை மூலம் ரூ. 3.27 கோடியும் பீர் விற்பனை மூலம் ரூ. 61.92 இலட்சமும் வருவாய் கிட்டியது. தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் பல்வேறு முகவரமைப்புகளுக்கு மது பானங்களை விநியோகம் செய்கிறது, இக்கழகத்திடம் மொத்த விற்பனை உரிமமும், 33 கிளை விற்பனை உரிமங்களும் உள்ளன, தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் வழங்கிய மது பானங்களைத் தவிர வேறு எதனையும் சில்லறைக் கடைகள் விற்பனை செய்யக்கூடாது.

**விலை நிர்ணயித்தல் :**

15. உள்-மதுவிலக்கு-ஆயத்துறையின் 1989ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் நாளிட்ட நிலை ஆணை எண். 217-ல் பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவிகளின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உற்பத்தியும் சில்லறை விற்பனையும் கட்டுப்படுத்தப் படுவதுடன், சில்லறை விற்பனையாளர்களிடையே ஏற்படும் வியாபாரப்போட்டியும் நீக்கப்பட்டுள்ளது.

**சில்லறை விற்பனைக் கடைகள் :**

16. மாநில அரசுக் கருவூலத்திற்கு அதிக வருவாய் திரட்டும் நோக்கத்துடனும் வேண்டியவர்களுக்கு சில்லறை விற்பனை உரிமங்கள் கொடுக்கப்பட்டன என்ற புகாரைக் களைந்து அனை வருக்கும் வாய்ப்பளிக்க மதுபானக் கடைகளை நடத்துவதற்காக எப்.எல். 1 உரிமம் வழங்கும் முறை 1989ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாள் முதல் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக 1989ஆம்ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் முதல், பொது ஏலம் ஒப்பந்த முறை மற்றும் அரசு நிறுவனங்கள், கூட்டுறவு அமைவுகளுக்கு நியமன அடிப்படையில் உரிமம் வழங்கும் நடை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய உரிமம் வழங்கும் முறை செயலுக்கு வரும் முன்னர் இம் மாநிலத்தில் 2037 எப்.எல்1 உரிமம் பெற்ற மதுபானக் கடைகள் இருந்தன. முன்னாள் உரிமதாரர்களிடமிருந்து ஒவ்வோராண்டும் மொத்தம் 4.20 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. புதிய முறையின் கீழ், மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 3,465 கடைகளில் 3,369 உரிமங்கள் வழங்கப்பட்டன, அதாவது, பொது மக்களுக்கு 2,428 உரிமங்களும் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்திற்கு 150 உரிமங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு 334 உரிமங்களும், கூட்டுறவு அமைப்புகளுக்கு 457 உரிமங்களும் வழங்கப்பட்டன. விண்ணப்ப கட்டணம், உரிமைக் கட்டணம் ஆகியவற்றின் வாயிலாக 1989-90 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 35.58 கோடி அரசுக்கு கிடைத்தது.

**வருவாய் அதிகரிப்பு :**

17. 1990ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முடிய ஆண்டின் வருவாய் ரூ. 301.71 கோடி. இதன் மூலம் ஆயத்துறைக்கு முன் எப்போதுமில்லாத அளவுக்கு வருவாய் கிட்டியுள்ளது.



**கருப்பஞ்சாற்றுக் கசண்டு :**

18. சர்க்கரை தயாரிப்பில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒரு துணைப் பொருளாகும். வீரியம் நீக்கப்பட்ட சாராவியினைத் தயாரிப்பதற்கு இது ஒரு அடிப்படை மூலப் பொருளாகும். அந்த வீரியம் நீக்கப்பட்ட சாராவி, மதுபானம், மருந்துப் பொருள், இரசாயன பொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருளாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 27 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 1989-90ஆம் ஆண்டின் தொடக்கத்தில், 0.88 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு இருப்பு இருந்தது. 1989-90-ல் 4.57 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ் சாற்றுக் கசண்டு உற்பத்திச் செய்யப்படுமென்று சர்க்கரை ஆலை கள்ஆணையர் எதிர்பார்க்கிறார். கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆக மொத்தம் 5.45 இலட்சம் மெட்ரிக் டன் கிடைக்கும். மலிவு விலை மதுவை விற்பனைக்குக் கொண்டு வர உத்தேசித்துள்ளதன் காரண மாக அருந்துவதற்கான வீரியம் நீக்கப்பட்ட சாராவி தயாரிக்க கணிசமான கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஒதுக்கீடு செய்யவேண்டி யுள்ளது. இனி, சர்க்கரை ஆலைகளில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேங்கிக் கிடக்கும் நிலை இராது. சர்க்கரை ஆலை களிலிருந்து கிடைக்கும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கருப்பஞ்சாற்றுக்கசண்டை மாநில அரசு தற்போதுள்ள இரசாயன தொழிற்சாலைகளுக்கும் எதிர்காலத்தில் நிறுவப்பட உள்ள தொழிற்சாலைகளுககும் சீரிய முறையில் பகிர்ந்தளிக்க இயலும்.

**தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் :**

19. (i) இது தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்த மான ஒரு நிறுவனமாகும். இது 1983ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இயங்கி வருகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவியையும், பீரையும் மொத்த விற்பனை செய்கின்ற மாநில அரசின் முகவரமைப்பு இது ஒன்றே. இம்மாநிலத்தில் மொத்தம் 5 வட்டார அலுவலகங்களும் 33 மொத்த விற்பனை நிலையங்களும் உள்ளன. இந்நிலையங் களில் சில்லறை உரிமதாரர்களுக்கு வழங்குவதற்காக இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவும், பீரும் சேமித்து வைக்கப் படுகின்றன.

**(ii) நிதி நிலை அமைப்பு :**

தமிழ்நாடு மாநில விற்பனை கழகம் ரூ. 5 கோடி அனுமதிக்கப் பட்ட முதலீட்டுடன் தொடங்கப்பட்டது. மாநில அரசு, இது வரையில் ஒவ்வொன்றும் 1,000 ரூபாய் மதிப்புள்ள 10,000 மூலதனப் பங்குகளில் ரூ. 1 கோடி செலுத்தியுள்ளது. இப்பங்குத் தொகையைத் தவிர தேவைப்பட்டபோதெல்லாம் அரசு வழி வகை முன் பணமும் வழங்கி வருகிறது.

(iii) வணிக நடவடிக்கைகள் :

(அ) இக்கழகத்தின் தலைமை அலுவலகம், இம்மாநிலத்திலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்தும் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவியினைக் கொள்முதல் செய்து 33 மொத்த விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்குகிறது. நடப்பு நிதியாண்டில், 1989ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 1990 மார்ச் 31ஆம் நாள் வரையிலான கால அளவில் ரூ. 396.81கோடி மதிப்புள்ள 42,51,907 பெட்டி இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவியும், 32,43,785 பெட்டி பீரும் விற்பனை செய்யப்பட்டன.

(ஆ) சிறப்பு ஆணையர் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையர் நிர்ணயித்த விலையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவி. பீர் விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் சில்லறை விற்பனையைத் தானே மேற்கொண்டு, மாநிலத்திலுள்ள முக்கியமான மாநகரங்களிலும், நகரங்களிலும் 150 சில்லறை விற்பனை கடைகளையும் நடத்தி வருகிறது. கூடிய விரைவில் விற்பனைக்கு கொண்டுவரவுள்ள மலிவு விலை மதுவுக்கும் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகமே, மொத்த விற்பனையாளராகச் செயற்படவிருக்கிறது.

தமிழ்நாடு சாராவிக் கழகம் :

20. (அ) 1989ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இம்மாநிலத்தில் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவது பற்றி அரசு ஆய்வு செய்தது. தனியார் நிறுவனங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், பீர் ஆகியவற்றின் உற்பத்தித் திறனைக் கூடுதலாக்க அனுமதிக்கக் கூடாது என்று முடிவெடுத்தது. தமிழ்நாடு சாராவிக் கழகம் ('டாஸ்கோ') என்ற பெயரில் அரசுத் துறை நிறுவனம் ஒன்றை தனியாக ஏற்படுத்த அரசு தீர்மானித்தது. இந்நிறுவனம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முறையாக இணைக்கப்பட்டதாகும்.

(ஆ) தமிழ்நாடு சாராவி நிறுவனம், அரசு ஏற்பளித்தவாறு பீர் வடிப்பாலை ஒன்றை தன் வசம் எடுத்துக்கொண்டு ஒப்பந்தம், கிரயப்பத்திரம் ஆகியவற்றை முடிவு செய்துள்ளது. 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ஆம் நாளன்று மொத்தம் 7.82 கோடி ரூபாய் விலைக்கு இவ்வடிப்பாலை வாங்கப்பட்டது. இதில், பீர் வடிப்பாலை சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட ஈடுவைக்கப்பட்ட கடன், ஈடுவைக்கப்படாத கடன் பொறுப்புகளும் அடங்கும். பீர் வடிப்பாலை சம்பந்தப் பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் (முடிக்கப்பட்டவை, முடிக்கப்படாதவை) தமிழ்நாடு சாராவி நிறுவனத்திற்கு



மாற்றப்பட்டன. தமிழ்நாடு சாராவி நிறுவனம், 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ஆம் தேதி முதல் பீரை வடித்திறக்கும் பணியையும் அவற்றை புட்டிகளில் நிரப்பும் பணியை 1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாளன்றும் மேற்கொண்டது. பீரின் உற்பத்தி, விற்பனை ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| கால அளவு. | உற்பத்தி அளவு. (பெட்டிகளின் எண்ணிக்கையில்) | | விற்பனை. | | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | லண்டன் பில்சனர். | லண்டன் பிரிமியர். | லண்டன் பில்சனர் | லண்டன் பிரிமியர். | |
| 1989 டிசம்பர் திங்கள். | 7,179 | .. | 5,600 | .. | 5.10 |
| 1990 சனவரி திங்கள். | 56,477 | 5,285 | 57,750 | 5,250 | 57,69 |
| 1990 பிப்ரவரி திங்கள். | 96,543 | 5,199 | 94,900 | 5,200 | 91.47 |
| 1990 மார்ச் திங்கள். | 61,859 | 10,177 | 61,095 | 10,180 | 65.52 |

(இ) வருங்காலத் திட்டங்கள் :

பீரின் உற்பத்தியை 6 திங்களுக்குள் 2 மடங்காக அதாவது திங்களொன்றுக்கு 12 இலட்சம் புட்டிகளிலிருந்து 24 இலட்சம் புட்டிகளாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மலிவு விலை மதுவைத் தயாரிப்பதற்கென்றே சிறப்புரிமை அளிக்கக் கருதியுள்ளதன் காரணமாக, தமிழ்நாடு சாராவி நிறுவனம், இம்மாநிலத்தில் மலிவு விலை நாட்டு மது தயாரிப்பதற்கான பெரும் உற்பத்தித்திட்டம் ஒன்றை தற்போது மேற்கொண்டிருக்கிறது.

ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுதல் :

21. ஆயத்தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும், உரிமம் பெற்ற கடைகளில் போலிச் சாராயம், கள்ளச் சாராயம் ஆகியவற்றை விற்பனை செய்வதை தடுக்கவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டுச் சாராவி-பீர் தயாரிப்பு ஏனைய மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவி மற்றும் பீர் ஆகியவை அடங்கிய புட்டிகளின் மேல் ஒட்டுவதற்குரிய ஆயத் தீர்வை சீட்டுகளை அச்சிட்டு வழங்க மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுகின்ற பணியை முன்பு
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செய்து வந்தது. 1989ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் 11ஆம் நாள் முதல் ஆயத்தீர்வை
சீட்டுகளை அச்சிடுகின்ற பணி மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணை
யாளருக்கு மாற்றப்பட்டு, ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுகின்ற
இரண்டு அச்சு இயந்திரங்கள் எழிலகத்தின் வளாகத்திலேயேநிறுவப்
பட்டுள்ளன. கர்நாடக அரசும் ஆயத்தீர்வை சீட்டுகளை ஒட்டு
கின்ற முறையை அண்மையில் தொடங்கியுள்ளது. கர்நாடக அரசு,
அச்சிடும் இயந்திரங்களை வாங்கி, அவற்றை நிறுவுகின்ற
வரையில், ஆரம்ப காலத்தில் 4 திங்கள் கால அளவுக்கு
அம்மாநில அரசுக்கு உதவுகின்ற வகையில், மாதம் ஒன்றிற்கு
1 கோடி ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிட்டு அம்மாநில அரசுக்கு
வழங்க தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது.

**போதை மருந்துகள் :**

22. (அ) போதை மருந்துக்கு அடிமையாகின்ற பழக்கம்
மக்களிடையே பரவாமல் தடுக்கவும், போதை மருந்துகள்
விற்பனையை நிறுத்தவும், மத்திய அரசு 1985ஆம் ஆண்டு
போதை மருந்துகள் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை
இயற்றியது. 1985ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாள்
முதல் செயலுக்கு வந்த இச்சட்டமும், இதன் கீழ் இயற்றப்பட்ட
விதிகளும், அபராதமும் கடுங்காவல் தண்டனையும் விதிப்பதற்கு
வகை செய்கின்றன.

(ஆ) கோடைக்கானல் மலைப் பகுதிகளிலுள்ள அடர்ந்த
காடுகளிலும், கேரள மாநில எல்லைப் பகுதிகளிலும் கஞ்சா
வளர்ப்பதைத் தடுப்பதற்காக 1985ஆம் ஆண்டு போதை மருந்துகள்
— மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தின் கீழ், அதிகாரி
களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குச் செய
லாக்கப் பிரிவின் /சுங்க அதிகாரிகளின் உதவியுடன் அடிக்கடி
திடீர்ச் சோதனைகள் அப்பகுதிகளில் நடத்தப்படுகின்றன. மிகப்
பரந்த பகுதியில் வளர்க்கப்பட்ட கஞ்சாப் பயிர் அழிக்கப்பட்டது.
மத்திய அரசு, 1988ஆம் ஆண்டு போதை மருந்துகள் மன
மயக்கம் தரும் பொருட்களை கள்ளத்தனமாக விற்பனை
செய்வதை தடை செய்கின்ற சட்டத்தை (மத்திய சட்டம்
46/1988) இயற்றியுள்ளது. இச் சட்டத்தின்படி கள்ளத்தன
மாக போதை மருந்துகளை விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற
வர்களைக் க வலில் வைக்கும் அதிகாரத்தை, உள்துறை. மது
விலக்கு— ஆயத்தீர்வைத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அரசு
செயலாளருக்கு, இந்த அரசு வழங்கியுள்ளது. [உள்துறை,
மதுவிலக்கு-ஆயத்தீர்வை (8) துறையின் 1—8—1989ஆம்
நாளிட்ட 887ஆம் எண் அரசாணை.]





**மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு :**

23. (அ) தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் பல்வேறு விதித் துறைகளையும், அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளையும் செயலாக்கும் பொருட்டு, காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ், இம்மாநிலத்தில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு ஒன்று இயங்கி வந்தது. இவருக்கு உதவி செய்ய, காவல்துறை உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவரும், பரங்கிமலை, சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 5 தலைமையிடங்களில் 5 மண்டல காவல்துறை கண்காணிப்பாளர்களும் உள்ளனர். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஏனைய காவல்துறை அதிகாரிகள் இவர்களுக்கு உதவுகின்றனர்.

(ஆ) 1988 சூலை 1ஆம் நாளிலிருந்து மது விலக்கைச் செயலாக்கும் பொறுப்பு, உள்ளூர் காவல் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது; மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு மதுவிலக்கு அமல் பிரிவிலிருந்து காவல்துறைக்கு மாற்றப் படவும் அமல் பிரிவு காவல் துறையுடன் உடனடியாக ஒருங் கிணைக்கப்படவும் 1990 ஆம்ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

24. (அ) கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதையும், இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மது வகைகளை அண்டை மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்துவதையும், வீரியம்குறைக்கப்பட்ட சாராவியைத் தவறாகப் பயன்படுத்துவதையும் தடுக்க தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாராயம் காய்ச்சப்படும் கிராமங்கள், மலைகள், ஆற்றுப்படுகைகள் பலமுறை திடீர்ச் சோதனைக்குட்படுத்தப் பட்டன. அவ்வாறு சோதனை செய்யும்போது, குறிப்பாக வடித்திறக்குவதற்கான கலங்கள், கரைசல் நீர்மம், சாராய இருப்புகளை அழித்து விடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட அலுவலர்களின் உதவியுடன், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரியிலும், கேரள மாநிலத்திலும்திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன; தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களுக்கும் எஸ்டேட்டுகளுக்கும் சாராயத்தை வழங்கி வந்த சாராயம் காய்ச்சும் இடங்கள் அழிக்கப்பட்டன. 1988-ல் 4,08,326 ஆக இருந்த மதுவிலக்குக் குற்றங்கள் 1989-ல்,

5,94,929 ஆக அதிகரித்திருப்பது, நடப்பாண்டில் மதுவிலக்குக் குற்றவாளிகள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையே காட்டுகிறது.

(ஆ) 1988-ல் கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றிய விவரம் :

| | | |
|---|---|---|
| 1. கள்ளச் சாராயம் மற்றும் ஆந்திரமாநிலச் சாராயம். | | 57,79,871 லிட்டர்கள். |
| 2. ஊறல் மற்றும் ஆந்திர மாநிலச் சாராயம். | | 4,08,24,780 லிட்டர்கள். |
| 3. கஞ்சா. | .. | 1,831 கிகி. 543 கி. |
| 4. இந்தியாவில் தயாரிக்கப் படும் வெளிநாட்டு மதுவகை (முழு பாட்டி டில்கள்). | | 39,472 |
| 5. வண்டிகள். | .. | 1,487 மோட்டார் வண்டி களும் 3,685 சைக்கிள் களும், கைப்பற்றப் பட்டன. |

நடப்பாண்டில் கைப்பற்றப்பட்ட கள்ளச் சரக்குகளின் மதிப்பு ரூ. 33,35,221 ஆகும்.

(இ) 1989-ல், தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றம் செய்பவர்கள், வனச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்பவர் கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாய கரமான செயல்களைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் 126 பேர் காவலில் வைக்கப்பட்டனர்.

(ஈ) ஆந்திரம், கேரளம், பாண்டிச்சேரி, ஆகிய மாநிலங்களி லிருந்து, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகை; சாராயம் ஆகியவற்றைத் தமிழ்நாட்டிற்குக் கள்ளத் தனமாகக் கொண்டு வருவதைத் தடை செய்ய தனி நடவடிக்கை எடுக்கப் பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற வெளி நாட்டு வகை மதுவை பாண்டிச்சேரியிலிருந்து வெளி நாட்டிற்கு அனுப்பி, அவற்றைச் சென்னையில் தமிழ் உரிமம் பெற்ற மதுக் கடைகள் மூலமாக விற்பனை செய்கின்ற அமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த அமைப்புகளைச்சேர்ந்த 28 பேர் கைதானதன் மூலமாக அவை தகர்க்கப்பட்டன.



இவை தவிர, நடப்பாண்டில் 1,487 வண்டிகள் (கார்கள், வேன்கள் முதலியன), கள்ளச் சரக்குகளுடன் சென்று கொண்டிருக்கையில் பிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன. 1988-ல் அவ்வாறு கைப் பற்றப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 845 ஆகும். இரயில்கள் படகுகள் மூலமாகக் கள்ளக் கடத்தல் நடை பெறுவதும் பெருமள விற்குக் கட்டுப்படுத்தப்பட்டது.

**தமிழ்நாட்டில் மயக்கமூட்டும் மருந்துப் பொருட்களைத் தடைசெய்தல்:**

25. (அ) ஆல்கஹால் தன்மை அதிக அளவு அடங்கிய மதுக் கசாயம், அஸ்வம், அரிஷ்டம் முதலியவை போன்ற ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புப் பொருட்கள்; மயக்கம் விளைவிக்கக் கூடிய தும் விஷத்தன்மை வாய்ந்ததுமான குளோரல் ஹைடிரேட்டுடன் வழக்கமாகச் சேர்க்கப்படுகின்றன; இவற்றைச் சாராயத்திற்கு பதிலாகப் பயன்படுத்துகின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது. எனவே, ஆயுர்வேத மருந்துக் கடைகளில் திடீர் சோதனை மேற் கொள்ளப்படுவதோடு, முறையான மாதாந்திர சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) அதைப் போலவே, ஆல்கஹால் தன்மை அடங்கிய டின்ச்சர், ஜின்சர்பெரிஸ் மற்றும் ஆங்கில மருந்துத் தயாரிப்புப் பொருட்களும் சாராயத்திற்கு மாற்றுப் போதைப் பொருளாக தவறாகப் பயன்படுத்தப்படுவதாக கண்டறியப்பட்டது. இத்தலைப்பின் கீழ் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 179 ஆகும்; அவற்றில், கைப்பற்றப்பட்ட கடத்தல் சரக்கு 1,836 லிட்டர்களாகும்.

**வீரியம் குறைக்கப்பட்ட சாராயத்தை தவறாகப் பயன்படுத்துதல்:**

26. சாராயம் தயாரிப்பதற்குத் தொழில்முறை ஆல்கஹால் பயன்படுத்துவது கூர்ந்து கவனிக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவு, மோட்டார் வண்டி களை திடீரெனச் சோதனை செய்ததில், ஒவ்வொன்றிலும் 1,000 லிட்டர் அடங்கிய இரு டாங்கர்கள் உட்பட 62,538 லிட்டர் வீரியம் குறைக்கப்பட்ட சாராவி பறிமுதல் செய்யப்பட்டது. வீரியம் குறைக்கப்பட்ட சாராவியைத் தவறாகப் பயன்படுத்தப்படுவ தையும் அவற்றை வேறு காரியங்களுக்கு பயன்படுத்துவதையும் தடுக்க மூத்த அதிகாரிகள், வீரியம் குறைக்கப்பட்ட சாராவியை வைத்து இருப்பதற்கு உரிமம் பெற்ற வடிசாலைகளையும் இரசா யனத் தொழிற்சாலைகளையும் அடிக்கடி சோதனையிட்டனர்.

நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை ஒருவகை செய்தலும் மது விலக்குக் குற்றம் சார்ந்த வழக்குகளை இணக்க ஏற்பாட்டின் மூலம் தீர்த்து வைத்தலும் :

27. (அ) போர்க்கால அடிப்படையில், வழக்குகள் முடிவு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 1989-ஆம் ஆண்டு 3,81,846 வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்டன. இதில் 47,729 வழக்குகளை ''அதிகாரம் அளிக்கப்பட்ட'' அதிகாரிகள் இணக்க ஏற்பாட்டின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டதும் அடங்கும். நீதி மன்ற ஆணைகள் மூலம் அபராதமாக ரூ. 5,47,41,215-ம் இணக்க ஏற்பாட்டுக் கட்டண வகையில் ரூ. 2,66,44,165-ம் ஆக மொத்தம் ரூ. 8,13,85,380 வசூலிக்கப்பட்டது. 1989-90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 9.75 கோடியாகும். ஆனால் 1990 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1ஆம் நாள் அன்றைய நிலவரப்படி, அபராதம் என்ற வகையில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 8,13,85,380 ஆகும்.

(ஆ) பல கிராமங்களில், அக்கிராமங்களைச் சேர்ந்தவர்களே அவர்கள் பகுதிகளில் கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்க முன்வந்துள்ளனர்.

(இ) சுமார் ரூ. 33.35 கோடி மதிப்புடைய சாராய கடத்தல் சரக்குகள் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டன. 178 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா பயிர் அழிக்கப்பட்டது. சுமார் நான்கு இலட்சம் வழக்குகள் முடிவு செய்யப்பட்டு, அரசுக்கு அபராத வகையில் ரூ. 8 கோடிக்கும் அதிகமாக வருவாய் கிட்டியது. 1989 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள், வனச் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் ஆகியோரின் அபாயகரமான செயல்களைத் தடுப்பதற்கான சட்டத்தின்கீழ் 126 கள்ளச்சாராயக்காரர்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

---

# இணைப்புகள்

53-129—30

இணைப்பு—1.

| தொடர் எண். | மாவட்டம். | ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை. | ஏலம் கேட்கப்படாத கடைகள் எண்ணிக்கை. | உரிமம் வழங்கப்படாத கடைகள் எண்ணிக்கை. | உரிமம் வழங்கப்படாத கடைகள் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சென்னை .. .. .. .. .. | 658 | 29 | 26 | 603 |
| 2. | செங்கை-அண்ணா .. .. .. | 271 | 4 | 1 | 266 |
| 3. | வடஆற்காடு-அம்பேத்கார் .. .. | 147 | 3 | .. | 144 |
| 4. | திருவண்ணாமலை-சம்புவராயர் .. .. | 101 | .. | .. | 101 |
| 5. | தென்ஆற்காடு .. .. .. .. | 120 | 1 | 6* | 113 |
| 6. | தஞ்சாவூர் .. .. .. .. .. | 153 | 3 | 1 | 149 |
| 7. | திருச்சிராப்பள்ளி .. .. .. | 211 | 1 | .. | 120 |
| 8. | புதுக்கோட்டை .. .. .. .. | 46 | 1 | .. | 45 |
| 9. | மதுரை .. .. .. .. .. | 206 | 1 | 2 | 203 |
| 10. | திண்டுக்கல்-காயிதே மில்லத் .. .. | 104 | 4 | .. | 100 |
| 11. | இராமநாதபுரம் .. .. .. | 45 | .. | .. | 45 |
| 12. | காமராசர் .. .. .. .. .. | 60 | .. | .. | 60 |
| 13. | பசும்பொன் தேவர் திருமகன் .. .. | 54 | .. | .. | 54 |
| 14. | திருநெல்வேலி கட்டபொம்மன் .. .. | 62 | .. | .. | 62 |
| 15. | சிதம்பரனார் .. .. .. .. | 59 | .. | .. | 59 |
| 16. | கன்னியாகுமரி .. .. .. .. | 60 | .. | .. | 60 |
| 17. | நீலகிரி .. .. .. .. .. | 85 | .. | .. | 85 |
| 18. | கோயம்புத்தூர் .. .. .. .. | 368 | .. | .. | 368 |
| 19 | பெரியார் .. .. .. .. | 235 | .. | .. | 235 |
| 20. | சேலம் .. .. .. .. .. | 286 | 6 | 2 | 278 |
| 21. | தர்மபுரி .. .. .. .. | 134 | 5 | .. | 120 |
| | மொத்தம் .. | 3465 | 58 | 38 | 3,369 |

*—இதில் ஏலம் நடத்தப்படாத கடைகள் 5 அடங்கும்.

## இணைப்பு—2

1980 முதல் 1990 வரை (28—2—1990 வரை) உள்ள காவல் அளவில் மதுவிலக்கு அமல் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டதும் முடிவு செய்யப்பட்டதுமான வழக்குகளின் விவரங்கள்.

| வரிசை. | விவரம். | 1980. | 1981. | 1982. | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. | கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள் .. | 20,845 | 59,293 | 76,735 | 93,946 | 71,260 | 87,801 | 90,079 | 2,29,014 | 4,08,326 | 5,94,929 | 94,731 |
| 2. | குற்றம் சுமத்தப்பட்ட வழக்குகள் .. .. | 18,375 | 44,295 | 42,366 | 27,358 | 53,883 | 64,303 | 56,743 | 2,05,612 | 3,20,352 | 4,85,199 | 87,927 |
| 3. | தண்டனையில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 1,554 | 2,846 | 3,180 | 3,719 | 4,347 | 4,361 | 4,694 | 22,338 | 70,324 | 3,17,088 | 57,479 |
| 4. | விடுதலையில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 3,923 | 7,539 | 11,940 | 6,196 | 11,325 | 10,469 | 10,083 | 27,649 | 28,613 | 1,900 | 19 |
| 5. | திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 11,850 | 30,401 | 23,145 | 11,965 | 17,766 | 8,428 | 10,104 | 11,086 | 14,737 | 743 | 1 |
| 6. | விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 1,049 | 3,509 | 4,101 | 5,478 | 20,445 | 41,045 | 31,862 | 1,44,539 | 2,06,678 | 1,65,468 | 30,428 |
| 7. | நடவடிக்கை கைவிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 2,469 | 14,998 | 34,369 | 66,588 | 17,377 | 23,498 | 33,336 | 23,367 | 83,109 | 39,556 | 4,290 |
| 8 | புலன் விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | .. | .. | .. | .. | 35 | 4,865 | 70,174 | 2,514 |

இணைப்பு—3.

1983—1989 வரையிலான கால அளவில் மதுவிலக்கு சம்பந்தமாக கண்டு ...க்கப்பட்ட குற்றங்கள், கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட மதுபானங்களின் அளவு பற்றிய விவரம் வருமாறு:

(மதுவிலக்கு செயல்பாட்டுப் பிரிவு மற்றும் சட்டம் ஒழுங்கு பிரிவு.)

| வரிசை எண். | விவரம். | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | கண்டுபிடிக்கப்பட்ட மொத்த குற்றங்கள் .. | 93,946 | 71,260 | 87,801 | 90,079 | 2,29,014 | 4,08,326 | 5,94,929 |
| 2. | கண்டுபிடிக்கப்பட்ட கள்ளச்சாராயம் (லிட்டரில்). .. | 3,90,700 | 5,44,068 | 5,55,814 | 4,48,884 | 27,30,120 | 35,47,099 | 57,79,871 |
| 3. | அழிக்கப்பட்ட சாராய ஊறலின் அளவு (லிட்டரில்). .. | 33,83,423 | 53,43,458 | 85,05,050 | 90,06,792 | 2,49,36,679 | 4,24,80,579 | 4,08,247,80 |
| 4. | கைப்பற்றப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளி நாட்டு மது வகைகள் (புட்டிகளில்) | | | | | | | |
| | முழுமையானது .. | 5,855 | 2,425 | 1,939 | 1,547 | 12,631 | 1,348 | 7,685 |
| | அரை ½ .. | 9,052 | 1,258 | 1,944 | 1,732 | 5,491 | 1,776 | 6,674 |
| | கால் .. | 4,971 | 4,988 | 9,599 | 7,685 | 47,722 | 32,701 | 1,13,801 |
| 5. | கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை— | | | | | | | |
| | கார் .. | 26 | 51 | 36 | 32 | 246 | 385 | 467 |
| | ஜீப் .. | 1 | 1 | 3 | 2 | 11 | 6 | 11 |
| | வேன் .. | 7 | 26 | 11 | 11 | 76 | 48 | 88 |
| | ஆட்டோ ரிக்ஷா .. | 21 | 14 | 30 | 12 | 90 | 84 | 113 |
| | லாரி .. | 3 | 4 | 14 | 12 | 43 | 35 | 57 |
| | மோட்டார் சைக்கிள் .. | 5 | 7 | 9 | .. | 221 | 360 | 656 |
| | படகு .. | .. | .. | .. | .. | 1 | .. | 2 |
| | ஸ்கூட்டர் .. | 1 | 1 | 1 | 3 | 22 | 21 | 62 |
| | பஸ் .. | .. | .. | .. | .. | 4 | 2 | 24 |
| | டிராக்டர் .. | .. | .. | .. | .. | 8 | 4 | 5 |
| | மொத்தம் | 64 | 104 | 105 | 69 | 722 | 845 | 1,487 |

இணைப்பு—4.

கடந்த மூன்றாண்டுகளில் வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ஈட்டிய ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வருவாய்க் கணக்குத் தலைப்புகள். | 1986 - 87 | 1987 - 88 | 1988 - 89 | 1989-90 (1990 பிப்ரவரி வரை) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நாட்டுச் சாராவி (சாராயம்). .. | 2,01,15,00 | 69.84 | 95.08 | 1,06.66 |
| 2. புளிக்கவைக்கப்பட்ட நாட்டு மது(கள்). | 17,11,44 | 48,08 | 3,55.41 | 1,59.12 |
| 3. 'மால்ட்' வகை மது(பீர்) | 4,84.63 | 2,86.11 | 7,30.91 | 17,59.21 |
| 4. வெளிநாட்டு மது சாராவி | 55,89.18 | 1,04,51.87 | 1,24,43.70 | 2,17,02.11 |
| 5. வணிக ரீதியிலான மற்றும் இயல்பு மாற்றப்பட்ட சாராவிகள். | 1,11.66 | 4,73.67 | 6,96.74 | 24,74.37 |
| 6. மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள். | 4,00.82 | 2,03.18 | 60.71 | 2,25.08 |
| 7. ஓபியம் ஹெம்ப் மற்றும் ஏனைய மருந்துப் பொருட்கள். | 0.45 | 0.71 | 0.95 | 3.34 |
| 8. அபராதங்களும் மற்றும் பறிமுதல்களும். | 5.73 | 4.25 | 2.74 | 1,30.69 |
| 9. பணியும் மற்றும் பணிக் கட்டணங்களும். | 2.67 | 5.27 | 8.60 | 44.97 |
| 10. ஏனைய வரவினங்கள் .. | 2,34.88 | 4,73.02 | 3,98.50 | 2,30,33 |
| மொத்தம் .. | 2,86.56,46 | 1,20,16.00 | 1,48,02,34 | 2,66,25.88 |

143978
D
V21,31'N90
N90.31.3